தேவகரத்தால் உயர்ந்த திக்கற்ற மகன்

ஆசிரியர் :

டாக்டர். அருள்தாஸ், டி.டி.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in



ஆசிரியர் டாக்டர். டி.அருள்தாஸ் அவர்களின்
அருமை துணைவியார்
திருமதி. ரெஜினா அருள்தாஸ் அவர்களுடன்

நூற் பதிப்பு

நூல்	: தேவகரத்தால் உயர்ந்த திக்கற்ற மகன்
ஆசிரியர்	: டாக்டர் D. அருள்தாஸ் D.D.,
பொருள்	: தேவனால் பயன்படுத்தி உயர்த்தப்பட்டவர்
உரிமை	: ஆசிரியருக்கு
பதிப்பு	: முதற்பதிப்பு 2003 ஜனவரி
தாள்	: 13.7
அளவு	: 1x8 Size
எழுத்து	: 12 Pt.
பக்கங்கள்	: 170 பக்கம்
படிகள்	: (1) 2000
விலை	: ரூ.60.00
வடிவமைப்பு	: இராஜலெக்ஷ்மி பிரிண்டர்ஸ், தஞ்சாவூர்.

தேவ கரத்தால் உயர்ந்த திக்கற்ற மகன்

அட்டவணை

அர்ப்பணம், என்னுரை, முகவுரை, வாழ்த்துரை, அணிந்துரைகள்

1. புகைப்படங்கள் விளக்கங்களுடன்

		பக்க எண்
2.	அநாதை ஆவதில்லை	1
3.	அடைக்கலம் தந்த சின்ன தாத்தா, சின்ன அப்பாயி	3
4.	ஆதரவு காட்டிய அண்ணன், அண்ணி மற்றும் உதவிக்கரம் நீட்டிய தாய்மாமா, அத்தை	7
5.	கல்வி கற்கபட்ட பாடுகள்	18
6.	பள்ளி மற்றும் விடுதி வாழ்க்கை	26
7.	வேலை, திருமணம் மற்றும் மனைவியின் மாட்சிமை	31
8.	அரசுப்பணியும் அருட்பணியும்	36
9.	அரசு ஊழியர் அருட்பணி ஊழியம் செய்ய முடியுமா?	40
10.	மிஷனரி பணிக் தளங்களைப் பார்வையிடச் சென்றது	43
11.	அரசுப்பணியில் கடந்துவந்த கடினமான பாதைகள் (சோதனைகள் சாதனையின் படிக்கட்டுகள்)	53
12.	அருட்பணி ஊழியத்திற்கு உதவிக்கரம் கொடுத்தவர்கள்	57
13.	எனது அதிக சுகவீனம், ஊழியம் பாதிக்கப்படவில்லை	61
14.	அருட்பணி ஊழியத்தின் பாதையில் ஒரு சில சிறப்பான நிகழ்ச்சிகள்	64
15.	ஊழியத்தின் பாதையில் உடன்பிறவா அண்ணன்	75
16.	எனது குடும்பம்	78
17.	அற்புதத்தின் தேவன், பாதுகாக்கும் தேவன்	92
18.	அருமை மனைவியின் சுகவீனம்	98
19.	1998 மிகவும் சோதனைகள் நிறைந்த ஆண்டு	105
20.	அரசுப்பணிக்கு ஓய்வு, அருட்பணிக்கு ஓய்வு இல்லை	110
21.	ஆண்டவர் அளித்த அங்கீகாரம் (தெய்வீகத்தில் டாக்டர் பட்டம்)	112
22.	அருமை மனைவியின் மரணம்	113

அர்ப்பணம்

கறவல் ஆடுகளின் பின்னாக ஆதரவற்று அனாதையாக அலைந்த என்னை I சாமு 2:8 - இன்படி "அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார், அவர்களைப் பிரபுக்களோடே உட்காரவும் மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும் பண்ணுகிறார்" இப்பேற்பட்ட வாய்ப்பினை என் வாழ்க்கையில் ஏற்படுத்திக் கொடுத்த, முதலாவது எனது தேவனுக்கும், எனது சின்ன தாத்தா திரு. பொன்னுசாமி பிள்ளை அவர்களுக்கும், எனது சின்ன அப்பாயி திருமதி.பாக்கியத்தம்மாள் அவர்களுக்கும், எனது அண்ணன் திரு. டி.தேவராஜ் அவர்களுக்கும், எனது அண்ணி திருமதி.எஸ் மெர்சி கமலாபாய் அவர்களுக்கும், எனது தாய்மாமா திரு.டி.செல்வராஜ் அவர்களுக்கும், எனது அத்தை நல்லாசிரியை திருமதி. மேரி செல்வராஜ் அவர்களுக்கும், எனது வாழ்க்கையில் ஒன்றாக இணைந்து எனக்கு எல்லாவற்றிலும் தோளோடு தோள்கொடுத்து தாயின் அன்பை அறியாத எனக்கு தாயன்போடு அரவணைத்து குடும்பத்தை நடத்துவதிலும், அருட்பணி ஊழியத்திலும் உறுதுணையாக ஒரு நல்ல மனைவியாகவும், தோழியாகவும் ஆலோசகராயும் இருந்து என் வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் முன்னேறுவதற்கு உறுதுணையாக இருந்து, என் எனது இந்த சுயசரிதையை எழுதுவதற்கு ஊக்கப்படுத்தி அவ்வப்போது அதில் திருத்தங்கள் செய்து கொடுத்து, இது புத்தகவடிவில் விரைவில் வெளியிட வேண்டும் என்ற பேராவலோடு இருந்து 15.08.2002-ல் நித்தியத்திற்கென்று அழைக்கப்பட்ட எனது அருமை மனைவி திருமதி. ரெஜினா அருள்தாஸ் அவர்களுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

ஆசிரியர்.

68, [37] ஜவுளி செட்டித் தெரு,
தெற்குவீதி,
தஞ்சாவூர் -9.

என்னுரை

இன்று உலகத்திலே அனாதைகள், அனாதைகளாக ஆக்கப்பட்டவர்கள், ஆதரவற்றவர்கள், வாழ்க்கையில் எதிர் நீச்சல் போட கற்றுக்கொள்ளாமல் தங்களைக் கெடுத்துக்கொண்டவர்கள், அழித்துக் கொண்டவர்கள் ஏராளம்! ஏராளம்!! எதிர்நீச்சல்போட்டு வாழ்க்கையில் வெற்றிக் கண்டவர்கள் ஒரு சிலரே. அவர்களில் நானும் ஒருவன் என்பதை என் இயேசுவின் பலத்தோடு சவால்விட்டுக் கூறமுடியும்.

வாழ்க்கை ஆற்றுவெள்ளம் கரைபுரண்டு ஓடும்போது கிடைக்கின்ற ஆதாரத்தைப் பிடித்து கரை சேர்ந்தவர்கள் சிலர். எதிர் நீச்சல் போடத்தெரியாமல் அந்நீரோட்டத்திலேயே சென்று மடிந்தவர்கள் பலர். வாழ்க்கைப் புயலில் சிக்கி அழிந்தவர்கள் பலர். புயலின் சீற்றத்தில் அதைப்பொருட்படுத்தாமல் சீறி எழுந்து தன்னைப் பாதுகாத்துக் கொண்டவர்கள் சிலர். வாழ்க்கைப் படகில் அலைமோதி அமிழ்ந்தவர்கள் பலர். இயேசுவைத் துடுப்பாக்கி வாழ்க்கைக் கரை ஏறியவர்கள் சிலர். வாழ்க்கையாகிய சமுத்திரத்தைக் கடக்க முடியாமல் மூழ்கியவர்கள் பலர். இயேசுவாகிய உடைந்த துண்டு மரத்தைப் பற்றிப் பிடித்து அக்கரை சேர்ந்தவர்கள் சிலர். இதுதான் எனது தலைவிதி இப்படியே இருந்துப் போகிறேன் என்று தன்னை அழித்து, தன்னை நம்பி வந்தவர்களை அழித்து, தன் குடும்பத்தையே அழித்துக் கொண்டவர்கள் பலர். தலைவிதியே ஒன்றுமில்லை என்று கிறிஸ்துவுக்குள் தங்களை அர்ப்பணித்து தலைவிதியையே மாற்றியமைத்தவர்கள் சிலர். மேற்கண்ட ஒரு சிலரில் நானும் ஒருவன் என்பதை எனது சுய வாழ்க்கை வரலாற்றைப் படிக்கிறவர்களுக்கு நன்கு புரியும் என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். இன்று வாழ்க்கைப்புயலில் அலசடிப்பட்டு வாழ்கையில் எந்தவித குறிக்கோளும் இலட்சியமும் இல்லாமல் உழைக்க மனமில்லாமல் சோம்பேறிகளாக அலைந்து

திரியும் சிறுவர்களுக்கு, வாலிபர்களுக்கு, நடுத்தரவயதினருக்கு, ஏன் வயதால் முதிர்ந்தோர்களுக்கும் என்னுடைய சுய வாழ்க்கை வரலாறு ஒரு சவாலாக அமையும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. என் தேவன் எனக்குக் கொடுத்து வருகிறபெலத்தால் என்னுடைய 70-வது வயதில் சுய வாழ்க்கை வரலாற்றினை எழுதி உள்ளேன். என்னுடைய 70-வது வயதில் தெய்வீகத்தில் டாக்டர் பட்டம் (Doctor of Divinity) பெற என் தேவன் எனக்கு உதவி செய்தார். எனது சரீரத்தில் 20 ஆண்டுகளுக்கு மேலாக சர்க்கரை வியாதி, அதன் காரணமாக இரண்டு கண்களிலும் வலி, எரிச்சல், குத்தல், கண்களில் நீர்வடிதல், குளோக்காமா வியாதி, கண் மருத்துவர்கள் கூற்றுப்படி எந்த சமயத்திலும் கண்கள் பார்வை இழக்க நேரிடும் என்ற சூழ்நிலை, இந்த வியாதியை மருத்துவத்தினால் குணப்படுத்த முடியாது. சில காலம் தடுத்து நிறுத்தலாம் என்று கூறினர். சர்க்கரை வியாதி காரணமாக சரீரத்தின் அனைத்து உறுப்புகளும் பாதிக்கப்பட்டுள்ளது. எனது சரீர பலகீனங்களை ஒரு பொருட்டாக எண்ணாமல் பவுல் அப்போஸ்தலன் சொன்ன வண்ணமாக ''என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப்பெலன் உண்டு'' பிலி 4:13. அவருடைய பெலத்தினால் தேவனுடைய ராஜ்ஜியத்தை விரிவாக்கும் பணியில் முழுமனதோடு ஈடுபட்டுச் செயல்பட என் தேவன் எனக்கு உதவி செய்து வருகிறார்.

நான் 28 ஆண்டுகளுக்கு மேலாக அருட்பணி ஊழியத்தை 1974-ல் எப்படி ஆரம்பித்தேனோ அதைவிட வேகமாக இந்த ஊழியத்தைச் செய்ய என் தேவன் எனக்கு பெலத்தைக் கொடுத்து உதவிசெய்து வருகிறார். என் வாழ்க்கைப் பாதையில் ஏற்பட்ட எத்தனையோ ஏற்ற இறக்கங்கள், மேடு பள்ளங்கள், பேரிழப்புகள், சுகவீனங்கள், பலகீனங்கள் ஆகியவைகளின் மத்தியில் எனக்கு ஏற்பட்ட இழப்புகளை ஒரு சாக்காகச் சொல்லாமல் அவரது பணியை, அவரது சித்தத்தின்படி செய்து வர என் தேவன் எனக்கு உதவி செய்து வருகிறார்.

என்னைப் பற்றி சரியாக அறிந்த, புரிந்த சில நண்பர்களும் சில அருட்பணியாளர்களும், உறவினர்களும்,

சிறப்பாக எனது அருமை மனைவியும் எனது வாழ்க்கை வரலாற்றினை எழுதி ஒரு புத்தகமாக வெளியிட்டால் இன்றைய தலைமுறையினருக்கு மிகவும் பயன் உள்ளதாகவும் ஒரு சவாலாகவும் அமையும் என்று என்னைக் கேட்டுக் கொண்டனர். மேற்கண்டவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த வரலாறு எழுதப்பட்டது. இந்த வரலாற்றில் அநேகருடைய பெயர்களும், நடந்த சம்பவங்களும் குறிப்பிடப் பட்டுள்ளது. இவைகள் அனைத்தும் நல்லெண்ணத்தின் அடிப்படையில் எழுதப்பட்ட வைகளாகும். இதில் எழுதப் பட்டவை எவருடைய மனதையாகிலும் புண்படுத்தி யிருக்குமானால் தயை கூர்ந்து என்னை மன்னிக்கும்படி பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன்.

இந்த என் சுய வாழ்க்கை வரலாற்றிற்கு முன்னுரை எழுதிய என் அருட்பணி ஊழியத்திற்கு ஆசான் களான போதகர், அறிவர். தியோடர் வில்லியம்ஸ் அண்ணன் மற்றும் ஜி. சசிகுமார் அவர்களுக்கும், அணிந்துரை எழுதிய எனது அருமை அண்ணன் திரு.டி. தேவராஜ் அவர்களுக்கும், டாக்டர் அரோமா சாம், முனைவர். தா. ஈசுவரபிள்ளை அவர்களுக்கும், அண்ணன் டி. சுந்தர் டேவிட் அவர்களுக்கும், எனது மூத்த மகள் திருமதி. புனிதா மனோகர் பெஞ்சமின் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இப்புத்தகம் சிறப்பாக வெளிவருவதற்கு உதவி செய்த டாக்டர் அரோமா சாம் அவர்களுக்கும், சகோதரி டி. கமலா அவர்களுக்கும், திருமதி. புனிதா பெஞ்சமின், திருமதி. குணா சுகுமார் அவர்களுக்கும், திரு. மற்றும் திருமதி எட்வின் ரவிக்குமார் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை உரித்தாக்குகிறேன். இப்புத்தகத்தை அதிவிரைவில் அச்சுசெய்து, அச்சுப்பிழைநீக்கி உதவிசெய்த ''இராஜலெக்ஷ்மி ஆப்செட் அச்சகம்'' குறிப்பாக அதன் உரிமையாளர் திரு.க.கோபிகிருஷ்ணன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை உரித்தாக்குகிறேன்.

டாக்டர். டி. அருள்தாஸ், டி.டி.

மறைதிரு. டாக்டர். **தியோடர் வில்லியம்ஸ்**
நிறுவனர், இந்திய அருட்பணி இயக்கம்,
பெங்களூர் – 77.

முகவுரை

ஒரு சுயசரிதைக்கு அருமையான தலைப்பு, நம்மைக் கவரும் தலைப்பு! என்னைக் கவர்ந்தது. தேவகரத்தால் உயர்ந்த திக்கற்ற மகன். 'என்னைக் கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்' [1 சாமுவேல் 2:30] என்று நம் தேவன் சொல்லியிருக்கிறாரல்லவா? என்னை ஊழியத்திற்கு ஆண்டவர் அழைத்தபொழுது அவர் தந்த வாக்கு இதுதான். அன்புத் தம்பி டாக்டர். அருள்தாஸ் அவர்களின் சுயசரிதையை வாசிக்கும்பொழுது இந்த வாக்கு நம் கண்களுக்கு முன்னால் நிற்கிறது.

கடந்த 28 ஆண்டுகளாக சகோதரரை நான் அறிவேன். வாழ்க்கையில் அவருக்கு ஏற்பட்ட இழப்புகள், இருண்ட அனுபவங்கள், ஏமாற்றங்கள் இவற்றின் நடுவிலும் சோர்வுக்கு இடங்கொடுத்துக் கர்த்தரைப் பின்பற்றுவதையோ, அவருக்கு ஊழியஞ்செய்வதையோ தம்பி விட்டுவிடவில்லை. அருமைப் பேரப்பையன்கள் மூன்றுபேரையும், தாயின் அன்பை அறியாதவருக்கு ஏற்ற தோழியாக இருந்து உற்சாகப்படுத்திய அன்பு மனைவியையும் இழந்த சூழ்நிலையிலும் ஊழியத்தை உதாசீனம் செய்யவில்லை. சிலர் கசப்புற்றுச் சொல்வது போல, 'கடவுளுக்கு ஊழியம் செய்யும் எனக்குக் கிடைக்கும் பலன் இது தானா?' என்று கேட்டு தேவனுடைய அழைப்பை விட்டுவிடவில்லை.

ஏழ்மையிலிருந்தும், எளிய வாழ்விலிருந்தும்

கர்த்தர் தம்மைத் தூக்கியெடுத்துப் பயன்படுத்தும்படி பொறுமையாகத் தம்மை அவர் கையில் கொடுத்துவிட்டு அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதையே தம் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டிருந்தார் அன்புத் தம்பி. இறுதி வரைக்கும் அவ்வாறே செயல்படுவாரென்று உறுதியாக நம்புகிறேன். இந்த நாட்களில் ஊழியத்தைப் பயன்படுத்தித் தங்களையும் தங்கள் குடும்பத்தினரையும் உயர்த்துவதையே குறிக்கோளாக வைத்து அநேகர் செயல்படுவதை நாம் காண்கிறோம். இது எவ்வளவு நம் தேவனைத் துக்கப்படுத்துகிறது!

மேற்கூறிய ஊழியர்களையும், ஊழியங்களையும் பார்த்து சலிப்புற்றிருக்கிறவர்களுக்கு தேவகரத்தால் உயர்த்தப் பட்ட டாக்டர்.அருள்தாஸ் அவர்களின் சுயசரிதை உற்சாகத்தைத் தரும். ஊழியப்பாதையில் செல்ல வாஞ்சையுள்ள வாலிபத் தம்பிமார், தங்கச்சிமாருக்கு அறைகூவலாயிருக்கும். கடவுள் தாமே இந்த நூலைத் தம் கையிலெடுத்து ஆசீர்வதித்துப் பயன்படுத்துவாராக.

மறைதிரு. டாக்டர். தியோடர் வில்லியம்ஸ்

அன்பன் D. தேவராஜ்,
தாளாளர்,
நவ பாரத் மெட்ரிக்குலேஷன் பள்ளி,
தஞ்சாவூர்.

அணிந்துரை

பேரன்பு கொண்ட வாசகப் பெருமக்களே உங்கள் அனைவரையும் எம்பெருமான் இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துகின்றேன்.

உங்கள் கையிலிருக்கும் இந்த அருமையான புத்தகத்தின் வரலாற்று நாயகன் எனது உடன் பிறந்த தம்பி, டாக்டர் D. அருள்தாஸ், D.D., என்பவரின் வாழ்க்கைப் போராட்ட நிகழ்ச்சிகள் நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன. அநாதைகளின் நேசன், ஆறுதலின் தேவன் அற்பமானவர்களைக் கொண்டு மிகவும் ஆச்சரியமான காரியங்களைச் செய்விக்கின்ற ஆண்டவன், தமது அடியானை வழிநடத்திய பாங்கு நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றது.

வாழ்க்கைப் போராட்ட சுழலில் சிக்கிய தமது தாசனை, தனது மகிமைக்கென்றும், மக்களின் நன்மைக் கென்றும் தேவன் தமது தாசர்களை வழி நடத்திய விதம் மிகவும் வினோதமானதாகும். நம்பிக்கை இழந்து தவித்த நேரத்திலும், திக்கற்று தவித்த நேரத்திலும், சோர்வுற்று களைத்த நேரத்திலும் அன்பரின் அரவணைக்கும் கரம் தமது தாசனைக் கைவிடவில்லை என்பதை இந்நூல் தெளிவாக விளக்குகின்றது.

அற்பமாய் எண்ணப்பட்டவர்களைக் கொண்டு நமது தேவன் அற்புதங்களை நிகழ்த்த வல்லவர் என்பதை இந்நூல் நிரூபித்துக்காட்டுகின்றது. இந்நூலின் மைய நாயகன் டாக்டர் D. அருள்தாஸ் அவர்கள், தமது வாழ்க்கைப் போராட்டத்தில் தொய்ந்து போகாமல், எவ்வாறு மன உறுதியுடன் செயல் பட்டார் என்றும், தேவன் அவரை எவ்வாறு தாங்கி வழி நடத்தினார் என்றும் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்கள்.

படிப்பிற்கு வாய்ப்பு இல்லாமல், பனைமரம் ஏறித்திரிந்த தாசனை, படிக்கவும், சிந்திக்கவும், பெரிய மேடை ஏறி அருட்செய்தி வழங்கவும், D.D., பட்டம் வழங்கப்படவும் வழிவகுத்த தேவகிருபையின் வல்லமையை இந்நூலின் வாயிலாகக் காணமுடிகிறது.

வாழ்க்கையில் அருட்பணி புரிய தனிப்பட்ட ஒரு சிலரால் மட்டுமே முடியும் என்ற நிலையிலிருந்து மாறுபட்டு, ஒரு வித்தியாசமான மனிதனையும் அதற்கு உறுதுணையாக நின்ற அவரது மனைவி திருமதி. ரெஜினா அருள்தாஸ் அவர்களையும் இந்நூல் படம் பிடித்து காட்டுகின்றது.

டாக்டர் D. அருள்தாஸ் D.D., அவர்களின் வாழ்க்கைப் போராட்டத்தில், அவர்களின் குடும்பத்தில் ஏற்பட்ட வியாதிகள், பேரர்களின் இழப்புகள், அயலகத்தாரின் தொல்லைகள், தொடர் கவலைகள் ஆகியவற்றின் மத்தியலும், தேவனை இவர்கள் இறுகப்பற்றிக் கொண்டு, சிறிதும் மனம் தளராமல் செயல்பட்ட விதம் நம் யாவரையும் வெட்கமடையச் செய்கின்றது. மேலும் இவர் தமது போராட்டத்தில் பக்தன் யோபுவை தனக்கு முன் மாதிரியாக வைத்து செயல்பட்டுள்ளார் என்றும் அறியமுடிகிறது.

இந்நூலை யாவரும் விலை கொடுத்து வாங்கிப்படித்து நற்பயன் பெறவேண்டும் என்பதும், டாக்டர் D.அருள்தாஸ், D.D., அவர்களை ஆதரிப்பதன் மூலம் தொண்டாற்ற வழிவகுக்க வேண்டும் என்பதும் எனது பேரவாவாகும்.

கிறிஸ்துவ சமுதாயத்திற்கும், இன்னும் கிறிஸ்துவை அறிய வேண்டிய மக்களுக்கும் ஏனை யோருக்கும் திருத்தொண்டு ஆற்றிவரும் அன்புதாசன் அவர்கள், இறைவனின் பேரருள் பெற்று மக்கள் சமுதாயம் முழுமைக்கும் வழிகாட்டியாய் வாழ்வாங்கு வாழ வேண்டுமாய் வாழ்த்தி, ஜெபித்து இந்த அணிந்துரையை அன்புடன் நிறைவு செய்கின்றேன். நன்றி.

அன்பன் D. தேவராஜ்.

முனைவர் தா. ஈசுவர பிள்ளை, எம்.ஏ., எம்.ஏ., பி.எச்.டி.,
இணைப் பேராசிரியர்,
இலக்கியத் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர் – 5.

அணிந்துரை

டாக்டர். அருள்தாசு ஆசிரியருடைய இந்நூலைப் படிக்கும் அரிய வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. ஒருவருடைய வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளும் வாழ்க்கை வரலாறும் அவற்றைப் படிப்போருக்கு சிறந்த படிப்பினைகளாக அமைகின்றன. அவ்வகையில் இந்நூலும் படிப்போர்க்குப் பல்வேறு நல்ல படிப்பினைகளை வழங்குவதாக அமைகின்றது.

இந்நூலின் மூலம் ஆசிரியர் தம் வாழ்க்கையில் அனுபவித்த துன்பங்கள், மகிழ்ச்சிகள், கடுமையான முயற்சிகள் ஆகியவற்றையும் தம் முயற்சியால் தாம் அடைந்த முன்னேற்றங்களையும் ஒளிவு மறைவின்றி வெளிப்படுத்தி யுள்ளார்.

ஆசிரியரின் நன்றி மறவாப் பண்பு, பிறருக்கு உதவும் மனப்பாங்கு, தீயவற்றை அன்றே மறக்கும் அரும் குணம், தீமைகளை எதிர்ப்பதில் அஞ்சாமை, குடும்ப உறுப்பினர்கள் மட்டும் அன்றிச் சமுதாயத்தில் உள்ள நலிவடைந்த மக்களுக்கும் உதவும் மனநிலை, பிறர் துன்பங்களில் தயக்க மின்றிப் பங்கு கொண்டு உதவும் நிலை, உறுதியான மனநிலை ஆகியவற்றை இந்நூலின் மூலம் அறியமுடிகின்றது.

எல்லாவற்றையும் விட மேலாக ஆசிரியரின் அசைக்க முடியாத இறைப் பற்றும் இறை நம்பிக்கையும்

இந்நூலின் ஒவ்வொரு நிலையிலும் வெளிப்படக் காணலாம். இன்பங்களும் துன்பங்களும் இறைவனின் செயல்களின் வெளிப்பாடுகளே. வாழ்க்கையில் தாம் செயலாற்றும் ஒவ்வொரு செயலும் இறைவனின் விருப்பப்படியே நிகழ்கின்றன. வாழ்வும் தாழ்வும் இறைவனின் எண்ணப்படியே நிகழ்கின்றன என்பதில் ஆசிரியர் அழுத்தமான நம்பிக்கை கொண்டுள்ளார் என்பது புலனாகின்றது.

மக்கள் அனைவரும் கற்று உணரவேண்டிய படிப்பினைகள் பல இந்நூலுள் காணப்படுகின்றன. இந்நூலை எழுதிய ஆசிரியரின் சிந்தனைகள் தனிமனித மேம்பாட்டுக்குப் பெரிதும் உரம் அளிப்பன ஆகும்.

சிறந்த மனித நேயமும் இறைப்பற்றும் கொண்ட இந்நூலின் ஆசிரியர் எல்லா நலன்களும் பெற்று வளமுடன் வாழ இறைவனை வேண்டுகிறேன்.

[தா. ஈசுவர பிள்ளை]

G. SASIKUMAR
President & Executive Director,
Global Vision,
Chennai.

அணிந்துரை

அறிவர் D.அருள்தாஸ் அவர்களுடைய வாழ்க்கை ஆயிரக்கணக்கான மக்களுடைய வாழ்க்கையில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அவர்களது வாழ்க்கையின் அரிய அனுபவங்கள் நூல் வடிவில் வெளிவருவதை அறிந்து அக மகிழ்ச்சி அடைகிறேன். அது அனேகருக்கு முன்மாதிரியாகவும் ஆசீர்வாதமாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்நூலுக்கு அணிந்துரை எழுதுவதை ஒரு பாக்கியமாகக் கருதுகிறேன். இந்திய திருச்சபையில் 1960-ம் ஆண்டுகளிலிருந்து ஓர் எழுப்புதல் அலை வீச ஆரம்பித்தது. பாவ மன்னிப்பின் நிச்சயம், ஜெபவாழ்க்கை, விசுவாசிகளின் ஐக்கியம், ஆத்தும ஆதாயம் ஆகிய அடிப்படை கிறிஸ்தவ குணாதிசயங்கள், விசுவாசிகளின் வாழ்க்கையில் இடம்பெற ஆரம்பித்தன. அத்துடன் அதிமுக்கியமாக வேற்றுமொழி பேசும் கலாசாரங்களுக்கும் மிஷனெரிகளை அனுப்ப வேண்டும் என்னும் ஆர்வம் இந்த எழுப்புதலின் மகுடமாய் ஜொலிக்க ஆரம்பித்தது. இந்த புதிய தரிசனத்தை புரிந்து கொள்ளாத பலர் இதை எதிர்த்த போதிலும் அவர்களால் அதை மட்டுப்படுத்த முடியவில்லை. வாலிபர்கள் தங்களை குழுக்களாய் அமைத்துக் கொண்டு ஜெபத்தாலும் பொருளாலுமம் மிஷனெரி ஊழியத்தைத் தாங்க ஆரம்பித்தனர். பலர் தங்களையே மிஷனெரிகளாய் அர்ப்பணித்து தூர இடங்களுக்கு புறப்பட்டுச் சென்றனர். இதன் விளைவாக பல மிஷனெரி இயக்கங்கள் உருவாயின. 1970-ம் ஆண்டுகளில், பல எதிர்ப்புகள் மத்தியிலும் மிஷனெரி வாஞ்சை விசுவாசிகள் நடுவில், அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டு சபைகளில் கட்டுக்கடங்காமல் வளர ஆரம்பித்தது. அந்த வளர்ச்சியின் ஒரு பிரதிபலிப்புதான் அறிவர் D.அருள்தாஸ் அவர்களின் வாழ்க்கை.

1973-ம் ஆண்டு என்று நினைக்கிறேன். நானும் சகோதரன் P.S. தாமஸ் அவர்களும் திருச்சிராப்பள்ளியில் சில நாட்கள் தங்கி மிஷனெரி ஊழியங்களைப் பற்றின படக்

காட்சிகளை சில ஜெபக்குழுக்களுக்கு காண்பித்துவிட்டு தஞ்சாவூருக்குச் சென்றோம். அங்கு ஒரு தங்கும் விடுதியில் தங்கி, எங்கள் கைவசமிருந்த விலாசப்பட்டியலின் அடிப்படையில் சில நபர்களை சந்தித்தோம். அப்போது அங்கு பணிபுரிந்து வந்த திரு. தங்கபோஸ் அவர்களிடம் எங்கள் தரிசனத்தை பகிர்ந்து கொண்டபோது, ''இந்த தரிசனத்தை இந்தப் பகுதியில் பரப்ப உங்களுக்கு பொருத்தமான ஒரு நபரை அறிமுகம் செய்து வைக்கிறேன்'' என்று கூறி அன்று மாலை IELC ஆலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் வைத்து அண்ணன் அருள்தாஸ் அவர்களை எங்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். சுமார் 28 ஆண்டுகளுக்குப் பிறகு, இன்று அதை திரும்பிப் பார்க்கும்போது கர்த்தருடைய கரம்தான் எங்களை அவருக்கு நேராய் நடத்திற்று என்பதை உறுதியாய் கூற முடிகிறது. அன்றுமுதல் நான் அடிக்கடி தஞ்சாவூருக்குச் செல்ல ஆரம்பித்தேன். IEM –இன் கவுரவ வட்டாரச் செயலர் பொறுப்புக்கு ஊதியமில்லை. எனினும் தன்னார்வ உழியர் என்றும் முழு நேர ஊழியர் என்றும் ஒப்புக்கொடுத்தலில் வித்தியாசம் காணப்படவில்லை. ஒரு குடும்பத்தின் பிள்ளைகள் போல ஒருவர் பாரத்தை ஒருவர் பகிர்ந்து கொண்டு இலட்சியத்தின் மேல் குறியாக ஊழியம் செய்தோம். அதன் பிறகு 1984–இல் இருந்து கவுரவ சபை தொடர்பு இணைச் செயலராக இருந்து பணிபுரிகிறார்கள்.

அரசுப் பணியில் இருப்பவர் ஆண்டவரின் அருட் பணியிலும் அசாதாரணமான ஈடுபாடு கொள்ள ஆரம்பித்தார்கள். இதனால் அவருக்குப் பணியிலும் பல நெருக்கடிகள் வந்ததுண்டு. எனினும் இலக்கை நோக்கித் தொடர்வதில் அவர் சோர்ந்து போகவில்லை. தன்னுடைய செல்வாக்கு, திறமைகள், பணம், நேரம், குடும்ப வாழ்க்கை அனைத்தையுமே ஒரே இலட்சி யத்துக்காக ஒப்புக்கொடுத்து செயல்பட்டார் என்பதற்கு நானும் ஒரு சாட்சி. அவர்களுடைய மூன்று மகள்களும் [புனிதா, குணா, சுகுணா] அவர்களுடைய மகன் [செல்வம்] சிறுவயதிலேயே மிஷனெரி வாஞ்சையோடு வளர்க்கப் பட்டார்கள். பெற்றோரின் வாஞ்சையையும் ஒப்புக் கொடுத்தலையும் பார்த்த பிள்ளைகளும் மிஷனெரி பாதையிலே அடியெடுத்து வைத்தார்கள். ஜெபக் கூட்டங்களுக்குச் செல்லும்போது பிள்ளைகளும் கூடச் சென்றனர். மிஷனெரிப் பணிக்காக தங்கள் வசதிகளைக்

குறைத்துக் கொண்டு செலவுகளை மிச்சப்படுத்தி அந்தத் தொகையை மிஷனெரிப் பணிக்குக் கொடுத்து வந்தனர். பிள்ளைகள் தலையில் பூவைக்கும் செலவையும், பள்ளிக்கு பஸ்ஸில் செல்லும் செலவையும் மிச்சப்படுத்தி அதை மிஷனெரிப் பணிக்கு காணிக்கையாக்கினர். அண்ணனது அன்பு மனைவி, அருமை அக்கா ரெஜினா அவர்கள் கவுரவ வட்டாரச் செயலராகவும், கவுரவ ஒருங்கிணைப்பாளராகவும் இருந்து ஊழியத்தில் அண்ணனுக்கு ஏற்றத் துணையாக தோள் கொடுத்தார்கள். எங்களை எல்லாம் அன்போடு உபசரிப்பார்கள். அவர்களது மறைவு எங்களுக்கு பெரிய இழப்பாகும்.

இந்தக் குடும்பம் என்னைப் போன்ற முழுநேர ஊழியர்களுக்கு அடைக்கலமும் ஆதரவும் காண்பித்து அன்புடன் கண்டித்து ஆவிக்குரிய பாதையில் எங்களைக் காக்க ஓர் ஆவிக் குரிய மூத்த சகோதரனாய் செயல்பட்டார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. இவரால் உருவாக்கப்பட்ட ஊழியர்கள் பலர் உண்டு.

அண்ணன் அருள்தாஸ் அவர்கள் மிஷனெரி பணியில் ஈடுபட்டதால் கர்த்தரால் கனம் பண்ணப்பட்டார்கள். அதே வேளையில் கிறிஸ்துவினிமித்தம் ஏற்படும் பலபாடுகளையும் முறுமுறுப்பின்றி சகித்து வாழ்கிறார்கள். இவர்களுடைய வாழ்க்கை இன்னும் அனேகரைத் தொட வேண்டும் என்று ஜெபிக்கிறேன். இன்னும் இவர்களைப் போன்ற குடும்பங்கள் அனேகம் தோன்ற வேண்டும் என்றும் ஜெபிக்கின்றேன்.

இயேசு சொன்னார், ''. . . ஒருவன் எனக்கு ஊழியம் செய்தால் அவனை பிதாவாதவனர் கனம் பண்ணுவார்'' யோவான் 12:26 இந்த வார்த்தைகள் அண்ணன் அருள்தாஸ் அவர்களுக்கு மிகப் பொருத்தமானது. அண்ணன் அவர்களது 48 ஆண்டு கால அயராத, ஆரவாரம் இல்லாத அமைதலான இறைப்பணிக்கு பரிசாக தேவன் அவர்களுக்கு தெய்வீகத்தில் டாக்டர் பட்டம் வழங்கி கனப்படுத்தி யிருக்கிறார். அவர்கள் வாழ்க்கையின் அனுபவங்களை இந்த நூலின் மூலம் படிக்கும் நீங்களும் அனேகருக்கு ஆசீர்வாதமாய் வாழ்ந்து கர்த்தருடைய கனத்தைப் பெற்றுக் கொள்ள வாழ்த்துகிறேன்.

G. SASIKUMAR

Mr. D. Sunder David
Joint Director (Retd.)
Local Fund Audit
Thanjavur - 7.

அணிந்துரை

கர்த்தர் எளிமையானவர்களை அவர் வார்த்தையின்படி உயர்த்துகிறார். சங். 107:41 "எளியவனையோ சிறுமையினின்று எடுத்து உயர்ந்த அடைக்கலத்திலே வைத்து, அவன் வம்சங்களை மந்தையை போலாக்குகிறார்." கர்த்தருடைய வசனத்திற்கு கீழ்ப்படிந்து, அவர் ஒப்புவித்த ஊழியத்தை, அவர் சித்தப்படி உண்மையும், உத்தமுமாக, அவர் நாமம் மகிமைக்காகச் செய்யும் ஊழியக்காரரைக் கர்த்தர் உயர்த்துகிறார் என்பதற்கு சகோதரர். டாக்டர் D. அருள்தாஸ் அவர்கள் ஒரு உதாரணம் என்றால் அது மிகையாகாது. சகோதரர், கர்த்தருக்காக செய்த, செய்துவருகிற பணியைப் பார்த்து, கர்த்தரே சிலர் மனதில் ஏவி அவருக்கு தெய்வீகத்தில் டாக்டர் பட்டம் வழங்கியுள்ளார்கள். இதுவும் கர்த்தருடைய செயல் என்றுதான் நான் நம்புகிறேன். ஆனால் சகோதரர் இந்த பேர் புகழுக்காக அல்ல, ஆத்துமப் பாரத்தோடு பவுல் அப்போஸ்தலர் பிலிப்பியர் 3:12 –ல் கூறுவதுபோல் "நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக் கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன்." என்ற எண்ணத்தோடு செயல்பட்டு வருகிறார்கள்.

சகோதர் அவர்களை நான் சிறுவயதிலிருந்தே அறிவேன். என் தகப்பனார் பிரபலம் தானியேல்பிள்ளை, அவருக்கு ஞானதகப்பனார். அவர் தகப்பனார் டேவிஸ் பிள்ளை அவர்கள் எனக்கு ஞானதகப்பனார். சகோதரரை எனக்கு ஒரு உடன் பிறவா சகோதரர் என்று நான் கருதுவதுண்டு. இவர் சிறுவயதிலேயே தன் தாயையும், தன்

தகப்பனாரையும் இழந்து அனுபவித்த துன்பங்களையும், பட்டபாடுகளையும், பிறகு மாற்றாந்தாயால் பட்டக் கொடுமைகளையும், ஊழியத்தில் ஈடுபட்ட பின் இவர் பட்ட பிரயாசங்களையும், செய்த தியாகத்தையும் பார்க்கும்போது, நமது பிதாவாகிய தேவன், தன்குமாரனாகிய இயேசு கிறிஸ்து மூலமாயும், பரிசுத்த ஆவியின் மூலமாயும் எவ்விதமாக வாக்குத்தத்த வசனங்களை இவர் வாழ்க்கையில் நிறை வேற்றினார் என்று இவர் வாழ்க்கை வரலாற்றை வாசிக்கும் போது தெரியவரும். சங் 9:18 "எளியவன் என்றைக்கும் மறக்கப்படுவதில்லை. சிறுமைப்பட்டவர்களுடைய நம்பிக்கை ஒருபோதும் கெட்டுப்போவதில்லை. சங் 9:9 சிறுமைப் பட்டவனுக்கு கர்த்தர் அடைக்கலமானவர். நெருக்கப்படுகிற காலங்களில் அவரே தஞ்சமானவர்". அதுமட்டுமல்ல சங் 27:10-ல் வாசிக்கிறோம் "என் தகப்பனும், என் தாயும் என்னைக் கைவிட்டாலும் கர்த்தர் என்னை சேர்த்துக்கொள்வார்" சகோதரர் வாழ்கையில் இந்த வசனங்கள் நிறைவேறிற்று என்றால் அதுவும் மிகையாகாது.

கர்த்தர் அவரை தன் ஊழியத்திற்கு என்று தெரிந்தெடுக்கும் போது அவருக்கு மாணவர் ஊழியம் மற்றும் IEM ஊழியத்தின் மூலமாக ஊழியம் செய்ய ஆத்தும பாரத்தை கொடுத்திருக்கிறார். சகோதரர் அவர்கள், இந்த IEM ஊழியத்தில் முன்னணியில் நிற்கும் மிஷனெரிகளைத் தாங்கத்தக்கதாக அவர்களுக்கு தேவையான பொருள் சேகரித்து அனுப்புவதில் ஈடுபட்டு மிகவும் பிரயாசத்தோடு, பல இடங்களுக்கு சென்று ஆலயங்களில் கூட்டங்களை நடத்தியும், வீடுகளை சந்தித்தும், பரிசுத்தவான்களுக்கு செய்யவேண்டிய தர்ம சகாயத்தை குறித்து பேசியும் பணம் சேகரித்து அனுப்புகிறார். முன்னிலையில் நிற்கும் ஊழியர்களை, பின்னணியிலிருந்து தாங்குவது நமது கடமை என்று நன்கு அறிந்தவர். ஏன் என்றால், சகோதரர் படிப்பு முடிந்த பிறகு (Defence Service)-ல் இந்திய இராணுவத்தின் போர்வீரராக இரண்டு ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். முன்னணியில் நிற்கும் [போர்வீரர்களுக்கு] களப்பணியாளர் (Front Line) எப்போதும் பின்னணியில்

களப்பணியாளர்கள் [போர் வீரர்கள்] நின்று கொண்டு (Second Line Defence) முன்னணியில் நிற்பவர்களுக்கு தேவையான உணவுப்பொருள்கள், ஆயுதங்கள் மற்றும் தேவையானவை களைக் கொடுத்துப் பணியாற்றுவார்கள். அதுபோலவே சகோதரர் அவர்கள் களப்பணியில் இருக்கும் ஊழியர்களை தாங்க வேண்டும் என்ற பாரம் உண்டு. வீடு வீடாக சென்று ஊழியத்திற்கு பணம் சேகரிக்கும்போது ஊழியத்தை தாங்கும் குடும்பத்தினருடைய (Partners) பிரச்சனைகளுக்காக பாரப்பட்டு ஜெபித்து வருவார். தன்னால் இயன்றவரை அவர்களுக்கு உதவிசெய்வார். தன் நேரத்தையும் பார்க்காமல், தன் மனைவியின் சுகவீனத்தின் மத்தியிலும், கர்த்தருடைய பணியை அசதியாய் செய்யாமல், வெகு பொறுப்போடு செய்கிறவர் நம் சகோதரர். பவுல் அப்போஸ்தலர் II கொரிந்தியர் 9:12-ல் கூறியபடி "இந்த தர்ம சகாயமாகிய பணிவிடை பரிசுத்தவான்களுடைய குறைவுகளை நீக்குகிறது மல்லாமல் அநேகர் தேவனை ஸ்தோத்தரிப்பதினாலே சம்பூரண பலனுள்ளதாயும் இருக்கும்". சகோதரருடைய ஒவ்வொரு செயலும், வசனத்தின் அடிப்படையில் தான் இருக்கும்.

சகோதருடைய அரசு பணியை நினைக்கும் போது, அவர் கைகளில் சுத்தமுள்ளவராக பணியாற்றினார் என்று நான் அறிவேன். லூக்கா 3:11 -ல் கூறியபடி "உங்கள் சம்பளமே போதும் என்று இருங்கள்" பிரசங்கி 7:7 -ல் சொல்லியபடி "பரிதானம் இருதயத்தை கெடுக்கும்" Iதிமோத்தேயு 6:6 10 (I) பண ஆசை எல்லாத்தீமைக்கும் வேராயிருக்கிறது" போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்" நீதிமொழி 15:27 பரிதானங்களை வெறுக்கிறவனோ பிழைப்பான். அவர் எத்தனையோ பேருக்கு கடன் பெற அனுமதி வழங்கவும், மற்றும் கொடுத்த கூட்டுறவு கடன்களை வசூல் செய்யவும் அதிகாரம் உள்ளவராக பணி ஆற்றினார். அவருக்கு எவ்வளவோ வாய்ப்பு இருந்தும் சோதனைகள், எதிர்ப்புகள் வந்தபோதும், எல்லாவற்றையும் கர்த்தருடைய கிருபையால் தன்னை காத்துக்கொண்டார். இவர் (Selection grade sub-Registrar) ஆக கூட்டுறவு இலாகாவில் தேர்வு நிலை

சார்பு-பதிவாளராக பணியாற்றி ஓய்வு பெற்ற போது இவர் வீட்டிற்கு அருகேயுள்ள திருமண மண்டபத்தில், ஒரு பிரிவு உபசார விருந்து கொடுத்தார். அதற்கு நானும் போயிருந்தேன். அப்பொழுது அவர் நண்பர்கள் அவருடைய தூய்மையான அரசுப்பணியைப் பற்றி போற்றி புகழ்ந்தனர். அது கர்த்தருடைய நாமத்துக்கு மகிமையாக இருப்பதை நான் உணர்ந்தேன்.

சகோதரர் அவர்கள் அரசு பணியில் ஓய்வு பெற்ற பிறகு, ஒருமுறை நான் அவரிடம் நேரம் எப்படிப் போகிறது? என்று கேட்டேன். அதற்கு அவர் கர்த்தருடைய பணியை செய்ய நேரம்போதவில்லை என்றார். அவர் பணியில் இருக்கும் போது டாக்டர் தியோடர் வில்லியம்ஸ் அவர்கள் சகோதரரை முழுநேர IEM பணிக்கு அழைத்தாராம். இதை குறித்து சகோதரரும் அவர் மனைவியும் உபவாசித்து ஜெபித்து கர்த்தருடைய வழிநடத்துதலுக்காக காத்திருந்தாராம். ஆனால் திட்டவட்டமாக அவருக்கு ஒரு வழி நடத்துதல் இல்லாததால், அரசு பணியிலிருந்துகொண்டே, முழுநேர பணியாளர்களை காட்டிலும் அதிகமாக கர்த்தருடைய பணியை செய்ய முடிவு எடுத்து, அதன்படி செய்து வருகிறார். இப்போது ஓய்வு பெற்ற பின்னும் செய்து கொண்டு வருகிறார். அப்போஸ்தலர் நடவடிக்கையில் 20:34,35 -ல் பவுல் அடிகளார் கூறுவதுபோல ''நீங்கள் அறிந்திருக்கிறபடி எனக்கும், என்னுடனே கூட இருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக இந்த கைகளே வேலை செய்து, எப்படி பிரயாசப்பட்டு பல வீனரை தாங்கவும், வாங்குகிறதைப் பார்க்கிலும், கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எவ்விதத்திலேயும் உங்களுக்கு காண்பித்தேன்'' என்றார். சகோதரர் ஊழியத்திலே, அநேகமாக பவுல் அடிகளார் ஊழியம் செய்ததுபோல் இவரும் செய்து வருகிறார் என்று நான் அறிவேன். சகோதரர் அவர்கள் தன் கடைசி மகளை ஒரு IEM மிஷனரிக்கு திருமணம் செய்து கொடுத்து தற்சமயம் இருவரும் மிஷனரிகளாக பணி செய்கிறார்கள். மற்ற பிள்ளைகளும் தங்களால் இயன்ற வரை, தங்கள் தகப்பனார்காட்டிய வழியில் ஆண்டவருடைய

பணியை செய்கிறார்கள் என்று நான் நன்கு அறிவேன். இவர் யோசுவாவைப் போல் ''நானும் என் வீட்டாரும், கர்த்தரையே சேவிப்போம்'' என்று வாழ்பவர்கள். அது ஆங்கிலத்தில் கூறினால் "As for me and my house, we will serve the lord" என்று பொருள்படும். சுருக்கமாக சொன்னால், இவர் குடும்பமே ஒரு மிஷனரிக்குடும்பம் என்றும் கூறலாம்.

பல ஆண்டுகளுக்கு முன் நான் அரசு பணியிலிருக்கும் போது ஒரு சமயம் சுகவீனப்பட்டு, மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தேன். அச்சமயம் சகோதரர் அருள்தாஸ் அவர்கள் என்னை நலம் விசாரிக்க வந்தார். அவர் எபிரேயர்நிருபம் 12:7-10 வசனங்களை வாசித்து ஆறுதல் கூறி ஜெபம் செய்து போனார்கள். சகோதரர் வாழ்க்கை வரலாற்றை பார்க்கும் போது கர்த்தருடைய பிள்ளைகளுக்கு சிட்சைகள் வருவதுண்டு. ஆனாலும் அதில் பழகினவர்களுக்கு வசனத்தின்படி நீதியாகிய சமாதான பலனைத்தரும் என்பதில் சந்தேகமில்லை.

இவருடைய மனைவி இவருக்கு ஊழியத்தில் உறுதுணையாகவும், சகோதரியாகவும், சிநேகிதியாகவும், தாயை சிறுவயதில் இழந்த இவருக்கு ஒரு தாயாகவும் இருந்தார்கள். இவர்கள் சுகவீனப்பட்டு பல ஆண்டுகள் அவர்களின் சரீரபலகீனத்தை தாங்கி உதவிசெய்வதிலும், உபவாசித்து ஜெபிப்பதிலும், மிகவும் பிரயாசப்பட்டார் நம் சகோதரர். இருந்தாலும் கர்த்தர் அவர் சித்தத்தின்படி அவர்களை 15-8-2002 அன்று தன்னிடம் அழைத்துக்கொண்டார். அதற்கு சில ஆண்டுகளுக்கு முன் நான் அமெரிக்கா தேசத்தில் இருந்தபோது, எனக்கு வந்த கடிதத்தில் ஒரு திடுக்கிடும் செய்திவந்தது. அதில் சகோதரர் அவர்களின் பேரப்பிள்ளைகள் மூன்று பேரையும் ஒரே நாளில் கர்த்தர் அழைத்துக்கொண்டார் என்று கேள்விப்பட்டேன். நான் ஆழ்ந்த துயரமடைந்தேன். என்னால் அந்த செய்தியைத் தாங்க முடியவில்லை. ஏன் என்று கேட்க நமக்கு என்ன தகுதியுண்டு, கர்த்தருடைய வழிகள் ஆராய்ந்து முடியாதது. இவ்வளவு இன்னல்களுக்கு மத்தியிலும், சகோதரர் மனம் தளராது கர்த்தருடைய பணியை

செய்ய கிருபையாக, கர்த்தர் திடமனதை கொடுத்து ''என் கிருபை உனக்குப்போதும்'' என்று ஆறுதல்படுத்தி வழிநடத்தி வருகிறார்.

இப்படி கர்த்தருடைய பிள்ளைகளுக்கு சில துன்பங்கள் வரும்போது எனக்கு பொன்னம்மாள் சன்னியாசினி பாட்டு ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது :

பல்லவி

ஆனந்தமே பரமானந்தமே – இயேசு
அண்ணலை அண்டினோர்க் கானந்தமே

சரணங்கள்

1. இந்த புவி ஒரு சொந்தமல்ல வென்று
இயேசு என் நேசர் மொழிந்தன ரே
இக்கட்டும், துன்பமும் இயேசுவின் தொண்டர்க்கு
இங்கேயே பங்காய் கிடைத்திடினும் . . .
[ஆனந்தமே...]

2. துன்பங்கள், தொல்லை இடுக்கண் இடர் இவை
தொண்டர் எமை அண்டி வந்திடினும்
சொல்லி முடியாத ஆறுதல் கிருபையை
துன்பத்துடனே அனுப்பிடுவார் . . .
[ஆனந்தமே...]

பவுல் அப்போஸ்தலன் கூறுவது போல் [பிலிப்பியர் 4 :11–13] சகோதரர் அருள்தயஸ் அவர்களும் ''எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்க கற்றுக் கொண்டேன். தாழ்த்திருக்கவும் தெரியும், வாழ்ந்திருக்கவும் தெரியும், எவ்விடத்திலும், எல்லாவற்றிலும் திருப்தியாக இருக்கவும், பட்டினியாகயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன்.''

''என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு'' என்று கர்த்தருடைய பணியை செய்து கொண்டிருக்கிறார் நம் சகோதரர்''.

இவர் வாழ்க்கை வரலாற்றை (Autobiography) எழுதவேண்டுமென்று ஒரு சிலர் கேட்டிருக்கலாம். ஆனாலும் இவர் இந்த புத்தகத்தை எழுதும் நோக்கமே, தன்னைபோல் சிறுவயது தொடங்கி பல பாடுகளை அனுபவித்து, ஆண்டவருடைய பெரிதான கிருபையால் வாழ்க்கையில் முன்னேறி, கர்த்தருடைய பணியை செய்து வருகிறவர்களுக்கு ஒரு சாட்சியாக இருக்கும் என்று எண்ணி முழு விசுவாசத்தோடு இப்புத்தகத்தை ஒரு சாட்சியின் புத்தகமாகவே எழுதியுள்ளார் என்று நான் கருதுகிறேன்.

சகோதரர் டாக்டர் D. அருள்தாஸ் அவர்களுக்கு ஆலோசனையாகவும், ஆறுதலாகவும் அவ்விதம் சங்கீதம் 55:22-ஐ நான் கூறி இந்த அணிந்துரையை முடிக்க விரும்புகிறேன்.

''கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு. அவர் உன்னை ஆதரிப்பார். நிதிமானை ஒருபோதும் தள்ளாட வொட்டார்'' சகோதரர் அவர்கள் கர்த்தருடைய பணியை தொடர்ந்து வெற்றிகரமாக செய்ய, என் ஜெபத்துடன் இந்த அணிந்துரையை முடிக்கிறேன்.

D. Sunder David

Dr. Mrs. Aroma G.Sam, Ph.D.,
Dean,
Faculty of Developing Tamil,
Professor & Head,
Dept. of Social Sciences,
Tamil University,
Thanjavur - 613 005.

வாழ்த்துரை

"உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே"

பண்புடன் வாழ்ந்த பக்தர்கள், சிந்தனையாளர்களால் உலகம் உயர்கிறது. சமய எழுச்சியும் ஆன்மீக மெய்புணர்வும் எவ்வளவு அளித்தாலும் வருங்கால சமுதாயத்தை உருவாக்கும் இன்றைய இளைஞர்களின் கவனத்தை ஈர்க்கவல்ல நல் வழிகாட்டி அருந்தொண்டாற்றிய அறிஞர்களின் வாழ்க்கை வரலாற்று படைப்புகளேயாகும்.

இயேசு கிறிஸ்து வாழ்ந்து காட்டிய வாழ்க்கையை பின்பற்ற முயற்சிக்கும்போது எழும் நடைமுறை சிக்கல்கள், உயர்வு தாழ்வுகள், தியாகங்கள், மேன்மைகள், பாராட்டுகள், இழப்புகள், வளங்கள், இவ்வுலகம் தர இயலாத ஆன்மீக சமாதானம் போன்றவற்றை முழுமையாக டாக்டர் அருள்தாஸ் அவர்களின் வாழ்க்கை வரலாறு தெளிவாக வெளிப்படுத்துகிறது.

இந்நூல் கற்றலின் இன்றியமையாமையை, சோர்வின்றி ஊக்கத்துடன் உண்மையாக உழைப்பவர் பெறும் பயன், கொள்கையில் தவறாமல், எதிர்ப்பைக் கண்டு அஞ்சாமல் நேர்மையான நெறியில் சென்று நானிலம் புகழ, தன் குடும்பம், இனம், சமூகம், இந்திய மக்கள் என அனைத்து மக்களுக்கும் கிறிஸ்துவ வாழ்க்கை நெறிமுறைகள் அறிவுறுத்தும் பட்டறிவு நூலாக இந்நூல் அமைந்துள்ளது. தனி மனிதனின் வரலாறு எனினும் ஆசிரியரின் காலக்கட்டத்தில் வாழும் மக்களின் சமூகப் பொருளாதார, பண்பாட்டின்

பிரதிபலிப்பு இனிமையாக, படிப்பவர்களுக்கு எளிதாக புரியும்படி சிறப்பாகப் புலனாகின்றது.

ஆசிரியர் வாழ்ந்த, வாழும் 20-ஆம் நூற்றாண்டின் இறுதிக்கட்டத்தில் முயற்சி உடையார்க்கு வாய்ப்புகள் பல என உயர்கல்விக்கும், ஆன்மீகத் தேடுதலுக்கும் பன்முக வேலையென செல்வப் பெருக்கத்திற்கும் சுதந்திரமான வாயில்கள் பல திறக்கப்பெற்றன. எளிய நிலையிலிருந்து பக்தியில் உறுதியாயிருந்து கஷ்டங்கள், நோய்கள், இழப்புகள் ஆகியவற்றுக்கு ஈடுகொடுத்து உண்மையை புலப்படுத்தி நிற்கும் இப்படைப்பு கிறிஸ்துவ தனிமனிதன் மற்றும் குடும்ப வாழ்க்கை நோக்கில் சமுதாயத்திற்கு இன்று தேவையான ஆய்ந்து கண்ட அனுபவித்த முடிவுகளைக் கொண்டதாகத் திகழ்கிறது. இறைப்பணி, பணிக்கடமை, குடும்ப உறவு, சமூகப் பொறுப்பு, நாட்டுப் பற்று என எதையும் புறக்கணிக்காமல் செய்திகளை நுட்பமாக உணரவும், உணர்ந்தவற்றை எளிய இனிய நடையில் எழுதியுள்ளது பெரிதும் பாராட்டுதற்குரியது.

பல்வேறுபட்ட கருத்துகளை அவற்றின் வன்மை மென்மைகளுடன் தக்க எடுத்துக் காட்டுகளோடு அமைதியாக காணும் போக்கு ஆசிரியரிடம் உள்ளது போற்றுதலுக்கு உரியதாகும். கிறிஸ்துவ வாழ்க்கை நெறிகளை தன் வாழ்வோடு இணைத்து செய்திகளை தொகுத்தும் வகைமை செய்தும் வாழ்வியற் கூறுகள் எத்துணை விழுமியன எனக் கற்பார் மகிழவும் நெகிழவும் காட்டியுள்ளார். அவர் விரும்புகிறபடியே தொடர்ந்து இயேசு கிறிஸ்துவுக்காக உழைக்கவும் பிழைக்கவும் அவர் பணியில் தோயவும், ஆயவும் செய்வாராக. இறைப்பணி அவருக்கு நிறைவுப் பணியாக பெருமை சேர்க்க என் வாழ்த்துக்கள்.

[அரோமா கு. சாம்]

புனிதா மனோகர் பெஞ்சமின்,
முதுகலைப் பட்டதாரி ஆசிரியை,
டி.இ.எல்.சி. மகளிர் மேல்நிலைப் பள்ளி,
உசிலம்பட்டி.

அணிந்துரை

அப்பாவைப் பற்றி . . . . (இந்நூலின் ஆசிரியர்)

எங்கள் குடும்பத்தில் மூத்தமகளாக பிறக்கும் பேறுபெற்ற நான் எடுத்துரைக்கும் எண்ண அலைகள் சில. எங்கள் அப்பா, அம்மா இருவரும் மிகவும் அன்பானவர்கள். அதோடு கண்டிப்பானவர்கள். எங்களை வளர்ப்பதில் மிகவும் கரிசனை உள்ளவர்கள். எங்கள் மீது மிகுந்த நம்பிக்கை உடையவர்கள். எங்கள் உறவினர்கள் ''அவர்களுடைய பிள்ளைகளா? பத்தரை மாற்றுத் தங்கமானவர்கள்'' என்று மெச்சும்படி எல்லா விதத்திலும் எங்களை ஒழுக்கத்திலும், அனைத்து கிறிஸ்துவ பண்புகளிலும் வழி நடத்தி, தாமே நல்ல முன்மாதிரியாக விளங்கினவர்கள். எங்கள் நால்வரையுமே பட்டதாரிகள் மற்றும் முதுகரைப் பட்டதாரிகளாக சிறப்படையச் செய்தார்கள்.

நாங்கள் அவர்களிடத்தில் கண்ட குணங்கள் அனைத்தும் நற்பண்புகளே. காலம் தவறாமை, நேர்மை, கடவுளிடத்தில் காத்திருந்து ஆலோசனை பெறுதல், எல்லாவற்றிலும் கடவுளுக்கு முதலிடம் கொடுத்தல், நீடிய பொறுமை, சாந்தம், தியாகம், சுயநலமின்மை, அயராத கடின உழைப்பு, அனைவரிடத்திலும், ஏன் பகைவரிடத்திலும் அன்பு காட்டுதல், அனைவரையும் உபசரித்தல், செய்நன்றி மறவாதிருத்தல், எளிமை, ஏழைகளுக்கு உதவி செய்தல் என்பன. குறிப்பிடத்தக்க ஒரு சில . . .

ஜெபித்து ஜெபித்து முழுங்கால்கள் ஒட்டக முழங்கால் போல் காய்த்துப் போனவை. அவருக்குப் பிடித்த சில :

அதிகாலை ஜெபம், அனைவருடைய அரவணைப்பு, ஆலயத்துக்கு முன்கூட்டியே செல்லுதல்,

எங்கள் அம்மா இறந்த அன்று கூட குடும்ப ஜெபம் தவறவில்லை. எங்கள் அம்மாவை அடக்கம் செய்த மறுநாள் குடும்பமாக ஞாயிறு ஆராதனைக்குச் சென்றோம். அனைவரிடத்திலும் அன்பாக, மரியாதையாக பழகுதல், வீட்டிற்கு யார் வந்தாலும் பாசத்தோடு உபசரித்தல், வீணான பேச்சு, சோம்பேறித்தனம், காலத்லை வீணாக்குதல் (Waiting time should not be a wasting time) என்று அடிக்கடி சொல்லுவார்கள் ஆடம்பரமான வாழ்க்கை, மற்றவர்களைப் பற்றி அவதூறாகப் பேசுதல், கடன் வாங்குவது, லஞ்சம் கொடுப்பதும் வாங்குவதும், எந்நிலைமையிலும் கடவுளைக் குறை கூறுதல் ஆகியவை அவர்களுக்குப் பிடிக்காது.

அம்மாவைப் பற்றி . . . .

வாழ்க்கை என்னும் இருசக்கர வாகனத்தில் அப்பா ஒரு சக்கரம் என்றால், எங்கள் அம்மா இன்னொரு சக்கரம் தான். காரணம், இருவரும் இணைந்து தான் ஊழியத்திலும், ஏன் அனைத்து குடும்பக் காரியங்களிலும் ஒன்றித்து தான் செயல்பட்டார்கள்.

''ஒவ்வொரு வெற்றியுள்ள ஆண்மகனின் பின்னணியில் ஒரு பெண் இருக்கிறாள்'' என்ற கூற்று எங்கள் அம்மாவைப் பொருத்தவரையில் முற்றிலும் உண்மையே, காரணம், நோய்வாய்ப்பட்டு படுக்கையில் இருந்த போதும் கூட, எங்கள் அப்பாவுக்கு உந்து சக்தியாக விளங்கினார்கள் என்பது அனைவரும் அறிந்ததே.

இன்று வரை எங்கள் அப்பா ஊழியத்தில் வெற்றியோடு இருப்பதற்கு எங்கள் அம்மாவே முழு முதற்காரணமாவார்கள். நீதி மொழிகள் 31:28,39 -ன் படி எங்கள் அம்மா ஒரு 'பாக்கியவதி' மற்றும் ''குணசாலி'' களுக்கும் மேற்பட்டவர்கள். எங்கள் அப்பாவின் அரசுப்பணி மற்றும் அருட்பணி இவற்றில் முன்னேற்றத்திற்கும் உறுதுணையாக இருந்தவர்கள்.

பெற்றோரின் அன்பு என்றால் என்னவென்றே தெரியாத எங்கள் அப்பாவுக்கு, எங்கள் அம்மா ஒரு பாசமிகு தாயாகவே விளங்கினார்கள். இந்த அன்பின் காரணமாகவே, எங்கள் அம்மா நோய்வாய்ப்பட்ட காலத்தில் எங்கள் அப்பா,

சிறிதும் சலிப்படையாமல், ஒரு குழந்தையைப் போல பராமரித்தார்கள்.

நோயின் கொடுமைகளை பொறுமையோடு சகித்துக் கொண்ட எங்கள் அம்மா, தேவனை ஒருநாளும் குறை சொன்னதும் இல்லை; ஏன் என்று கேள்வி கேட்டதும் இல்லை. தனது வாழ்க்கையை தேவனுக்கு ஒப்புக் கொடுத்து, நல்ல போராட்டத்தைப் போராடி, தங்கள் ஓட்டம் முடியப் பெற்றார்கள்.

எத்தனையோ பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை மற்றவர்களுக்கு பாரமாக விட்டுச் செல்லும் நிலையில், எங்கள் பெற்றோர் எங்கள் நால்வரையும், தாங்கள் இருவருமே சேர்ந்து, வாழ்வின் உயர்ந்த நிலையில் வைத்துள்ளார்கள். இப்படிப்பட்ட தெய்வ பக்தியுள்ள, ஊழிய வாஞ்சையுள்ள பெற்றோருக்குப் பிள்ளைகளாக பிறக்கச் செய்த தேவனுக்கு நாங்கள் கோடான கோடி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கிறோம்.

வாழ்க்கையில் எவ்வளவோ துயரங்களையும் சோதனைகளையும் அனுபவித்தும், தேவன் மீதுள்ள விசுவாசத்தில் சிறிதேனும் குறைவுபட்டதே இல்லை. "என் இறுதி மூச்சு உள்ளவரை என் இதயம் என் இயேசுவுக்காகவே துடிக்கும்" என்று அடிக்கடி சொல்லிக் கொண்டு, உடல் பலவீனமாக இருந்தாலும் கடவுள் ஊழியத்தை செய்வதையே மனமகிழ்ச்சியாக நினைப்பார்கள்.

கடவுள் மீதுள்ள அன்பும் விசுவாசமுமுள்ள ஒரு "ஜெபதூணாகிய" எங்கள் அப்பா, ஓர் "இடிதாங்கி" யாகவே இந்நாள் மட்டும் இருந்து வருகிறார்கள். மற்றவர்களுடைய பாரங்களையும் தாங்கும் அவர்களை ஒரு "சுமைதாங்கி" என்று கூறினால் அது மிகையாகாது. இவர்களை எங்கள் தந்தையாகப் பெற்றமைக்கு, பிள்ளைகளாகிய நாங்கள் பேருவகையும் பெருமிதமும் அடைந்து தேவனைத் துதிக்கிறோம். அன்னாருடைய வாழ்க்கை சுயசரிதை பலருக்கும் பயனுள்ளதாக அமைய கடவுள்கிருபை புரிவாராக!

புனிதா மனோகர் பெஞ்சமின்

போதகர் அறிவர், தியோடர் வில்லியம்ஸ் திருமதி எஸ்தர் வில்லியம்ஸ் [ஊழியத்தின் பாதையில் உடன்பிறவா அண்ணன் மற்றும் அண்ணி, நிறுவனர், இந்திய அருட்பணி இயக்கம்]



திரு. பொன்னுசாமி பிள்ளை மற்றும் திருமதி. பாக்கியத்தம்மாள் [என்னை வளர்த்து ஆளாக்கிய சின்ன தாத்தா மற்றும் அப்பாயி]

திரு. டி. தேவராஜ் திருமதி. எஸ். மெர்சிகமலாபாய் தேவராஜ்
[ஆதரவு காட்டிய எனது அண்ணன் மற்றும் அண்ணி]

எனது அண்ணன் மகன்
திரு. டி. ஜே. ஜான்சன் குடும்பத்தினர்.

எனது அண்ணன் மகள் திருமதி. டி. நேசமணி குடும்பத்தினர்.

60–ஆம் ஆண்டு நிறைவு நாளில் அண்ணன் குடும்பத்தினர்.

என்னை வளர்த்த சின்ன தாத்தாவின் மகள்களான

திருமதி. இராஜாமணி அம்மாள் மற்றும்

திருமதி. நேசமணி அம்மாள்.

திரு.டி. செல்வராஜ் திருமதி ஏ.மேரி செல்வராஜ்
[கல்விக்கு உதவிக்கரம்கொடுத்த தாய் மாமா, அத்தை]



தாய் மாமா குடும்பத்தினர்.

தம்பி. எஸ்.துரைராஜ் திருமணத்தின் போது எனது அம்மாவின் தங்கை திருமதி. கருணாகரத்தம்மாள் குடும்பத்தினர்.

எங்களது திருமண நாளில் 18.05.1959–ல் போதகர்களுடன்.



எங்களது 25 ஆவது திருமண நாளில் நாங்கள் இருவரும்.
18.05.1984

கல்லூரி நற்செய்தி மாணவர் ஊழியத்தில் ஈடுபாடு
கொண்டவர்களுடன் நானும் எனது அன்பு மனைவியும்.

இந்திய அருட்பணி இயக்க ஊழியத்தில் ஈடுபாடு
கொண்டவர்களுடன் நானும் எனது அன்பு மனைவியும்.

இந்திய அருட்பணி இயக்க முந்நாள் மாநில மற்றும்
மத்திய செயலாளர் திரு.ஜி. சசிகுமார் அவர்களுடன் நான்.

பரி.லூக்கா ஆலயம் உருவாவதற்கு காரணமாக இருந்த
அயல்நாட்டு மிஷனரி போதகர் ஏ.ஜே. லூட்ஸ் அவர்களும்
அவர்கள் துணைவியாரும்.
[இந்தியாவில் 60 ஆண்டுகளுக்கு மேல் அருட்பணி ஆற்றியவர்கள்]

எனது மாமனார் திரு.ஏ.தேவராஜ் அவர்கள் எனது மாமியார் திருமதி. ஏ. அமிர்தம் செல்வபாக்கியம் அவர்கள்.

நாங்கள் எங்கள் பிள்ளைகள் பேரப்பிள்ளைகளுடன்.

எங்கள் மகன் திருமணத்தின் போது எங்கள் பிள்ளைகள் குடும்பத்தோடும் மைத்துணர்கள் குடும்பத்தோடும்.

எங்கள் மூத்த மகன் திருமதி. புனிதா பெஞ்சமின் அவர்கள் பிள்ளைகளுடன்.

எங்கள் இரண்டாவது மகன் திருமதி. குணா சுகுமார் அவர்கள் பிள்ளைகளுடன்.

எங்கள் மூன்றாவது மிஷனரி மகள்
திருமதி. கிரேஸ் ரவிக்குமார் அவர்கள் குடும்பத்துடன்.



எங்கள் மகன் டேவிஸ் செல்வக்குமார்
தனது மனைவி மகனுடன்.

எங்கள் மிஷனரி மகள்திருமணத்தின் போது வருகை தந்த
டாக்டர். தியோட்டர். சினிவாசகம், I.E.M முன்னாள் செயலாளர்
மற்றும் டாக்டர் ஜோசப் மதுரம் திருச்சி அவர்களுடன் நானும்
எனது அருமை மனைவியும்.

எங்கள் மகன் திருமணத்திற்க்கு வருகைபுரிந்த
அருமை சகோதரர் திரு.முத்துசாமி அர்களும்
திருமதி. தனம் முத்துசாமி அர்களும். [எனது மனைவி
மற்றும் மிஷனரி மகள் சுகவீனத்தின் போது உதவியவர்கள்]

திரு. எஸ். சாமூவேல், திருமதி. கனிசாமூவேல்,
திருமதி. லோவிஸ் மேரி, திருமதி. பொன்னி,
திரு.பொன்ராஜ் ஆகியவர்கள்
[எங்கள் அருட்பணி ஊழியத்திலும் எனது மனைவியின்
சுகவினமான நாட்களில் குடும்பமாக பேருதவி செய்தவர்கள்]

2000–ஆம் ஆண்டில் திருச்சியில் நடந்த
தமிழ்நாடு மாநில அருட்பணி மாநாட்டில் அண்ணன்
அறிவர் – தியோட்டர் வில்லியம்ஸ் அவர்களுடன் நானும்
எனது அருமை மனைவி, மகள்களுடன்.

2000–ஆம் ஆண்டில் திருச்சியில் நடந்த தமிழ்நாடு மாநில
அருட்பணி மாநாட்டிற்க்கு தலைமை தாங்கிய திருச்சி
தஞ்சை திருமண்டல பேராயர் அவர்களுடன், தியோ அண்ணன்,
ஐ.இ.எம்.பொது செயலாளர் திரு. விக்டர் சித்தர்
மறை மாவட்டத் தலைவர் மறைதிரு சந்திரசேகர்
மற்றும் மறைதிரு, மாசில்லாமணி அவர்கள்.

எங்கள் மிஷனரி மகள் திருமணத்திற்க்கு வருகைதந்த முன்னாள் பொதுச்செயலாளர் டாக்டர் தியோடர் சீனவாசகம் மற்றும் முன்னாள் மாநில செயலாளர் ஜெயபால் சித்தர் அவர்கள்.

பணி ஓய்வு அன்று 30.06.1994-ல் கூட்டுறவு அதிகாரிகளுடன்.

03.07.1994 பணி ஓய்வு மற்றும் தேவனுக்கு நன்றி
செலுத்தும் நாளில் குடும்பத்தினருடன்.

17.6.1999–இல் நடந்த எங்களது மகன் திருமணத்திற்கு
வருகை தந்த ஐ.இ.எம் பொதுச்செயலாளர் திரு.விக்டர் சித்தர்
அவர்களுடன் இந்திய அருட்பணி இயக்க சகோதரர்கள்.

பச்சமலை ஊாயத்திற்க்கு மனைவி, மகளுடன்
23.07.91-ல் சென்று பார்வையிட்ட பின் மதர்பிராண்ட்
அம்மையார் தங்கி பணி செய்த வீட்டில் அமர்ந்து
மத்திய உணவு அருந்தும் காட்சி.

23.07.1991-இல் பச்சமலை ஊழியத்திற்கு சென்ற பொழுது
அங்கு வந்தவர்களுக்கு நான் அருட்செய்தி அளிக்கும் காட்சி.

29.06.2002–இல் எனக்கு தெய்வீகத்தில் டாக்டர் பட்டம் வழங்கிய போது வந்திருந்த இந்திய அருட்பணி இயக்க அருட்பணியாளர்களுடன் நானும் எனது அருமை மனைவியும்.

29.06.2002–இல் எனக்கு தெய்வீகத்தில் டாக்டர் பட்டம் வழங்கிய போது வந்திருந்த உறவினர்களுடன் நானும் எனது அருமை மனைவியும்.

தஞ்சையில் நாங்கள் தாங்கிவரும் மறை திரு. விக்டர்தாஸ் மிஷனரி குடும்பத்தினர் அவர்கள் பிள்ளைகளுடன்.

எங்களுக்கு உதவியாக இருந்து வருகிற ரெபேக்காளுடன் நானும் எனது அருமை மனைவியும்.

27.5.1998 அன்று மறைந்த எங்களது அருமை பேரன்கள் சாம்சன், ஜட்சன் மற்றும் ஜாட்சன்.

15.8.2002–ல் மருமைக்குச் சென்ற எனது அருமை மனைவி.

15.8.2002–இல் மருமைக்குச் சென்ற எனது அருமை மனைவியின் ஸ்தோத்திர ஜெபக்கூட்டத்தில் படத்திற்கு அருகில் நான்.

17.08.2002–இல் நடந்த எனது அருமை மனைவியின் ஸ்தோத்திர ஜெபக்கூட்டத்தை நடத்திக் கொடுத்த எங்கள் போதர் மறைதிரு. கிறிஸ்டோபர் செல்லையா, பாஸ்டர். இமானுவேல் பிரான்ஸிஸ், போதகர் ராஜன், இந்திய அருட்பணி இயக்கத்தின் சமை தொடர்புசெயலர், திருச்சி எம்.சவுந்தரராஜன் மற்றும் திரு. E.T.சுந்தர்சிங், வட்டார ஒருங்கிணைப்பாளர், பாண்டிச்சேரி ஆகியவர்கள்.

தேவகரத்தால் உயர்ந்த திக்கற்ற மகன்

2. அனாதை ஆவதில்லை

எனது குடும்பம் தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம் அணைக்காடு என்ற கிராமத்தில் சீரும், சிறப்பும் மிக்க குடும்பமாக இருந்தது. தென்னந் தோப்புக்களும், வளம் கொழிக்கும் நன்செய், புன்செய் நிலங்களும் போதுமான அளவுக்கு இருந்தன. ஒவ்வொரு ஆண்டும் ''மே'' மாத கோடை விடுமுறைக்குப் பட்டணத்தில் உள்ள உற்றார், உறவினர்கள் எங்கள் வீட்டிற்கு வந்து தங்கி இளநீர், நுங்கு, மா, பலா, கொய்யா போன்ற தீங்கனிகளை போதும் என்ற அளவுக்கு உண்டு மகிழ்வார்கள். மேலும், எங்கள் ஊருக்கு அண்மையில் உள்ள கடற்கரைப் பட்டிணமான அதிராம்பட்டிணத்தில் ஐஸ் போடாத புத்தம் புதிய மீன்கள் மலிவாகக்கிடைப்பதால் மீன் வகைகள் உறவினர்களுக்கு நல்ல விருந்தாக அமையும். எனது அம்மாவும் அப்பாவும் மிகவும் அன்புள்ளம் கொண்டவர்கள். அத்துடன் பரோபகாரச் சிந்தையும், விருந்தினர்களை அன்புடன் உபசரிக்கும் பண்பும் கொண்டவர்கள். எல்லோரும் டேவிஸ் அண்ணன், முத்துமணி அண்ணி என்று என் பெற்றோரை அழைப்பார்கள். இன்றும் சில வீடுகளுக்கு நான் செல்லும் பொழுது எனது பெற்றோரின் தயாள குணங்களைப் பெருமை யாகச் சொல்லுகிறார்கள். அதை கேட்கும் பொழுது எனது உள்ளம் பெரிதும் மகிழ்கிறது.

எனது தகப்பனார் தன்னுடைய 23-ஆம் வயதில் நெருங்கிய உறவுப்பெண்ணான எனது அம்மா முத்துமணி அவர்களை, அவர்களது 18-ஆம் வயதில் கடவுளின் சித்தப்படி பெரியோர்களின் ஆசியுடன் தஞ்சையில் உள்ள IELC நல்ல மேய்ப்பன் ஆலயத்தில் (அப்பொழுது மிசௌரி லூத்தரன்) சிறப்புடன் திருமணம் செய்து கொண்டார். எனது அம்மா சிவந்த

நிறமும் பேரழகுடைய ரூபவதியும், குடும்ப பெண்களுக்குரிய அனைத்து இலட்சணங்களும், தெய்வ பக்தி நிறைந்தவர்களுமாய் இருந்தார்கள். எனது தகப்பனார் ஆறு அடிக்குமேல் உயரமும் கரிய மேனியும் உடைய வீர புருஷராகவும், தெய்வபக்தி நிறைந்தவராகவும், அன்புள்ளம் கொண்டவராகவும் விளங்கினார்கள். எனது பெற்றோரின் இல்லற வாழ்க்கை மகிழ்ச்சியாகவும், உள்ளூர் உறவினர்களுக்குப் பயன் உள்ள வகையிலும் அமைந்திருந்தது. அவர்கள் ஒழுங்காக ஆலயத்திற்குச் செல்வது, காணிக்கை கொடுப்பது போன்ற மார்க்க பக்தியில் சிறந்து விளங்கினார்கள்.

புயல் வீச ஆரம்பித்தது :

எனது பெற்றோருக்குத் திருமணமான முதல் ஆண்டில் எனது அண்ணன் பிறந்தார். அடுத்த இரண்டு ஆண்டில் எனது அக்காள் பிறந்தார்கள். அடுத்த இரண்டாம் ஆண்டில் நான் பிறந்தேன். நான் பிறந்து 5 மாதம் முடிவதற்குள் எனது அம்மாவை கடுமையான வயிற்றுப்போக்குக் காரணமாக எங்களை எல்லாம் அனாதையாகத் தவிக்க விட்டுவிட்டு தேவன் அழைத்துக் கொண்டார். எனது அம்மா இப் பூவுலகில் நடத்திய குடும்ப வாழ்வு 6 ஆண்டுகள் மட்டும்தான். பிறந்து 5 மாத குழந்தையாகிய என்னை வளர்ப்பதற்கு யாரும் இல்லை. நெருங்கிய உள்ளூர் உறவினர்கள் அவர்களின் குடும்பச் சூழ்நிலைகளைக் கூறி என்னை வளர்ப்பதற்குச் சாக்குப் போக்குச் சொல்லி விட்டனர். இந்நிலையில் எனது அம்மாவின் துக்க நிவர்த்தி ஜெபக் கூட்டம் நடந்து முடிந்தது. ஜெபக்கூட்டத்திற்கு வந்திருந்த நெருங்கிய உறவினர்கள் அனைவரும் தம்தம் ஊர்களுக்குச் சென்றுவிட்டார்கள். இந்நிலையில் என் அப்பா மட்டும் கவலை தோய்ந்த முகத்தோடு இந்த 3 பிள்ளைகளையும் எப்படி வளர்ப்பது அதிலும் 5 மாதக் குழந்தையை எப்படி வளர்ப்பது என்ற சிந்தனையோடும் ஆழ்ந்த கவலையோடும் இருந்தார்கள். ஏசாயா 49:15-ன்படி ''ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல் தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை'' என்று என் தேவன் கொடுத்தவாக்கின்படி என்னை வளர்ப்பதற்கு தகுதியானவர்களிடம் ஒப்படைத்தார்.

3. அடைக்கலம் தந்த சின்னத் தாத்தா, சின்ன அப்பாயி

என் அப்பாவோடு பிறந்த ஒரே ஒரு சகோதரி மட்டும் உண்டு. அவர்களும் வெளியூரில் வாழ்ந்து வந்தார்கள். வேறு உடன் பிறந்தவர்கள் யாரும் இல்லை. என் சொந்த தாத்தாவும் அப்பாயியும் உயிரோடு இல்லை. இந்நிலையில் எனது சின்னத்தாத்தாவும் சின்ன அப்பாயியும் (எனது அப்பாவிற்குச் சித்தப்பாவும், சின்னம்மாவும்) என்னைத் தஞ்சையிலிருந்து தூக்கிச் சென்று தங்கள் பிள்ளைகளில் ஒருவனாகப் பாவித்து வளர்ந்து வந்தார்கள். அவர்களை நான் அப்பா, அம்மா என்றுதான் கூப்பிடுவேன். அந்த நாட்களில் அவர்களின் குடும்பம் ஒரு எளிய குடும்பம். அவர்களுக்கு 3 ஆண் பிள்ளைகளும், 3 பெண்பிள்ளைகளும் இருந்தார்கள். அவர்கள், அவர்களுடைய 6 பிள்ளைகளையும் வைத்துப் பராமரிப்பதே மிகவும் சிரமமான காரியம். இந்நிலையில் என்னையும் வைத்து ஆதரிப்பது அவர்களுக்குச் சிரமமான காரியம்தான் எனினும் அவர்கள் என்னிடத்தில் அன்புகாட்டித் தாலாட்டிச் சீராட்டித் தங்கள் பிள்ளைகளில் ஒருவனாக கருதி வளர்த்து வந்தார்கள்.

என் அம்மா இறந்த ஓராண்டிற்குப் பின்பு என் அப்பாவுக்கு இரண்டாவது திருமணம் அணைக்காட்டில் நடந்தது. எனது சின்னம்மாவின் ஊர் அணைக்காட்டிற்கு அண்மையில் உள்ள வெட்டிக்காடு என்பது. அங்குள்ளவர்கள் அடிக்கடி ஒருவரை ஒருவர் வெட்டிச் சாகடிப்பதால் அந்த ஊருக்கு காரணப் பெயராக வெட்டிக்காடு என்று அமைந்தது. ஊர் பெயருக்கு ஏற்றபடி என் சின்னம்மா சுயநலம் மிக்கவர்கள். நான் குழந்தையாக இருந்ததினால் தாய்ப்பால் இல்லாததால் எனக்குப் பால் கொடுப்பதற்காக ஒரு பசுமாட்டை என் அப்பா என் சின்னதாத்தா வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். சுயநலம் மிக்க என் சின்னம்மா என் அப்பாவிடம் சண்டை போட்டு, நச்சரித்து எனக்குப் பால் கொடுக்க உதவியாகக் கொடுத்த அந்தப் பசுமாட்டைச் சில மாதங்களில் திரும்ப தன் வீட்டிற்கு ஓட்டிச் சென்றுவிட்டார்கள். சில சமயங்களில் என் அப்பா இரவு நேரங்களில் என் சின்னத்தாத்தா வீட்டிற்கு வந்து என்னைப் பார்த்து விட்டுச் செல்வார்கள். எப்பொழுதாவது என் அப்பா

என்னை தன் வீட்டிற்கு அழைத்துச் செல்வார். அப்பொழுது எனக்கு வயது 3 இருக்கும்.

என் சின்னம்மாவின் அன்பற்ற தன்மையை உணர்ந்து பக்கத்துத் தெருவில் இருக்கும் என்னை வளர்த்த சின்னத் தாத்தா வீட்டிற்கு ஒருவரிடமும் சொல்லாமல் சென்று விடுவேன். என் சின்னம்மாவிற்கு என் அக்காளையும் பிடிக்காது. என் அண்ணன் இடத்தில் மட்டும் கொஞ்சம் அன்பு காட்டுவார்கள். என்னைக் கண்டாலே வெறுப்பாக நடந்து கொள்வார்கள். எப்பொழுதாவது நான் அங்குச் செல்லும் சமயங்களில் பழைய சாதத்தைத்தான் போடுவார்கள்.

வறுமையின் பிடியில் :

எனது சின்னத்தாத்தா வீடு வறுமையின் பிடியில் சிக்கித்தவித்தது. அன்றாடம் போதுமான உணவு, உடை எனக்கு இல்லாதிருந்தது. ஒரு துண்டைக் கட்டிக்கொண்டு திரிவேன். ஒரு சமயம் அந்தத் துண்டை அவிழ்த்து போர்த்திக் கொண்டு விறகுக் கட்டையை வெட்டும் பொழுது துண்டையும் சேர்த்து வெட்டிவிட்டேன். அந்த கிழிந்த துண்டுடன் அரை நிர்வாணத்தில் பல நாட்கள் இருந்தேன். அந்த நாட்கள் என் மனதில் நன்றாக பதிந்துவிட்டன. இப்பொழுது தேவன் என்னை விதவிதமாக உடுத்திவிக்கும்பொழுது ஒவ்வொரு நாளும் அந்த நாட்களின் நினைவு எனக்கு வந்து விடும். எந்த விதத்திலும் என்னை உயர்த்தாதபடிக்கு அதன் மூலம் தாழ்மையின் ஆவியினால் என்னை என் தேவன் வழிநடத்தி வருகிறார். வறுமையின் பிடியிலிருந்த என்னைத் தேவன் நான் நினைத்ததற்கு மேலாக உயர்த்தி வருகிறார். அந்த நாட்களில் உள்ள எனது தாழ்வான நிலையை உணர்ந்து பிற்காலத்தில் தேவையில் உள்ளவர்களுக்கும், எளியவர்களுக்கும் ஓடிச் சென்று உதவி செய்து அதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

எனக்கு 5 வயது இருக்கும்பொழுது அணைக்காட்டில் உள்ள கத்தோலிக்க ஆரம்பப்பள்ளியில் முதலாம் வகுப்பில் சேர்த்து விட்டார்கள். முதலாம் வகுப்பு படித்து முடிந்தவுடன் அந்த மே மாத விடுமுறையிலிருந்து எனது சின்னத்தாத்தா வீட்டில் உள்ள ஆடு, மாடுகளை மேய்ப்பதற்கு உதவியாய்

இருந்துவந்தேன். அதிலிருந்து 4 ஆண்டுகள் வரை பள்ளிக்குச் செல்லாமல் ஆடு, மாடுகளை மேய்ப்பது, பராமரிப்பது, புல் அறுப்பது போன்ற வேலைகளைச் செய்து வந்தேன்.

இந்த இடைப்பட்ட காலத்தில் எனது சிற்றன்னை சுய நலமாக சில திட்டங்களைத் தீட்டி அணைக்காட்டில் எங்களுக்கு இருந்த எங்களது நிலம், தோப்பு முதலானவைகளை விற்று தனக்கு ரொக்கமாகவும், நகைகளாகவும் மாற்றிக் கொண்டார்கள். எனது சின்னம்மாவின் பெற்றோர்கள் வீட்டிற்கு அருகாமையில் தன் பெயரில் சில ஏக்கர் நிலமும், ஒரு தோப்பும், பொதுவாக 3 ஏக்கர் நன்செய் நிலமும் வாங்கிக் கொண்டு ஒரு சிறிய வீட்டைக் கட்டிக்கொண்டு அணைக்காட்டை விட்டு முதல்சேரி கிராமத்திற்குக் குடியேறிவிட்டார்கள். அணைக்காட்டை விட்டு சென்றதும், முதல் தாரத்து பிள்ளைகளை சரிவரப் பராமரிக்கமுடியாத நிலை, இவைஎல்லாம் என் அப்பாவுக்கு அதிக மனக்கஷ்டத்தையும் வேதனையையும் கொடுத்துவந்தன. இந்தக் கவலைகளினாலேயே மிகத்திடகாத்திரமாக இருந்த எனது தகப்பனார் அதிகப் பலஹீனப்பட்டுவிட்டார்கள். அவர்கள் காசநோயினால் பாதிக்கப்பட்டு முதல்சேரி வந்து சேர்ந்த சில மாதங்களிலேயே, எனக்கு 9 வயது இருக்கும் பொழுது இறந்து விட்டார்கள். அவர்கள் இறந்த செய்தி கேட்டு எனது சின்னத்தாத்தா குடும்பத்தோடு துக்கத்திற்குச் சென்று அடக்கம் முடிந்தவுடன் அவர்களோடு வந்து வழக்கம்போல் எனது சின்னத்தாத்தா வீட்டில் ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டு வந்தேன். எனது சின்னத்தாத்தாவின் மகன் திரு. அனுக்கிரகம் என்பவர் எனது சின்னம்மாவின் மாமா மகளைத் திருமணம் செய்திருந்தார். அவர் என்னை முதல்சேரியில் உள்ள எனது சின்னம்மா வீட்டிற்கு அழைத்துக் கொண்டுபோய் அங்கு இருக்கும்படி விட்டுவிட்டு வந்தார். அங்கும் படிக்காமல் ஆடுமாடுகளை மேய்ப்பது, நிலங்களை உழுவது, வீட்டை பெரிய வீடாக கட்டும் வேலை போன்ற கடினமான வேலைகளை எல்லாம் செய்து வந்தேன். எனினும் எனது சின்னம்மாவின் மனதைத் திருப்திப்படுத்த முடியவில்லை. ஓராண்டிற்குபிறகு அங்கிருந்து மீண்டும் அணைக்காட்டில் உள்ள எனது சின்னத்தாத்தா வீட்டிற்கு வந்து பழைய வேலைகளையே செய்து வந்தேன். என்னை வளர்த்த சின்னத்தாத்தாவின்

மகன்களில் ஒருவர் சிங்கப்பூரிலேயே இருந்து விட்டார். அங்கு சென்றவர் மீண்டும் அணைக்காட்டிற்கு வரவே இல்லை. மற்ற இரண்டு மகன்களும் பெற்றோரைச் சரியாகப் பராமரிக்க வில்லை. எனவே தங்களுடைய நிலத்தை என் பெயருக்கு எழுதி வைக்கப்போகிறேன் என்று தஞ்சைக்கு வந்து என்னை வற்புறுத்தினார்கள். இதை ஏற்றுக்கொள்ள நான் கண்டிப்பாக மறுத்துவிட்டேன். என்னை உண்மையாக நேசித்தீர்களானால் உங்கள் சொத்துக்களை எனக்கு எழுதிவைப்பதை நிறுத்தி விடுங்கள். நீங்கள் அவ்வாறு செய்வீர்களானால் நான் உங்கள் பிள்ளைகளுக்கு சத்துருவாகவும், துரோகம் செய்தவனாகவும் கருதநேரிடும். என் தேவன் என்னோடு இருக்கிறார். எனக்கு நல்ல உத்தியோகத்தைக் கொடுத்திருக்கிறார். என்தேவன் மற்றவர்களிடம் எதையும் வாங்காதபடிக்கும் மற்றவர்களுக்குக் கொடுத்து உதவி செய்யும்படிக்கும் என்னை ஆசிர்வதித் திருக்கிறார். என்னால் இயன்ற உதவிகளை உங்களுக்கு உங்கள் காலம் வரைக்கும் செய்கிறேன்" என்று கூறித் தாத்தா, அப்பாயியை ஊருக்கு அனுப்பி வைத்தேன். நான் தஞ்சாவூர் கூட்டுறவு மத்திய வங்கியில் சூப்பர்வைசராக சேர்ந்ததிலிருந்து என்னை வளர்த்த தாத்தா, அப்பாயிக்கு வேண்டிய துணிமணிகளை எடுத்துக்கொடுத்தேன். அவர்கள் படுப்பதற்கு மெத்தை, போர்வை ஆகியவைகளை வாங்கிக் கொடுத்தேன். அப்பொழுது உள்ள எனது குறைந்த சம்பளத்தில் அவர்களின் செலவிற்காக மாதாமாதம் பணம் அனுப்பிவந்தேன். வயதான காலத்தில் அவர்களுக்கு வேண்டிய எல்லா உதவிளையும் செய்து வந்தேன். நான் வேலைக்குச் சென்ற ஒருவருடகாலத்திற்குள் என்னை வளர்த்த தாத்தா 8.12.1958-ல் நித்திரை அடைந்தார்கள். என்னை வளர்த்த அப்பாயி 19.8.1970 வரை உயிரோடு தன் மகள் இராஜாமணி அவர்கள் வீட்டில் இருந்து வந்தார்கள். அப்பாயினுடைய மரணப்பரியந்தம் அவர்கள் மனம் குளிர எல்லா உதவிகளையும் செய்து வந்தேன். என்னை வளர்த்த தாத்தாவிற்கு நவமணி, ராஜாமணி, நேசமணி என்று மூன்று மகள்கள் இருந்தார்கள். இந்த மூவரும் என்னிடத்தில் அதிக அன்பு காட்டுவார்கள். என்னை வளர்த்த தாத்தா, அப்பாயியை அப்பா, அம்மா என்றும் மகள்களை அண்ணன் என்றும்தான் நான் பாசத்தோடு அழைப்பேன். அவர்களும் என்னைத் தம்பி என்று இன்றும் பாசத்தோடு அழைத்து வருகிறார்கள். எனது

பெற்றோரின் அன்பு கிடைக்காத எனக்கு அவர்களுடைய அன்பு மிகுந்த ஆறுதலாக இருந்து வருகிறது.

4. ஆதரவு காட்டிய அண்ணன், அண்ணி உதவிக்கரம் நீட்டிய தாய்மாமா மற்றும் அத்தை

எனது அண்ணன் திரு. தேவராஜ் அவர்கள் என்னைவிட 4 வயது மூத்தவர்கள். அவர்கள் திருநெல்வேலி மாவட்டம், வடக்கன் குளத்தில் உள்ள கன்கார்டியா உயர் நிலைப்பள்ளியில் படித்துக் கொண்டிருந்தார்கள். அங்கிருந்து ஜூன் மாதம் பள்ளித் திறக்கும் பொழுது சென்றால் மே மாத ஆண்டு விடுமுறைக்குத்தான் ஊர் திரும்ப முடியும். மே மாத ஆரம்பத்தில் எனது தகப்பனார் இறந்ததினால் எனது அப்பா இறந்ததற்கு எனது அண்ணன் கலந்து கொள்ள இயலவில்லை. எனது அக்காள் என்னைவிட 2 வயது மூத்தவர்கள். என் அக்காள் மட்டும் எனது சின்னம்மாவின் கொடுமைக்கு ஆளாகி எல்லாவற்றையும் சகித்துக்கொண்டு என் சின்னம்மாவுடன் இருந்து வந்தார்கள். அண்ணனும் விடுமுறை முடிந்து மீண்டும் படிக்க வடக்கன்குளம் சென்றுவிட்டார். மறு ஆண்டு கோடை விடுமுறைக்கு முதல்சேரிக்கு வந்திருந்தார்கள்.

எனது அண்ணன் நான் படிக்காமல் கறவலாடுகளின் பின்னால் அலைந்து திரிந்து கொண்டிருப்பதைக் கண்டு அதிகமாக வருந்தினார். எப்படியாவது என்னைப் படிக்க வைக்க வேண்டும் என்று அதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

என் தாய்மாமாவும் அத்தையும் தஞ்சை மாவட்டம் நீடாமங்கலம் என்ற ஊரில் ஒரு தனியார் பள்ளியில் இளநிலை ஆசிரியர்களாகப் பணியாற்றி வந்தார்கள். என் அண்ணன், அவர்களோடு தொடர்புகொண்டு என்னை எப்படியாவது அவர்கள் படிக்க வைக்கவேண்டும் என்றும், தான் படித்து முடித்து வேலைக்கு வந்தவுடன் தான் பொறுப்பேற்றுக் கொள்வதாகவும் கூறி முயற்சி எடுத்துள்ளார்கள். எனது மாமாவும், அத்தையும் சம்மதித்து என்னை நீடாமங்கலத்தில் கொண்டுவந்து விடும்படி கூறினார்கள். 1944-ஆம் ஆண்டு எனது அண்ணன் அவர்கள் எங்கள் சின்னத்தாத்தா வீட்டிலிருந்து

அழைத்துக்கொண்டு போய் எங்கள் தாய்மாமா வீட்டில் விட்டுவிட்டு அவர்கள் படிப்பதற்காக வடக்கன்குளம் சென்று விட்டார்கள்.

எனது மாமாவும் அத்தையும் முதலாம் வகுப்பு படித்துவிட்டு இடையில் 4 ஆண்டுகள் படிக்காமலிருந்த என்னை நான்காம் வகுப்பில் அவர்கள் பணியாற்றும் பள்ளியில் சேர்த்து விட்டார்கள். அதனால் நான் மிகவும் கஷ்டப்பட்டுப் படித்து ஒவ்வொரு ஆண்டும் தேர்ச்சி பெற வேண்டியிருந்தது. மாமா வீட்டில் வேலை ஆள் இல்லாததால் அவர்கள் வீட்டிற்குத் தேவையான எல்லா உதவிகளையும் செய்து வந்தேன். அப்பொழுது எனது மாமாவீட்டில் நான், எனது மாமாவின் தம்பி, அத்தையின் அண்ணன் மகள், மகன் ஆகியவர்களையும் வைத்து பெருத்த தியாகத்தோடு எங்களைப் படிக்க வைத்தார்கள். அப்பொழுது எனது மாமாவும் அத்தையும் குறைந்த சம்பளத்தில் பெரும் தியாகத்தோடு எங்கள் அனைவரையும் வைத்துப்பராமரித்துப் படிக்க வைத்து வந்தார்கள். நான் அங்கு 3 ஆண்டுகள் தங்கி 6-ம் வகுப்புவரை படித்து முடித்தேன். நான் விட்ட படிப்பைத் தொடர்வதற்கும், நான் வாழ்க்கையில் முன்னேறுவதற்கும் வழி வகுத்தவர்கள் எனது அண்ணன் அவர்களும் எனது தாய்மாமா மற்றும் அத்தையும் ஆவார்கள். அவர்களை நான் என்றும் என் நினைவில் வைத்துள்ளேன். நான் நீடாமங்கலத்தில் படித்துக் கொண்டிருந்த பொழுது அருகாமையில் உள்ள பெருங்குடி என்ற கிராமத்தில் உள்ள எனது சின்னம்மா (அம்மாவின் தங்கை) வீட்டிற்கு குறுகிய கால விடுமுறை நாட்களில் நானும் எனது மாமா நித்தியானந்தம் அவர்களும் அடிக்கடி சென்று தங்கி வருவோம். எனது சின்னம்மா, சித்தப்பா, தங்கை குணசிலி, கஸ்தூரி, ஹில்டா, தம்பி ஜோசப், துரைராஜ் எங்களை அன்பாக உபசரிப்பார்கள்.

எனது தாய்மாமா அத்தை ஆகியவர்களுடைய தியாகத்தை நினைக்கும் பொழுது ஆச்சரியமாக இருக்கிறது. அவர்களுக்குத் திருமணமாகி சில ஆண்டுகளாக குழந்தை இல்லை. நாங்கள் நீடாமங்கலத்தில் படித்துக் கொண்டிருந்த பொழுதுதான் மாமாவிற்கு மூத்த மகளாகப் பிரேமா

பிறந்தார்கள். சில வருடங்களுக்குப் பிறகு இருவரும் பஞ்சாயத்து யூனியன் பள்ளியில் சேர்ந்தார்கள். தலைஞாயிறு பஞ்சாயத்துப் பள்ளியில் பல ஆண்டுகள் இருவரும் சிறந்த முறையில் பணியாற்றினார்கள். அதன் பிறகு எனது மாமா நோய்வாய்ப்பட்டுப்பணியில் இருக்கும் பொழுதே 1966-ஆம் ஆண்டில் இறந்து விட்டார்கள். மாமா இறந்த பிறகு எனது அத்தை வலங்கைமான் வட்டத்தில் உள்ள களத்தூர் விளத்தூர் என்ற பஞ்சாயத்து யூனியன் பள்ளிக்கு மாற்றல் பெற்றுத் தலைமை ஆசிரியையாகப் பணியாற்றினார்கள். அத்தை அவர்கள் நல்ல திறமை மிக்க ஒரு தலைமை ஆசிரியையாகப் பணியாற்றினார்கள். அவர்களுக்கு தமிழக அரசு ''நல்லாசிரியர் விருது'' வழங்கிப் பாராட்டி உள்ளது. எனது மாமாவும் ஒரு சிறந்த ஆசிரியர். தன்னிடம் படிக்கும் மாணவர்கள் அனைவரும் முன்னேற வேண்டும் என்று ஒவ்வொரு மாணவன் மீதும் தனிக்கவனம் செலுத்திப் படிக்க வைப்பார்கள். நானும் அவர்களிடம் இரண்டு ஆண்டுகள் படித்திருக்கிறேன். எனது மாமாவும் உயிரோடு இருந்திருந்தால் அவர்களும் நல்லாசிரியர் விருது பெற்றிருப்பார்கள். எனது மாமாவின் மூத்தமகள் திருமதி பிரேமா அவர்களை எனது சின்னம்மா மகன் திரு. ஜோசப் அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்தார்கள். இரண்டாவது மகள் திருமதி. கிளாரா அவர்களைக் கால்பந்து வீரரும் ஒலிம்பியனுமான திரு. சைமன் சுந்தர்ராஜ் அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்தார்கள். திரு. சைமன் சுந்தர்ராஜ் அவர்கள் ரோமில் நடந்து முடிந்த ஒலிம்பிக் கால்பந்து போட்டியில் இந்தியாவின் சார்பாகப் பங்கு பெற்றுச் சிறப்பாக விளையாடியவர்கள். மகன் ராஜா சற்று வளர்ச்சி குன்றியவனாக தனது மூத்த அக்காளின் பாதுகாப்பில் இருந்து வருகிறான். எனது அத்தையும் பணியிருந்து ஓய்வு பெற்ற சில ஆண்டுகளுக்குப் பிறகு சிறிது காலம் நோய்வாய்ப் பட்டிருந்து 20.4.1987 -இல் நித்தியத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள். எனது மாமா அத்தை இருவரும் என்மீது காட்டிய அன்பு, பாசம், பரிவு, கரிசனை ஆகியவைகளை மனதில் கொண்டு அவர்கள் இருவரின் பெயரில் அணைக்காடு உறவின் முறைச்சங்கத்தில் ஒரு தொகையினை மூதலீடுசெய்து அறக்கட்டளை ஒன்றினை நிறுவி உள்ளோம். இந்த அறக்கட்டளை முதலீட்டிலிருந்து கிடைக்கும் வருமானத்திலிருந்து ஏழை எளிய, விதவைகளாகிய நம்

இனமக்களுக்கு தொடர்ந்து உதவி செய்து வருவதற்காக இந்த அறக்கட்டளையை நிறுவி உள்ளோம். இதே விதமாக 5 மாத அனாதை குழந்தையாக இருந்த என்னைத் தூக்கி வந்து பாலூட்டி, தாலாட்டி சீராட்டி வளர்த்து ஆளாக்கிய எனது சின்னத்தாத்தா, சின்ன அப்பாயி ஆகிய இருவர் பெயரிலும் அணைக்காடு உறவின் முறைச் சங்கத்தில் ஒரு அறக்கட்டளையை நிறுவி அதன் மூலம் ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்து வருகின்றோம். இது எங்களுக்கு மன நிறைவைத் கொடுத்து வருகிறது.

நான் பட்டுக்கோட்டை உயர்நிலைப்பள்ளியில் 7-ஆம் , 8-ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த பொழுது என் அண்ணன் வேலையில் சேரவில்லை. அந்த இரண்டு ஆண்டுகளுக்கும் எனது ஞானதகப்பனாராக இருந்த திரு. சுந்தர் டேவிட் அண்ணனின் அப்பா அவர்கள் எனது பள்ளிக் கட்டணத்தைக் கொடுத்து உதவி செய்தார்கள். அவர்களின் மகள் எம்மா அக்கா என்னிடம் அதிகம் அன்பு காட்டுவார்கள். நான் அவர்கள் வீட்டுக்குச் செல்லும் பொழுதெல்லாம் என்னை அன்புடன் உபசரிப்பார்கள்.

ஆதரவு காட்டிய அண்ணன், அண்ணி :

நான் பட்டுக்கோட்டை உயர்நிலைப்பள்ளியில் 7-ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். எனது அண்ணன் தஞ்சாவூர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தார். என் அண்ணன் ஆசிரியர் பயிற்சிப் படிப்பினை முடித்து அதிராம்பட்டினம் காதர்மொய்தீன் உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராகப் பணியில் சேர்ந்து பணியாற்றிக் கொண்டிருந்தார். என் சிற்றன்னை வீட்டில் தங்கித் தொடர்ந்து படிக்க எனக்கு விருப்பம் இல்லை. என் சிற்றனை அடிக்கடி என் காது கேட்கும்படியாக இவன் படித்து என்ன செய்யப் போகிறான். பெரிய ஆபீஸர் ஆகப்போகிறானாக்கும். பேசாமல் படிப்பை விட்டுவிட்டு ஆடுமாடுகளையும், விவசாயத்தையும் பார்க்கட்டும் என்று சொல்லிக்கொண்டே இருப்பார்கள். இந்நிலையில் நான் திருச்சியில் உள்ள இராணுவத்தில் ஆள் சேர்க்கும் அலுவலகத்திற்கு மனு செய்திருந்தேன். அங்கிருந்து சிறுவர் கடற்படையில்

சேருவதற்கு வரும்படி எனக்கு அழைப்பு வந்தது. இந்த ஆணையை எனது வேதப்புத்தகத்தில் வைத்திருந்தேன். தேவனின் தெளிவான வழிநடத்துதலுக்குக் காத்திருந்தேன். அந்த ஆணையை என் அண்ணன் பார்த்து விட்டார். என்னை இனிமேல் இங்கு வைத்திருப்பது நல்லது அல்ல என்று எண்ணி தான் முன்பு படித்த திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள, வடக்கன்குளம் கன்கார்டியா உயர்நிலைப்பள்ளியில் என்னை 9-ஆம் வகுப்பில் சேர்ப்பதற்கான ஆயத்தங்களைச் செய்து அங்கு என்னை 9-ஆம் வகுப்பில் சேர்த்து விட்டார். அப்பொழுது பள்ளிக்கட்டணம் ரூ. 4/-ம் போர்டிங் கட்டணம் ரூ.10/- ம் மாதம் செலுத்தவேண்டும். எனது மாத செலவிற்காக ரூ.1/- ஆகக் கூடுதல் ரூ.15/-ஐ மாதாமாதம் என் அண்ணன் அவர்கள் வாங்கிய ரூ. 65/- குறைந்த சம்பளத்தில் தியாகத்தோடு எனக்கு அனுப்பி வந்தார்கள். இது ஒரு மாபெரும் தியாகமான உதவியாகும். அந்த நாட்களில் எனக்கு என் அண்ணன் மூலம் இந்தத் தியாகமான உதவி கிடைக்காதிருந்தால் நான் என் படிப்பைத் தொடர்ந்து படித்து முடித்திருக்க முடியாது.

நான் 10-ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த பொழுது எனது சிற்றன்னை தனது ஒன்றுவிட்ட அண்ணன் மகளை என் அண்ணனை கட்டாயப்படுத்திக் கத்தோலிக்க திருச்சபையில் சேர்த்துத் திருமணம் செய்து வைத்தார்கள். திருமணமான சில நாட்களிலேயே மருமகளை என் சின்னம்மா கொடுமைப்படுத்த ஆரம்பித்து விட்டார்கள். இதனால் தனிக் குடித்தனம் போவதற்கு முயற்சி செய்திருக்கிறார்கள். பட்டுக்கோட்டையில் ஒரு சிறிய வீட்டை வாடகைக்கு அமர்த்திக் குடி போவதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்திருக்கிறார்கள். இதை அறிந்த என் சின்னம்மா குடி போவதைத் தடுக்க முயற்சி செய்திருக்கிறார்கள். அந்த முயற்சியிலும் என் சின்னம்மா வெற்றி பெறாததால், வேறு விதமான முயற்சிகளும் செய்து எனது அண்ணியைச் சுகவீனப் படுத்தி தடை செய்ய முயற்சித்து இருக்கிறார்கள். என் அண்ணிக்கு அம்மை போட்டுள்ளதாகவும் அதனால் ஆண்கள் பார்க்கக்கூடாது, பேசக்கூடாது என்றும் தனித்து வைத்து என் அண்ணனைப் பார்க்க விடாது செய்திருக்கிறார்கள். ஏதோ மெதுவாகக் கொல்லும் விஷத்தைக் கொடுத்துப் படுக்கையில் என் அண்ணியைப் போட்டு

விட்டதாகப் பின்பு கேள்விப் பட்டோம். இது எந்த அளவுக்கு உண்மை என்பது உறுதி செய்ய முடியவில்லை. எனினும் இளம் தம்பதியரை சதி செய்து அவர்களது வாழ்க்கையைச் சின்னா பின்னமாக்கி விட்டார்கள். ஒரு சில நாட்களில் என் அண்ணிக்கு அதிகமாக வயிற்றுப்போக்கு ஆகிக்கொண்டிருந்ததால் என் சின்னம்மா சொல்லியும் மீறி வண்டியில் தூக்கிப் போட்டுக் கொண்டு என் அண்ணன் தனிமையில் மருத்துவ மனைக்குச் சென்று இருக்கிறார். உடனடியாக மருத்துவசிகிச்சை கொடுக்கப் பட்டுள்ளது. ஆனால் காலம் கடந்து மருத்துவமனைக்குக் கொண்டு சென்று மருத்துவ சிகிச்சை கொடுக்கப்பட்டதால் மருந்துகள் வேலை செய்யவில்லை. வயிற்றுப்போக்கைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இவ்வளவு ஆபத்தான நிலையில் என் அண்ணியை மருத்துவமனைக்கு அழைத்து சென்ற பொழுது கல் நெஞ்சர்களான சின்னம்மாவும், அவர்களின் ஒரே மகளும் உடன் மருத்துவமனைக்குச் செல்லவில்லை. திரும்பப் பிணமாகத்தான் கொண்டு வருவான் என்று கொஞ்சமும் ஈவு இரக்கமின்றிச் சொல்லிக் கொண்டிருந்தார்களாம். எனது அண்ணன் தனிமையில் ஆதரவற்ற நிலையில் என்ன செய்வதென்று அறியாமல் தவித்துக் கொண்டிருந்த நிலையில் அண்ணியின் உயிர் அண்ணனது மடியில் கிடந்தபடி பிரிந்து விட்டது. இறந்த உடலை வண்டியிலே தூக்கிப் போட்டுக் கொண்டு வீட்டிற்கு கொண்டு வந்து அடக்கம் செய்திருக்கிறார்கள். அப்பொழுது நான் வடக்கன்குளம் உயர்நிலைப்பள்ளியல் 10-ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். நிதி நெருக்கடியின் காரணமாக அண்ணனின் திருமணத்தில் கலந்து கொள்ள முடியவில்லை. திருமணமாகி 6 மாதகாலத்தில் இறந்து போன அண்ணியின் இறந்த நிகழ்ச்சியிலும் கலந்துகொள்ள முடியாத அவல நிலையில் இருந்தேன்.

அண்ணி இறந்த சில தினங்களுக்குப் பிறகு என் அண்ணனிடமிருந்து விரிவான கடிதம் ஒன்று எனக்கு வந்தது. அந்தக் கடிதத்தில்தான் அண்ணி இறந்த செய்தியினை எழுதியிருந்தார்கள். அந்த செய்தியினைப் படித்தவுடன் நான் அதிர்ந்து துடிதுடித்துப்போனேன். என்னுடன் கல்வி பயின்ற நண்பர்கள் என்னை ஆற்றித் தேற்றினார்கள். மேலும் அந்தக் கடிதத்தில் அண்ணன் தனது ஆதரவற்ற நிலைக்கும் அண்ணியை

இழந்து விட்டதற்கும் எங்கள் சிற்றன்னையின் சூழ்ச்சிதான் காரணம் என்று எழுதி இருந்தார்கள். தற்பொழுது சிற்றன்னையுடன் பேசுவதும் இல்லை. அவர்கள் வீட்டிற்கும் போவதில்லை என்று எழுதியிருந்தார்கள். எனக்கு மே மாத விடுமுறைக்குச் சிலநாட்கள் இருந்தபடியால் என் அண்ணனுக்கு ஆறுதலான ஒரு கடிதம் எழுதினேன். அதில் இன்னும் சில தினங்களில் நான் தேர்வு முடிந்து ஊருக்கு வந்து விடுவேன். அதுவரையில் தைரியமாக இருங்கள். நான் வந்து எல்லாவற்றையும் பார்த்துக் கொள்கிறேன். அதுவரையில் அவரை என்னை வளர்த்த சின்னத்தாத்தா வீட்டில் இருந்து வரும்படி கேட்டுக் கொண்டேன். நானும் விடுமுறை முடிந்து நேராகச் சின்னத்தாத்தா வீட்டிற்கு வந்து விடுவதாகவும் எழுதியிருந்தேன். என் அண்ணன் அவர்களும் என் சின்னத்தாத்தா வீட்டில் இருந்து கொண்டு அணைக்காட்டிலிருந்து அதிராம்பட்டிணம் உயர் நிலைப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார்கள். நானும் மே மாத விடுமுறையில் நேராக அணைக்காட்டில் உள்ள எனது சின்னத்தாத்தா வீட்டிற்கு வந்து சேர்ந்தேன். நான் எனது அண்ணன் திருமணத்திற்கும், அண்ணி இறந்ததற்கும் வரமுடியாத சூழ்நிலையில் அண்ணன் வாழ்க்கையில் ஏற்பட்ட இழப்புகள், பாடுகள், வேதனைகள் ஆதரவற்ற நிலைகுறித்து இருவரும் மிகவும் கலங்கினோம். கதறினோம். கர்த்தருக்குள் எங்களை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டோம்.

சில நாட்களுக்குப்பிறகு ஊரில் உள்ள சில பெரியவர்களை வைத்துப் பாகப்பிரிவினைக்கு ஏற்பாடுகள் செய்தோம். எங்கள் சிற்றன்னையின் பெற்றோர், அண்ணன் வீட்டாரின் குறுக்கீடுகள் அதிகம் இருந்தன. பாகப் பிரிவினையில் எத்தனைப் பிள்ளைகள் என்ற அடிப்படையில் பங்கு பிரிக்கப்படாமல் முதல்தாரம் இரண்டாம் தாரம் என்று இரண்டு பங்காகப் பிரிக்கப்பட்டது. நாங்கள் எங்கள் சிற்றன்னைக்கு எல்லாவற்றையும் விட்டுக் கொடுத்தோம். வீட்டின் மதிப்பில் ஒரு பகுதித்தொகை, வீட்டின் தோப்பில் ஒரு பகுதித் தொகை, ஆகியவைகளை எங்களுக்கு ரொக்கமாக எங்கள் சிற்றன்னை கொடுக்க வேண்டுமென்று பஞ்சாயத்துப் பேசியவர்கள் முடிவு கூறினார்கள். ஆனால் இந்நாள் வரையில் அந்த வீட்டின் பாகமோ தோப்பின் பாகமோ ஒரு காசு கூட எங்கள் சிற்றன்னை

எங்களுக்குக் கொடுக்கவில்லை. நாங்களும் அதை அவர்களிடம் கேட்கவும் இல்லை. முதல்சேரியில் இருந்த எங்கள் பாகத்தை விற்று அணைக்காட்டில் எங்கள் இருவர் பேரிலும் 2 ஏக்கர் நிலம் வாங்கிக் கொண்டோம். பாகப் பிரிவினையின் போது பிரிக்கப் பட்ட சாமான்கள், மாடுகள் ஆகியவைகளை அணைக்காட்டில் உள்ள எங்கள் அக்காளுக்கு அனுப்பி வைத்தோம். விடுமுறை முடிந்து நான் பள்ளி இறுதிப்படிப்பிற்கு வடக்கன்குளம் சென்று விட்டேன். என் அண்ணன் அதிராம்பட்டிணத்தில் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். இந்நிலையில் தஞ்சாவூர் சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் House Master -ஆகத் தமிழ்நாடு அரசுத்துறையில் எனது அண்ணனுக்கு வேலை கிடைத்தது. தங்குவதற்கு வீடும் கொடுக்கப்பட்டது. நான் இராணுவத்தில் 1953-ம் ஆண்டிலிருந்து இருந்து வந்தேன். அந்த சமயத்தில் 20.8.1953 -இல் அண்ணனுக்கும் அண்ணி மெர்ஸி கமலாபாய் ஆகிய இருவருக்கும் திருமணம் நடந்தது. இராணுவத்தில் எனக்கு விடுப்பு கிடைக்காததால் இந்த இரண்டாவது திருமணத்திலும் கலந்து கொள்ளும் வாய்ப்பை நான் இழந்து விட்டேன். இராணுவத்திலிருந்து நான் விடுமுறையில் தஞ்சை வந்த நாட்களில் எனது அண்ணனும் அண்ணியும் என் மீது அன்பு பாராட்டி ஆதரித்து வந்தனர். விடுமுறை நாட்களில் பெரும் பகுதியை அணைக்காட்டில் உள்ள என் அக்கா வீட்டிலும் என்னை வளர்த்த சின்னத்தாத்தாவின் மகள் திருமதி.ராஜாமணி அவர்கள் வீட்டிலும் இருப்பேன். நான் அவர்கள் வீட்டில் எவ்வளவு நாட்கள் தங்கினாலும் மனம் சலித்துக் கொள்ள மாட்டார்கள். அவர்கள் என்னை அன்போடு ஆதரித்தார்கள். இன்றும் அவர்களும் அவர்களின் தங்கை நேசமணி அம்மாளும் என்னைக் கண்டதும் தம்பி என்று அன்போடு அழைப்பார்கள். அவர்களுக்கும் அவ்வப்போது என்னால் இயன்ற உதவிகளைச் செய்து வருகிறேன்.

நான் தஞ்சாவூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் சூப்பர்வைசராகப் பணியில் சேர்ந்த ஓராண்டு ஆவதற்குள் அநேக உறவினர்கள் எனக்குப் பெண் கொடுக்க முன்வந்தார்கள். அவர்களில் பெரிய செல்வந்தர்களும் அடங்குவர். எங்கள் நெருங்கிய உறவினரும் செல்வந்தருமானவரின் மகளை என் அண்ணன் எனக்குப் பேசி முடிவு செய்தார்கள்.

அப்பொழுது பெண்ணின் தகப்பனாருக்கு 5 இடத்தில் மில்கள் இருந்தன. பல கார்கள் இருந்தன. சமைப்பதற்கும் வேலை செய்வதற்கும் பல வேலையாட்கள் இருந்தனர். பார்ப்பதற்கு அந்தப் பெண் வீடு அதிக வசதிகள் நிறைந்ததாகவும் கவர்ச்சியாகவும் இருந்தாலும் எனக்கு அந்த சம்பந்தம் பிடிக்க வில்லை. நான் என் அண்ணன், அண்ணி இருவரிடமும் நம் குடும்பம் கடைசிவரையில் ஒற்றுமையாக இருக்க நீங்கள் விரும்பினால், எனக்கு ஏற்பாடு செய்திருக்கும் திருமணத்தை உடனடியாக நிறுத்தி விடுங்கள் என்று கண்டிப்புடன் கூறினேன். இவ்வளவும் பேசி ஒரு முடிவுக்கு வந்த பிறகு எப்படி இந்தத் திருமணத்தை நிறுத்துவது என்று என் அண்ணனுக்கு தர்ம சங்கடமாய்ப் போய்விட்டது. எனினும் எனது அண்ணன் இந்தப் பிரச்சனையைத் திறமையாகக் கையாண்டு இருகுடும்பத்தாருக்கும் வருத்தம் இல்லாதபடி சமாளித்தார்கள். எனினும் எனது திருமணப் பொறுப்புகள் அனைத்தையும் எனது அண்ணன் அண்ணியிடம் ஒப்படைத்து விட்டேன். அவர்கள் எதைச் செய்தாலும் என்னுடைய நன்மைக் கென்றே செய்வார்கள் என்று முழுமனதோடு நம்பினேன். சில நாட்களுக்குப்பிறகு எனது அண்ணியினுடைய சின்னம்மா மகளை எனக்குப் பெண் பேசி முடித்தார்கள். திருமண ஆயத்தங்கள் அனைத்தையும் எனது அண்ணனும் அண்ணியும் பார்த்துக் கொண்டார்கள். நான் எனது திருமணத்திற்கு முதல்நாள்தான் நான் பணியாற்றும் இடத்திலிருந்து தஞ்சைக்கு வந்து சேர்ந்தேன். எனது திருமணத்தை எனது அண்ணனும் அண்ணியும் சேர்ந்து மிகவும் சிறப்பாக நடத்தி முடித்தார்கள்.

எனது அண்ணன் 20 ஆண்டுகள் சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் House Master ஆக பணியாற்றினார்கள். எனது அண்ணி தஞ்சை கணபதி நகரில் உள்ள இராமகிருஷ்ணா நடுநிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியையாகப் பணியாற்றினார்கள். எனக்கு திருமணமான ஒரு வருட காலத்திற்குள் எங்களுக்கு தனியாக வாடகைக்கு வீடு பார்த்து தனிக்குடித்தனம் வைத்தார்கள். நாங்கள் இருவரும் அண்ணன் வீட்டிற்கு வாரத்திற்கு மூன்று முறையாவது சென்று பார்த்து வருவோம்.

எனது அண்ணனுக்கு நேசமணி, ஜான்சன் என்ற ஒரு மகளும், ஒரு மகனும் பிறந்தார்கள். அவர்கள் இருவரையும்

நாங்கள் அன்புடன் நேசித்தோம். அவர்களும் எங்களிடத்தில் அதிக பாசத்துடன் இருப்பார்கள். இந்நிலையில் எனது அண்ணனுக்கு செங்கற்பட்டுக்கு மாற்றல் ஆனது. அந்த சமயத்தில் மருத்துவக்கல்லூரி சாலையில் தற்பொழுது நவபாரத் மெட்ரிக்குலேஷன் மற்றும் மேல்நிலைப்பள்ளி இருக்கின்ற இடத்தில் ஒரு சிறிய வீட்டைக் கட்டியிருந்தார்கள். எனது அண்ணன் வீடு கட்டிய சமயத்தில் அந்தப் பகுதியில் வீடுகள் ஏதும் இல்லை. எனினும் எனது அண்ணன் துணிச்சலோடு அந்தப்பகுதியில் வீட்டைக்கட்டி அங்கு குடியிருந்து வந்தார்கள். அப்பொழுது நேசமணியும், ஜான்சனும் சிறு பிள்ளைகள். அண்ணன் செங்கற்பட்டு மாற்றலாகி சென்று விட்டதால் வீடு தனித்திருப்பதால் பல நாட்கள் அவர்களுக்கு பாதுகாப்பிற்காக அங்கு இரவில் சென்று தங்கி வருவேன். அண்ணி தஞ்சையில் தனியார் பள்ளியில் பணியாற்றியபடியினால் அண்ணன் House Master வேலையை இராஜினாமா செய்துவிட்டு தஞ்சை தூய அந்தோனியார் உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராக சிறிது காலம் பணியாற்றினார்கள். அதன் பிறகு தூய பேதுரு மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியராக சேர்ந்து பணியாற்றினார்கள். அந்த சமயத்தில் தனது வீட்டிற்கு எதிரில், மருத்துவக்கல்லூரி சாலையில் உள்ள இடத்தை பண்டிதர் குடும்பத்தைச் சேர்ந்த திரு. தவப்பாண்டியன் அவர்கள் ஆலயம் கட்டுவதற்கு இனாமாக வழங்கினார்கள். அவர்களுடைய குடும்பத்திற்கு நாங்கள் என்றும் நன்றி உள்ளவர்களாக இருக்கிறோம்.

அந்த சமயத்தில் IELC போதகராக இருந்த மறைதிரு. A.D.ஜேம்ஸ் அவர்களும் எனது அண்ணனும் இணைந்து ''பரிசுத்த லூக்கா'' ஆலயம் என்ற ஒரு சிறிய ஆலயத்தைக்கட்டி ஆலய வழிபாடுகளைத் தொடர்ந்து நடத்தி வந்தார்கள். இந்த ஆலயம் மருத்துவக்கல்லூரிப் பகுதியில் பல இடங்களில் சிதறி இருக்கும் Protestant கிறிஸ்தவர்கள் வழிபடுவதற்கு ஏதுவாகக் கட்டப்பட்டது. அந்தப் பகுதியில் சிதறி இருக்கிற கிறிஸ்துவர்களுக்கு தொழுகைக்கு இது மிகவும் பயன் உள்ளதாக இருந்து வருகிறது. அந்த நாட்களில் தூய லூக்கா ஆலயத்தினுடைய எல்லா பொறுப்புகளையும் எனது அண்ணன்தான் போதகருக்கு உதவியாக இருந்து கவனித்து வந்தார்கள். அந்த ஆலய வளாகத்திலேயே ஆலயத்தின் நிர்வாக

செலவுகளுக்கு உதவியாக இருப்பதற்காக தூயலூக்கா ஆங்கிலப் பள்ளியினை ஆரம்பித்து அதற்கு எனது அண்ணனே நிர்வாகியாக இருந்து சிறப்பாக நடத்திக் கொண்டு வந்தார்கள். இதற்கிடையில் கட்டிய சிறிய ஆலயம் ஆராதனை நடத்துவதற்கு போதுமானதாக இல்லை. அந்த பகுதியில் உள்ள அனேக மக்கள் ஆராதனைக்கு வந்து கொண்டிருந்தார்கள். அந்த ஆலய வளாகத்தில் காலியாக இருந்த இடத்தில் ரூ.4 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு பெரிய ஆலயம் கட்ட தீர்மானித்தோம். இந்தத் திட்டத்தை நிறைவேற்ற தஞ்சையில் உள்ள அனைத்து திருச்சபைகளின் முக்கியமான நபர்களைக் கொண்டு குழு ஒன்று அமைக்கப்பட்டது. இதற்கு மேலைநாட்டு மிஷனரி மறைதிரு. A.J. LUTZ போதகர் அவர்கள் தலைவராக இருந்து இந்த ஆலயத்தைக் கட்டிமுடிக்க அரும்பாடு பட்டார்கள். எனது அண்ணனும் மறைதிரு. தேவசகாயம் அவர்களும் ஆலய கட்டுமான வேலைகளை ஒருங்கிணைத்து கவனித்து வந்தார்கள். இந்த ஆலய கட்டுமானப்பணிக்கு எல்லா திருச்சபை மக்களும் சபைப் பாகுபாடின்றி நிதி உதவி அளித்து உதவினார்கள். அவ்வப்போது சில கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு ஆலய வேலை தடைப் பட்டது. சபைத்தலைவராக இருந்த குருவாடி திரு. சாமிப்பிள்ளை அவர்கள் இறந்த பிறகு சபைதலைவர் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார்கள். மீண்டும் பல முயற்சிகள் எடுத்து ஆலயக் கட்டுமான பணிகள் தொடங்கப்பட்டன.

எனது அண்ணனுடைய அயராத உழைப்பாலும் முயற்சியினாலும் நவபாரத் ஆங்கிலப் பள்ளி மேலும் மேலும் வளர்ந்து தற்பொழுது நவபாரத் மெட்ரிக்குலேஷன் மற்றும் மேல்நிலைப்பள்ளியாக சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது. கல்வியின் தரம், ஒழுக்கம், கட்டுப்பாடு, விளையாட்டு ஆகியவைகளில் தஞ்சையில் உள்ள பள்ளிகளில் ஒரு சிறந்த பள்ளியாகப் பாராட்டப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. தற்பொழுது இந்தப்பள்ளியானது எனது அண்ணன் மகன் திரு. D.J. ஜான்சனின் சீரிய தலைமையில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. எனது அண்ணன் ஒரு தியாக சீலர். கடினமாக உழைப்பவர். காலம் தவறாதவர். உழைப்பால் உயர்ந்த உத்தமர். எனது அருட்பணி ஊழியத்திற்கும் நிதித் திரட்டிக் கொடுத்துப் பல வருடங்களாக உதவி செய்து வருகிறார்கள்.

5. கல்வி கற்கப் பட்டபாடுகள்

நான் வடக்கன்குளம் சென்று பள்ளி விடுதியில் தங்கிப் படித்துக் கொண்டிருந்த பொழுது எனக்கு அதிக நேரம் கிடைத்தது. யாத் 34 :2 -இல் ''விடியற்காலத்தில் நீ ஆயத்தமாகி, சீனாய் மலையில் ஏறி அங்கே மலையின் உச்சியில் காலமே என் சமூகத்தில் வந்து நில்'' என்று தேவன் மோசேக்குக் கட்டளை யிட்ட வண்ணமாக நானும் ஒவ்வொரு நாளும் தேவ சமூகத்தில் காத்திருந்து ஒவ்வொரு நாளையும் துவங்க என் தேவன் உதவிசெய்து வருகிறார். எனது வாழ்க்கையின் வெற்றியின் இரகசியமே அதிகாலையில் இருட்டோடு எழுந்திருந்து என் தேவனோடு பேசி உறவாடியதுதான். சிறு வயதிலேயே தாயின் அன்பு, தகப்பனின் அன்பு தெரியாத எனக்கு என் தேவனே எனக்கு எல்லாமாக இருந்தார். அந்நாட்களில் தாயின் அன்புக்காக அழுத நாட்கள் பல உண்டு. தனிமையான இடத்திற்கு சென்று என்பாரங்களையும், கஷ்டங்களையும், வேதனைகளையும் என் தேவனிடத்தில் கொட்டுவேன். அவர் என்னை ஒரு தாய் தேற்றுவதுபோல தேற்றுவதை உணருவேன். ஆறுதல் பெறுவேன், தைரியம் அடைவேன். புதுப்பலம் பெறுவேன். சிறு வயதிலேயே கடினமாக உழைக்கக் கற்றுக் கொண்டேன்.

நான் என் சிற்றன்னையின் வீட்டிலிருந்து பட்டுக்கோட்டை உயர்நிலைப்பள்ளியில் படித்துக் கொண்டிருந்த பொழுது மிகவும் பாடுபட்டேன். வேலை, வேலை எப்பொழுதும் வேலைதான். ஆனால் என் தேவைகளை உணர்ந்து என்சிற்றன்னை உதவி செய்ய முன்வரமாட்டார்கள். அந்நாட்களில் எனக்குத் தேவையான புத்தகம், நோட்டு, துணிகள் வாங்குவதற்கு, சில்லரைச் செலவுகள் போன்றவை களுக்கு நானே இரவு நேரங்களிலும், இடைப்பட்ட நாட்களிலும் உழைத்துச் சம்பாதிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. சாகுபடிக் காலங்களில் இரவுமுழுவதும் தண்ணீரில் உட்கார்ந்து நாற்றுப்பறிப்பேன். அதில் கிடைக்கும் தொகையினைக் கொண்டு எனது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வேன். போர்டிங்கில் படிக்கும் பொழுது எனது கைச் செலவிற்காக மாதம் ரூ.1/- சேர்த்து என் அண்ணன் தியாகத்தோடு அனுப்புவார். ஆனால் அது முடிவெட்டுவதற்கு, சோப்பு, பற்பொடி வாங்குவதற்குப்

போதாது. விடுமுறை நாட்களில் தோட்டவேலை செய்தும், போர்டிங் தோட்டத்திலுள்ள செடிகளுக்குத் தண்ணீர் எடுத்து ஊற்றும் வேலைகளைச் செய்தும் அதிலிருந்து கிடைக்கும் தொகையிலிருந்து மேற்கண்ட தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுவேன்.

அந்நாட்களில் எவ்வளவு கடினமான வேலையாக இருந்தாலும் செய்யத் தயங்க மாட்டேன். பொங்கல் சமயங்களில் துணிச்சலோடு பெரிய பொலிகாளைகளை மடக்கிப்பிடித்து அடக்குவதில் எனக்கு தனிப்பிரியம். காளை மாடுகளின் கொம்புகளில் கட்டியிருக்கும் பரிசுப்பொருட்களை காளைகளை மடக்கிப்பிடித்து அறுத்து வருவேன். பனைமரம், தென்னை மரம் எல்லாம் நன்றாக ஏறுவேன். இது எல்லாம் என்னுடைய வீர விளையாட்டுகள். ஒவ்வொரு நாளும் நன்றாக உடற்பயிற்சி செய்வேன். பள்ளியில் பல விளையாட்டுகளிலும் பயிற்சி பெற்றுப்பல மாவட்ட அளவிலான போட்டிகளிலும் கலந்து கொள்ளுவேன். கால்பந்து, கைப்பந்து, ஹாக்கி ஆகிய விளையாட்டுப் போட்டிகளிலும், *100 மீட்டர், 200 மீட்டர், 110 மீட்டர்* தடைதாண்டி ஓடுதல், ஈட்டி எறிதல், வட்டு எறிதல், குண்டு எறிதல், நீளம் தாண்டுதல் போன்ற போட்டிகளில் பள்ளி அளவில் முதல் பரிசுகளும் மாவட்ட அளவில் கலந்துகொண்டு பரிசுகளும் வாங்க என் தேவன் எனக்கு உதவி செய்தார். அப்பொழுது இருந்த பிரிக்கப்படாத திருநெல்வேலி மாவட்டத்தில் *1951-ம்* ஆண்டு கைப்பந்து போட்டிக்கு தலைவனாக தலைமை ஏற்று பெருத்த வெற்றி பெற்று அந்த ஆண்டின் சுழற்கேடயத்தை எங்கள் கன்கார்டியா உயர் நிலைப்பள்ளிக்கு வாங்கிக் கொடுக்க என் தேவன் உதவி செய்தார். திருநெல்வேலி மாவட்டம் வடக்கன்குளம் போர்டிங்குக்குச் சென்ற பிறகு என் வாழ்க்கையில் பெரிய மாறுதல் ஏற்பட்டு வருவதை என்னால் உணர முடிந்தது. அதற்கு முன்னால் மார்க்கப்பக்தியிலும், விசுவாசத்திலும் நடந்தாலும் தவறான பழக்க வழக்கங்களும், பாவங்களும் ஆட்கொண்டிருந்தன. எனது 17 -வது வயதிலிருந்து இந்தப் பழக்க வழக்கங்களிலிருந்து தேவன் எனக்கு விடுதலை கொடுத்தார். இரட்சிப்பின் அனுபவத்தைக் கொடுத்தார், எனினும் வாழ்க்கயில் சுயம் மேலோங்கும் பொழுது ஏற்ற இறக்கங்கள், மேடு பள்ளங்கள்

ஏற்படத்தான் செய்தன. அவ்வப்போது கிருபாசனத்தண்டைக்கு வந்து விழுந்து, பாவ மன்னிப்பு பெற்று ஆவியில் பலப்பட விசுவாசத்தில் முன்னேற என் தேவன் உதவி செய்து வந்தார். திருச்சபை வரலாற்றின் சீர்திருத்தச்செம்மல் மார்டீன் லுத்தர் அவர்கள் மீட்கப்பட்ட பாவிகளாகிய நமக்குச் சரியான விளக்கம் கொடுத்துள்ளார். "We are Saints as well as sinners" என்று கூறி உள்ளார். வடக்கன்குளம் பள்ளிவிடுதியில் முதலாம் ஆண்டில் எனக்குப் பல பொறுப்புகள் கொடுக்கப்பட்டன. முதலில் போர்டிங்கில் உள்ளவர்களின் சுகாதாரம் மற்றும் சுகவீனர்களைக் கண்டறிந்து சாதாரண நோய்களுக்கு மருந்துகளும், டாக்டர்களிடம் காண்பிக்க வேண்டியவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று வேண்டிய உதவிகளைச் செய்வதும், சுற்றுப்புறங்களைத் தூய்மையாக வைத்துக் கொள்ள ஏற்பாடுகள் செய்வதும் எனது பொறுப்பாக இருந்தது. இந்தப் பணிகளைச் சிறப்பாகவும் சகிப்புத்தன்மையுடனும் செய்ய என் தேவன் எனக்கு உதவி செய்தார்.

இரண்டாம் ஆண்டில் எனக்கு விடுதி மாணவர் தலைவர் பொறுப்பு கொடுக்கப்பட்டது. இது மிகவும் சிரமமான பணி. வார்டன் எல்லாப்பொறுப்புக்களையும் என்னிடமே விட்டுவிடுவார். போர்டிங் வார்டனைவிடப் பொறுப்புகள் அதிகம். நான் அதிகாலை 5.00 மணிக்கு எழுந்திருந்து ஜெபித்து விட்டு, காலைக்கடன்களை முடித்துவிட்டு, சரியாக காலை 6.00 மணிக்கு மணி அடித்து எல்லா மாணவர்களையும் எழுப்ப வேண்டும். இதற்கு முன்பாகக் காலை 5 மணியிலிருந்து 6.00 மணிக்குள் என்னுடைய பணிகளை முடித்து விடுவேன். காலை 6.00 லிருந்து 7.00 மணிக்குள் மாணவர்கள் காலைக் கடன்களை முடித்து, குளித்து சரியாக காலை 7.00 மணிக்குக் காலைத் தியானத்திற்கு மணி அடித்து அழைக்கவேண்டும். காலை 7.00 மணியிலிருந்து 7.30 வரை காலைத் தியானம் நடத்தவேண்டும். அதன்பிறகு காலை 7.30 முதல் 8.30 வரை அனைவருக்கும் படிக்கும் நேரம்.

படிக்கும் நேரத்திலும் அனைவரையும் கவனித்துக் கொள்ளவேண்டும். சரியாகக் காலை 8.30 மணிக்கு மணி அடித்து அனைவரையும் காலை உணவுக்கு அழைக்கவேண்டும். காலை

உணவு 8.30 முதல் 9.00 மணிக்குள் முடித்துப் பள்ளிக்குச் செல்வதற்கு அனைவரையும் ஆயத்தப்படுத்த வேண்டும். காலை 9.30 மணிக்குப் பள்ளி செல்வதற்கு வரிசையாக நிற்க வைத்துப் பள்ளிக்கு அழைத்துச் செல்ல வேண்டும். மத்தியானம் 1.00 மணிக்குப் பள்ளி முடிந்தவுடன் போர்டிங்க்கு திரும்ப அனைவரையும் வரிசையில் அமர்த்தி அழைத்து வரவேண்டும். பின்பு சரியாக மதியம் 2.00 மணிக்கு பள்ளியில் இருக்கச் செய்யவேண்டும். சாயங்காலம் 4.30 மணிக்குப் பள்ளி முடிந்தவுடன் வரிசையாக விடுதிக்கு அழைத்து வரவேண்டும். அதிலிருந்து மாலை 6.00 மணிவரை அனைவருக்கும் ஓய்வுநேரம் கொடுக்கப்படும். அந்த நேரத்தில் அவரவர் தம் விருப்பப்படி நேரத்தைச் செலவழிப்பார்கள். மாலை 6.00 மணிக்குச் சரியாக மணி அடித்து மாலைத்தியானத்திற்கு அழைக்கவேண்டும். மாலை 6.30 மணியிலிருந்து இரவு 8.00 மணிவரை படிக்கும் நேரம். இரவு 8.00 மணியிலிருந்து இரவு 8.30 வரை உணவு அருந்தும் நேரம். இரவு 8.30 முதல் இரவு 9.00 மணி வரை மாணவர்களின் விருப்ப வேலைகளைச் செய்யலாம். இரவு சரியாக 9.00 மணிக்கு அனைவரும் படுக்கைக்குச் செல்ல வேண்டும். விளக்கு அணைக்கப்பட வேண்டும். மேற்கண்ட வேலைகளை அனைத்தும் வாரநாட்களில் கிரமமாக ஒவ்வொரு நாளும் செய்யப்பட வேண்டும். இவைகளை நான் ஒவ்வொரு நாளும் கண்காணித்து செய்ய வேண்டும்.

ஞாயிற்றுக் கிழமைகளிலும் வழக்கமான காரியங்களை முடித்துக் காலைத் தியானம் முடித்து பிறகு காலை உணவுக்குப்பின்பு காலை 8.30 மணிக்கு மணி அடித்து வரிசையில் அமர்த்தி ஞாயிறு ஆலய வழிபாட்டுக்கு அழைத்துச் சென்று ஆராதனை முடிந்த பிறகு விடுதிக்கு வரிசையில் அழைத்து வரவேண்டும். விடுமுறை நாட்களில் இரண்டு வாரத்திற்கு ஒருமுறை மாலை 4.00 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை வெளியில் சென்றுவர மாணவர்கள் அனுமதிக்கப் படுவார்கள். வெளியில் சென்ற அனைவரும் மாலை 6.00 மணிக்குள் விடுதிக்கு வந்து சேர்ந்து விட்டார்களா என்று கண்காணித்து கவனித்து வருவது எனது பொறுப்பாகும். இவர்களில் குறிப்பிட்ட நேரத்திற்குப்பிந்தி வருபவர்கள் அடுத்த இரண்டு வாரங்களுக்கு வெளியில் செல்ல அனுமதிக்கப்பட

மாட்டார்கள். எங்கள் விடுதியானது அவ்வளவு ஒழுங்குக் கட்டுப்பாட்டோடு தினமும் நடந்து வரும். இவைகளை எல்லாம் தினமும் நான் செயல்பட்டு நடத்த வேண்டும். அப்படியானால் நான் எவ்வளவு சுறுசுறுப்பாகச் செயல்பட்டு மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும் பாருங்கள். இவை அனைத்துப்பணிகளையும் சிறப்புடன் செய்ய என் தேவன் எனக்குத் துணைநின்றார். மூன்றாம் ஆண்டிலும் நான் பள்ளி இறுதி வகுப்பு படிக்கும் பொழுதும் விடுதி மானிட்டராகப் பொறுப்பு தொடர்ந்து கொடுக்கப்பட்டது. கடந்த ஆண்டைப் போல வழக்கமான விடுதிப்பணிகளைச் செய்து வந்தேன். இந்த ஆண்டில் நடந்த பள்ளியின் மாணவர் தலைவர் தேர்தலில் நிற்க மாட்டேன் என்று இருந்த என்னை ஆசிரியர்கள் அனைவரும் கட்டாயப்படுத்தி மாணவத் தலைவனாக நிற்க வைத்துப் பெருத்த வாக்கு வித்தியாசங்களுடன் பள்ளியின் மாணவத் தலைவராகத் தேர்ந்து எடுத்தார்கள். பள்ளியின் மாணவத் தலைவன் பணிகளையும் சிறப்பாகச் செய்ய என் தேவன் எனக்கு வேண்டிய பலத்தையும், ஞானத்தையும் கொடுத்தார். என் தேவன் எனக்குப் பள்ளிப் பருவத்திலேயே பலப்பல பொறுப்புகளைக் கொடுத்து பிற்காலத்தில் திருச்சபைப் பணிகளையும், அரசுப்பணிகளையும், மிஷனரிப்பணிகளையும் திறம்படச் செய்ய என்னை உருவாக்கி இருக்கிறார் என்பதை இப்பொழுது உணர முடிகிறது.

காலம் தவறாமை :

நான் எனது வாழ்க்கையில் எந்தக் காரியத்தையும் ஜெபத்துடன்திட்டமிட்டுச்செயல்படுவேன். காலந்தவறாமையைக் கண்டிப்பாகக் கடைபிடித்து வருகிறேன். ஓர் இடத்திற்குச் செல்ல வேண்டுமானால் குறித்த நேரத்திற்கு அரைமணிநேரமாவது முன்னதாக அந்த இடத்தில் இருப்பேன். ஒரு கூட்டத்திற்கு அல்லது ஆராதனைகளில் செய்தி கொடுக்க ஒப்புக் கொண்டால் எந்தச் சூழ்நிலையிலும் ஒப்புக்கொண்டதை மாற்றிப் போடமாட்டேன். கூட்டங்களை ஏற்பாடு செய்தவர்களுக்குக் கடைசி நேரத்தில் எந்த தர்ம சங்கடங்களையும் உண்டாக்க மாட்டேன். இதே காலம் தவறாமையை எனது 40 ஆண்டுகால அரசுப்பணியிலும் 48 ஆண்டுகால இறைப்பணியிலும் நடைமுறைப்படுத்தி வருகின்றேன். உதாரணத்திற்குச் சொல்ல

வேண்டுமானால் 1998-ம் ஆண்டு ஜூன் மாதம் இரண்டாம் வாரத்தில் 3 நாள் இந்திய அருட்பணி இயக்கக் கூட்டங்களைத் தஞ்சையில் நடத்துவதற்கு ஒப்புக்கொண்டிருந்தேன். அந்த 3 நாட்களுக்கும் செய்தி கொடுப்பதற்குப் பாளையங்கோட்டையைச் சேர்ந்த சுவிசேஷகர் சகோதரர் சுசி பிரபாகரதாஸ் அவர்களை அழைத்து இருந்தோம். அவரும் மனம் உவந்து அந்த நாட்களில் வேறு கூட்டங்களுக்கு நேரம் கொடுக்காமல் தஞ்சைக்கு வருவதாக ஒப்புக் கொண்டார்கள். கூட்டங்களுக்கு நாட்கள் முடிவு செய்தாகிவிட்டது. ஆனால் கூட்டத்திற்கான இடம் முடிவாக வில்லை. ஆனால் இதற்கிடையில் 1998-ம் ஆண்டு ''மே மாதம் 27-ஆம் தேதி எனது மூத்த மகளுடைய 3 மகன்களும் திருச்சிக்கு அருகாமையில் உள்ள ''முக்கொம்பு'' என்ற ஊருக்குச் சென்ற இடத்தில் புதை மணலில் மூழ்கி மூவரும் ஒரே நாளில் இறந்து விட்டார்கள். அவர்கள் மூவரையும் தஞ்சைக்குக் கொண்டு வந்த மறுநாள் 28-ஆம் தேதி அடக்கம் செய்தோம். குடும்பம் முழுவதுமே மீளாத் துயரத்தில் ஆழ்ந்திருந்தது. அந்த சூழ்நிலையில் அடுத்த நாள் அதாவது 29.5.98-இல் தூய பேதுரு ஆலயத் தலைமைப் போதகர் மறைதிரு. குருமாணிக்கம் அவர்களை கூட்டங்கள் நடத்துவதற்காக இடத்தை நிச்சயம் செய்வதற்காகப் பார்க்கச் சென்றேன். அவர் என்னைக்கண்டதும் அதிர்ச்சியுற்றவராக இந்த நிலையில் உங்களால் எப்படி இங்கு வர முடிந்தது என்று கேட்டார். நான் சொன்னேன், ஐயா, நான் என் சுயபெலத்தோடு இங்கு வரவில்லை. நான் ஆராதிக்கிற, விசுவாசிக்கிற, ஊழியம் செய்கிற தேவாதி தேவனும், கர்த்தாதி கர்த்தருமாகிய இயேசுவின் பலத்தோடு இங்கு வந்திருக்கிறேன் என்று சொல்லி நான் வந்த நோக்கத்தை அவர்களிடம் விவரித்தேன். உடனே தூய பேதுரு ஆலயத்தையும், ஆலய வளாகத்தையும் மூன்று நாட்கள் அருட்பணி ஊழியங்களை நடத்திக்கொள்ள அனுமதி கொடுத்தார்கள். கூட்டங்களைக் கடவுளின் திட்டப்படி 3 நாட்களும் நடத்தி முடித்தோம். அநேக உள்ளங்கள் தொடப்பட்டது. மிஷனரி ஊழியம் விரிவடைந்தது. எந்த சூழ்நிலையிலும் திட்டமிட்டபடி அவரது பணியினைச் செய்ய தேவ ஒத்தாசை எனக்குக் கிடைத்தது.

கொடுத்த வாக்கு மாறாமை :

1999-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இந்திய அருட்பணி இயக்கத்தின் மாநிலக் கன்வென்ஷன் சென்னையில்

நடந்தது. எல்லா கூட்டங்களுக்கும் குடும்பமாகச் செல்லுவோம். எனது மனைவி சுகவீனமாக இருந்ததால் 3 நாள் கூட்டங்களுக்கு நான் மட்டும் சென்றிருந்தேன். அந்தச் சமயத்தில் இந்திய அருட்பணி இயக்கத்தின் இணைப் பொதுச் செயலாளர் திரு. ராஜா மோகன்தாஸ் அவர்கள் நுரையீரல் புற்றுநோயின் காரணமாக அதிகம் பாதிக்கப்பட்டு மரணப் படுக்கையில் இருந்தார்கள். அவரும் அவர் மனைவி செலினா மோகன்தாஸ் அவர்களும் அவர்கள் வகித்த பெரும் பதவிகளை ராஜினாமா செய்து விட்டு இந்திய அருட்பணி இயக்கத்தில் மிஷனரிகளாக இணைந்தவர்கள். உண்மையும் உத்தமுமான ஊழியக்காரர்கள். அவர்களுக்கு ஒரு மகளும், ஒரு மகனும் அப்பொழுது உயர் நிலைப் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தார்கள். அருமையான சகோதரருடைய மறைவினால் அவர்கள் இரண்டு பிள்ளை களுடைய கல்வி மற்றும் எதிர்காலம் எந்த விதத்திலும் பாதிக்கக் கூடாது என்று எண்ணினேன். சகோதரியும் அவர்களின் இரண்டு பிள்ளைகளும் சோகத்தோடு அருகில் உட்கார்ந்து இருந்தார்கள். மகள் தலைமாட்டுப்பக்கம் அமர்ந்து தனது தகப்பனார் வாயிலிருந்து வழியும் கோழைகளைத் துடைத்துக் கொண்டே இருந்தார். நான் அவர்களுக்காகப் பாரத்தோடும் கண்ணிரோடும் ஜெபித்துவிட்டு நேரே கன்வென்ஷன் நடக்கும் இடத்திற்கு வந்தேன். வேதத்தில் யாக் 2:17-இல் ''விசுவாசமும் கிரியை களில்லா திருந்தால் தன்னில் தானே செத்ததாயிருக்கும்'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை நன்கு உணர்ந்தவனாக அப்பொழுது இந்திய அருட்பணி இயக்கத்தின் மாநிலத் செயலராக இருந்த சகோதரர் ஜெயபால் சித்தரிடம் அருட்பணியாளர்களின் பிள்ளைகளின் கல்விக்கடன் நிதிக்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதி வழங்குவதாக வாக்குறுதி கொடுத்துவிட்டு வந்தேன். இந்தத் தொகை ஒரு இலட்சத்தையும் எனது மனைவி விருப்ப ஓய்வு பெற்றநிலையில் அதிலிருந்து கிடைக்கும் நிதிப்பயனிலிருந்து கொடுத்து விடலாம் என்று உறுதி கூறி வந்தேன். ஆனால் தமிழக அரசு ஒரு குறிப்பிட்ட காலங்களில் பணி ஓய்வு பெற்றவர்களுக்கு 20%, 20% மற்றும் 60% என மூன்று தவணைகளில் நிதிப்பயன் கொடுப்பதாக ஆணை பிறப்பித்து 20% மட்டும் தான் நிதிப்பயன் கிடைத்தது. கொடுத்த வாக்கை மாற்றாமல் நிறைவேற்றுவதற்காக வேறு நிதி ஆதாரங்களைச் சேகரித்து ஒரு இலட்சம் ரூபாயினை மரித்துப்போன எங்கள் 3

பேரப்பிள்ளைகளின் நினைவாக அருட்பணியாளர்களின் கல்விக்கடன் நிதிக்கு ரூபாய் ஒரு இலட்சத்திற்கு டிராப்ட் எடுத்து 10.4.1999 - இல் பெங்களூர் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தேன்.

அக்காளுக்கு உதவி :

நான் பள்ளி இறுதித்தேர்வு S.S.L.C. எழுதி முடித்துவிட்டு அணைக்காட்டில் உள்ள என் அக்காள் வீட்டிற்கு வந்தேன். என் அக்காவிற்குத் திருமணமாகி நாலைந்து ஆண்டுகளாகக் குழந்தை இல்லாமலிருந்தது. அதன் பிறகு கர்ப்பவதியாகியிருந்தார்கள். நான் அணைக்காடு வந்து சேர்ந்த சில நாட்களில் எனது அக்காவிற்குத் தலைப்பிரசவம் நெருங்கிக் கொண்டிருந்தது. அப்பொழுதெல்லாம் பெரும்பாலும் பிரசவத்திற்கு மருத்துவமனைக்குச் செல்ல மாட்டார்கள். தாய் வீட்டில் வைத்து முதல் பிரசவம் பார்ப்பார்கள். எங்களுக்குத் தாய்வீடு என்று ஒன்றும் இல்லாததால் வீட்டிலேயே வைத்துப் பிரசவம் பார்க்கத் தீர்மானித்தோம். பிரசவக்காலத்தில் சில நாட்கள் தங்கி என் அக்காவிற்கு உதவி செய்யப்பல நெருங்கிய உறவினர்கள் வீடுகளுக்குச் சென்று உதவி கேட்டேன். ஒவ்வொருவரும் ஒரு காரணத்தைச் சொல்லி உதவிக்கு வருவதற்கு உள்ள தங்கள் இயலாமையைக்குக் காரணம் சொன்னார்கள். அப்பொழுதுதான் நான் தாய் தகப்பன் இல்லாத குறையை அதிகமாக உணர்ந்தேன். கடைசியாக வயது முதிர்ந்த என்னை வளர்த்த சின்ன அப்பாயிடம் உதவி கேட்டேன். நான் கேட்டுக் கொண்டதால் அதைத்தட்ட முடியாமல் தனது தள்ளாத வயதில் வந்து என் அக்காவிற்கு உதவி செய்தார்கள். பிரசவம் பார்ப்பதற்கு ஒரு மருத்துவ அம்மாவை அழைத்து வந்தேன். அந்த அம்மா பிரசவம் பார்ப்பதில் மிகவும் திறமை மிக்கவர்கள். திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை என்பதற்கு ஏற்ப என் அக்காவிற்குச் சுகப்பிரசவம் ஆனது. ஓர் அழகான ஆண் குழந்தை பிறந்தது. அந்த நேரத்தில் எங்களது பெற்றோர் இல்லாத நிலையில் கடமையைச் செய்யத்தேவன் எனக்கு அருள் கூர்ந்ததற்காகத் தேவனுக்கு நன்றி கூறினேன். எனது அக்காளின் கணவரும் எங்களிடம் அன்பாக இருப்பார்கள். எங்களுக்கு அவர் அதிக ஆதரவாக இருந்தார்கள் என்பதும் இங்குக் குறிப்பிடவேண்டிய ஒன்றாகும்.

என் அக்காவின் கணவர் வீடு அணைக்காட்டிற்கு அருகாமையில் உள்ள காவல்காடு என்பதாகும். அந்த ஊர் முழுவதும் இவர்களுக்கு சொந்தமானதாகும். அவர்கள் வீட்டைச் சுற்றித் தென்னந்தோப்பு, பனந்தோப்பு வயல்கள், குளம், கிணறு முதலியவைகள் இருந்தன. செழிப்பாக இருந்த குடும்பம் காலக் கட்டத்தில் குறைவுபடத் தொடங்கியது. அவர்கள் கைகளின் கிரியைகளை தேவன் ஆசீர்வதிக்கவில்லை போலும். நானும் எனது அண்ணனும் எங்கள் அக்காள் குடும்பத்தை முன்னேற்ற எவ்வளவோ உதவிகளைச் செய்து பார்த்தோம். பண உதவிகள் செய்தோம். உழுவதற்கு ஒவ்வொரு ஆண்டும் உழவு மாடுகள் வாங்கிக் கொடுத்து வந்தோம். இந்நிலையில் எனது அக்காள் சுகவீனப்பட்டுத் தனது ஒரே மகனை விட்டுவிட்டு 3.4.1961-இல் மறுமைக்குச் சென்று விட்டார்கள். அக்காள் விட்டுச்சென்ற ஒரே மகனை நானும் எனது அண்ணனும் படிக்க வைத்து ஆளாக்கினோம். அவன் தனது வாழக்கையைத் தானே தெரிந்து கொண்டு பிரிந்து வாழ்ந்து வருகின்றான். எனது அக்காளின் கணவர் என் அக்காள் இறந்த சில ஆண்டுகளுக்குப்பிறகு இரண்டாவது திருமணம் செய்து கொண்டார். என் அக்கா இறந்த பிறகும் அவர்களும் எங்களோடு நல்ல ஐக்கியமாக இருந்து வந்தார்கள். இரண்டாம் தாரத்திற்கும் ஒரு மகன் பிறந்தான். அவன் படிப்பதற்கும் நானும் எனது அண்ணனும் இயன்ற உதவிகளைச் செய்தோம். எனது அக்காளின் கணவர் 21.4.1998-இல் இறந்து விட்டார்கள்.

6. பள்ளி மற்றும் விடுதி வாழ்க்கை

திருநெல்வேலி மாவட்டத்திற்கு எனது படிப்பிற்காகச் சென்ற பிறகு என்னுடைய வாழ்க்கையில் ஒரு பெரும் மாறுதல் ஏற்பட்டது என்று நான் முன்பே குறிப்பிட்டுள்ளபடி எனக்கு விடுதியில் பல பொறுப்புகளும், பள்ளியின் மாணவ மன்றத்தில் பல பொறுப்புகளும் கொடுத்துப் பிற்காலத்தில் அவருடைய பணியைச் செய்வதற்கு என் தேவன் என்னை அற்புதமாக வழிநடத்தினார். நான் விடுதியிலிருந்து விடுமுறையில் வரும் காலங்களில் எங்கள் ஆலயத்தில் போதகர் அல்லது உபதேசியார் இல்லாத சமயங்களில் ஆலய ஆராதனை களை நடத்த, தேவ செய்திகளைக் கொடுக்கத் தேவன் அதற்கான ஞானத்தைக் கொடுத்தார்.

நான் S.S.L.C. தேர்வின் முடிவு வருவதற்கு முன்பே இராணுவத்தில் சேர்ந்தேன். நான் ஒழுங்காக உடற்பயிற்சி செய்து வந்ததாலும் நல்ல விளையாட்டு வீரனாக இருந்ததினாலும் கடினமான இராணுவப் பயிற்சிகள் எனக்குக் கடினமாகத் தோன்றவில்லை. அனைத்து இராணுவ பயிற்சிகளையும் சுலபமாகச் செய்து முதல் நிலையில் தேர்வு பெற்றேன். முதலாம் ஆண்டு இராணுவப் பயிற்சி முடித்த ஒவ்வொருவருக்கும் வரையறுக்கப்பட்டபணி (Trade) பிரிவு ஒதுக்கீடு செய்வார்கள். எனக்கு நல்லப் பணிபிரிவு ஒதுக்கப்பட வில்லை. எனவே நான் 1 1/2 ஆண்டுகால இராணுவப் பணியிலிருந்து விலக வேண்டிய நிலை ஏற்பட்டது.

நான் இராணுவத்தில் இருந்த பொழுது 20.8. 1953-இல் எனது அண்ணனுக்கு இரண்டாவது திருமணம் நடந்தது. எனக்கு விடுமுறை கிடைக்காததால் நான் எனது அண்ணனின் இரண்டாவது திருமணத்திலும் கலந்து கொள்ளும் வாய்ப்பை இழந்தேன். இராணுவத்திலிருந்து விடுபட்டுத் தஞ்சை வந்த சில மாதங்களில் எனது அண்ணனுடன் பணியாற்றிய நண்பரின் சித்தப்பா மூலமாகக் கோவை மாவட்டத்திலுள்ள காங்கேயத்தின் அருகில் உள்ள பல்லவராயன்பாளையம் என்ற கிராமத்தில் கோயமுத்தூர் மாவட்ட போர்டு நிர்வாக அனுமதியுடன் ஆசிரியராக நியமிக்கப்பட்டேன். 1954-ம் ஆண்டு அந்தக் கிராமத்தில் 'ஓர் ஆசிரியர்' பள்ளியினை ஆரம்பித்து நடத்தி வந்தேன். ஆசிரியர் ஒருவர் ஆனால் வகுப்புகள் ஆறு. கடின உழைப்போடு அந்த 6 வகுப்புகளையும் நிர்வகித்து வந்தேன். அந்தக் கிராமத்தில் நான் தங்குவதற்கு அந்த ஊரின் காங்கேயம் கூட்டுறவு கைத்தறி உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் தனது வீட்டின் ஒரு அறையை எனக்கு வாடகை இல்லாமல் கொடுத்து உதவினார். பள்ளி நடத்துவதற்கும் அவருடைய இடத்தையே வாடகை இல்லாமல் தியாகத்தோடு கொடுத்து உதவினார். உள்ளூரில் பள்ளி இல்லாதிருந்ததால் அந்த ஊர்ப் பிள்ளைகள் அருகாமையில் உள்ள ஊர்களில் உள்ள பள்ளிகளில் படித்துக் கொண்டு வந்தார்கள். அந்தப் பிள்ளைகளுடைய வீடுகளுக்கு அடிக்கடி சென்று அவர்களின் பிள்ளைகளையும், பெற்றோரையும் சந்தித்து எல்லோரையும் உள்ளூர் பள்ளியில்

சேர்க்க அந்த ஆண்டிலேயே ஏற்பாடுகள் செய்து சேர்த்தேன். பள்ளியிலும் 100 பிள்ளைகள் வரை சேர்ந்தார்கள். பள்ளிவேலையும் அதிகம் இருந்தது. ஆனால் முழு ஆர்வத்துடன் செய்ய முடிந்தது. இரவு நேரங்களில் அக்கிராமத்திலுள்ள முதியோர் மற்றும் வாலிபர்களுக்கு இலவசமாகத் தமிழ், கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களைக் கற்றுக் கொடுத்து வந்தேன். அந்தக் கிராமத்தில் உள்ள அனைவருடைய அன்பையும் ஆதரவையும் பெற்று விட்டேன். அந்தக் கிராமத்தில் பெரும் பகுதியினர் வெள்ளாளகவுண்டர்கள். அவர்களில் சிலர் என்னிடம் வந்து தாழ்த்தப்பட்ட இனப் பிள்ளைகளைத் தனியாக பள்ளியில் உட்காரவைக்க வேண்டும். விளையாடவிடும் பொழுதும் எங்கள் பிள்ளைகளோடு சேர்த்து விளையாடவிடாமல் அவர்களைத் தனியே பிரித்து விளையாட விடவேண்டும் என்று என்னிடம் வற்புறுத்தினார்கள். நான் சிறுபிராயத்திலிருந்தே தீண்டாமையை எதிர்த்தவன், தீண்டாமையை ஒழிக்கப் போராடியவன். இதைக்கேட்டதும் அவர்களிடம் அமைதியாக பள்ளியில் பிள்ளைகளைத் தீண்டத்தகாதவர்கள் என்று பிரித்து நடத்துவது அரசாங்கத்திற்குத் தெரிய வந்தால் என் மீது நடவடிக்கை எடுப்பார்கள். நான் நீங்கள் சொல்லுவதுபோல் செய்ய இயலாது என்று சொன்னேன். அவர்கள் நான் சொன்னதைக் கேட்காமல் தொடர்ந்து இதை வலியுறுத்தி வந்தார்கள். நான் வழக்கம்போல் எல்லாப்பிள்ளைகளையும் ஒன்றாக உட்கார வைத்து ஒன்றாக விளையாடவைத்து வந்தேன். அவர்கள் சொல்வதை நான் கேட்கவில்லை என்று என் மீது கோபமடைந்தார்கள். தஞ்சாவூரிலிருந்து ஒருவன் இங்கு வந்து நாம் சொல்வதைக் கேட்காமல்நம் ஊரையே கலக்கிக் கொண்டு இருக்கிறான். அவனை ஒரு கைப்பார்த்து விட வேண்டும் என்று திட்டம் தீட்டிக் கொண்டிருந்தார்கள். இந்தச் செய்தி எனக்குத் தெரிய வந்தது. யார் எனக்கு விரோதமாகத் திட்டம் தீட்டினார்களோ அவர்களின் தலைவரைக் கூப்பிட்டு எச்சரிக்கைச் செய்தேன். நான் இந்த ஊரில் தனித்தவன். நான் இங்கு இறந்தால் எனக்காக ஒரு சொட்டு கண்ணீர் விடக்கூட ஒருவரும் இல்லை. ஆனால் எனக்கு விரோதமாக யார் வந்தாலும் குறைந்தது 100 பேராவது உயிர் இழக்க நேரிடும் என்பதை மறந்து விடவேண்டாம் என்று எச்சரித்து

அனுப்பினேன். இந்த தைரியம் எனக்கு எப்படி வந்தது என்றால் என் தேவன் என்னோடு இருக்கிறார். நல்லது செய்பவர்களுக்கு, அக்கிரமத்தின் கட்டுகளை அறுப்பவர்களுக்குத் தேவன் பாதுகாப்பாக இருப்பார். வேதத்தில் உனக்கு எதிராக வைக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போகும் என்று சொல்லப்பட்டிருக்கிறபடி எனக்கு விரோதமாக யார் எழும்பினாலும் என் தேவன் எனக்காக யுத்தம் பண்ணுவார் என்ற திடவிசுவாசம் எனக்கு இருந்ததுதான். அத்தோடு நல்ல வலிமையான உடல் வாகும், வலிமையையும் என் தேவன் எனக்குக் கொடுத்திருந்தார். அப்போது நான் 20 வயது நிரம்பிய வாலிபனாக இருந்தேன். திருமணமும் எனக்கு ஆகவில்லை. என்னைச் சார்ந்தவர்கள் யாரும் இல்லை. என்ன நேரிட்டாலும் சந்திக்கலாம் என்ற துணிவும் எனக்கு இருந்தது. எனவே அந்தக் கிராமத்தில் இரவு நேரங்களில் என்னைப்போல் ஒத்த வயதுள்ள வாலிபர்களைச் சேர்த்து அவர்களுக்கு குஸ்தி, சிலம்பம் போன்ற வீர விளையாட்டுக்களைக் கற்றுக் கொடுப்பேன். இவைகளைப் பார்த்ததும் அவ்லூர் மக்களுக்கு என்னைக்கண்டால் ஓர் அச்சம் இருப்பது தெரிந்தது. அங்கு துணிச்சலோடு 2 ஆண்டுகள் அந்த ஊரில் தங்கிச் சிறப்பாகப் பணிசெய்து பல மாணவர்களைக் காங்கேயத்தில் உள்ள உயர்நிலைப்பள்ளியில் நுழைவுத் தேர்வு எழுதி அதில் வெற்றி பெற்றுச் சேர்க்க முடிந்தது. இதற்காக அந்த ஊர் மக்கள் என்னைப் பாராட்டினார்கள். அந்த ஆண்டு கோடை விடுமுறைக்குப் பின் ஜுன் மாதத்தில் மீண்டும் அந்தப் பள்ளியில் பணியாற்றிக்கொண்டிருக்கும் பொழுது கால்நடை மருத்துவக்கல்வி, சுகாதார ஆய்வாளர் கல்வி, ஆசிரியப் பயிற்சிக் கல்வி ஆகிய பயிற்சி வகுப்புகளுக்கு விண்ணப்பித்திருந்தேன். மேற்கண்ட எல்லா பயிற்சிகளுக்குமே நேர் காணலுக்கு அழைப்பு வந்தது. ஆனால் எதிர்பாராத விதமாக நான் மனுச் செய்யாத பயிற்சி வகுப்புகள் ஆரம்பித்து ஒருமாத காலத்திற்குப் பிறகு தஞ்சையிலேயே கூட்டுறவு மேற்பார்வையாளர் பயிற்சியில் சேர இடம் கிடைத்தது. அந்தக் கூட்டுறவுப் பயிற்சியில் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகள், கிராமப் பொருளாதாரம், பேங்கிங், கூட்டுறவு பொது, கூட்டுறவு தணிக்கை ஆகிய பாடங்களைப்படித்தும் நேரடிப் பயிற்சியினையும் முடித்து பட்டயப்படிப்பை வெற்றிகரமாக முடித்தேன். அதிகார பூர்வமான தேர்வு முடிவு வெளியாகச் சற்று

முன்பாகவே தஞ்சாவூர் மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியில் சூப்பர்வைசர் வேலைக்கு முயற்சி செய்து வந்தேன். ஒவ்வொரு நாளும் நானே நேரடியாகச் சென்று கூட்டுறவு அதிகாரிகளையும், தலைவர், செயலாளர்களையும் சந்தித்து வேலை கிடைப்பதற்கான முயற்சிகளைச் செய்து வந்தேன். வேறு யார் சிபாரிசும் இல்லாமல் அடிக்கடி சென்று வேலைக்கு முயற்சி செய்ததையும் எனது சுறுசுறுப்பையும் கண்டு பரிட்சை முடிவு வந்தவுடன் எனக்கு வேலை கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கி வைத்திருந்தேன். கூட்டுறவு மேற்பார்வையாளர் பயிற்சி பெற்ற காலத்தில் பயிற்சிக் கல்லூரியில் விளையாட்டிலும் சிறந்து விளங்கினேன். அந்த ஆண்டு நடைபெற்ற விளையாட்டுப்போட்டிகளில் 100 மீட்டர், 200 மீட்டர் ஓட்டப்பந்தயங்களிலும், நீளம் தாண்டுதல், குண்டு எறிதல், ஈட்டி எரிதல் ஆகிய 5 போட்டிகளில் கலந்து கொண்டு 5 போட்டிகளிலும் முதல் பரிசான 5 பதக்கங்களையும் ஒட்டுமொத்த **Championship** -ஐம் பெற்று அதற்கான கோப்பையையும் பெற என் தேவன் எனக்கு உதவி செய்தார். எல்லாவற்றிலும் ஆதரவு அற்ற எனக்குச் சீக்கிரம் ஒரு நிலையான வேலை கிடைக்க என் தேவன் எனக்குத் தடைகளை அகற்றித் திறந்த வாசலை வைத்தார். தேர்வில் நல்ல முறையில் வெற்றி பெற்றேன். தஞ்சாவூர் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு வங்கி மேற்பார்வையாளர் பணிக்கு மனுச் செய்தேன். ஒரு மாத காலத்திற்குள் நேர் காணலுக்கு உத்தரவு வந்தது. நேர்காணலிலும் சிறந்த முறையில் கேள்விகளுக்கு பதிலளிக்க என் தேவன் எனக்கு உதவி செய்தார். நேர்காணலுக்குப் பிறகு மூன்றே நாட்களில் தஞ்சாவூர் மத்தியக் கூட்டுறவு வங்கியில் என்னைச் சூப்பர்வைசராக நியமனம் செய்து அதற்குரிய பிணை வைப்புத்தொகையினைச் செலுத்திவிட்டு உடன் பணியில் சேரும்படி உத்தரவு அனுப்பி இருந்தார்கள். நான் ஓராசிரியராகப் பணியாற்றிய காலத்தில் சிக்கனமாகச் செலவுகளைச் செய்து சேமித்து வைத்திருந்த தொகையிலிருந்து ஓராண்டு மேற்பார்வையாளர் பயிற்சியினை முடிக்கவும், வேலையில் சேருவதற்குப் பிணை வைப்புத்தொகை **(Security Deposit)** கட்டவும் என் தேவன் உதவி செய்தார். கூடிய வரையில் பண விஷயங்களில் யாருக்கும் அதிக கஷ்டத்தை உண்டு பண்ணாதபடி பார்த்துக் கொள்வேன். கடின உழைப்பால் முன்னேற விரும்புவேன்.

7. வேலை, திருமணம் மற்றும் மனைவியின் மாட்சிமை

தஞ்சைக் கூட்டுறவு மத்திய வங்கியில் மேற்பார்வையாளர் வேலை :

1958-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18-ஆம் நாள் அவ்வேலைக்கு உரிய பிணை வைப்புத்தொகையினைச் செலுத்தி மேற்பார்வையாளர் பணியில் சேருவதற்கு முன்பாக ஜெபித்து என் தேவனும் நானும் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டோம். அந்த உடன்படிக்கை என்னவென்றால் எனது பணியில் உண்மையும் உத்தமமாகவும் இருப்பேன். தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு இடம் கொடுக்கமாட்டேன். சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு, எளியவர்களுக்கு என்னால் முடிந்த அளவுக்குச் சேவை செய்வேன். எனக்குக் கிடைக்கின்ற மாத ஊதியத்தில் திருப்தியாக இருந்து, போதும் என்ற மனதுடன் வாழ்வேன். எந்த சூழ்நிலையிலும் கையூட்டை நான் வாங்காதபடி என்னைக் காத்துக்கொள்ளும் என்று ஜெபித்து, உடன்படிக்கை செய்து கொண்டோம். அந்த உடன்படிக்கையினை காத்து கொள்ள என் தேவன் இந்நாள் வரைக்கும் உதவி செய்து வருகிறார். என்னுடைய அரசுப்பணிக் காலத்திலும், திருச்சபைகளில் வகித்த பொறுப்புகளிலும், அருட்பணி ஊழியங்களிலும் இன்றைவரைக்கும் எனது உடன்படிக்கையினைக் காத்துக் கொள்ள என் தேவன் எனக்கு உதவி செய்து வருகிறார். 2 நாளா 31:10 -இன்படி இந்தக் காணிக்கையைக் கர்த்தருடைய ஆலயத்திற்குக் கொண்டுவரத் தொடங்கினது முதல் நாங்கள் சாப்பிட்டுத் திருப்தி அடைந்தோம். இன்னும் மிகச்சமும் இருக்கிறது. கர்த்தர் தம்முடைய ஜனத்தை ஆசீர்வதித்ததினால் இந்தத் திரட்சியான அம்பாரம் மீந்திருக்கிறது என்று சொல்லப்பட்ட வண்ணமாக எங்களுடைய வாழ்க்கையில் குறைவைக் காணவில்லை. ஒவ்வொரு மாதமும் மிச்சம் இருந்தது.

நான் தஞ்சாவூர் மத்தியக் கூட்டுறவு வங்கியில் மேற்பார்வையாளராக இருந்த காலத்தில் விவசாயிகளுக்கும், சிறுதொழில் முனைவோருக்கும், கால்நடை வளர்ப்போருக்கும் என் கையினால் கோடிக்கணக்கான தொகைகளைக் கடனாக வழங்கியிருக்கிறேன். எந்தக் கையூட்டும் வாங்கினதில்லை.

இதற்கு என் தேவனே எனக்குச் சாட்சி. என்னுடைய மேற்பார்வையாளர் பணியை மேல் அதிகாரிகள் பாராட்டும் வண்ணம் திறம்படச் செய்ய என் தேவன் என்னோடுகூட இருந்து, ஆலோசனைக் கர்த்தராக இருந்து என்னை வழிநடத்தினார். இவ்வளவு வேலைகளின் மத்தியிலும் என் தேவனுக்குக் கொடுக்கவேண்டிய நேரத்தை, காலத்தை, காணிக்கைகளைக் கொடுக்கத் தவறினதில்லை. மன நிறைவோடு, தைரியத்தோடு பணியினைச் செய்ய முடிந்தது.

திருமணம் :

நான் மேற்பார்வையாளர் பணியில் சேர்ந்து 1 1/2 ஆண்டில் அதாவது 1959-ஆம் ஆண்டு மே மாதம் 18-ஆம் நாள் திங்கட்கிழமை தஞ்சை (I.E.L.C.) நல்ல மேய்ப்பன் ஆலயத்தில் அதிக ஆரவாரம் இல்லாதபடி எங்கள் திருமணம் நடைபெற்றது. இந்தத் திருமணமும் ஒரு தனித்தன்மையோடு நடந்தது. பெண் வீட்டில் நான் எந்தவித பேரமோ வரதட்சணையோ வாங்க வில்லை. நான் சம்பாதித்த பணத்திலேயே செலவுகள் செய்து என் செலவிலேயே திருமணம் செய்து கொண்டேன்.

மனைவியின் மாட்சிமை :

தேவன் எனக்கு அவருக்கு பயந்த குணவதியான அழகான மனைவியைக் கொடுத்தார். எனது மனைவியைத் தேவன் எனக்கு அளித்தப் பரிசாகவே இன்றும் கருதுகிறேன். அதற்காக என் தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். எனது மனைவின் பெயர் திருமதி. ரெஜினா பாய் என்பதாகும். தாயின் அன்பே என்னவென்று அறியாத எனக்கு என்மீது அன்பைப் பொழிகின்ற, எல்லாரையும்விட என்னை உள்ளன்போடு நேசிக்கிற, பராமரிக்கின்ற, தெய்வ பக்தியுள்ள மனைவியைத் தேவன் எனக்குக் கொடுத்தார். என் மனைவி எனக்கு மனைவி மட்டும் அல்ல எனக்கு ஒரு அருமையான தோழியாகவும், சிநேகிதியாகவும், ஆலோசகராகவும், தாயாகவும், தளர்ந்த நேரங்களில் உற்சாகப் படுத்துபவராகவும் இருந்து வந்தார்.

என் அலுவலகப் பணிகளைத் திறம்படச் செய்யவும், பல பதவி உயர்வுகளைப் பெறுவதற்கும் எனக்கு உறுதுணையாகவும் இருந்தவர். அது மட்டுமல்ல நாங்கள்

இருவரும் இணைந்து திருச்சபையின் காரியங்கள், கல்லூரி மாணவர்கள் ஊழியங்கள், அருட்பணி ஊழியங்கள் ஆகியவை களைச் செய்து வந்தோம். எங்கு சென்றாலும் நாங்கள் இருவரு மாகத்தான் செல்லுவோம். குடும்பம் ஆன பிறகு பிள்ளைகளோடு குடும்பமாகச் செல்லுவோம். ஆலய ஆராதனைக்குச் செல்வது, ஜெபக் கூட்டங்களுக்குச் செல்வது எல்லாம் குடும்பமாகத்தான் செல்லுவோம். அன்பு, நேசம், பாசம் இவைகள் எல்லாம் எங்களது திருமணநாளில் எப்படி துவங்கினதோ அதேபோல் கடைசிவரை தொடர்ந்தது. தேவன் சன்னதியில் நாங்கள் இருவரும் அன்று கொடுத்த உறுதிமொழியை நிறைவேற்ற எங்கள் தேவன் எங்களுக்கு உதவி செய்து வந்தார். எங்கள் வாழ்விலும், தாழ்விலும், இன்பத்திலும், துன்பத்திலும், சுகத்திலும், சுகவீனத்திலும் ஒருவரை ஒருவர் தாங்கி வாழ வழிநடத்தி வந்தார். எனது மனைவியும் ஒரு தனியார் பள்ளியில் ஆசிரியையாக 36 ஆண்டுகள் சிறப்பாகப் பணிபுரிந்தவர். இருவரும் பணியாற்றுவதால் ஒருவருக்கொருவர் உதவியாகக் குடும்பக்காரியங்களைக் கவனித்துக் கொள்வோம். மாலை நேரங்களிலும் விடுமுறை நாட்களிலும் தவறாமல் இருவரும் தேவப் பணிக்குச் செல்லுவோம். எந்தக் காரியம் ஆனாலும் இருவரும் கலந்து பேசி ஆலோசித்துத் தேவ சித்தத்தின்படி செயல்படுவோம்.

எங்களுக்கு 3 பெண் பிள்ளைகளையும் ஒரு ஆண் மகனையும் தேவன் கொடுத்து எங்கள் இல்லற வாழ்க்கையை ஆசீர்வதித்தார். எங்கள் பிள்ளைகள் அனைவரையும் சிறு பிராயத்திலிருந்தே களங்கமில்லா திருவசனமாகிய ஞானப் பாலைப் பருகக் கொடுத்து இருவரும் வளர்த்தோம். பிள்ளை களுடைய சரீர வளர்ச்சிக்கு எவ்வளவு கவனம் எடுத்துக் கொண்டோமோ அதே அளவிற்கு பிள்ளைகளுடைய ஆன்மீக வளர்ச்சியிலும் கவனம் செலுத்தித் தேவனுக்கு ஏற்ற பிள்ளைகளாக, ஒழுக்கம் நிறைந்த பிள்ளைகளாக, நல்ல பண்பாளர்களாக வளர்க்கத் தேவன் எங்களுக்கு உதவி செய்தார்.

எங்களுக்கு புனிதவதி, மேரிகுணவதி, கிரேஸ் சுகுணவதி என்று தொடர்ந்து 3 பெண்பிள்ளைகள் பிறந்தார்கள். மூன்றாவது மகள் கிரேஸ் சுகுணவதி பிறந்த சமயத்தில் மூன்று

பேரும் பெண்பிள்ளைகளாகவே பிறந்து விட்டார்களே என்று என் மனைவிக்கு வருத்தமாய் போய்விட்டது. என்னைக் கண்டதும் அழ ஆரம்பித்து விட்டார்கள். நான் அவர்களை ஆறுதல் படுத்தினேன். நம்முடைய சக்திக்கு 5 பிள்ளைகள்வரை நல்லபடியாக வளர்த்து ஆளாக்க முடியும். தேவன் நமக்கு ஐந்து பிள்ளைகளையும் பெண்பிள்ளைகளாகக் கொடுத்தாலும் பரவாயில்லை. அவர்களைச் சந்தோஷமாக ஏற்றுக் கொள்வோம். அவர்களை நமது தேவனுக்கு ஏற்ற பிள்ளைகளாக வளர்ப்போம் என்று எனது மனைவியை ஆறுதல் படுத்தினேன். தேவன் எங்களுக்கு நான்காவதாக டேவிஸ் செல்வகுமார் என்ற ஆண்மகனைக் கொடுத்து ஆசீர்வதித்தார். நாங்கள் இருவரும் பிள்ளைகளை நன்கு படிக்க வைத்து முன்னேற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் அநாவசியமான செலவுகளைச் செய்யாமல் செய்ய வேண்டிய செலவுகளைச் செய்தும் செய்யவேண்டாத செலவுகளைத் தவிர்த்தும் கடன் ஏதும் வாங்காமல் குடும்பம் நடத்தினோம். இதில் எனக்கு எனது மனைவின் ஒத்துழைப்பு அதிகம் இருந்தது. நான் எனது மனைவிக்குத் தேவை அறிந்து அவ்வப்போது தேவையானவைகளை வாங்கிக் கொடுப்பேன். அந்நாட்களில் பேருந்தில் சென்றால் அதிக பணச்செலவும் நேரமும் வீணாகும் என்று கருதி முகாம் (Camp) செல்லும் பொழுது சைக்கிளில் ஒரு நாளைக்கு 40 மைல்களுக்கு மேலாக சென்று பணியினை முடித்து வருவேன். எனது மனைவியும் சீனியர் கிரேடு ஆசிரியர் பயிற்சி முடித்தவர்கள். அப்பொழுது அவர்களுக்கு நிரந்தர வேலை கிடைக்கவில்லை. லீவு இடங்களில் தான் அவ்வப்போது வேலை கிடைக்கும். நான் பணியாற்றி வரும் கூட்டுறவு மத்திய வங்கியின் செயலாளர் ஒரு உயர்நிலைப்பள்ளிக்கும் தாளாளராக இருந்து வந்தார். அவர் நடத்தும் கூட்டங்களுக்கு ஒழுங்கு படுத்துவதற்காக மத்திய வங்கியிலிருந்து என்னை அனுப்பி வைப்பார்கள். நான் எப்பொழுதுமே நல்ல முறையில் உடை அணிந்து செல்லுவேன். எப்போதும் பூட்ஸ் அணிந்து பணிக்குச் செல்வேன். எதிலும் காலம் தாழ்த்த மாட்டேன். கொடுக்கப்பட்ட கடமைகளைச் சரியாகப் பாராட்டும் விதத்தில் செய்து முடிப்பேன். காலம் தவறாமை எனது வாழ்க்கையில் ஒன்றிப் பிணைந்துவிட்டது. என்னுடைய இந்தச் செயல்கள் எனது செயலாளரை அதிகம் கவர்ந்துள்ளன. எந்தக் கடினமான வேலையையும் கொஞ்சமும்

சளைக்காமல் செய்வேன். எடுத்த வேலையை முடித்தால்தான் எனக்குத் தூக்கம் வரும். அவர் என்னிடத்திலே அன்பும் பாச உணர்வும் காட்டினார். ஒருநாள் அவர் என்னைப் பார்த்து உங்களுக்கு ஏதாவது உதவி நான் செய்ய வேண்டுமா என்று கேட்டார். நான் அவர்களிடம் ஒன்றும் இல்லை உங்கள் அன்பு, தயவு இருந்தால் போதும் என்று சொன்னேன். தயங்க வேண்டாம். தாராளமாக உதவி கேட்கலாம் என்றார். அப்பொழுது நான் அவரிடம் எனது மனைவி சீனியர் கிரேடு ஆசிரியர் பயிற்சி முடித்து இருக்கிறார்கள், சரியான வேலை கிடைக்கவில்லை என்று சொன்னேன். அவர் என்னிடம் தஞ்சையில் உள்ள வீரராகவா தொடக்கப்பள்ளியில் ஆசிரியர் பணியிடம் கேட்டுத் தன்னிடம் ஒரு மனு கொடுக்கும்படி சொன்னார். எனது மனைவியிடம் மனு பெற்றுத் தாளாளர் அவர்களிடம் கொடுத்தேன். மனு கொடுத்த அடுத்த நாளே எனது மனைவியைப் பணியில் உடன் சேரும்படி உத்தரவு அனுப்பினார். அன்றே பள்ளியில் சேர்ந்து அதே பள்ளியில் எனது மனைவி 36 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றினார்கள். அதே பள்ளியில் எனது மனவைிக்குத் தலைமை ஆசிரியை பதவி உயர்வு கிடைத்தது. நாங்கள் இருவரும் கல்லூரி மாணவர்கள் ஊழியம், இந்திய அருட்பணி இயக்கத்தின் மிஷனரி ஊழியம் ஆகியவைகளில் அதிகம் ஈடுபாடு கொண்டிருந்ததால் அடிக்கடி கூட்டங்களுக்கும், வெளியூர்களுக்கும் விடுப்பு போட்டுவிட்டுச் செல்ல வேண்டியிருந்ததால் தலைமையாசிரியர் பொறுப்பு ஊழியங்களுக்குத் தடையாக இருக்கும் என்று கருதி மாதம் ரூ.800/- வரை ஊதிய இழப்பு ஏற்பட்டாலும் பரவாயில்லை என்று கருதி தலைமை ஆசிரியர் பதவி உயர்வை வேண்டாம் என்று எழுதிக் கொடுத்து விட்டார்கள். அதை ஏற்றுக் கொண்டு எனது மனைவிக்கு அடுத்தபடியாக உள்ள ஆசிரியருக்குத் தலைமை ஆசிரியர் பணி வழங்கப்பட்டது.

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் நாங்களும் எங்கள் நான்கு பிள்ளைகளோடும் குடும்பமாக ஆலயத்திற்குச் செல்வதே ஒரு தனி அழகாக இருக்கும். சிலர் நாங்கள் குடும்பமாக வாராவாரம் செல்வதைப் பார்த்துக் கொண்டே இருப்பார்களாம். இதைப் பார்த்தவர்கள் சொல்ல எங்கள் காதுகளால் கேட்டிருக்கிறோம். எங்கள் பிள்ளைகளைச் சிறு பிராயத்திலிருந்தே தெய்வ பக்தி உள்ளவர்களாக வளர்த்ததால்

மாணவர் ஊழிய 3 நாட்கள் நடக்கும் முகாம்களுக்கு குடும்பமாகச் சென்று தங்கி வருவோம். என்ன வசதி குறைவுகள் இருந்தாலும் அவைகளைப் பொருட்படுத்தாமல் ஒவ்வொரு ஆண்டும் சென்று வருவோம். அதனால்தான் என்னவோ எனது மூன்றாவது மகள் கிரேஸ் கருணவதிக்கு முழுநேர மிஷனரி ஊழியத்திற்கு அழைப்பு கிடைத்தது போலும்.

தொடர்ந்து நாங்கள் திருச்சபை காரியங்களிலும் போதகருக்கு உதவி செய்வதும், ஆலய ஆராதனை நடத்துவதும் மிஷனரி ஊழியங்களைத் தாங்கி வருவதும் எங்களது தலையாயப்பணிகளாக இருந்தன. ஒவ்வொரு மாதமும் எங்கள் இருவரின் ஊதியத்தை வாங்கி வீட்டிற்கு வந்து ஜெபித்துத் தசம பாகத்தை ஆலயத்திற்கும் ஊழியத்திற்கும் தனியே எடுத்து வைத்துவிட்டுத்தான் மற்ற குடும்பச் செலவுகளைச் செய்வோம். தேவன் எங்கள் கைகளின் கிரியைகளை ஆசீர்வதித்தார். ஒவ்வொரு மாதமும் பணம் மிச்சம் இருக்கும். பணம் பற்றாக் குறையே ஏற்பட்டதில்லை.

8. அரசுப்பணியும் அருட்பணியும்

தமிழ்நாடு அரசுப்பணிக்கு தேர்வும் அழைப்பும் :

கூட்டுறவு நிறுவனங்களில் 5 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றினால் பட்டம் பெற்றவர்கள் எழுதக்கூடிய கூட்டுறவு ஆய்வாளர்களுக்கான தேர்வு எழுத அரசின் சலுகை இருந்தது. இந்தத் தேர்வு தமிழ்நாடு அரசுத் தேர்வாணைக்குழுவினால் நடத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மாநில அளவில் இத்தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. அதிகமான கூட்டுறவு ஆய்வாளர்கள் பணியில் இருந்ததால் இரண்டு மூன்று ஆண்டுகளாக இத்தேர்வு நடத்திக் கூட்டுறவு ஆய்வாளர்கள் தேர்வு செய்யப்படவில்லை. நான் கூட்டுறவு மத்திய வங்கியில் மேற்பார்வையாளராக 7-ஆவது ஆண்டு பணியாற்றிக் கொண்டிருந்த பொழுது தமிழ்நாடு தேர்வாணைக்குழுவினால் கூட்டுறவு ஆய்வாளர்கள் எழுத்துத் தேர்வுக்கு மனுக்கள் கோரப்பட்டன. வட தமிழக மாவட்டகளுக்கு 40 இடங்களும் தென்தமிழக மாவட்டங்களுக்கு 40 இடங்களும் கூடுதல் 80 இடங்களுக்குக் கோரப்பட்டது. இதில் ஆதி திராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மலைவாழ்

மக்கள் ஆகியவர்களுக்கு ஒதுக்கப்பட்டது. போக 8 இடங்கள் மட்டுமே பொதுப் போட்டியாளர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தன. இந்த எழுத்துத் தேர்வுக்கு எம்.ஏ., பி.ஏ., பி.காம்., படித்தவர்கள் பெரும் பகுதியினர் எழுதினார்கள். எஸ்.எஸ்.எல்.சி. படித்த நானும் ஜெபித்து தேவபலத்தோடு மேற்கண்ட எழுத்துத்தேர்வுப் போட்டிக்கு ஆயத்தப்பட்டு, போட்டித் தேர்வு எழுதினேன். மாநில அளவில் எழுத்துத் தேர்வில் தேவனுடைய கிருபையினால் எனக்கு வெற்றி கிடைத்தது. நேர்காணல் தேர்வுக்குச் சென்னைக்கு அழைக்கப்பட்டேன். விளையாட்டுப் போட்டிகளில் நான் பெற்ற அனைத்துச் சான்றிதழ்களையும், பதக்கங்களையும் உடன் எடுத்துச் சென்று நேர்காணல் காண்பவர்களிடம் காண்பித்தேன். அவர்கள் கேட்ட கேள்விகளுக்குத் தெளிவான பதில்களைச் சொல்ல என் தேவன் உதவி செய்தார். தஞ்சையிலிருந்து நானும் எனது நண்பர் திரு. துரைசாமி என்பவரும் நேர்காணலுக்கு முதல்நாள் இரவு சென்னை சென்று அவரது தம்பியின் வீட்டில் தங்கியிருந்தோம். எனக்கு மறுநாள் காலை நேர்காணல் தேர்வு எனது நண்பருக்கு அதற்கு அடுத்த நாள் நேர்காணல் தேர்வு. இதற்கு இடையில் அன்று இரவு 12 மணியிருக்கும் தஞ்சையில் திரு, துரைசாமி அவர்களுடைய தகப்பனார் இறந்து விட்டார்கள் என்று அவசரத் தந்தி வந்தது. திரு. துரைசாமி அவரது தகப்பனாருக்கு மூத்த மகன் ஆவார்கள். திரு. துரைசாமிக்கு 32 வயது முடிவடையும் நிலையில் இருந்தார். இந்தத் தருணத்தை விட்டால் அவர் என்றுமே கூட்டுறவு ஆய்வாளர் ஆக முடியாது. ஆய்வாளர் தேர்வு எழுதுவதற்கு 32-க்குள் வயது இருக்க வேண்டும். அவர் உடனே சோகத்துடன் நேர்காணல் தேர்வில் கலந்து கொள்ளாமல் தஞ்சை திரும்ப ஆய்த்தப்பட்டார். நான் அவருக்கு ஒரு ஆலோசனை கொடுத்தேன். மறுநாள் எனக்கு மட்டும் நேர்காணல் தேர்வு இருந்தது. நான் அவரிடம் சொன்னேன் காலையில் நாம் இருவரும் முன்னதாக சென்று தேர்வாணைக்குழு தலைவரைச் சந்தித்து உங்கள் தகப்பனார் காலமானதையும், அவசரத்தந்தி வந்ததையும் அவரிடம் காண்பித்து நேர்காணல் மறுநாள் உள்ளதை இன்று காலையிலேயே வைத்துக் கொள்ளும்படி நான் கேட்கிறேன். தேர்வாணைக் குழுத் தலைவர் ஒத்துக் கொண்டால் சரி. இல்லாவிட்டால் நீங்கள் தஞ்சை சென்று விடலாம். எப்படியும் உங்கள் அப்பாவின் இறுதிக் கூட்டத்திற்கு அழைத்துச் சென்று விடுவேன்

என்று கூறித் துணிச்சலோடு காலையில் கடைசி முயற்சி செய்து பார்ப்போம் என்று அவரையும் அழைத்துக் கொண்டு சென்று தேர்வாணைக்குழுத்தலைவரைச் சந்தித்து அவரிடம் விபரங்களைக் கூறினேன். இந்தத் தருணத்தை அவர் விட்டு விட்டால் அவர் வாழ்நாளில் என்றுமே கூட்டுறவு ஆய்வாளர் ஆக முடியாது இந்த ஆண்டோடு அதற்குக் குறிப்பிட்ட வயது அவருக்கு முடிகிறது என்று தெளிவாக அவரிடம் எடுத்துச் சொன்னேன். என்ன ஆச்சரியம் நான் சொன்னவைகளை ஏற்றுக்கொண்டு எனக்கும் அவருக்கும் அன்று காலையில் முதலில் நேர்காணல் தேர்வு வைத்து அனுப்பிவிட்டார்கள். நாங்கள் இருவரும் உடனே தஞ்சைக்குப் பஸ் ஏறி அன்று மாலை 5.00 மணிக்குள் தஞ்சை வந்து அவரது தகப்பனாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டோம். நேர் காணல் முடிந்த ஒரு மாதத்தில் எங்கள் இருவருக்கும் கூட்டுறவு ஆய்வாளர் பணி நியமன ஆணை கிடைத்தது. அவர் இன்றும் சொல்லிக் கொண்டிருப்பார். உங்களால் தான் நான் இன்று தேர்வு நிலைக் கூட்டுறவுச் சார்பதிவாளராக ஓய்வுபெற முடிந்தது என்று கூறுவார். எனக்கு வருகிற எல்லா மேன்மையையும் என் தேவனுக்கே உரித்தாகட்டும் என்பேன். ஏற்ற சமயத்தில் மற்றவர்களுக்கு உதவுவதற்கும் அது தொடர்பாகத் துரித நடவடிக்கை மேற்கொள்வதற்கும் என்தேவன் எனக்குத் தொடர்ந்து உதவி செய்து வருகிறார்.

எனக்குக் கூட்டுறவு இளநிலை ஆய்வாளராகத் தஞ்சைக்கு அருகாமையில் உள்ள கும்பகோணம் சரகத்தில் சேரும்படி பணி நியமன ஆணை கிடைத்தது. 28.2.1965 பிற்பகலில் கூட்டுறவு மேற்பார்வையாளர் வேலையை இராஜினாமா செய்து விட்டு 1.3.1965 முற்பகலில் கூட்டுறவு இளநிலை ஆய்வாளராகத் தமிழக அரசுப் பணியில் சேர்ந்தேன். ஏற்கனவே நான் முதுநிலை ஆய்வாளர் ஆவதற்கான தேர்வுகளை எழுதி வெற்றிப் பெற்றிருந்ததால் 30.10.1968-இலிருந்து முதுநிலை ஆய்வாளராகப் பதவி உயர்வு கொடுத்துச் சேலம் மாவட்டத்திற்கு மாற்றுதல் செய்தார்கள். எனது மனைவி தஞ்சையில் தனியார் பள்ளியில் ஆசிரியையாக பணி புரிந்ததால் அவர்கள் சேலத்திற்கு மாறுதல் பெற்றுச் செல்ல இயலாது. எனவே தஞ்சைக்கு மாற்றுதல் செய்து தரும்படி ஜெபத்துடன்

மனு செய்தேன். அதை ஏற்று எனக்குத் தஞ்சாவூர் சரகத்திற்கே மாற்றல் கிடைத்தது.

இந்த நாட்களில் திருச்சபைக் காரியங்களில் அதிக ஈடுபாடும், கல்லூரி, மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் ஊழியத்திலும் அதிகமாகச் செயல்படத் தொடங்கினோம். அப்பொழுது சுவிசேஷகர் திரு. ஒய். பிரகாஷ் ஏசுவடியான் அவர்களின் சகோரதர் திரு. ஒய். தங்கபோஸ் அவர்களும் அவர்களின் மனைவி திருமதி. ஷீலாபோஸ் அவர்களும் கல்லூரி மாணவர்கள் ஊழியத்தில் நாங்கள் அதிகமாக ஈடுபடவும் கல்லூரி மாணவர்களைக் கிறிஸ்துவுக்குள் வழி நடத்தத் தஞ்சாவூர், கும்பகோணம், திருவாரூர், நாகப்பட்டிணம், அதிராம்பட்டிணம் போன்ற பல கல்லூரிகளுக்குச் செல்லவும், ஜெபக்குழுக்களை நடத்தவும், ஊழியப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளவும் எங்களை அதிகமாக வழி நடத்தினார்கள். அவர்கள் எங்கள் மீது காட்டிய அன்பையும், ஊழியங்களில் உற்சாகப் படுத்தினதையும், வேதாகம வகுப்புகளை நடத்தக் கொடுத்த பயிற்சிகளையும் எங்களால் அவர்களை மறக்க முடியாது. எப்பொழுதும் அவர்கள் எங்கள் நினைவில் இருக்கிறார்கள். அப்பொழுது திரு. நல்லராஜ் எட்வர்டு மற்றும் அவரது மனைவி திருமதி. கிரேஸ் நல்லராஜ் அவர்களும் பாடல்கள் மூலமாகக் கல்லூரி மாணவர்கள் ஊழியத்தை உற்சாகமாக நடத்தி வந்தார்கள். சகோ. தங்கபோஸ்அவர்கள் தனது பணியின் நிமித்தமாகப் பூனேக்கு மாற்றலாகிச் சென்ற பொழுது அவரது பொறுப்பினை ஏற்றுச் செய்ய கல்லூரி மாணவ ஊழியத்தின் பொறுப்புகளை என்னிடமும் சகோ. நல்லராஜ் எட்வர்டு அவர்களிடமும் கொடுத்துச் சென்றார்கள். இந்த இயக்கத்தின் தஞ்சை மாவட்ட மிஷனரிப்பணிச் செயலாளராக 3 ஆண்டுகள் பணியாற்றினேன். இந்த இயக்கத்தின் தஞ்சை மாவட்டத் தலைவராகவும் 3 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றினேன். இந்த நாட்களில் நானும் எனது மனைவியும் கல்லூரி மாணவர்களைச் சந்திப்பது அவர்களுக்காக ஜெபக்குழுக்களை நடத்துவது, மருத்துவ மனைகளுக்குச் சென்று நோயாளிகளைச் சந்திப்பது, பிரச்சனை உள்ள குடும்பங்களைச் சந்தித்து அவர்களுக்கு நல் ஆலோசனை வழங்குவது போன்ற ஊழியங்களைச் செய்து வந்தோம்.

9. அரசு ஊழியர்கள் அருட்பணி ஊழியம் செய்ய முடியுமா?

இந்திய அருட்பணி இயக்கத்தில் ஈடுபாடு :

1973-ஆம் ஆண்டு மத்தியில் இந்திய அருட்பணி இயக்கத்தைத் தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் அறிமுகப்படுத்தி இவ்வூழியத்தை அர்ப்பணிப் போடுச் செய்யக் கூடிய கடவுளுடைய மனிதர்களைத் தேடிக் கண்டு பிடிப்பதற்காக இந்திய அருட்பணி இயக்கத்தின் அப்போதைய மாநிலச் செயலாளராக இருந்த திரு.ஜி. சசிகுமார் அவர்களும் இவ்வியக்கத்தின் மத்திய செயலாளராக இருந்த திரு. பி.எஸ். தாமஸ் அவர்களும் தஞ்சையில் முகாமிட்டு மிஷனரிக் கூட்டங்களை நடத்தினார்கள். இவ்வூழியத்தைப் பொறுப் பேற்று நடத்தச் சரியான ஆட்களையும் தேடிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவர்கள் திரு.தங்கபோஸ் அவர்களைச் சந்தித்து ஆலோசனை கேட்டிருக்கிறார்கள். அவர் என்னைத் தொடர்பு கொள்ளும்படியும் அவர்தான் இந்த ஊழியத்திற்குச் சரியான நபர் என்றும் ஆலோசனை கொடுத்திருக்கிறார். நாங்களும் அந்த மிஷனரிக்கூட்டங்களுக்கு அழைக்கப்பட்டிருந்தோம். அங்குக் குடும்பமாகச் சென்றிருந்தோம். திரு. சசிகுமார் அவர்களும் திரு. பி.எஸ். தாமஸ் அவர்களும் என்னைச் சந்தித்து அருட்பணி ஊழியம் சம்பந்தமான காரியங்களை விவரித்து, இந்த ஊழியத்தைத் தாங்க, உதவி செய்ய அழைத்தார்கள். நாங்கள் ஜெபித்து யோசனை செய்து நாளைக்கு முடிவு சொல்லுகிறோம் என்று கூறி வீட்டிற்குத் திரும்பினோம். அவ்விதமாக நாங்கள் ஜெபித்தபொழுது அருட்பணி ஊழியத்தை முன் நின்று தாங்குவதற்கு தேவனால் ஏவப்பட்டோம். அடுத்தநாள் கூட்டத்திலும் குடும்பமாக கலந்து கொண்டோம். கூட்ட முடிவில் அருட்பணி ஊழியத்திற்கு உதவி செய்ய ஒப்புக்கொண்டோம். அந்த நாட்களில் நானும், சகோ. சசிகுமாரும் சைக்கிளில் பல இடங்களுக்குச் சென்று அருட்பணி ஊழியத்தை விரிவு படுத்தினோம். அந்நாட்களில் இந்திய அருட்பணி ஊழியம் இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் பரவுவதற்கு திரு.சசிகுமார், திரு. ஐசக் ஜேசுதாஸன் ஆகியோரின் அயராத உழைப்பினை யாரும் மறக்க முடியாது. பின்நாட்களில் சகோ. ஜான்ரோஸ் குடும்பமாகத் தஞ்சையில் தங்கியிருந்து என்னுடன்

இணைந்து ஊழியம் செய்தார்கள். அவர்கள் மூலமாகவும் அருட்பணித் தரிசனம் தஞ்சையில் வளர்ந்தது. 1974-ம் ஆண்டு முதல் தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களுக்குப் பொறுப்பாக இருந்து செயல்பட்டு வருகின்றோம். மேற்கண்ட மாவட்டங்களில் உள்ள திருச்சபை களையும் குடும்பங்களையும் சந்தித்து இவ்வூழியம் சம்பந்தமான கைப்பிரதிகளைக் கொடுத்து இவ்வூழியத்தை அறிமுகப்படுத்தி வந்தோம். திருச்சபைகளில் ஞாயிறு ஆராதனைகளில் மிஷனரி அறைகூவல் செய்திகளைக் கொடுத்து மிஷனரி தரிசனங்களை ஏற்படுத்தி வந்தோம். ஆராதனை முடிந்த பிறகு அப்பகுதியிலுள்ள குடும்பங்களைச் சந்தித்துக் கைப்பிரதிகளைக் கொடுத்து ஜெபித்து வருவோம். அநேகர் இவ் ஊழியத்தைத் தாங்க முன்வந்தார்கள். அருட்பணியாளர்களளுக்காக ஜெபிக்கக் கூடிய ஜெபக்குழுக்களை ஆங்காங்கே ஏற்படுத்தி ஜெபக் குழுக்களை நடத்தி வந்தோம். ஊழியர்களைத் தாங்குவதற்கான நிதி ஆதாரங்களையும் ஒவ்வொரு மாதமும் சேகரித்து அனுப்பி வருகிறோம். இந்தப்பணிகளை நானும், எனது மனைவி, பிள்ளைகள் அனைவரும் சேர்ந்து செய்து வருகிறோம். ஆங்காங்கே இந்த ஊழியத்தின் பொறுப்புக்களை ஏற்று நடத்த ஆர்வமுள்ள புதிய வட்டாரச் செயலர்களையும், ஒருங்கிணைப் பாளர்களையும், ஊழியர்களைத் தாங்கும் தனிக்குடும்பங் களையும், பலகுடும்பங்களாகச் சேர்ந்து அருட்பணியாளர்களை தாங்கும் குடும்பங்களையும் கண்டுபிடித்து அறிமுகப்படுத்தி வருகின்றோம். அருட்பணியாளர்களாகச் செல்ல விரும்பும் ஆர்வமிக்க அர்ப்பணிக்கப்பட்டவர்களை அருட்பணியாளர்களக ஏற்கச் சிபாரிசும் செய்து வருகின்றோம். இவ்வூழியத்தின் பொறுப்புக்களை 1974-ஆம் ஆண்டில் ஜூன் மாதத்தில் ஏற்ற சமயத்தில் ரூ. 30/- எங்கள் குடும்பத்திலிருந்து அனுப்ப என் தேவன் உதவி செய்தார். அற்பமான ஆரம்பத்தை அசட்டை செய்யாத தேவன் அது படிப்படியாக உயர்ந்து மாதம் ரூ.20,000/ - லிருந்து 25,000/- வரை ஊழியத்திற்கு நிதி சேகரித்து அனுப்ப உதவி செய்து வருகிறார்.

1984-ஆம் ஆண்டிலிருந்து கிழக்குத் தமிழகத்திற்குக் கவுரவச் சபைத்தொடர்பு இணைச் செயலாளராகவும் இருந்து பணியாற்றி வருகின்றேன். எனது பொறுப்புள்ள அரசாங்கப்

பணியோடு அருட்பணியினையும் சிறப்பாகச் செய்ய என் தேவன் எனக்குப் போதுமானவராக இருந்து வருகிறார். எனது மனைவி ரெஜினா அருள்தாஸ் அவர்களும் 1981-ஆம் ஆண்டிலிருந்து இந்த அருட்பணி இயக்கத்தில் வட்டார செயலாளராக இருந்து இவ் ஊழியத்தைத் தாங்கி வந்தார்கள். 1992-ஆம் ஆண்டிலிருந்து எனது மனைவி இந்திய அருட்பணி இயக்கத்தின் கவுரவ வட்டார ஒருங்கிணைப்பாளராக இருந்து எனக்கு உதவியாகச் செயல்பட்டு வந்தார்கள். நான் இந்திய அருட்பணி இயக்கத்தில் 1984-லிருந்து 1987 முடிய 3 ஆண்டுகள் ஆட்சிக்குழு **(Board)** மற்றும் பொதுக்குழு **(Society)** உறுப்பினராக இருந்து சிறப்பாகப் பணியாற்ற ஆண்டவர் எனக்கு உதவி செய்தார்.

இந்திய அருட்பணி இயக்கத்தின் ஸ்தாபகரும் பொதுச் செயலாளருமாயிருந்த போதகர் அறிவர். தியோடர் வில்லியஸ் அவர்கள் தொடர்ந்து என்னை முழுநேர ஊழியத்திற்கு அழைத்துக் கொண்டே இருந்தார்கள். முதலில் இந்திய அருட்பணி இயக்கத்தின் தமிழ்நாடு செயலாளராகப் பொறுப்பேற்க அழைத்தார்கள். அதன் பிறகு இவ்வியக்கத்தின் நிதிச்செயலாளர் **(Finance Secratary)** பொறுப்பை ஏற்க அழைத்தார்கள். நானும் முழுநேரப்பணியில் சேருவதற்கு எனது அரசுப்பணியை ராஜினாமா செய்வது தொடர்பாக எனது மனைவியுடனும் பிள்ளைகளுடனும் கலந்து ஆலோசித்தேன். நான் செய்யப்போவது இராஜாதி இராஜாவினுடைய பணி. இவ்வுலகப்பிரகாரமான அரசுப்பணியைவிட மேலானது. நம் பிள்ளைகளுடைய எதிர்காலத்தைத் தேவன் பார்த்துக் கொள்வார் என்று என் குடும்பத்தினரைத் திடப்படுத்தினேன். எனது மனைவியும் பிள்ளைகளும் நான் முழுநேர மிஷனரிப்பணிக்குச் செல்வதை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டனர். நானும் எனது அரசாங்க வேலையை இராஜினாமா செய்ய எழுதிவைத்த கடிதத்துடன் என் தேவனுடைய அழைப்பிற்காக என் குடும்பத்தினருடன் உபவாச ஜெபத்தில் காத்திருந்தோம். தேவனே! நீர் என்னை முழுநேர ஊழியத்திற்கு அழைக்கிறீரா என்பதை எனக்குத் தெளிவாக உணர்த்தும் என்று கெஞ்சி மன்றாடினோம். ஆனால் முழுநேர ஊழியத்திற்குத் தேவனுடைய தெளிவான வழிநடத்துதல் எனக்குக் கிடைக்கவில்லை அதற்கு

என்ன காரணம் என்று எனக்குத் திட்டமாகத் தெரியவில்லை. எனினும் முழுநேர ஊழியத்திற்குச் சென்றிருந்தால் நான் ஒருவன் மட்டும் சென்றிருப்பேன். ஆனால் இன்று எங்கள் ஊழியத்தின் பயனாக 10 மிஷனரி குடும்பங்களைத் தாங்குவதற்கு என் தேவன் உதவி செய்து வருகிறார். இதனால் தேவன் என்னை முழுநேர ஊழியத்திற்குச் செல்லத்தடை செய்து இருக்கலாம் என்று உணருகிறேன். அதன் பிறகு நான் அடிக்கடி நோய்வாய்ப் பட்டிருந்தேன். அதனாலும் தடை செய்யப்பட்டிருக்கலாம் என்று இன்று உணர்கிறேன்.

10. மிஷனரி பணித்தளங்களைப் பார்வையிடச் சென்றது

முன்பெல்லாம் ஜனவரி மாதத்தில் ஒன்று அல்லது இரண்டு நாட்கள் தற்செயல்விடுப்பு எடுத்தால் சேர்ந்தால்போல் 10 நாட்கள் விடுமுறை கிடைக்கும். அப்பொழுதெல்லாம் மிஷனரி பணித்தளங்களைப்போய்ப் பார்த்துவரவேண்டும் என்ற ஆவல் எங்களுக்கு இருந்தது. மிஷனரி ஊழியங்களுக்காக நிதி ஆதாரங்கனள சேகரித்து அனுப்பி வந்தோம். அங்கு ஊழியங்கள் எவ்விதம் நடைபெறுகிறது? ஊழியர்கள் எப்படி யெல்லாம் ஊழியம் செய்கிறார்கள்? பணித்தளங்களில் உள்ள தேவைகள் என்ன? மிஷனரிகள் பல நூறுமைமல்களுக்கு அப்பால் தன் பெற்றோர்களைப் பிரிந்து, உற்றார் உறவினர்களைப் பிரிந்து, பிள்ளைகளைப் பிரிந்து இனம் தெரியாத, மொழி தெரியாத இடங்களில் உள்ள மிஷனரிகளை, புதிய விசுவாசிகளைச் சந்தித்து அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும் என்ற ஆவல் எங்கள் உள்ளங்களில் இருந்தது. ''உங்கள் இருதயத்தின் வாஞ்சைகளையெல்லாம் நிறைவேற்றுவேன்'' என்ற வேத வசனத்திற்கு ஏற்ப மிஷனரி பணித்தளங்களைச் சென்று பார்வையிட்டு திரும்புவதற்கான திறந்த வாசலை எங்கள் தேவன் எங்களுக்குக் கொடுத்தார்.

குஜராத் மிஷனரி பணிக்களப் பயணம் :

முதன்முதலாக வடகுஜராத் மாநிலத்தில் உள்ள பாரூச் என்ற இடத்தில் நர்மதா நதிக்கரையில் அமைந்துள்ள இந்திய அருட்பணி இயக்கத்தின் தேசீய கன்வென்ஷனில் கலந்து கொள்வதற்காக 1979-ம் ஆண்டு ஜனவரி நடைபெற்ற

திங்கள் 10-ம் நாள் நான் தஞ்சையிலிருந்து புறப்பட்டு பெங்களூர், சென்னை ஆகிய இடங்களிலிருந்து வந்த குழுவினருடன் நானும் சேர்ந்து பாரூச் சென்று 3 நாட்கள் தேசிய கன்வென்ஷனில் கலந்துகொண்டுவிட்டு அங்கிருந்து குழுவாக மிஷனரி பணித்தளங்களைப் பார்வையிட புறப்பட்டோம். வட குஜராத் மாநிலத்திலுள்ள பனாஸ்கந்தா மாவட்டத்திலுள்ள தாந்தா (Danta) என்ற பணிக்களத்திற்கு சென்றோம். அங்கு அதே மாநிலத்தைச் சேர்ந்த மார்வாடி இனத்தைச் சேர்ந்த டாக்டர் வினோத்ஷாவும் அவருடைய மனைவி டாக்டர் சாலினி ஷாவும் அங்கு மிஷனரி மருத்துவமனையினை ஆரம்பித்து மருத்துவம் மற்றும் நற்செய்திப் பணியாற்றிக் கொண்டிருந்தனர். அவர்கள் இருவரும் வெல்லூர் மருத்துவக் கல்லூரியில் மருத்துவப் பட்டப்படிப்புப் படித்துக் கொண்டிருந்த பொழுது இயேசுவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்கள். அவர் எம்.எஸ் மருத்துவப்பட்டம் பெற்ற ஒரு நல்ல அறுவை சிகிச்சை நிபுணர். அவருடைய மனைவி எம்.பி.பி.எஸ். முடித்தவர்கள். அவர்கள் இருவரும் அரசாங்கத்தில் பணியாற்றினால் ஒவ்வொரு மாதமும் பல ஆயிரம் ரூபாய்களைச் சம்பாதித்திருக்க முடியும். ஆனால் அவர்கள் உள்ளத்தில் உள்ள பாரம் என்னவென்றால் தன் மாநிலத்தில் உள்ள மக்களுக்கு இயேசுவை அறிவிக்கவேண்டும் என்பதாகும். நானும் நற்செய்தி மாணவர் ஊழியத்தில் ஈடுபட்டிருந்ததால் 1970-ம் ஆண்டிலிருந்து டாக்டர் வினோத் ஷாவை நன்கு அறிவேன். அவர்கள் காலை நேரத்தில் மருத்துவ ஊழியமும் மாலை நேரங்களில் அருகில் உள்ள கிராமங்களுக்குச் சென்று நற்செய்திப் பணியாற்றி வந்தார்கள். அவர்களோடு ஒரு நற்செய்திக் குழுவும் பணியாற்றிக் கொண்டிருந்தனர். அவர்கள் பீல், குக்னா ஆகிய ஆதிவாசி மக்களுக்கும் மார்வாடி இனத்தைச் சேர்ந்த மக்களுக்கும் நற்செய்தி அறிவித்து வந்தார்கள். அவர்கள் ஊழியத்தின் நிமித்தமாக வீடு கிடைக்காததால் ஆரம்ப நாட்களில் சுகாதாரமற்ற பன்றிகள் அருகாமையில் வசிக்கக் கூடிய ஒரு குடிசை வீட்டில் வாழ்ந்து வந்தார்கள். அந்த வீட்டை நாங்கள் சென்று பார்த்தோம். ஆனால் அதன்பிறகு அவர்களுக்கு ராஜ அரண்மனையில் ஒரு வீடும், மருத்துவமனை நடத்துவதற்கு ஏற்ற இடமும் அவ்வூர் அரசர் மூலம் அவர்களுக்கு வழங்கப்பட்டு அதில் இருந்து கொண்டு அருட்பணி செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் பணியாற்றிக்கொண்டிருந்த

இடம் மலைப் பகுதிகள் நிறைந்த இடங்கள். மேடுபள்ளங்கள் நிறைந்த இடம். நாங்களும் பல கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று ஊழியர்களையும், புதிய விசுவாசிகளையும் சந்தித்து உற்சாகப்படுத்தி திரும்பினோம். டாக்டர் வினோத் ஷா அவர்களுடைய எளிமையான வாழ்க்கை, மிஷனரி ஊழியம் எனக்கு ஒரு சவாலாக அமைந்தது. எனது வாழ்க்கையை முற்றிலுமாக அருட்பணி ஊழியத்தில் ஈடுபடுத்திக்கொண்டு தீவிரமாக செயல்பட ஆரம்பித்தேன். குஜராத் பணிக்கள பயணம் என் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

எனது மனைவியுடன் ஒரிஸா பணிக்களம் சென்றது :

நானும் எனது மனைவியும் 10.1. 1982-ம் ஆண்டு தஞ்சையிலிருந்து சென்னை சென்று சென்னையில் உள்ள இந்திய அருட்பணி இயக்கக் குழுவினருடன் ஒரிஸா மாநிலத்திலுள்ள புவனேஸ்வர் சென்று அடைந்தோம். புவனேஸ்வரில் நடந்த இந்திய அருட்பணி இயக்கத்தின் தேசீய கன்வென்ஷனில் 3 நாட்கள் கலந்து கொண்டோம். இந்தியாவில் 15 மாநிலங்களிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். அதில் கொடுக்கப்பட்ட மிஷனரி அறைகூவல் செய்திகள் எங்களுக்கு மிகவும் பயன் உள்ளதாக இருந்தது. கடைசியாக ஞாயிறு அன்று கூட்டுப் பிரார்த்தனை நடந்தது. அதில் அவரவர்கள் தங்கள் தாய் மொழிகளில் ஆவியில் நிரம்பி ஜெபித்த காட்சி வெளி 7:9-இன்படி ''இவைகளுக்குப் பின்பு, நான் பார்த்த போது, இதோ, சகல ஜாதிகளிலும், கோத்திரங்களிலும், ஜனங்களிலும், பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவரும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள் ... நிற்கக் கண்டேன்'' என்ற பரலோகக் காட்சியை நினைவுப் படுத்தியது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அந்தக் கன்வென்ஷனிலே நானும், எனது மனைவி மற்றும் கந்திக்குப்பத்தைச் சேர்ந்த ஒரு சகோதரியும் சேர்ந்து ''அர்ப்பணித்தேன் என்னை முற்றிலுமாய், அற்புதநாதா உம்கரத்தில்'' என்ற தமிழ்பாடலைப்பாடினோம். மேற்கண்ட கன்வென்ஷன் முடிந்து நானும் எனது மனைவியும் தஞ்சை திரும்பினோம்.

ஆந்திர மாநிலத்தில் உள்ள பணிக்களம் சென்றது :

சகோதரன் பி. ஜான்ரோஸ், சபை தொடர்பு இணைச் செயலர் மற்றும் அவரது மனைவி திருமதி. சலோமி

ஜான்ரோஸ் இருவரும் இந்திய அருட்பணி இயக்கத்தின் அருட்பணியாளராக 1984 மற்றும் 1985 -ம் ஆண்டுகளில் என்னுடன் இணைந்து தஞ்சையில் பணியாற்றினார்கள். நானும் சகோதரன் ஜான்ரோஸ் அவர்களும் ஆந்திர மாநிலத்தில் உள்ள பணித்தளங்களைப்பார்வையிட திட்டம் செய்து புதிய ஏழை விசுவாசிகளுக்குக் கொடுப்பதற்காக நல்ல நிலையில் உள்ள பயன்படுத்தப்பட்ட உடைகளை சேகரித்து எங்களுடன் கொண்டு சென்றோம். மேலும் அவர்களுக்குக் கொடுப்பதற்காக மிட்டாய், ரொட்டி ஆகியவைகளையும் வாங்கிச் சென்றோம்.

சின்னூர் பணித்தளம் :

நாங்கள் இருவரும் 10.1.1985 அன்று தஞ்சையிலிருந்து புறப்பட்டு சென்னை சென்று அங்கிருந்து ரயிலில் அடிலாபாத் சென்று மறுநாள் காலை சின்னூர் சென்று அடைந்தோம். எங்களை அழைத்துச் செல்வதற்காக சின்னூர் பணிக்களத்தில் அருட்பணியாளராக இருந்த சகோதரர் ஒய்.டி. தம்பிராஜ் அவர்கள் சின்னூருக்கு அழைத்துச்சென்றார். அவருடைய மனைவி சுலோச்சி தம்பிராஜ் அன்போடு எங்களை உபசரித்தார்கள். இந்த சின்னூர் ஆந்திர மாநிலத்தில் உள்ள அடிலாபாத் மாவட்டத்தில் உள்ளது. சின்னூரில் இரண்டு நாட்கள் தங்கி அதைச் சுற்றியுள்ள கிராமப்புரங்களில் உள்ள புதிய விசுவாசிகளின் வீடுளைச் சந்தித்தோம். மாலை நேரங்களில் சகோதரன் தம்பிராஜ் அவர்கள் வீட்டில் ஜெபக்கூட்டங்களை நடத்தினோம். கடவுளுடைய செய்தியினை ஒருநாள் சகோ. ஜான்ரோஸ் அவர்களும் மறுநாள் நானும் தமிழில் கொடுத்தோம். அதனை சகோதரர் தம்பிராஜ் தெலுங்கில் மொழிப்பெயர்த்தார். நாங்கள் அங்கு சென்றதால் அருட்பணியாளர்களும் புதிய விசுவாகிகளும் அதிக உற்சாகம் அடைந்தனர். சின்னூரில் கட்டப்பட்ட ஆலயத்தின் ஒரு பகுதி அங்கு மழை அதிகமாக பெய்ததினால் விழுந்துவிட்டது. நான் தஞ்சை வந்த பிறகு விழுந்து விட்ட ஆலயத்தைப் புதுப்பிப்பதற்கான நிதியினை சேகரித்து அனுப்பி வைத்தேன். ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு அங்கு ஆராதனை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நீல்வாய் பணித்தளம் :

சின்னூரிலிருந்து நீல்வாய் என்ற பணித்தளத்திற்கு

நாங்கள் இருவரும் பேருந்தில் மண் ரோட்டில் பயணம் செய்து நீல்வாய் பணித்தளம் வந்து சேர்ந்தோம். அது செம்மண் ரோடாக இருந்ததால் நாங்கள் போட்டிருந்த சட்டை, தலைமுடி எல்லாம் சிவப்பாகிவிட்டது. அங்கு அருட்பணியாளராக Rev.G.தானியேலும் அவருடைய மனைவி சுவர்ணாவும் இருந்தார்கள். அவர்கள் எங்களை அதிகம் உபசரித்தார்கள். அங்கு இரண்டு நாட்கள் தங்கி இளம் விசுவாசிகளுடைய வீடுகளைச் சந்தித்து ஜெபித்து வந்தோம். அங்கு உள்ள விசுவாசிகள் மிகவும் பின்தங்கியவர்கள். அனைவரும் கூலி வேலை செய்பவர்கள். நேத்தக்கானி இனத்தைச் சேர்ந்த மக்கள். கூலிவேலையை சாயங்காலம் முடித்து வீட்டுக்கு வந்து சமைத்து சாப்பிட்டுவிட்டு இரவு 9.00 மணிக்கு ஆராதனைக்கு வருவார்கள். அவர்கள் வரும்பொழுது ஹார்மோனியம், தபேலா, ஜால்ரா ஆகியவைகளுடன் வந்து அழகாகப் பாடல்களைப் பாடுவார்கள். சாட்சியின் வேளையில் தேவன் அவர்களுடைய வாழ்க்கையில் செய்த அற்புதங்களை அதிசயங்களையெல்லாம் சாட்சியாக சொல்லுவார்கள். இடையிடையே ஏவப்பட்டவர்கள் ஜெபிப்பார்கள். இந்த ஆராதனை இரவு 12.00 மணிவரை நடக்கும். எல்லோரும் கைத்தட்டி உற்சாகமாகப் பாடுவார்கள். ஆராதனை முழுவதும் விழிப்புணர்வோடு இருந்தது. முதல் நாள் தேவ செய்தியினை நான் கொடுத்தேன். இரண்டாம் நாள் சகோ. ஜான்ரோஸ் அவர்கள் தேவ செய்தியினைக் கொடுத்தார்கள். சகோதரர் ஸ்ரீதர் செய்திகளை தெலுங்கில் மொழிப்பெயர்த்தார்கள். ஆராதனை முடிந்தபிறகு நாங்கள் வாங்கிச்சென்ற மிட்டாய் மற்றும் ரொட்டிகளை அவர்கள் அனைவருக்கும் கொடுத்தோம். அவைகளை அவர்கள் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் அனைவரும் எங்கள் கைகளைப்பிடித்து அன்போடு முத்தமிட்டுச் சென்றார்கள். நாங்கள் அங்கு செல்வதற்கு 3 மாதங்களுக்கு முன்பாக இரண்டு விசுவாசிகளுடைய வீடு தீப்பிடித்து முற்றிலுமாக எரிந்து போய்விட்டது. இதனை அங்குள்ள அருட்பணியாளர் Rev.G.டானியேல் எனக்கு எழுதியிருந்தார். நான் உடனடியாக அவர்களுக்கு உதவித்தொகை அனுப்பி இருந்தேன். நான் அங்கு சென்றபொழுது அவர்களுக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தார். அவர்கள் நன்றிப் பெருக்கோடு கண்ணீர் மல்க எனக்கு நன்றி தெரிவித்தார்கள். நான் நம் தேவனுக்கு நன்றி

செலுத்தும்படி அவர்களைக் கேட்டுக் கொண்டேன். அடுத்த நாள் மீண்டுமாக சின்னூர் வந்து சேர்ந்தோம்.

பீமாரம் பணிக்களம் சென்றது :

மீண்டும் நானும் சகோதரர் ஜான்ரோஸ் அவர்களும் பீமாரம் என்ற பணிக்களத்திற்குச் சென்றோம். அங்கு Rev.ஆனந்தராவும் அவருடைய மனைவி பிரேமலதாவும் அருட்பணி ஊழியம் செய்து கொண்டிருந்தார்கள். அங்கு உள்ள மக்கள் லம்பாடா இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் ஊழியத்தின் மூலமாக அநேகர் இயேசுவை ஏற்றுக்கொண்டு திருமுழுக்குபெற்று ஒரு சிறிய ஆலயத்தைக்கட்டி ஆராதனை நடைபெற்று வந்தது. அங்கு நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் கலந்து கொண்டு தேவ செய்தியினைக் கொடுக்க தேவன் எனக்கு வாய்ப்பினைக் கொடுத்தார். நாங்கள் கொண்டு சென்ற துணிகளை சம்பந்தப்பட்ட அருட்பணியாளர்களிடம் கொடுத்து தகுதி யானவர்களுக்கு அவைகளைக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டோம். ஆராதனை முடிந்த பிறகு அருகாமையில் உள்ள கிராமங்களுக்கு நடந்து சென்று பல விசுவாசிகளுடைய வீடுகளுக்குச் சென்று ஜெபித்தோம். அன்று இரவே பீமாரத்திலிருந்து சின்னூர் திரும்பினோம். மறுநாள் காலையில் பெருத்த மிஷனரி தரிசனங்களோடு சின்னூரிலிருந்து அடிலாபாத் வந்து அங்கிருந்து சென்னை வந்து தஞ்சை திரும்பினோம்.

அகில இந்திய காங்கிரஸ் மிஷன்ஸ் மற்றும் நற்செய்தி மாநாட்டிற்கு (AICOME) புனே சென்றது :

1988-ம் ஆண்டு ஜனவரி மாதம் 4 முதல் 8-ம் தேதி வரை புனேயில் அகில இந்திய காங்கிரஸ் மிஷன்ஸ் மற்றும் நற்செய்தி மாநாடு புனேயில் நடந்தது. இந்த மாநாடு 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும். இதில் இந்தியாவில் உள்ள அனைத்து மிஷனரி இயக்கங்களின் தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் மிஷனரி இயக்கங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டார்கள். நான் இந்திய அருட்பணி இயக்கத்தின் தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களின் சார்பாக இம்மாநாட்டில் கலந்து கொண்டேன்.

நான் இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்காக 1988-ம் ஆண்டு ஜனவரி மாதம் 2-ம் தேதி தஞ்சையிலிருந்து புறப்பட்டு சென்னையிலிருந்து புறப்பட்ட இந்திய அருட்பணி இயக்கக் குழுவினரோடு சேர்ந்து புனே சென்றடைந்தேன். இந்த மாநாடு புனேயில் உள்ள வேதாகம கல்லூரி வளாகத்தில் நடந்தது. நாங்கள் தங்குவதற்கு அந்த வளாகத்திற்குள்ளேயே அறைகள் கொடுத்திருந்தார்கள். இந்த மாநாட்டில் மிஷனரி ஊழியங்களை எப்படி விரிவுபடுத்துவது என்ற தலைப்பில் பல அறை கூவல் செய்திகள் கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு மிஷனரி இயக்கமும் கடந்த 10 ஆண்டுகளில் ஆற்றிய பணிகள் மதிப்பீடு செய்யப் பட்டது. ஒவ்வொரு நாளும் செய்திகளுக்குப் பிறகு குழுவாக கலந்து உரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. பிரதிநிதிகளை 20 குழுக்களாக பிரித்து ஒவ்வொரு குழுவும் ஒரு தலைப்பில் கலந்துரையாடல் நடத்தி குழுத்தலைவர் கடைசி நாளில் அறிக்கை கொடுக்கவேண்டும். எங்களுக்கு ''இந்திய திருச்சபைகளில் மிஷனரி ஊழியத்தின் ஈடுபாடு'' என்ற தலைப்பில் கலந்துரையாடல் நடத்தினோம். எங்கள் குழுவிற்கு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு இயக்கத்திற்கு தற்பொழுது பொதுச் செயலாளராக இருக்கும் சகோதரர் ஜான் கிருபாகரன் அவர்கள் தலைவராக இருந்து சிறப்பாக கலந்து உரையாடல் செய்தோம். மிஷனரி ஊழியத்தின் திருச்சபைகளின் பங்கு மிகமிக குறைவாக உள்ளது. எல்லா திருச்சபைகளையும் முழு முயற்சியுடன் ஈடுபட வைப்பது எல்லா மிஷனரி இயக்கங்களின் பொறுப்பாகும். இதற்கான தடைகள் என்ன? அவைகள் எப்படி அகற்றப்பட வேண்டும் என்று விரிவான அறிக்கையை எங்கள் குழுத்தலைவர் கொடுத்தார். மிகவும் பயன் உள்ள இந்த மாநாட்டில் கலந்து கொண்டு ஜனவரி 10-ம் தேதி தஞ்சை திரும்பினேன்.

தமிழ்நாட்டில் உள்ள தர்மபுரி மாவட்டத்தில் உள்ள மிஷனரி பணித்தளங்களை பார்வையிட்டது :

தர்மபுரி மாவட்டத்திலுள்ள இந்திய அருட்பணி இயக்கத்தின் மூலமாக செயல்பட்டு வரும் பணித்தளங்களைப் பார்வையிட 1990-ம் ஆண்டு ஜனவரி மாதம் 12-ம் தேதி ஒசூர் சென்று அங்கிருந்து கிருஷ்ணகிரி வழியாக கந்திக்குப்பம் சென்று அடைந்தேன். அங்கு முன்னோடி அருட்பணியாளர்களான திரு.இராசையா, திரு. பிரபு மற்றும் உள்ளூர் மிஷனரியான

திரு.B.ராஜா ஆகியவர்கள் கந்திக்குப்பத்தில் தங்கி அருட்பணி ஊழியம் செய்து கொண்டிருந்தார்கள். அந்தப் பகுதியில் குரும்பர்கள், காட்டுப்பூசாரிகள் மற்றும் வன்னியர்கள் மத்தியில் நமது அருட்பணியாளர்கள் ஊழியம் செய்து கொண்டிருந்தார்கள்.

பிலவர்த்தி பணிக்களம் பார்வையிட்டது :

உள்ளூர் அருட்பணியாளரான திரு. B. ராஜா பிலவர்த்தி கிராமத்தைச் சேர்ந்தவர். அவர் ஆரம்ப நாட்களில் குடும்பமாக இயேசுவை ஏற்றுக்கொண்டவர்கள். அவர்கள் மூலமாக பலர் இன்று இயேசுவை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். திரு. B.ராஜாவும் நானும் சைக்கிளில் பிலவர்த்தி கிராமம் சென்று திரு.ராஜாவினுடைய வீட்டில் ஞாயிறு ஆராதனை நடத்தினோம். நான் தேவ செய்தியினைக் கொடுக்க தேவன் எனக்கு ஒரு தருணத்தைத் தந்தார். ஆராதனை முடிந்து நாங்கள் இருவரும் சில வீடுகளைச் சந்தித்து ஜெபித்தோம். அதன் பிறகு கந்திக்குப்பம் திரும்பினோம். கந்திக்குப்பத்தில் இந்திய அருட்பணி இயக்கத்தில் அதிக ஈடுபாடுகொண்ட திரு.தாமஸ் வில்லியம் அவர்களும் அவருடைய மனைவியும் என்னை அன்போடு ஏற்று எனக்கு மதிய உணவு வழங்கினார்கள். திரு. தாமஸ் வில்லியம் அவர்கள் மறைந்த தனது ஒரே மகன் கிங்ஸ்லி ஞாபகார்த்தமாக தனது இடத்தில் ஒரு ஹாஸ்டல் கட்டி அந்தப் பகுதியில் புதிய விசுவாசிகளின் பிள்ளைகள் அந்த ஹாஸ்டலில் தங்கி இலவசமாக கல்வி பயின்று வருகிறார்கள்.

பீரஜ்ஜனூர் பணிக்களம் பார்வையிட்டது :

அடுத்தநாள் சாயங்காலம் திரு. ராசையா திரு.B.ராஜா மற்றும் நானும் பீரஜ்ஜனூர் பணிக்களத்தைப் பார்வையிட பேருந்தில் சென்றும் சில கிலோமீட்டர் நடந்து சென்றும் அவ்வூரை அடைந்தோம். நாங்கள் அங்கு சென்று அந்தக் கிராமத்து தலைவரின் வீட்டை அடைவதற்கு மாலை 7.00 மணி ஆகிவிட்டது. நாங்கள் அங்கு சென்ற அரைமணி நேரத்திற்குள் அப்பகுதியில் உள்ள விசுவாசிகள் சுமார் 30 பேர் அந்த கிராமத் தலைவர் வீட்டில் கூடிவிட்டார்கள். அங்கு ஒரு ஜெபக்கூட்டத்தை நடத்தினோம். அவர்களுக்கு தேவனுடைய செய்தியைக் கொடுக்க என் தேவன் எனக்கு வாய்ப்பினைக் கொடுத்தார். ஜெபக் கூட்டம் முடிந்த பிறகு அந்தக் கிராமத்

தலைவரின் வீட்டில் எங்களுக்கு அன்போடு அளித்த இரவு உணவை உண்டு அன்று இரவு கடைசியாக உள்ள பேருந்தினைப் பிடித்து கந்திக்குப்பம் வந்து சேர்ந்தோம். 15.1.1990 அன்று காலை கந்திக்குப்பத்திலிருந்து புறப்பட்டு தஞ்சை வந்து அடைந்தேன். ஒவ்வொரு பணிக்களத்தைப் பார்வையிடும் பொழுது தேவன் எனக்கு நாட்டின் தேவைகளை உணர்த்திக்காட்டினார். இன்னும் அதிவேகமாக அவருடைய பணியைச் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்தினார். அருட்பணியாளர்களை அதிகம் உற்சாகப்படுத்தவும் அவர்களுக்காக ஜெபிப்பதற்காக அதிகமாக ஜெபக் குழுக்களை ஏற்படுத்த வேண்டும் என்ற புதிய தரிசனங்களை என் தேவன் எனக்குத்தந்தார். அதனால்தான் எந்த சூழ்நிலையிலும், சுகத்திலும் சுகவீனத்திலும், பெரிய இழப்புகளின் மத்தியிலும் அவருடையப் பணியை அவருடைய சித்தத்தின்படி செய்ய என் தேவன் எனக்கு உதவி செய்து வருகிறார்.

பச்சைமலைப் பணிக்களத்தைப் பார்வையிட்டது :

1991-ம் ஆண்டு ஜூலை மாதம் 23-ம் தேதி அதிகாலை 4.00 மணிக்கு எங்கள் திருச்சபை மக்களாக இரண்டு வேன்களில் புறப்பட்டு திருச்சி வழியாக பச்சைமலை பணிக்களம் சென்று அடைந்தோம். மதிய உணவை ஒவ்வொருவரும் எடுத்துச் சென்றோம். அப்பொழுது எங்கள் கோட்டை கிறிஸ்துநாதர் ஆலயப் போதகராக மறைதிரு.பிலிப்ராஜ் போதகர் அவர்கள் இருந்தார்கள். அவர்கள் அருட்பணி ஊழியத்தில் ஆர்வமிக்கவர்கள். எங்கள் சபையிலிருந்து பச்சைமலை அருட்பணியாளர் ஒருவரை தாங்கி வந்தோம். அவர் பணியாற்றும் இடங்களையும் மற்ற பணி இடங்களையும் பார்வையிட சென்றிருந்தோம். மலைப்பாங்கான இடமாகவும், மேடு பள்ளங்கள் நிறைந்த இடமாகவும் இருந்ததால் நாங்கள் சென்ற வாகனங்களை ஒரு இடத்தில் நிறுததிவிட்டு பல விசுவாசிகளுடைய வீடுகளுக்குச் சென்று ஜெபித்து ஆலோசனைகள் கொடுத்தோம்.

இந்தப் பணிக்கள பயணத்தில் எனது மனைவியும் எனது மிஷனரி மகள் கிரேஸ் சுகுணவதியும் என்னுடன் சேர்ந்து வந்தார்கள். அவர்களும் என்னுடன் பல மேடுபள்ளங்களைத்

தாண்டி ஆங்காங்கே பரவலாக இருக்கும் வீடுகளைச் சந்திக்க வந்தார்கள். அங்கு மிகவும் உயரமான ஒரு இடத்தில் இங்கு முதன்முதலாக அருட்பணி ஊழியத்தை ஆரம்பித்த மதர் பிராண்ட் அவர்களின் பழைய வீடு ஒன்று இருந்தது. அந்த அம்மையார் அவர்கள் இந்தப்பகுதியில் அருட்பணி ஊழியத்தை தனது 75 வயதில் ஆரம்பித்து இருக்கிறார்கள். இவர்கள் தனது இனத்தை விட்டு, ஜனத்தைவிட்டு, தேசத்தை விட்டு மொழி தெரியாத இடத்தில் தன்னந்தனியாக, தனது தள்ளாத வயதில் கரடுமுரடானப் பகுதியில், சமுதாயத்தில் மிகவும் பின் தங்கிய மக்கள் வசிக்கின்ற ஒரு பகுதியைத் தெரிந்தெடுத்து அருட்பணியை ஆரம்பித்திருந்தது சென்ற எங்கள் அனைவருக்கும் ஒரு சவாலாக இருந்தது. அருட்பணி ஊழியத்திற்கு வயது ஒரு தடை அல்ல மன உறுதியே முக்கியம் என்பதை உணர முடிந்தது.

அன்று மதியம் 2.00 மணிபோல் நாங்கள் அனைவரும் கொண்டு வந்திருந்த மதிய உணவை நாங்கள் மதர்பிராண்ட் அம்மையார் தங்கியிருந்த வீட்டின் ஓரத்தில் அமர்ந்து அருந்தினோம். சிறிது நேர ஓய்வுக்குப்பின் எங்கள் போதகர் அவர்கள் ஆங்காங்கே இருக்கின்ற இடத்தில் அந்தப் பகுதி மக்கள் மனந்திரும்ப, இரட்சிப்படைய, அங்குள்ள அருட்பணியாளர்களுக்காக பாரத்தோடு ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். சென்றிருந்த அனைவரும் பாரத்தோடும் கண்ணீரோடும் அந்தப் பகுதியில் ஒரு பெரிய எழுப்புதல் ஏற்பட ஜெபித்தோம், கடைசியாக தேவசெய்தியினை கொடுக்கும்படி போதகர் அவர்கள் என்னைக் கேட்டுக்கொண்டார்கள். நான் அங்கு மிஷனரி அறைகூவல் செய்தியினைப் பாரத்தோடு பகிர்ந்து கொண்டேன். அது அனைவருக்கும் ஒரு சவாலாக இருந்தது. இப்பணிக்களத்தைப் பார்வையிட்டுவிட்டு அன்று இரவு 11.00 மணி அளவில் தஞ்சை வந்து சேர்ந்தோம்.

எனது மனைவி தனது தளர்ந்த நிலையிலும் பலமேடு பள்ளங்களைக்கடந்து, உற்சாகத்தோடு நீண்டதூரம் நடந்து இப்பணிக் களத்தைப் பார்வையிட்டது எனக்கு மிகவும் சந்தோஷத்தையும் உற்சாகத்தையும் கொடுத்தது. இதுவே நான் என் அருமை மனைவியுடன் இணைந்து சென்று பார்வையிட்ட கடைசி பணித்தளமாகும்.

11. அரசுப்பணியில் கடந்துவந்த கடினமான பாதைகள்

சோதனைகள் சாதனைப் படிக்கட்டுகளாக அமைந்தன : நான் அரசுப்பணி ஆற்றிய காலத்தில் ஏற்பட்ட மறக்கமுடியாத நிகழ்ச்சிகள் :

நான் கூட்டுறவு இலாக்காவில் இளநிலை மற்றும் முதுநிலை ஆய்வாளராக இருந்த 1966-லிருந்து 1970-ஆம் ஆண்டு வரை கூட்டுறவுக் கடன்களைப்பல ஆண்டுகளாகச் சரியாகக் கட்டாதவர்கள் மீது தாவா நடவடிக்கை தொடுத்து அவர்கள் மீது டிக்ரி பிறப்பித்து அவர்களுடைய ஜங்கம, ஸ்தாவரச் சொத்துக்களை ஜப்தி செய்து ஏல விற்பனையின் மூலம் கடன்களை வசூலிக்கும் ஜப்தி ஆபிஸராகப் (Sale Officer) பணியாற்றினேன். ஜப்தி செய்யும் ஆர்டர் என் கையில் இருந்தாலும் சாதாரண ஏழை, எளிய மக்களின் சொத்துகளை நான் ஜப்தி செய்வதில்லை. பெரிய பணக்காரர்கள், அரசியல்வாதிகள், பெரிய நிலச்சுவான்தாரர்கள் வேண்டுமென்றே வாங்கியக் கடனைத் திருப்பிக்கட்ட மனமில்லாதவர்கள் ஆகியவர்களின் சொத்துக்களைத் தான் நான் ஜப்தி செய்வேன். இதனால் எனக்குப் பல எதிர்ப்புகள் ஏற்பட்டன. காரணமில்லாத சத்துருக்கள் உருவானார்கள். இதனால் எனது உயிருக்கே ஆபத்தான நிலை உருவாகியது. இந்த நிலைகளில் எல்லாம் என் தேவன் தம் சிறகுகளால் மூடி என்னைக் காத்துக் கொண்டார். என்னைத்தாக்க வந்த பிச்சுவா, கத்தி, மண்டாக்கத்தி இவைகளெல்லாம் அவர்களிடமிருந்து பிடுங்கப்பட்டு இன்றும் என் வீட்டில் இருக்கிறது. இவைகளைப் பார்க்கும் சாதாரண மக்கள் பயந்து தாங்களாகவே ஜப்தி செய்வதற்கு முன் கடன்களைக் கட்டி விடுவார்கள். என்னுடைய அலுவலகத்திலுள்ள மேல் அதிகாரிகள் என்னைப்பற்றி நன்கு அறிவார்கள். நான் செயல்படும் எந்தக் காரியமும் கிரமமாகவும் நேர்மையாகவும் இருக்கும் என்பதையும் அறிவார்கள்.

அந்த நாட்களில் நான் தமிழ்நாடு முழுவதற்கும் எடுத்துச் செல்லக் கூடிய துப்பாக்கிக்கு உரிமம் பெற்று வாங்கி வைத்திருந்தேன். எப்பொழுதாவது வேட்டைக்குச் சென்று கொக்கு, புறா, நாரை, வக்கா, வௌவால் ஆகியவைகளைச் சுட்டு வருவேன். காலையில் மோட்டர் சைக்கிளில் எனது சேல்

ஆபிஸர் அலுவலகத்திற்குச் செல்லும் பொழுது துப்பாக்கி என் தோளில் மாட்டப்பட்டிருக்கும். அலுவலகம் சென்றவுடன் அலுவலகத்தில் வைத்து விடுவேன். மாலையில் அல்லது இரவு நேரங்களில் வீடு திரும்பும் பொழுது மீண்டும் தோளில் துப்பாக்கியை மாட்டிக்கொண்டு புறப்பட்டு வீடு திரும்புவேன். இந்த ஜப்தி ஆபிஸர் பொறுப்பில் எனது கடமைகளைச் செய்யும் பொழுது காரணம் இல்லாமல் எனக்குச் சத்துருக்கள் ஆனவர்களுக்கு ஒரு அச்சத்தை உண்டுபண்ணுவதற்காகவே அவ்வாறு செய்வேன். ஆனால் நான் யாரையும் சுட்டதில்லை, சுடும் எண்ணமும் என் உள்ளத்தில் ஏற்பட்டதில்லை.

எனது 18-வது வயதில் எனது இயேசுவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை வாழ்ந்து வந்த பொழுது அவ்வப்போது சுயம் மேலோங்கத்தான் செய்தது. வேலைக்குச் சென்ற பொழுது துப்பாக்கியை எடுத்துச் சென்றதற்காக வருந்தினேன். என் தேவனிடத்தில் மன்னிப்புக் கேட்டேன். மீண்டும் இரட்சிப்பின் அனுபவத்தைப் புதுப்பித்து அருட்பணி ஊழியத்தில் ஈடுபடுவதற்கு முன்பாக எனது துப்பாக்கியையும் மாநிலம் முழுவதும் எடுத்துச் செல்வதற்காகப் பெற்ற உரிமத்தையும் 1973-ஆம் ஆண்டு மே திங்கள் 18-ஆம் நாள் Surrender செய்து விட்டேன். அதிலிருந்து இந்நாள் வரை என் கையினால் துப்பாக்கியைத் தொட்டதில்லை. அதைவிட வலிமை வாய்ந்த பரிசுத்த வேதம் எப்பொழுதும் நான் எங்கு சென்றாலும் என்னுடன் இருக்கும்.

அரசுப்பணியில் கடந்து வந்த கடினமான பாதைகள் :

கூட்டுறவு வங்கிகளை மற்ற கூட்டுறவு நிறுவனங்களைத் தணிக்கை செய்யும் அதிகாரியாக 10 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றினேன். மாவட்ட அளவிலான பறக்கும்படையில் 5 ஆண்டுகள் பணியாற்றினேன். நான் 1969-ம் ஆண்டு தஞ்சாவூர் கூட்டுறவுத் துணைப்பதிவாளர் சரகத்தில் சீனியர் இன்ஸ்பெக்டராகப் பணியாற்றிய பொழுது மிகவும் கரடுமுரடான உயிருக்கு ஆபத்தான சூழ்நிலைகளில் அரசுப்பணி ஆற்ற வேண்டியிருந்தது. புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கந்தர்வக்கோட்டை, திருவோணம், உஞ்சிவிடுதி, செவ்விடுதி போன்ற பகுதிகளில் கிராமக்கூட்டுறவு வங்கிகள் இருந்தன.

இந்த வங்கிகள் எல்லாம் கிராமங்களின் உட்பகுதியில், எளிதில் செல்லமுடியாத, சரியான போக்குவரத்து வசதி இல்லாத இடங்களில் அமைந்து இருந்தன. இந்தக் கிராமங்களில் பொறுப்பில் இருந்த வங்கித் தலைவர்கள் வங்கிப் பணத்தைக் கையாடல்கள் செய்வதும், இரசாயன உரங்களை விற்று அந்தத் தொகைகளைக் கையாடல்கள் செய்வதும் வழக்கமாக இருந்து வந்தன. கூட்டுறவு அதிகாரிகள் நேரடியாக அந்த ஊர்களுக்குச் செல்லாமல் இருப்புக்களையும் நேரடியாகப் பரிசீலனை செய்யாமல் புத்தகங்களைத் தாங்கள் இருக்கும் இடத்திற்கு கொண்டு வரச் செய்து புத்தகங்களில் மட்டும் ''பரிசீலிக்கப்பட்டன, இருப்புகள் புத்தக இருப்புப்படி சரியாக உள்ளது'' என்று சிரமப்படாமல் சான்று செய்து விடுவது வழக்கமாக இருந்து வந்தது. 1969-ம் ஆண்டில் என்மேல் அதிகாரி என்னை அழைத்து மேற்குறிப்பிட்ட வங்கிகளில் வங்கிகளின் கையிருப்பு மற்றும் உர இருப்புகள் கையாடல் செய்யப் பட்டுவருவதாகப் புகார்கள் வந்திருக்கின்றன. நீங்கள் நேரடியாக அந்த கிராம வங்கிகளுக்குச் சென்று விசாரணை செய்து அறிக்கை கொடுக்கவேண்டும். என்று எழுத்து மூலமான உத்தரவினை என்னிடம் கொடுத்தார்கள்.

நான் எங்கு சென்றாலும் ஜெபித்து தேவ வழி நடத்துதலுக்குக் கீழ்ப்படிந்துதான் செல்வேன். நான் ஜெபித்து இந்தப் பணியை நான் செய்யாவிட்டால் பின் யார் செய்வது, எனக்கு வேண்டிய பாதுகாப்பையும், ஞானத்தையும், தைரியத்தையும் தாரும் என்று என் தேவனிடத்தில் ஜெபித்துத் தஞ்சாவூரிலிருந்து கந்தர்வக்கோட்டை விற்பனைச் சங்கத்திற்குச் சென்றேன். விற்பனைச் சங்கத்தின் செயலாளரையும் மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு மேற்கண்ட செவ-விடுதி, உஞ்சி-விடுதி, திருவோணம் ஆகிய ஊர்களிலுள்ள வங்கிகளை பார்வையிடச் சென்றோம். நாங்கள் வருவதை எப்படியோ முன்கூட்டியே அறிந்து எல்லா இடங்களிலும் உள்ள வங்கிகள் பூட்டப்பட்டு இருந்தன. அடுத்த நாள் சென்றோம். அப்பொழுதும் வங்கிகளும், கிட்டங்குகளும் பூட்டப்பட்டிருந்தன. உடனே நான் ஒரு நோட்டீஸ் தயார் செய்தேன். அதில் நாளும், நேரமும் குறிப்பிடப்பட்டுக் கிட்டங்கியில் உள்ள இருப்புகள் சோதனை செய்யப்படும், அன்று வங்கியின் செயலர் மற்றும்

தலைவர் ஆஜராகி இருக்கவேண்டும். இருப்புப் பரிசோதனை செய்வதற்கு ஏதுவாக கிட்டங்கி திறந்து வைக்கப்பட்டிருக்க வேண்டும், தவறினால் கிராம அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் முன்பாக பூட்டை உடைத்து இருப்புகள் சோதனை செய்யப்படும், சம்பந்தப் பட்டவர்கள் மீது மேல் நடவடிக்கையும் எடுக்கப்படும் என்று எழுதி அந்த அறிவிப்பினைச் கதவில் ஒட்டிவிட்டு வந்து விட்டோம். நாங்கள் மீண்டும் குறித்த நாளில் குறித்த நேரத்தில் சம்பந்தப்பட்ட வங்கிக்குச் சென்றோம். கிட்டங்கிகள் திறந்து வைக்கப் பட்டிருந்தன. இருப்புப் பதிவேட்டின்படி இருப்புகள் சோதனை செய்யப்பட்டன. ஒவ்வொரு வங்கியிலும் ரூ.50,000-க்கும் மேல் உரவிற்பனையும், ரொக்கக் கையிருப்பும் கையாடல் செய்யப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டுச் சம்பந்தப்பட்ட பதிவேடுகளில், ரெக்கார்டு செய்யப்பட்டது. அவைகளை மேல் நடவடிக்கைக்காகத் தஞ்சாவூர் கொண்டு வந்து இது தொடர்பாக அலுவலகத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தேன். இதில் திருவோணம் வங்கியின் தலைவர் பிரபலமானவர், திருவோணம் பஞ்சாயத்து யூனியன் தலைவராகவும் இருந்து கொண்டிருந்தார். மிகுந்த செல்வாக்கு மிக்கவர், நினைத்ததைச் செய்யக் கூடியவர். அவருடைய வங்கியையும், கிட்டங்கியையும் சோதனை செய்து ரொக்க இருப்புக்குறைவு, இரசாயன உர இருப்புக் குறைவு ஆகியவைகளை பரிசோதனையில் கண்டுபிடித்துச் சம்பந்தப்பட்ட பதிவேடுகளில் பதிவு செய்து, அவைகளை மேல் நடவடிக்கைக் காகத் தஞ்சாவூர் கொண்டு வந்து இது தொடர்பாக அலுவலகத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தேன். இது திருவோணம் சங்கத்தலைவருக்கு பெரும் அதிர்ச்சியையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்திவிட்டது போலும். யாரும் தட்டிக் கேட்க முடியாதபடி அந்தப்பகுதிக்கு முடிசூடா மன்னராக விளங்கிய அவருக்கு என்னைப் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம் உருவானது. என்னை விட்டு வைக்கக்கூடாது, எப்படியும் என்னைத் தீர்த்துக்கட்டிவிட வேண்டும் என்று அதற்கான சமயத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார். நான் அந்தப்பகுதியில் உள்ள மற்ற ஊர்களுக்கு அந்த திருவோணம் வழியாகத்தான் சென்று கொண்டும் வந்து கொண்டும் இருந்தேன். சங் 91:11-இன்படி ''உன் வழிகளிலெல்லாம் உன்னைக்காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்'' என்ற வாக்கின்படி என் தேவன் எனது

போக்கிலும் வரத்திலும் பாதுகாத்துக்கொண்டார். எனக்கு விரோதமாக வைக்கப்பட்ட ஆயுதம் வாய்க்காதபடி செய்தார். எனக்காக என் தேவன் யுத்தம் செய்தார். சில நாட்களுக்குப் பிறகு திருவோணம் வங்கியின் தலைவர் காலைக்கடன் முடிப்பதற்காக அருகில் உள்ள வயல்வெளிக்குச் சென்ற பொழுது யாரோ அடையாளம் தெரியாத சிலர் அவரைக் கண்டந்துண்டமாக வெட்டிக் கொன்று விட்டுச் சென்றிருக்கிறார்கள். இந்தச் செய்தி அடுத்த நாள் எல்லா செய்தித்தாட்களிலும் வெளிவந்தது. அதை நானும் படித்தேன். உனக்கு எதிராக வைக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போகும் என்ற வேத வசனத்திற்கு இணங்க என்னைத் தப்புவித்து அவர் பணி செய்வதற்காக என்னை உயிரோடு காத்துக் கொண்டார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

இதன் மத்தியிலும் அருட்பணி ஊழியங்கள் அதிகமாக விரிவடைந்திருந்தன. ஒவ்வொரு மாதமும் நானும் எனது மனைவியும் 200-க்கும் அதிகமான வீடுகளைச் சந்திக்க வேண்டும். அதோடு மாதந்தோறும் ஊழியர்களுக்காக ஜெபிக்கும் 6 ஜெபக்கூட்டங்களை நடத்த வேண்டும். குடும்பப் பிரச்சனை உள்ள வீடுகள், சுகவீனப்பட்ட வீடுகள், மருத்துவ மனைகள் ஆகியவைகள் சந்திக்கப்பட்டுவந்தன. இதைத்தவிரத் தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களிலுள்ள ஊர்களுக்கும், திருச்சபைகளுக்கும் சென்று அருட்பணி ஊழியத்தை அறிமுகப்படுத்த வேண்டும், ஆலயங்களில் மிஷனரித் தூது செய்திகள் கொடுக்கப்பட வேண்டும். இந்த 3 மாவட்டங்களிலுள்ள வட்டாரச் செயலர்களைச் சந்தித்து அவர்களை ஊழியத்தில் உற்சாகப்படுத்த வேண்டும்.

12. அருட்பணி ஊழியத்திற்கு உதவிக்கரம் கொடுத்தவர்கள்

இந்த ஊழியங்களைச் செய்வதற்கு எனது மனைவி பிள்ளைகள் மட்டுமல்ல வட்டாரச் செயலராக இல்லாத எனது அண்ணன் திரு.D.தேவராஜ் அவர்களும் அருமையான சகோதரர் T.S. அய்யாத்துரை அவர்களும்

இவ்வூழியத்தில் எனக்குப் பெருதவியாக இருந்து வருகிறார்கள். அதோடு காலம் சென்ற திரு. S.K. பாண்டியன் குடும்பத்தினர், அம்மன்பேட்டை மறைந்த திரு. S. சாமுவேல் அவர்கள் குடும்பத்தினர், சகோதரி இராணி பாண்டியன் அவர்கள் ஊழியத்திற்கு உறுதுணையாய் இருந்தார்கள். திருமதி. சாந்தி பொன்ராஜ், திரு.ஸ்டீபன் செல்வராஜ், திரு. சாலமோன் துரைசாமி அவர்கள், திருமதி லோவின் மேரி ஆகியவர்களும் வட்டாரச் செயலராகவும் இருந்து ஊழியத்தைத் தாங்கி வருகிறார்கள். திருச்சிப் பகுதிக்கு ஒரு முழு நேர ஊழியர் தேவை என்பதை பல ஆண்டுகளாகக் கோரிவந்தேன். சகோ. தாமஸ் டைசன் குடும்பத்தினர் திருச்சியை மையமாக வைத்து பணி ஆற்றினார்கள். தற்பொழுது திரு. சவுந்தர்ராஜன் குடும்பத்தினர் அந்த இடத்தில் பணியாற்றி கொண்டிருக்கிறார்கள். சகோதரி. சந்திரா சாலமோன், சகோ. விக்டர் தம்பதியினர், சகோ. பீட்டர் ராபர்ட், சகோ. S.J.மார்ட்டின் சகோதரி D. கமலா, திருமதி. ஜாஸ்மின் பொன்னி, திரு. டேவிஸ் செல்வகுமார், திருமதி. ஷோபா டேவிஸ் திரு. S.D. ஜேம்ஸ்மணி, Dr.D.சாம் டானியேல் குடும்பத்தினர், சகோ. L.S. இராபர்ட், சகோதரி தமிழரசி, சகோ. J. செல்வராஜ், சகோ. J. ஜெயபால், திருமதி. புனிதா பெஞ்சமின், Dr.மனோகரன் ஆகியோர்கள் தஞ்சாவூர்ப்பகுதியில் இவ்வூழியத்திற்கு அதிக உதவியாக இருந்து வருகிறார்கள்.

மாயவரத்தில் திரு. செல்லையா, ஓய்வுபெற்ற தாசில்தார் அவர்கள் இவ்வூழியத்திற்கு உதவி செய்து வந்தார்கள். நாகப்பட்டினம் பகுதியில் திரு. W.J. பரமானந்தம் வட்டார செயலராக இருந்து குடும்பமாக ஊழியத்திற்கு உதவி செய்து வருகின்றனர். கும்பகோணத்தில் திரு. ஜார்ஜ் பீட்டர் அவர்கள் வட்டாரக் செயலராக இருந்தும், Dr. J. மகனி குடும்பத்தினர் ஒரு அருட்பணியாளரைத் தாங்கியும் உதவி வருகின்றனர்.

திருச்சிப் பகுதியில் திரு. W. விக்டர் செல்லையா, திரு.ஆசீர்வாதம், திரு. சந்திரசேகரன், திரு. A.S. செல்லப்பா Rev. P.மனோகரன் திரு.ஜோசப் சுதாகர், திருமதி. குணாசுகுமார் ஆகியவர்கள் வட்டாரச் செயலராக இருந்து உதவி செய்து

வந்தார்கள், வருகின்றார்கள். Dr. ஜோசப் மதுரம் அவர்கள் இவ்வூழியத்தை நான் பொறுப்பு ஏற்றுக் கொண்ட கடந்த 28 ஆண்டுகளாகத் தொடர்ந்து பெருந்தொகைகளை வழங்கி, ஊழியங்களைத் தாங்கி வருகின்றார்கள். திருமதி. ரெஜினா மார்டீன் பட்டுக்கோட்டைப் பகுதிக்கு வட்டாரச் செயலராக இருந்து உதவி செய்து வருகின்றார்கள். திரு. நவீன்சந்த் குடும்பத்தினர் வட்டாரச் செயலராக இருந்து புதுக்கோட்டைப் பகுதியில் ஊழியர்களைத் தாங்கி வருகின்றார்கள். Mr. T.A. தனபாண்டியன் குடும்பத்தினர், Mr.J.ஜோதி பாண்டியன் குடும்பம் தலா ஒரு IEM அருட்பணியாளர்களைத் தாங்கி வருகின்றனர். இவர்கள் மட்டும் அல்லாமல் தேவன் எங்களுக்கு ஊழியத்தைத் தங்கள் ஜெபங்களினாலும், நிதிகளினாலும் தாங்கும் அநேகக் குடும்பங்களைக் கொடுத்திருக்கிறார். தேவன் கொடுத்த அந்த குடும்பங்களுக்காக என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். தேவன் அந்தக் குடும்பங்களை ஆசீர்வதிக்கும்படிச் ஜெபிக்கிறேன்.

அரசுப்பணியில் பதவி உயர்வுகள் :

நான் கூட்டுறவு சீனியர் இன்ஸ்பெக்டராகப் பணியாற்றிக் கொண்டிருந்த பொழுதே கூட்டுறவு சப்ரிஜிஸ்திரார் பதவி உயர்வுக்கான தேர்வுகளை எல்லாம் எழுதித் தேர்ச்சி பெற்றிருந்தேன். 30-10-78-இல் எனக்குக் கூட்டுறவு சப்ரிஜிஸ்திரார் பதவி உயர்வு கிடைத்தது. 30.10.1988-ஆம் ஆண்டிலிருந்து தேர்வு நிலைக் கூட்டுறவு சப் ரிஜிஸ்தாரர் பதவி உயர்வு கிடைத்தது. எந்தப் பதவி உயர்வில் இருந்தாலும் அதற்குச் சரியாகத் தேவப் பணியினைச் செய்ய என் தேவன் எனக்கு உதவி செய்து வந்தார்.

அரசுப் பணியில் ஒரு வெறுப்பு :

ஆரம்ப நாட்களில் கூட்டுறவு இலாக்காவில் பணியாற்றுவது சமுதாயத்தில் பின்தங்கிய மக்களுக்குச் சேவை செய்கின்றோம். என்ற மகிழ்ச்சியோடு செய்துவர முடிந்தது. அப்பொழுதெல்லாம் பதவி உயர்வுகள், மாற்றங்கள் எல்லாம் இலாக்காவின் தலைவராகிய கூட்டுறவு பதிவாளர் அவர்களே செயல்படுத்தி வந்தார். ஒரு காலக் கட்டத்தில் உயர்

அதிகாரிகளின் பதவி உயர்வு, மாற்றுதல் போன்றவைகள் சம்பந்தப்பட்ட இலாக்கா அமைச்சர்கள் மூலம் செய்யப்பட்டன. இதனால் இத்துறையில் விருப்பு வெறுப்புகளும், கையூட்டுகளும் மேலோங்க ஆரம்பித்தன. இதனால் உண்மையும் உத்தமமாகவும் பணியாற்றிய எனக்குப் பணியில் ஒரு வெறுப்பு ஏற்பட ஆரம்பித்தது. அதன் பயனாகச் சுயதொழில் ஆரம்பித்துச் சுதந்திரமாக வாழவேண்டும் என்ற எண்ணம் உருவானது. கையில் சேமிப்பில் இருந்த பணம், மனைக்கட்டு வாங்கி இருந்ததை விற்றது, பழைய வீடு விற்றது ஆகிய நிதி ஆதாரத்தைச் சேர்த்து 1972-ஆம் ஆண்டில் பான் புரோக்கர் மற்றும் மணிலெண்டிங் செய்வதற்கு எனது மனைவியின் பேரில் உரிமம் வாங்கி "ரெத்தினா பேங்கர்ஸ்" என்ற ஒரு நிறுவனத்தை ஆரம்பித்தோம். இதிலும் ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் நாங்களும் முன்னேற வேண்டும் என்ற எண்ணத்தில் துவக்கினோம். நான் அந்த சமயத்தில் சுமார் 10 மாதங்கள் விடுப்பில் இருந்து மேற்கண்ட தொழிலைக்கவனித்து வந்தேன். உதவிக்காக ஒரு ஊழியரையும் போட்டுக் கவனித்து வந்தேன். மூட்டைத் தூக்குபவர்களுக்குத் தள்ளுவண்டி வாங்குவதற்குக் கடன் கொடுத்தோம், கறவை மாடு வாங்குவதற்கு, வண்டி மாடு வாங்குவதற்கு, சிறுதொழில் நடத்துவதற்குக் கடன் கொடுத்து வந்தோம். கடன் வாங்கியவர்கள் வாங்கின ஆரம்பத்தில் தவணைத் தொகையினைக் கட்டினார்கள், நாட்கள் செல்லச்செல்லக் கட்டுவதை நிறுத்தி விட்டார்கள். எல்லாக்கடன்களும் ஒரு வழிப்பாதையாகவே போனது. கொடுத்த கடன்கள் திரும்பி வரவில்லை. மேலும் இத்தொழில் செய்வதுதற்குக் கடின மனம் வேண்டும். இளகிய மனம் உள்ளவர்கள் இத்தொழில் செய்வது கடினம். நாங்கள் எவ்வளவோ முயன்றும் நஷ்டத்திற்கு மேல் நஷ்டம் ஏற்பட்டது. தேவனுக்குப் பிரியமில்லாத இத்தொழிலில் தேவ சித்தம் இல்லாதபடியினால் 1 1/2 ஆண்டில் ரூ.50,000/- க்கு மேல் நட்டம் ஏற்பட்டது. இந்த சூழ்நிலையில் தேவன் என்னோடு பேசினார். நான் உன்னை இந்தத் தொழில் செய்வதற்காகவா கறவலாடுகளின் பின்னாக அலைந்த உன்னை அழைத்தேன்? உன்னைப் பெரியவனாக்கினேன்? உன்னை ஆசீர்வதித்தேன்?

உன்னதத்திலே பறக்கவேண்டிய நீ குப்பைமேட்டைக் கிளறிக் கொண்டிருக்கிறாய். எனவேதான் உன் முயற்சிகளை வியர்த்தம் ஆக்கினேன். நீ எவ்வளவு முயற்சி செய்து உழைத்தாலும் அதை நான் ஊதிப்போடுவேன் என்று உணர்த்தினார். இது தொடர்பாக நான் வேறு யாரிடமும் ஆலோசனை கேட்காமல் இத்தொழிலை அன்றே மூடிவிட முடிவு செய்து மூடிவிட்டேன். எனது விடுப்பை ரத்து செய்துவிட்டு மீண்டும் அரசுப்பணியில் சேர்ந்தேன். உன்னதமான அவருடைய பணியைச் செய்யாதபடி வேறு திசை சென்ற எனக்குச் சரியான பாடம் என் தேவனால் எனக்குக் கற்பிக்கப்பட்டது. யாரை முன் குறித்தாரோ அவர்களை அழைத்திருக்கிறார். யாரை அழைத்தாரோ அவர்களை முன் குறித்தும் இருக்கிறார். அவர்கள் தறிக்கெட்டுப்போனாலும் அவர்களைத் தொடர்ந்து பிடிக்கிறார். அவரது பணியைச் செய்ய ஆயத்தப்படுத்துகிறார். என்னையும் அவ்வாறு திரும்பத் தமது பணிக்கு அழைத்துக் கொண்டார். பெரும் அழிவிலிருந்து மீட்டுக் கொண்டார்.

13. எனது அதிக சுகவீனம் ஊழியம் பாதிக்கப்படவில்லை

பயங்கரமான சுகவீனம் :

எனக்குக் கொஞ்ச நாட்களாகவே கண்களுக்குக் கொஞ்சம் வேலை கொடுத்தால் தலைவலி, கண்வலி, கண் எரிச்சல் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. 1988-ம் ஆண்டு மேற்கண்ட பலவீனங்கள் என்னை அதிகமாகப் பாதித்தன. எப்பொழுதும் கண்கள், காதுகள், தலை முழுவதும் ஊசிப்போட்டுக் குத்துவது போல் தொடர்ந்து வலித்துக் கொண்டே இருக்கும். இரவில் தூங்க முடியாதபடி வலிதாங்காமல் துடித்துக் கொண்டேயிருப்பேன். சாப்பிடவே பிடிக்காது. சாப்பாட்டில் சுவை தெரியாது. மூக்கில் வாசனை தெரியாது. இந்த நிலையில் எனது மனைவியும் மிஷனரியாகச் சென்றுள்ள எனது மகள் கிரேஸ் சுகுணவதியும் முழங்காலில் நின்று எனக்காகப் போராடி ஜெபித்துக் கொண்டிருப்பார்கள். எனக்கு வலி இருந்து கொண்டேதான் இருக்கும், காலையில் வழக்கம்போல் எனது அரசுப்பணிக்குச் சென்று வருவேன். அருட்பணி வேலைகளும் ஊழியத்திற்கு தடையின்றி நடை பெற்றுக் கொண்டிருந்தன.

நிதி திரட்டுவதும் தொய்வில்லாமல் நடந்து கொண்டிருந்தன. எனக்கு அதிகம் முடியாத நாட்களில் எனது மனைவியும், மிஷனரியாகச் சென்ற மகளும் ஜெபக்குழுக்களை நடத்துவார்கள் ஊழியத்திற்கு நிதிகளைச் சேகரிக்கவும் சென்று வருவார்கள்.

பல கண் மருத்துவர்களிடம் சென்று காண்பித்தோம். கண்பார்வை எல்லாம் சரியாக இருக்கிறது. எதனால் தலைவலி கண்வலி இருக்கிறதென்று புரியவில்லை. நீங்கள் திருச்சி, மதுரை அல்லது வேலூர் ஆகிய இடங்களுக்குச் சென்று பிரபலமான டாக்டர்களிடம் காட்டுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். இதற்கு இடையில் கண்களினால் எதைப் பார்த்தாலும் இரண்டு இரண்டாகத் தெரியும், ரோட்டில் சென்றால் இரண்டாகத் தெரிவதினால் எதிரே வருவது எது உண்மையானது என்று தெரியாது. சில நாட்களுக்குப் பிறகு எதிரேவருவது ஒன்றின் மேல் ஒன்றாகத்தெரியும், இரண்டு இரண்டாகவும் தெரிய ஆரம்பித்தது. சில நாட்கள் அரசுப் பணிக்கு விடுமுறை போட்டுவிட்டு இருப்பேன். சில நாட்கள் அரசுப்பணிக்குச் செல்லுவேன். அந்நாட்களில் எனது மேல் அதிகாரிகளும் உடன் பணியாற்றுபவர்களும், எனக்கு கீழ்ப்பணியாற்றுபவர்களும் என் பணிகளை நிறைவேற்ற எனக்கு அதிக உதவி செய்தார்கள். எனக்கு அதிகமான ஒத்துழைப்புக் கொடுத்தார்கள். இந்த உதவிகள் எனக்கு அப்பொழுது கிடைக்காதிருந்தால் நான் விருப்பப் பணி ஓய்வில் சென்றிருக்க வேண்டி இருந்திருக்கும். இதற்கிடையில் எனக்கு இருந்த வேதனைகளோடு முகவாதம் வந்துவிட்டது. என் நிலையைப் பார்த்த எனது மேல் அதிகாரி உங்களுக்கு எத்தனை மாதங்கள் வேண்டுமானாலும் விடுப்புத் தருகிறேன். போதுமான விடுப்பு எடுத்துக்கொண்டு தேவையான மருத்துவச்சிகிச்சை எடுத்துக்கொண்டு வரும்படி அனுப்பி விட்டார். நாங்கள் வந்து தஞ்சையில் பிரபலமான கண் தலைமை மருத்துவர் டாக்டர். சாமுவேல் ஞானதாஸ் அவர்களிடம் கொண்டு போய்க் காண்பித்தோம். அவர் என்னை நன்கு பரிசோதனை செய்து விட்டுக் கண்ணின் பார்வைகள் எல்லாம் நன்றாக இருக்கிறது. வேண்டுமானால் சித்த அல்லது

ஆயுர்வேதிக் மருத்துவசிகிச்சை பெற்றுக்கொள்ளுங்கள் என்று அறிவுரை கூறினார். மேலும் அவர் எந்த டாக்டராவது கண் நரம்பு அல்லது மூளைக்குச் செல்லும் நரம்பு பாதிக்கப் பட்டுள்ளது அறுவை சிகிச்சை செய்துதான் சரிப்படுத்த முடியும் என்று கூறினால் அறுவை சிகிச்சை செய்துகொள்ளாதீர்கள். அப்படி அறுவை சிகிச்சை செய்து கொண்ட ஓரிரு வருடங்களில் கண்பார்வை முழுவதும் போய்விடும் என்று கூறினார். மேலும் அவர் சித்தா அல்லது ஆயுர்வேத மருத்துவ சிகிச்சையில் சுகம் கிடைத்தால் பெற்றுக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் இது தேவன் உங்களுக்குக் கொடுத்த முள் என்று எண்ணிப் பொறுமையோடு தேவன் உங்களுக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தை ஓடி முடியுங்கள் என்று எனக்கு அறிவுரை வழங்கினார். அப்பொழுது எனக்குத் துணைப் பதிவாளராக இருந்த திரு.ஹயவதனன் அவர்கள் மதுரையில் உள்ள ஒரு ஆயுர்வேத மருத்துவருக்கு அறிமுகக் கடிதம் ஒன்றைக் கொடுத்து அவரைப் போய்ப்பார்த்துச் சிகிச்சை செய்து கொள்ளும்படி கூறி அனுப்பினார். நான் ஜெபத்தோடு மதுரை சென்று அந்த டாக்டரை சந்தித்து ஓராண்டு காலத்திற்கு மேல் சிகிச்சை பெற்று வந்தேன். கொஞ்சங்கொஞ்சமாகத் தேவன் எனக்குச் சுகத்தைக் கொடுக்க ஆரம்பித்தார். எனக்காக இந்திய அருட்பணி இயக்கத்தினரும் மற்றவர்களும் பாரத்தோடு ஜெபித்தார்கள். ஜெபித்த அனைவருக்கும் எனது நன்றியினைக் கூறிக் கொள்கிறேன். இந்த சுகவீனத்தின் மத்தியிலும் அருட்பணி ஊழியங்கள் எந்த விதத்திலும் தடைபடவில்லை. 1974-ம் ஆண்டில் அருட்பணி இயக்கப் பொறுப்பை ஏற்றதிலிருந்து இது நாள் வரையில் ஒருமாதம் கூட ஜெபக்கூட்டங்கள் நடத்துவது, ஆலய ஆராதனைகளில் செய்தி கொடுப்பது, ஊழியத்திற்குக் காணிக்கை பிரித்து அனுப்புவது தடைபடவே இல்லை. தேவனுக்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக. எனக்கு கடந்த 20 ஆண்டுகளாகச் சர்க்கரை நோய் இருந்து வருகிறது. அதன் காரணமாகச் சரீரத்தின் அனைத்து பாகங்களும் பாதிக்கப்பட்டு இருக்கின்றேன். எனது கண்கள் இரண்டும் அதிகமாக பாதிக்கப்பட்டு இருக்கின்றன. கண்கள் இரண்டிலும் குளோக்கோமா வியாதி ஏற்பட்டுள்ளது. கண்களில் கண்ணீர் வடிந்து கொண்டே இருக்கும், கண்களுக்கு வேலை கொடுத்தால் அதிகவலி, எரிச்சல் ஏற்படும். கண்மருத்துவர்கள்

சொல்லுகிறார்கள் எந்த சமயத்திலும் பார்வைகளை இழக்க நேரிடும் என்று. ஆனால் எனது பெலவீனங்களைக் குறித்து மற்றவர்களுக்குத் தெரியாது. எனது பெலவீனங்களை நான் பெரிது படுத்துவதும் இல்லை. பெலவீனங்களைச் சாக்காக வைத்துக்கொண்டு செயல்படாமல் இருந்ததும் இல்லை. ஊழியத்தின் காரியங்கள், குடும்பத்தின் காரியங்கள் அனைத்தையும் இந்தப் பாடுகள் வேதனைகளின் மத்தியில் தங்கு தடையின்றிச் செய்ய தேவன் என்னை வழி நடத்தி வருகிறார்.

14. அருட்பணி ஊழியத்தின் பாதையில் ஒரு சில சிறப்பான நிகழ்ச்சிகள்

ஊழியங்கள் நாளுக்குநாள் விரிவடையத் தொடங்கினதும் நானும் எனது மனைவியும் மாதம் 6 ஜெபக்கூட்டங்களை நடத்துவதோடு, மருத்துவ மனைகள், குடும்பப் பிரச்சனை உள்ள வீடுகள் உடைப்பட்டுக் கொண்டிருக்கும் குடும்பங்கள் ஆகியவைகளுக்கு ஓடோடிச் சென்று அவர்கள் கிறிஸ்துவுக்குள் கட்டப்பட ஆலோசனை கூறி அந்தக் குடும்பங்களைப் பெலப்படுத்தி ஸ்திரப்படுத்தி வருவோம். நாங்கள் இருவரும் அதிக உற்சாகமாக ஊழியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தோம். எத்தனையோ உடைப்பட்டக் குடும்பங்களை ஒன்று சேர்த்து வைத்துள்ளோம். வியாதியில் இருப்பவர்கள், பிரச்சனையில் இருப்பவர்கள், தேவையில் இருப்பவர்கள் வீடுகளை தேடிச் சென்று ஜெபித்து ஆறுதல் கூறி வந்தோம். நாங்கள் அருட்பணி ஊழியத்திற்கு யாரிடமும் பணம் கேட்பதில்லை. ஊழியங்கள் எவ்விதம் நடைபெறுகின்றது என்பதையும் மற்றும் ஊழியத்தேவைகளையும் அவர்களிடம் பகிர்ந்து கொள்ளுவோம். ஜெபக்குழுக்களில் ஊழியத் தேவைகளுக்காக ஜெபிப்போம். அருட்பணி ஊழியத்தைத்தாங்க அநேகக் குடும்பங்கள் தானாக முன்வந்து ஊழியங்களைத் தாங்கி வருகின்றனர்.

குடும்பப் பிரச்சனைகளால் தற்கொலை செய்து கொள்ளஇருந்த குடும்பங்கள், விவாக ரத்துக் கோர இருந்த

குடும்பங்கள் ஆகியவற்றை ஒன்று சேர்த்துச் சந்தோஷமாக வாழ உதவி செய்திருக்கிறோம். உதாரணத்திற்கு ஒரு குடும்பத்தைப்பற்றிச் சொல்லுகிறேன். கணவன், மனைவி இருவரும் நன்கு படித்தவர்கள். அரசுக் கல்லூரியில் விரிவுரையாளராக இருவரும் பணியாற்றிக் கொண்டிருந்தனர். இருவரும் கைநிறைய மாத ஊதியம் பெற்றுவந்தனர். இருவரும் வெவ்வேறு தேவ ஊழியத்தில் ஈடுபட்டிருந்தனர். ஒருவருக்கொருவர் தாழ்ந்து போகமாட்டார்கள். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கமாட்டார்கள். எப்பொழுதும் அவர்கள் இருவருக்கும் சண்டையும் வம்புமாகவே இருக்கும். அடிக்கடி நானும் எனது மனைவியும் அந்த வீட்டிற்குச் சென்று ஜெபித்து நல் ஆலோசனைகளைக் கொடுத்து வருவோம். ஒருநாள் என் அலுவலகத்திற்கு சென்றதிலிருந்தே இன்று மாலை அவர்கள் வீட்டிற்குச் செல்லவேண்டும் என்ற ஓர் உந்துதல் என் உள்ளத்தில் ஏற்பட்டுக்கொண்டே இருந்தது. அன்று நான் அலுவலகத்திலிருந்து திரும்பியவுடன் என் மனைவியிடம் இதைக்குறித்துப் பேசினேன். எனது மனைவி பிள்ளைகளுக்கு வேண்டிய இரவு உணவுகளைத்தயாரித்து வைத்துவிட்டு நாங்கள் இருவரும் அன்று மாலை அந்த வீட்டிற்குச் சென்றோம். அந்த வீடு ஒரு போர் நடந்து முடிந்த போர்க்களம் போல் காட்சியளித்தது. வீட்டின்தட்டுமுட்டுச்சாமான்கள் சிதறிக்கிடந்தன. புயலுக்குப்பின் அமைதி என்பது போன்று எங்களைக்கண்டதும் அவர்கள் இருவரும் மௌனமாக இருந்தார்கள். நாங்கள் இருவரும் நடந்த சம்பவங்களை ஒருவாறு யூகித்துக் கொண்டு எனது மனைவியை அந்தச் சகோதரியுடன் பேசிக் கொண்டிருக்கும்படி சொல்லி விட்டு அந்தச் சகோதரரை மட்டும் நான் தனிமையான இடத்திற்கு அழைத்துச் சென்று இன்று என்ன நடந்தது என அவரிடம் விசாரித்தேன். அவர் நடந்த சம்பவங்களைக்கூறி, அவர் வீட்டில் சாப்பிட்டு 3 நாட்களாகிறது என்று என்னிடம் கூறி அழ ஆரம்பித்துவிட்டார். நான் அவரை ஆறுதல்படுத்தி அவருக்காக பாரத்தோடு ஜெபித்து அவரை அருகில் உள்ள உணவகத்திற்கு அழைத்துச் சென்று உணவு அருந்தச்செய்தேன். அவர் என்னிடம் சொன்னார் இன்று நீங்கள் வந்து என்னைச் சந்தித்திருக்கா விட்டால் நான் இன்று இரவு ஒரு லாட்ஜில் அறை எடுத்து விஷத்தை உண்டு தற்கொலை செய்துகொள்ள வேண்டும் என்ற

திட்டத்துடன் இருந்தேன். நீங்கள் வந்து இந்த விபரீதச் செயலிலிருந்து என்னைக் காப்பாற்றியிருக்கிறீர்கள் என்று கூறி அழ ஆரம்பித்தார். எனக்கு இந்த உலகத்திலும் பாடுகள் இந்த விபரீதச் செயலை நான் செய்திருந்தால் என் தேவனிடத்திலும் செல்ல முடியாமல் போயிருக்கும் என்று தன் குற்றங்களை உணர்ந்தவராகப் பேசினார். நான் மீண்டும் அவரை ஆறுதல் படுத்திச் சமாதானப்படுத்தி அவர் வீட்டில் கொண்டுவந்து விட்டேன். என் மனைவியும் அந்த சகோதரிக்கு நல் ஆலோசனைகளை நல்கி இருவரும் ஜெபித்திருக்கிறார்கள், நானும் அவர்கள் இருவரையும் அவர்கள் பிள்ளைகள் இருவரையும் வைத்து ஜெபித்துவிட்டு எங்கள் வீட்டிற்குத் திரும்பினோம், அன்று இரவு நாங்கள் வீடு திரும்புவதற்கு இரவு 10 மணிக்கு மேல் ஆயிற்று. எனினும் ஒரு குடும்பத்தை ஏற்ற சமயத்தில் சந்திக்க, அவர்களைப் பெரிய இழப்பிலிருந்து காப்பாற்ற தேவன் கொடுத்த அந்த நல்ல வாய்ப்புக்காகத் தேவனுக்கு நன்றி செலுத்தினோம். அவர்கள் இருவரும் அன்று சேர்ந்து ஜெபித்திருக்கிறார்கள். அன்றிலிருந்து இருவரும் மனம் திருந்திப் புது வாழ்வு துவக்கி உள்ளார்கள். இன்று சமாதானத்துடன் வாழ்ந்து கொண்டு தேவப்பணி செய்து கொண்டிருக்கிறார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

எங்களது நெருங்கிய உறவினர் தஞ்சையைச் சேர்ந்தவர்கள் அரபு நாடுகளில் வாழ்ந்துவந்தனர். வெளி நாட்டில் அவர்களுக்கு அதிகமான வருமானம் கிடைத்தது. செல்வச்செழிப்போடு வாழ்ந்து வந்தனர். அவர்கள் விடுமுறையில் தஞ்சைக்கு வந்து சில மாதங்கள் அவருடைய பெற்றோருடன் இருந்துவந்தனர். இந்த நாட்களில் மாமியாருக்கும் மருமகளுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் அந்தப் பெண்ணைப் பிரசவத்திற்காகப் பெங்களூரில் உள்ள தன் தாய்வீட்டிற்கு அனுப்பியிருக்கிறார்கள். தாய்வீடு சென்ற பிறகு அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்திருக்கிறது. இந்தத் தம்பியும் பெங்களூர் சென்று மகளைப்பார்த்துத் தங்கி வந்திருக்கிறார். குழந்தை பிறந்த சில மாதங்களுக்குப் பிறகு மனைவியை அழைத்திருக்கிறார். அவருடைய மனைவியினுடைய தகப்பனாரும், அண்ணனும் அவர்களைத் தஞ்சாவூருக்கோ

அல்லது தான் பணியாற்றும் அரபு நாட்டிற்கோ அனுப்பிவைக்க மறுத்து விட்டார்கள். இதற்கு இடையில் அவர்களுடைய பெற்றோர் சமாதானப்படுத்திப் பெண்ணை அழைத்துவர எடுத்த எல்லா முயற்சிகளும் தோல்வி அடைந்தன. பலாத்காரமான முறையில் தூக்கிவர எடுத்த அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்தன. இவர்கள் பிரிந்து 7 வருடங்கள் ஓடிவிட்டது. இவர்கள் குடும்பம் ஒன்று சேருவதற்காகப் பலர் ஜெபித்தார்கள். பல ஊழியக்காரர்கள் ஜெபித்தார்கள். நாங்களும் ஜெபித்தோம், என்னை ''பெங்களூர்'' சென்று அந்தக்குடும்பத்தோடு பேசும்படி அழைத்தார்கள். என் தேவன் எனக்குப் பெங்களூர் செல்ல ஒரு வாய்ப்பைக் கொடுப்பாரானால் நான் மாத்திரம் சென்று பார்த்துப் பேசி வருகிறேன் என்று சொல்லிவிட்டேன். 1987-ம் ஆண்டு நான் IEM போர்டு மெம்பராக இருந்ததினால் தலைமை இடமான பெங்களூருக்கு சென்று போர்டு மீட்டிங்கில் கலந்து கொண்டுவிட்டு இவர்கள் கொடுத்த முகவரியில் அவர்கள் வீட்டை தேடி கண்டு பிடிக்க முடிய வில்லை. மறுநாள் அங்குள்ள ஒரு நண்பர் இவர்கள் தனக்கு உறவினர்கள்தான் என்று என்னை அவர்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். நாங்கள் அவர்கள் வீட்டிற்கு சென்ற சமயத்தில் அந்தப் பெண் வீட்டில் இல்லை. அங்குள்ள ஒரு ஆங்கிலப்பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்றிக் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அந்தப் பெண்ணின் தகப்பனாரும், அண்ணனும் வீட்டில் இருந்தார்கள். நான் அவர்கள் குடும்பத்திற்காக முதலில் ஜெபித்தேன். நான் ஜெபிக்கும்பொழுதே நான் அங்கு வந்த நோக்கத்தை புரிந்துகொண்டார்கள் போலும். ஜெபம் முடிந்தவுடனே கெட்ட வார்த்தைகளால் அவர்கள் மருமகன், மாமியாரைப்பற்றி ஒரு அரைமணிநேரம் பேசித்தீர்த்தார்கள். நான் அமைதியோடு அவைகளைக் கேட்டுக்கொண்டிருந்தேன். அவர்கள் இதுவரையில் எத்தனையோ பேருக்குக் காசு கொடுத்து இங்கு அனுப்பியிருக்கிறார்கள். அப்படித்தான் உன்னையும் இங்கு காசுகொடுத்து அனுப்பி இருக்கிறார்கள் என்று வாய்க்கு வந்தபடி என்னைத் திட்டினார்கள். கடைசியாக ஒன்று சொன்னார்கள். "If you had not come with my ralative I would have necked you out" நீ என்னுடைய உறவினரோடு வராதிருந்தால் உன்னை

வீட்டுக்குள் ஏறவிடாமல் பிடரியைப்பிடித்து வெளியே தள்ளியிருப்பேன் என்றார்கள். இவை எல்லாவற்றையும் பொறுமை யோடு கேட்டுக்கொண்டு அவர்களிடம் உணர்ச்சி வயப்படாமல் பொறுமையோடு சொன்னேன் நான் இங்கு வருவது உங்கள் சம்பந்தி வீட்டிற்குக் கூடத் தெரியாது. நான் மிஷனரி ஊழியம் சம்பந்தமாகத்தான் பெங்களூருக்கு வந்தேன். இளம் உள்ளங்களை அவர்கள் குடும்ப வாழ்க்கையை நடத்த விடாதபடி நீங்கள் தடையாக இருக்கிறீர்கள். பல ஆண்டுகளாக அவர்களைப் பிரித்து வைத்திருக் கிறீர்கள். இதைத்தான் நான் கடவுளுடைய ஊழியக்காரன் என்ற முறையில் உங்களுக்கு உணர்த்திக்காட்ட இங்கு வந்தேன். வேறு உங்கள் மீது எனக்கு எந்தவிதமான விருப்பு வெறுப்பு கிடையாது. வேதத்தில் மத் 5:9 -ல் கூறியபடி ''சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்'' என்று கூறப்பட்டிருக்கிறது. இவ்விதமான சமாதானத்தில் ஈடுபடும் பொழுது எந்தவிதமான ஏச்சுப்பேச்சுக்களையும் அவமானத்தையும் சகிக்க ஆயத்தமாக இருக்கிறேன் என்றேன். ஒன்றை உங்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன், உங்களைவிட எனக்கு அதிகம் பேசத்தெரியும். அப்படிப் பேசினவன்தான் நான். ஆனால் இப்பொழுது எனது ஐம்புலன்களையும் ஆளுகை செய்யும்படி என் இயேசுவினிடம் கொடுத்துவிட்டேன். அவைகளைச் சிலுவையில் அறைந்து விட்டேன். ஆவியானவர் என்னை முற்றிலுமாக ஆட்கொண்டு என்னை வழிநடத்த அவரது பலிபீடத்தில் ஊற்றிவிட்டேன். எனவே நீங்கள் பேசுகிறபடி நான் பேச முடியாது. இதனை நீங்களே சிந்தித்துப்பாருங்கள் என்று சொல்லிவிட்டு நான் தஞ்சை வந்துவிட்டேன். நான் தஞ்சை வந்தபிறகு மேற்கண்ட விபரங்களை மனைவியைப் பிரிந்து இருக்கும் மகனுடைய மைத்துனர்களுக்கு எடுத்துக் கூறினேன். அவர்கள் இருவரும் எனது மைத்துனரின் குடும்பம் இனி சேர்ந்து வாழ்வதற்கு உரிய வாய்ப்பே இல்லை. ''இது இனிமேல் நடக்கவே நடக்காது'' என்று விரக்கியோடு கூறினார்கள். நான் இது மனிதனால் கூடாதுதான். என் தேவனால் எல்லாம் கூடும் என்று கூறினேன். லூக் 1:37-இல் இவ்விதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. நீங்கள்

விசுவாசித்தால் தேவனுடைய மகிமைக் காண்பீர்கள் என்று கூறினேன். அவர்கள் என்னிடம் சவால் விட்டார்கள் இந்தக் குடும்பம் ஒன்று சேர்ந்தால் அவர்கள் இருவரும் ஒருபக்கத்து மீசையை எடுத்துக் கொள்ளுகிறோம் என்றார்கள். நீங்கள் இதற்காக ஒருபக்கத்து மீசையை எடுத்துக்கொள்ள வேண்டாம். இயேசுவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுங்கள். இரட்சிப்புக்குள் வாருங்கள் என்று கூறிவிட்டு எனது வீட்டிற்கு வந்தேன். இதன் பிறகு சில மாதங்களுக்குப்பிறகு தன் மனைவியைப் பிரிந்திருக்கிற தம்பியினுடைய பெற்றோர் மருத்துவக் கல்லூரிப் பகுதிக்கு வீட்டை மாற்றிக் கொண்டு நவபாரத் ஆங்கிலப் பள்ளியில் தங்களது பேரனை படிக்கவைத்துக் கொண்டிருந்தார்கள்.

நானும் எனது மனைவியும் ஒருநாள் சாயங்காலம் அவர்கள் வீட்டிற்கு ஜெபத்திற்காக சென்றோம். அன்று அவருடைய திருமண நாள். அவரும் விடுமுறையில் வந்திருந்தார். தேவன் தனது மனைவி மகளுடன் சேர்த்துவைப்பார் என்று ஊறுதியாக 7 ஆண்டுகள் நம்பிக்கையோடு காத்திருந்தார். உற்றார் உறவினர்கள் அவரை 7 ஆண்டுகளுக்குப் பிறகு இனிமேல் அவர்கள் எங்கே சேர்ந்து வாழப்போகிறார்கள் என்றும் அவர்களுடைய விவாகரத்துக்கான ஏற்பாடுகளைச் செய்யலாம் அதற்கான வழக்குரைஞரைப் பார்க்கலாம் என்று அந்தத் திருமண நாளிளே அனைவரும் சோகத்தோடு யோசித்துக் கொண்டிருந்தார்கள். நாங்கள் இருவரும் அவர்களுக்கு சில ஆலோசனைகளைக் கொடுத்தோம். அவர்களுக்காக ஜெபித்து வருவதற்கு முன் நீங்கள் தேவனுடைய பாதத்தில் அமர்ந்து பாவங்களை அறிக்கையிட்டு உபவாசித்து ஜெபியுங்கள். தேவன் மனதிரங்கி அடுத்த ஆண்டு இதே நாளில் அவர்கள் இருவரும் சேர்ந்திருக்கச் செய்வார். என் தேவனால் செய்யக் கூடாத அதிசயம் ஒன்றும் இல்லை என்று ஜெபித்து எங்கள் வீடு திரும்பினோம்.

என்ன ஆச்சரியம் பாருங்கள் சிலதினங்களில் நவபாரத் ஆங்கிலபள்ளியில் பணியாற்றும் ஒரு ஆங்கிலோ இந்தியன் ஆசிரியை நவபாரத்தில் அவர்களிடத்தில் படிக்கும்

இவர்களது பேரனை பார்க்க வந்திருக்கிறார்கள். இதற்குமுன் அந்த ஆசிரியை பெங்களூரில் இவர்கள் மருமகள் பணியாற்றும் பள்ளியில் பணியாற்றி இருக்கிறார்கள். அவர்களிடம் தன் மகனுடைய காரியங்கள் எல்லாவற்றையும் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் மருமகள் பணியாற்றும் பள்ளியின் தலைமை ஆசிரியை மிகவும் நல்லவர். கணவன் மனைவி பிரிந்து வாழ்வது அவர்களுக்குப் பிடிக்காத ஒன்று. இவ்விவரம் அவர்களுக்குத் தெரிந்தால் அவர்களே முயற்சி செய்து இருவரையும் சேர்த்து வைப்பார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். உடனே அவர்களும் அந்த ஆசிரியையும் எனது அண்ணியையும் அழைத்துக்கொண்டு பெங்களூர் சென்று அந்தப்பள்ளியின் தலைமை ஆசிரியையைச் சந்தித்திருக்கிறார்கள். விபரங்களை அவர்களிடம் சொல்லியிருக்கிறார்கள். அவரும் அவர் மனைவியும் தனியே சந்தித்து மனம் விட்டுப்பேச ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பிரிந்த குடும்பம் ஒன்று சேர்ந்தது. ஏழு ஆண்டுகளாகச் சேர்ந்து வாழ முடியாத குடும்பத்தை ஒரு சில மாதங்களில் இணையச்செய்து இருக்கிறார் என் தேவன். நாங்கள் ஜெபித்துவிட்டு வந்தபடி மறு ஆண்டு திருமணநாளில் இருவரும் இணைந்து திருமணநாளைக்கொண்டாடச் செய்திருக்கிறார். என்ன ஆச்சரியம் பாருங்கள் ! என் தேவனால் கூடாத காரியம் ஒன்றும் இல்லை. இப்பொழுது அவர்கள் மகிழ்ச்சியாகக் குடும்பம் நடத்தி வருகிறார்கள். அவர்கள் தங்களது பெரிய மகளுக்கு திருமணம் முடித்து பேரப்பிள்ளையையும் என் தேவன் காணச் செய்திருக்கிறார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

அடுத்து தஞ்சையில் எங்கள் திருச்சபையைச் சேர்ந்த ஒரு குடும்பம் இருந்தது. அவர்களுக்கு ஒரே ஒரு மகன் இருந்தான், அவனை மிகவும் அன்பாகவும் செல்லமாகவும் வளர்த்து வந்தனர். அவன் ஆரம்பப்பள்ளியில் படிக்கும் பொழுதெல்லாம் மிகவும் நல்லப் பையனாக இருந்தான். உயர்நிலைப்பள்ளிக்குச் சென்ற பிறகு தகாத மாணவர்களுடன் சேர்ந்து பல தீய பழக்க வழக்கங்களைக் கற்றுக்கொண்டான். நாங்கள் மாணவர் ஊழியத்திலும் இருந்து வந்தபடியால் மாணவர்களைக் குறித்து அக்கறை உள்ளவர்களாக இருப்போம். இவன் புகைபிடிப்பது, மாத்திரை போடுவது போன்ற

காரியங்களைச் செய்து வந்தான். நான் அவனைத் தனியாகச் சந்தித்து ஆலோசனை கூறி அறிவுரைகள் வழங்கினேன். அவன் கேட்காமல் தன் தீய பழக்க வழக்கங்களில் தொடர்ந்து ஜீவித்து வந்தான். ஒரு நாள் நான் அவனுடைய அம்மாவைச் சந்தித்துத் தம்பியை நன்கு கவனித்துக் கொள்ளுங்கள், அவனுடைய நடவடிக்கைகள் சரி இல்லாமல் இருக்கின்றன. அவன் தீய நண்பர்களோடுசேர்ந்து மாத்திரை போடுவதாகத் தெரிகிறது என்று கூறினேன். அவனுடைய அம்மா என்னிடம் அதிகம் கோபப்பட்டார்கள். என்னுடைய மகனைப்பற்றி எப்படி நீங்கள் அவ்வாறு சொல்லலாம்? அவனைப்போல நல்லப்பிள்ளை இந்த உலகத்திலேயே யாரும் இல்லை. அவனைப்பற்றி இப்படி அவதூறாகச் சொல்லலாமா என்று என் மீது கோபமும் எரிச்சலும் கொண்டார்கள். அவர்களிடம் நான் எனக்குத்தெரிந்ததை முன் எச்சரிக்கைக்காக உங்களிடம் சொன்னேன். தவறு இருக்குமானால் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அவன் தன் பழக்க வழக்கங்களில் தொடர்ந்து முன்னேறிக்கொண்டு வந்தான். ஆலயத்திற்கு வரும் பொழுதும் தள்ளாடிக்கொண்டு வருவான். நாளடைவில் அவனது பழக்க வழக்கங்கள் அவன் அம்மாவுக்குத் தெரிய வந்துள்ளன. அவர்கள் கண்டித்தும் அவன் கேட்கவில்லை. அவன் உயர்நிலைப்பள்ளிப் படிப்பு, கல்லூரிப் படிப்பை முடித்த மறுவருடத்தில் நீதித்துறையில் அவனுக்கு எழுத்தர் வேலை கிடைத்தது. சிலவருடங்கள் அதில் பணியாற்றினான். நாளுக்கு நாள் அவன் தீயப் பழக்கங்கள் அதிகரித்தன. பணிக்குச் செல்வதிலிருந்து நின்றுவிட்டான். ஒரு நாள் அவன் அம்மா என்னிடம் வந்து என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். நீங்கள் ஆரம்பத்தில் எச்சரித்ததை நான் தவறாக எடுத்துக்கொண்டேன். நாளுக்குநாள் எனது மகனின் நிலமை மோசமாகிக் கொண்டே போகிறது. அவனை நீங்கள்தான் திருத்தவேண்டும் என்று சொல்லி என்னிடம் அழுதார்கள்.

நான் அவனை எப்படியாவது திருத்திவிட வேண்டும் என்று பல முயற்சிகள் எடுத்தேன். ஆனால் அவனுடைய நிலமை காலம் கடந்து விட்டது. அவனுக்கு ஒரு வேலை வாங்கிக் கொடுத்தால் ஒரு வேளை திருந்துவான் என்று

சொல்லித தூய லூக்கா ஆங்கிலப்பள்ளியில் பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் அவனுக்கு வேலை வாங்கிக் கொடுத்தேன். சில வருடம் அப்பள்ளியில் பணியாற்றினான். ஆனாலும் அவன் செயல்பாடுகளில் மாற்றம் இல்லை. பள்ளி வேலையிலிருந்தும் நின்றுவிட்டான். அளவுக்கு அதிகமான மாத்திரைகளைக் போட்டு விழுந்து அடிப்பட்டு வீட்டுக்கு வருவான். அவனுடைய வீடு ஆற்றுக்கு அருகாமையில் இருந்தது. ஒருநாள் இரவில் நன்றாக மாத்திரைகளைப் போட்டுவிட்டு தள்ளாடிக்கொண்டு வரும் பொழுது கால் சறுக்கி ஆற்றுக்குள் விழுந்து முகம், கைகால்கள் அடிப்பட்டுக் கையெலும்பு முறிந்து அங்கேயே இரவு முழுவதும் விழுந்து கிடந்திருக்கிறான். காலையில் அவனைப் பார்த்தவர்கள் தூக்கிக்கொண்டுவந்து கட்டுப் போட்டு வீட்டில் விட்டுவிட்டுப்போயிருக்கிறார்கள். நான் அவனைப் பார்க்கச் சென்றிருந்தேன். அப்பொழுது அவன் அம்மா சொன்னது என்ன தெரியுமா? நான் என்ன பாவம் பண்ணினேனோ தெரியவில்லை. இவன் ஆற்றில் விழுந்த பொழுது தண்ணீர் கூட இல்லை. ஆற்றில் தண்ணீர் போயிருந்தால் இவனும் அப்படியே அதில் போயிருப்பான் அல்லவா என்று அங்கலாய்த்தார்கள். அவன் காயங்கள் எல்லாம் ஆறி முறிந்த எலும்புகள் ஒன்று சேர்ந்தன. நான் அப்பொழுது நாஞ்சிக்கோட்டை சாலையில் உள்ள தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் இணையத்தின் ஆடிட்டராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன். இவனை எப்படியாவது திருத்திக் கடவுளுக்குள் வழிநடத்த வேண்டுமென்று நான் பணி ஆற்றிய அந்த பால் உற்பத்தியாளர் இணையத்தில் தினக்கூலி (Daily Wages) அடிப்படையில் அவனுக்கு ஒரு வேலை வாங்கி கொடுத்தேன். அவனோடு அதிக நேரம் செலவிட்டேன். மத்தியான இடைவேளைகளில் மரங்கள் அடர்ந்த பகுதிக்குச் சென்று முழங்காலில் நின்று இருவரும் ஜெபிப்போம். அப்பொழுது அவன் மனம் கசந்து அழுது ஜெபிப்பான். அப்பொழுது அவன் சொல்லுவான், அண்ணன்! இந்தப் பழக்கத்தை விட்டுவிட வேண்டுமென்று நான் மனதார விரும்புகிறேன். ஆனால் அது என்னை விடமாட்டேன் என்கிறது என்று அழுவான். அவன் மாத்திரை போடாவிட்டால் அவன் கைகால்கள் எல்லாம் ஆட ஆரம்பித்துவிடும். ஆரம்பத்தில் இவன் மாத்திரைக்கு அடிமையானான் காலஓட்டத்தில்

மாத்திரை இவனை அடிமைப்படுத்திவிட்டது. அதிலிருந்து அவன் விடுபடவே இல்லை. அடிக்கடி கீழே விழுந்து உடம்பெல்லாம் அடிபட்டுக் காயங்களோடு வருவான். நான் ஆடிட்டர் பொறுப்பிலிருந்து வேறு இடத்திற்கு மாற்றப்பட்ட ஒரு மாத காலத்திற்குள் அவனை இந்த வேலையிலிருந்து நிறுத்தி விட்டார்கள். அவனுடைய மன மாற்றத்திற்காகத் தொடர்ந்து போராடி ஜெபித்துக்கொண்டு வந்தேன். எப்படியாவது இவன் திருந்தமாட்டானா என்று. சில மாதங்களுக்குப் பிறகு அவன் முன்போலவே நிறைய மாத்திரைகளைப் போட்டுக் கொண்டு இரவு வேளையில் தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்து கொண்டிருந்தபொழுது கால் சறுக்கி ஆற்றில் விழுந்துவிட்டான். அப்பொழுது ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டு இறந்து விட்டான். 3 நாட்கள் ஆகியும் இவன் வீடு திரும்பவில்லை என்று இவனைப்பல இடங்களில் தேடியிருக்கிறார்கள். மூன்று நாளைக்குபிறகு அவனுடைய பிணம் சூரக்கோட்டைக்கு அருகாமையில் ஆற்று ஓரத்தில் உள்ள ஒரு பெரிய சூரைச் செடியில் ஒதுங்கி இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. கண்கள் இரண்டும் இல்லை, உதடுகள் இல்லை, காது மூக்கு இல்லை. சரீரம் முழுவதும் அழுகி நாற்றம் எடுத்தது. சரீரத்தை மூட்டையாகக் கட்டிக் காரின் டிக்கியில் போட்டு வீட்டிற்குக் கொண்டு வந்தார்கள். **Post Mortem** செய்தபிறகுதான் அடக்கம் செய்ய அனுமதிப்போம் என்று காவல்துறையினர் சொல்லி விட்டார்கள். இறந்து மூன்றாம் நாள் மாலை பிரேதப் பரிசோதனைக்கு மருத்துவக்கல்லூரி மார்ச்சரிக்கு அனுப்பப்பட்டது. நான்காம் நாள் காலை 11 மணிக்கு **Post Mortem** செய்யப்பட்டது. டாக்டர். சாம்சன் அங்குப் பணியாற்றியதால் அறைக்குள் சென்று நான் பார்த்தேன். அப்பொழுது அவனது உடம்பெல்லாம் அரிக்கப்பட்டிருந்தது. கண்கள் இரண்டும் இல்லை, உதடுகள் இல்லை, காது மூக்கு இல்லை. அப்பொழுது எப்படி இருக்கும் பாருங்கள். அவனுடைய சரீரம் அந்த ஈனக்கோலம் அடைந்து சிதைந்து இருந்தது. அந்த சரீரத்தை மூட்டையாகக் கட்டி மருத்துவமனையிலிருந்து கொடுத்தார்கள். ஒரு மணிக்கு மேல் நேரே கல்லறைத் தோட்டத்திற்கு எடுத்துச் சென்று அடக்கம் செய்து விட்டு வந்தோம். இவனுக்காக நான்பட்ட பாடுகள் வீணாய்ப்போயிற்று. இவனுடைய வாழ்க்கை இன்றைய

பெற்றோர்களுக்கும் இன்றைய வாலிபர்களுக்கும் ஓர் எச்சரிக்கையாக அமைந்து உள்ளது. நீதி 22:6 -ல் சொல்லுகிறது ''பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து, அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான்'' பிள்ளைகளை நடத்தவேண்டிய விதத்தில் நடத்த வேண்டும் என்று பெற்றோருக்கு எச்சரிக்கைக் கொடுக்கிறது. நீதி 30 : 17 சொல்லுகிறபடி ''தகப்பனைப் பரியாசம் பண்ணி தாயின் கட்டளையை அசட்டை பண்ணுகிறவனின் கண்ணை நதியின் காகங்கள் பிடுங்கும், கழுகின் குஞ்சுகள் தின்னும்'' இது இன்று தறுதலையாகத்திரியும் வாலிபர்களுக்கு ஓர் எச்சரிக்கையாக அமைந்துள்ளது. இது போன்று எங்களது ஊழியத்தின் பாதைகளில் அநேகச் சம்பவங்கள் உண்டு அவைகளை ஒவ்வொன்றாக எழுதப் போனால் புத்தகம் இடம் தராது. காலமும் போதாது. உதாரணத்திற்காகச் சிலவற்றைக் குறிப்பிட்டேன்.

எனது மாமனார், மாமியார் குடும்பம் :

எனது மாமியார் எனது அப்பாவின் சித்தப்பா மகள். எனது அம்மாவின் அத்தை மகள் ஆவார்கள். நான் 5 மாத குழந்தையாக இருந்த பொழுது எனது பெற்றோர் எனது மாமியாரின் திருமண நிச்சயதார்த்ததிற்காகக் குடும்பமாகத் தஞ்சை வந்திருக்கிறார்கள். வந்த இடத்தில் எனது அம்மாவுக்கு அதிக சுகவீனம் ஏற்பட்டது. என் அம்மா மருத்துவ மனைக்குச் செல்லும் பொழுது கைக்குழந்தையாகிய என்னை எனது மாமியாரிடம் கொடுத்துப் பிள்ளையைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுங்கள் அத்தாச்சி, நான் ஆஸ்பத்திரிக்குச் சென்று வருகிறேன் என்று சொல்லி அவர்களிடம் கொடுத்துச் சென்றிருக்கிறார்கள். மருத்துவமனைக்குக் கொண்டு சென்றவர்களைப் பிரேதமாகத்தான் வீட்டுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதன் பிறகு உறவினர்கள் பலர் என் மாமியாரிடம் உன் அத்தாச்சி கடைசியாக உன்னிடம்தான் பிள்ளையைப் பத்திரமாக பார்த்துக்கொள்ளும்படி சொல்லி விட்டு மறுமைக்குச் சென்றிருக்கிறார்கள். அதனால் திருமணம் ஆனபின் ஒரு பெண்ணைப்பெற்று அந்தப் பையனுக்கே கொடு என்று சொல்லுவார்களாம். இதை மனதில் வைத்துத்தான் பல எதிர்ப்புகளிடையே எனக்கு அவர்கள் தன் மகளைக் கொடுக்க

முன் வந்ததாக என் மாமியார் அடிக்கடி சொல்லுவார்கள். நானும் கேட்டிருக்கிறேன்.

எனது மாமனாரும் மாமியாரும் என்னை அவர்கள்பிள்ளைகளில் ஒருவராகக் கருதி மிகவும் அன்போடு நடத்துவார்கள். அவர்கள் குடும்பத்திற்கும் நான் இன்று ஆறுதலாக இருந்து வருகிறேன். எனக்கு திரு. ஜெயசீலன், திரு. ஜெயச்சந்திரன், திரு. ஜெயசேகர் ஆகிய மைத்துனர்களும், திருமதி. மேரி மங்கையர்க்கரசி என்ற மைத்துனியும் இருக்கின்றனர். அவர்கள் அனைவரும் என்னிடத்தில் மிகவும் அன்பாகவும் மரியாதையுடனும் இருப்பார்கள். அவர்கள் நால்வருக்கும் நானும் எனது மனைவியும்தான் பெண் பார்த்து, மாப்பிள்ளை பார்த்து முன்நின்று திருமணங்களை நடத்தி வைத்தோம். அவர்கள் அனைவரும் நலமுடன் இருந்து வருகின்றனர். எனது மாமனார் தனது 92 வயது வரை திடகாத்திரமாக இருந்து 1998-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 11-ம் நாள் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். எனது மாமியாருக்கும் 85 வயதாகிறது. அவர்கள் எங்கள் வீட்டில் சிலநாட்கள் இருப்பார்கள். தற்பொழுது எனது கடைசி மைத்துனர் திரு. ஜெயசேகர் வீட்டில் தஞ்சாவூர் புது ஹவுஸிங் யூனிட் பகுதியில் இருந்து வருகிறார்கள். நான் வாரத்திற்கு இரண்டு முறைக்குக் குறையாமல் அவர்களுக்கு வேண்டியதை வாங்கிக் கொடுத்துவிட்டுப் பார்த்து வருகிறேன். எபேசி 2:3 "உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக" என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாம் கற்பனையாக இருக்கிறது. மனைவியின் பெற்றோரும், கணவனின் பெற்றோரும் இந்தக் கனத்திற்கு உரியவர்கள். நாம் ஆசீர்வாதமாக இருக்க, பெற்றோர்கள் வாழ்நாள் முழுவதும் கனம் பண்ணப்படவேண்டும்.

15. ஊழியத்தின் பாதையில் உடன் பிறவா அண்ணன் மறைதிரு.டாக்டர். தியோடர் வில்லியம்ஸ்

நாங்கள் அனைவரும் மறைதிரு. டாக்டர்.

தியோடர் வில்லியம்ஸ் அவர்களை அண்ணன் என்றும், அவர்கள் மனைவியை அண்ணி என்றுதான் அன்போடு அழைப்போம். அவர்கள்தான் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவை ஆரம்பித்தவர்களில் ஒருவர். இந்திய அருட்பணி இயக்கத்தின் நிறுவனர். முதல் பொதுச் செயலாளர். முதல் தலைவர் ஆவார்கள். அண்ணன் அவர்கள், அவர்கள் குடும்பத்தின் மூத்த மகன். அவர்கள் அந்தக்காலத்தில் எம்.ஏ., புள்ளியியல் பட்டம் பெற்று அதன் காரணமாக பல வேலைகள் அவர்களைத் தேடிவந்தன. ஆனால் அண்ணன் அவைகளை ஏற்றுக் கொள்ள வில்லை. அந்த நாட்களில் இச்செயல் அவர்களின் பெற்றோருக்குப் பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்தது. தன் மகன் பெரிய வேலைக்குச் சென்று குடும்பத்தைக் காப்பாற்றுவார் என்று எதிர்ப்பார்த்தார்கள். ஆனால் அவர்களுக்குக் கடவுளின் திட்டம் மற்றும் அழைப்பு வேறாக இருந்தது. மிஷனரிப்பணி அவர்களுக்கு ஒரு சவாலாக இருந்தது. அதற்கு முற்றிலுமாகக் கீழ்ப்படிந்தார்கள். அவர்களது இறுதி மூச்சு இருக்கும் வரைக்கும் அவருடைய பணியைச் செய்து மடிவது அவர்களது குறிக்கோளாக இருந்து வருகிறது. இரவும் பகலும் உழைத்து வருகிறார்கள். இன்று உலகத்திலேயே சத்திய வசனத்தைச் சத்தியமாக ஆணித்தரமாகப் போதிக்கிற ஒரு சிலரில் அண்ணனும் ஒருவர் ஆவார்கள். வானொலியில் சத்தியவசனச் செய்திகளின் மூலம் பிரபலமானவர்கள். பல ஆவிக்குரிய புத்தகங்களை எழுதியிருக்கிறார்கள். அவைகளில் தெளிவாக வேதங்களில் உள்ள சத்தியங்களை எழுதியிருக்கிறார்கள். தேவன் அவர்களுக்கு ஈவாகக்கொடுத்தது அபாரமான ஞாபக சக்தி, அவர்கள் உலகம் முழுவதும் ஊழியத்தின் நிமித்தமாகச் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கிறார்கள். பலரைச் சந்தித்து இருக்கிறார்கள். பல ஆண்டுகளுக்குப்பிறகு அந்த நபரை சந்திக்க நேர்ந்தால் பெயர் சொல்லி அழைக்கும் நினைவு ஆற்றல் அண்ணனுக்கு உண்டு. அண்ணன் அவர்களுக்கு யார் கடிதம் எழுதினாலும், அவைகளை நன்றாகப் படித்து அவர்களுக்கு விபரமாக பதில் கடிதம் எழுதும் ஆற்றல் உண்டு. இது வேறு எந்தத் தலைவருக்கும் இல்லாத சிறப்பு அம்சமாகும். அண்ணன் அவர்கள் பல சுவிசேஷ இயக்கங்களுக்குத் தலைவராக இருந்திருக்கிறார்கள். குறிப்பாக அகில உலக சுவிசேஷ ஐக்கியத்தின்

நிறுவனத்திற்கு பல ஆண்டுகள் தலைவராக இருந்து சிறப்பான பணியாற்றி இருக்கிறார்கள். நான் 1974-ம் ஆண்டு இந்திய அருட்பணி இயக்க ஊழியம் தொடர்பாக முதன் முதலில் அண்ணன் அவர்களை மதுரையில் வைத்து சந்திக்க நேர்ந்தது. அந்நாள் முதற்கொண்டு இந்நாள் வரை எனக்கு ஒரு உற்ற சகோதரர்போல் இருந்து வருகிறார்கள். அருட்பணி ஊழியத்தில் என்னை அதிகம் உற்சாகப்படுத்தி இவ்வியக்கத்தில் எனக்குப் பல பொறுப்புகளைக் கொடுத்து அதில் சிறப்பாகச் செயல்பட உதவி செய்திருக்கிறார்கள். இந்திய அருட்பணி இயக்கத்தின் நேஷனல் கண்வென்ஷன்கள் மற்ற மாநிலங்களில் நடைபெறும் போது அவை முற்றிலுமாக ஆங்கில மொழியில் நடைபெறும். அண்ணன் அவர்கள் சில கூட்டங்களுக்கு என்னை தலைமை ஏற்கும்படி செய்துவிடுவார்கள். இந்த இயக்கத்தின் ஆட்சிக் குழுவிலும் உறுப்பினராக 3 ஆண்டுகள் பணியாற்றச் செய்திருக்கிறார்கள். இவைகள் எல்லாம் ஊழியத்தின் பாதையில் நான் முன்னேறிச் செல்லுவதற்கு ஏதுவாக இருந்தது. அண்ணன் அவர்கள் கூட்டங்களில் செய்தி கொடுக்கும் பொழுது அடிக்கடி சொல்லுவார்கள். ''உன்னை மற்றவர்கள் புகழ்ந்து பேசும்போது உச்சி குளிர்ந்து பெருமை அடைந்து விடாதே, உன்னை ஊழியத்தின் பாதையில் மற்றவர்கள் இகழ்ந்து பேசும் பொழுது சோர்ந்து செயலற்றுப் போய்விடாதே. புகழ்ச்சி, இகழ்ச்சி இரண்டும் உன் கால்களில் படிந்த தூசிதான். அவைகளை உதறித் தள்ளிவிட்டு முன்னேறிச் செல்'' என்பதாகும். அடுத்து I சாமுவேல் 2:30-ல் பின்பகுதியில் ''என்னைக் கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்'' இவ்வார்த்தைகள் என்னை அதிகம் தொட்டவை, வாழ்வில் என்ன வந்தாலும் ஊழியத்தில் தொடர்ந்து முன்னேறிச் செல்வதற்கு உறுதுணையாக இருந்த வார்த்தைகளாக இருந்து வருகின்றன.

எங்களுக்கு நெருக்கமான நேரங்களில், நான் சுகவீனப்பட்ட நாட்களில், எனது மனைவி சுகவீனப்பட்ட நாட்களில் ஒரே நாளில் எங்களது மூத்த மகள் புனிதவதி பெஞ்சமினின் 3 மகன்களும் எதிர்பாராத மரணம் அடைந்த நாட்களில் அடிக்கடி கடிதம் எழுதி எங்களைத்தேற்றி

வருகிறார்கள். அப்படியேஅண்ணன் அவர்களுக்கு ஏற்பட்ட விபத்துக்கள், சுகவீனங்கள் மற்றும் நெருக்கடியான நேரங்களில் நாங்களும் அவர்களுக்குக் கடிதம் எழுதியும், நேரடியாகப் போய்ச்சந்தித்தும் ஆறுதல் படுத்தி வருகின்றோம். கட்டாயமாக இரண்டு மாதங்களுக்கு ஒருமுறையாவது தவறாமல் கடிதத் தொடர்பு மூலமாக நெருங்கிய உறவு வைத்து வருகிறோம். அவர்களுக்காகவும் அவர்களுடைய ஊழியங்களுக்காகவும் தொடர்ந்து ஜெபித்து வருகிறோம். அவர்களுக்கு 2002-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 12-ம் நாள் இருதய அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்று உள்ளது. அவர்கள் அறுவை சிகிச்சைக்குப் பிறகு நல்ல சுகம் அடைந்து பல ஆண்டுகள் வாழ்ந்து அநேகருக்கு ஆசீர்வாதமாக வாழ நாம் அனைவரும் தொடர்ந்து ஜெபிப்போம். அவர்களை ஊழியத்தில் தேவன் இன்னும் அதிகமாகப் பயன்படுத்த நாம் அனைவரும் தொடர்ந்து அவர்களுக்காக ஜெபிப்போம்.

16. எனது குடும்பம்

நான் தஞ்சாவூர் மாவட்டத்திலேயே எனது அரசுப் பணியைத் துவக்கி 40 ஆண்டுகள் தஞ்சை மாவட்டத்திலேயே முடிக்க என் தேவன் எங்களுக்கு உதவி செய்தார். எனது பணி தமிழ்நாடு முழுவதற்கும் மாற்றல் செய்யக்கூடியப் பணி, எனக்குக் கிடைத்த நான்கு பதவி உயர்வுகளிலும் வெளி மாவட்டங்களுக்கு மாற்றல் வந்தது. அந்த சமயங்களில் எல்லாம் நாங்கள் ஜெபித்துத் தஞ்சை மாவட்டத்திற்குள்ளேயே மாற்றுதல் கிடைக்க மனு அனுப்புவோம். அப்பொழுது நான் தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களுக்கு அருட்பணி இயக்கத்திற்குப் பொறுப்பாக இருந்து வந்தேன். எனது அரசுப்பணிக்கு மத்தியில் அருட்பணியினையும் செய்து வந்தேன். வேறு மாவட்டங்களுக்கு எனக்கு மாற்றல் ஆகும் பொழுது எங்கள் ஜெபம் எல்லாம் இந்த மூன்று மாவட்டங்களிலும் அருட்பணி ஊழியத்தை அர்ப்பணத்தோடு ஏற்றுச் செய்யக்கூடிய ஒருவரைத்தாரும் இல்லாவிட்டால் என்னைத் தஞ்சை மாவட்டத்திலேயே வையும் என்று ஜெபிப்போம். தேவன் எங்கள் ஜெபத்தை ஏற்றுப் பணிக்காலம் முழுவதும்

தஞ்சையிலேயே வைத்துக் காத்துவந்தார். இது எங்கள் பிள்ளைகளின் படிப்பிற்கும் அருட்பணி ஊழியத்திற்கும் பேருதவியாக இருந்தது. தேவனிடத்தில் இந்தத் தயவு அவருடைய அருட்பணியைச் செய்ததினால் கிடைத்த சிலாக்கியம் போலும். அரசுப்பணியில் என்னைத்தவிர வேறு யாருக்கும் இந்த சிலாக்கியம் கிடைக்கவில்லை. எப்படியும் ஒரு தடவை அல்லது இரண்டு தடவையாவது வெளி மாவட்டத்திற்கு சென்று இருப்பார்கள். என் தேவனுக்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக.

எங்களுக்கு 3 பெண்பிள்ளைகளும் ஒரு மகனும் பிறந்தார்கள். அவர்கள் அனைவரையும் தேவனுக்குப் பயப்படுகிற பயத்தில் வளர்க்க எங்களுக்கு உதவி செய்தார். அவர்களுக்குப் போதுமான அளவு படிக்க வைக்கவும் தேவன் உதவி செய்தார். அவர்கள் எல்லாம் சிறு பிள்ளைகளாக இருக்கும் பொழுதே உயர்நிலைப்பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்காக நடத்தப் படும் நற்செய்திமுகாம், சீஷத்துவ முகாம் ஆகியவைகளுக்குக் குடும்பமாகச் செல்லுவோம். அங்கு பள்ளிகளில் சரியான உணவு, தங்கும் வசதி இருக்காது. எனினும் எங்கள் பிள்ளைகள் எந்தச் சூழ்நிலைகளிலும் சிறுபிள்ளைகளிலிருந்தே வாழக்கற்றுக் கொள்ளவேண்டும் என்பதற்காகவே அவர்களுக்குப் பயிற்சி கொடுத்து வழி நடத்தினோம். இது இக்காலத்தில் எங்கள் பிள்ளைகள் மிஷனரி ஊழியத்தில் அதிகமாக ஈடுபட உதவியாக இருக்கிறது என்பதை இன்று உணருகிறோம்.

1977-ம் ஆண்டு மன்னார்குடியில் உள்ள பின்லே உயர் நிலைப்பள்ளியில் மாணவர் மாணவியர்களுக்காக நற்செய்தி முகாம் 3 நாட்கள் வெள்ளிக்கிழமை ஆரம்பித்து ஞாயிறு முடியும். இப்பொழுது தஞ்சாவூர், திருச்சி மறை மாவட்டத்திற்குக் குருத்துவ செயலாளராக இருக்கும் மறைதிரு. பால்வசந்தகுமார் அவர்கள் அந்தப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். அவர்கள்தான் இந்த முகாமிற்குப் பொறுப்பேற்று ஒவ்வொரு ஆண்டும் அங்கு நடத்துவார்கள். முகாம் தொடங்கிய மறுநாளில் பெரும் மழையும், புயலும் அடிக்க ஆரம்பித்தது. நாங்கள் அனைவரும் பின்லே பள்ளிக்கட்டிடத்தில் எங்கள் பிள்ளைகளுடன்

தங்கியிருந்தோம். பள்ளியின் கதவு ஜன்னல்கள் எல்லாம் புயல்காற்றில் பிய்த்துக் கொண்டு பறந்தன. பள்ளியின் மேற்கூரை ஓடுகள் எல்லாம் பறந்தன. நாங்கள் மழையில் நனைந்து கொண்டு தண்ணீரில் ஒரு நாள் முழுவதும் உட்கார்ந்திருந்தோம். பெரும் காற்றும் மழையுமாக இருந்ததால் நாங்கள் வெளியில் எங்கும் செல்லமுடியவில்லை. பள்ளிக்கு அருகில் இருந்த பெரிய பெரிய மரங்களெல்லாம் வேரோடு சாய்ந்தன. அன்றுதான் காற்றுக்கு இவ்வளவு சக்தி உண்டென்று எங்கள் கண்களால் காண முடிந்தது. எங்களது மூன்றாவது மகள் கிரேஸ் சுகுணவதி மழையில் நனைந்து கொண்டு உட்கார்ந்திருந்த பொழுது ஒரு கண்ணாடி காற்றில் பறந்து வந்து அருகில் விழுந்தது. சிறிது தவறியிருந்தால் அந்தக் கண்ணாடி மகளின் கழுத்தைச் சீவி இருக்கும். அப்பொழுது அதற்கு வயது எட்டு, மகனுக்கு 4 1/2 வயது இருக்கும், எங்கள் தேவன் எங்களோடு இருந்ததினால் சேதம் இல்லாமல் காத்துக் கொண்டார். ஒருநாள் முழுதும் உணவு இல்லாமல், இருக்க இடமில்லாமல் தண்ணீரிலேயே இருந்தோம். எங்கள் நான்கு பிள்ளைகளும் உடன் இருந்து அவைகளைப் பொறுத்துக் கொண்டார்கள். அந்த நிலையில் முகாமில் இருந்த நாங்கள் அனைவரும் தேவனைத்துதித்துப்பாடி ஜெபித்துக்கொண்டே இருந்தோம். இது இயேசுவின் இரண்டாம் வருகை நாளில் நடக்கும் சம்பவங்களை எங்களுக்கு நினைவூட்டியது. அந்த 3 நாட்களுக்கும் செய்தி கொடுக்க "Ambassador for Christ" இயக்கத்தின் ஊழியர் திரு. சுந்தர்தோளார் மற்றும் ஸ்டான்லி பிரின்ஸ் அண்ணன் அவர்களும் வந்திருந்தார்கள். அவர்களும் எங்களோடு சேர்ந்து இந்தப்பாடுகளைச் சகித்தார்கள். அந்த சமயத்திலும் ஸ்டான்லி பிரின்ஸ் அண்ணன் எங்கள் அனைவரையும் உற்சாகப்படுத்தி ஜெபித்தும் பாடல்களிலும் வழிநடத்தினார்கள். மறுநாளில் மழை, புயல்காற்று நின்றது. முகாமை மன்னார்குடி C.S.I. ஆலயத்தில் தொடர்ந்து நடத்தினோம். புயல் அடித்து ரோட்டில் மரங்கள் விழுந்து கிடந்ததால் ஞாயிறு மாலை பேருந்துகள் ஓடவில்லை. முகாமுக்கு வந்தவர்கள் அனைவரும் மறுநாள் திங்கட்கிழமை தான் அவரவர் ஊர்களுக்குச் சென்றோம்.

எங்கள் குடும்ப வாழ்க்கை கிறிஸ்துவுக்குள் கட்டப்பட்டு இருவரும் கருத்து ஒருமித்து வாழ்க்கை நடத்த எங்கள் தேவன் உதவி செய்தார். எங்கள் வீட்டில் காலை மாலை இரண்டு வேளையும் குடும்ப ஜெபம் செய்வோம். நான் ஒவ்வொரு நாளையும் ஜெபித்து துவங்குவதை என் வழக்கமாக்கிக்கொண்டேன். காலை 6 மணிக்கு ஒவ்வொரு நாளும் குடும்ப ஜெபம் செய்வோம். இரவில் காலம் தாழ்த்திப் படுக்கைக்குச் சென்றாலும் குறிப்பிட்ட தியான நேரத்தில் என்தேவன் என்னை எழுப்பி விட்டுவிடுவார். ஒவ்வொரு நாளும் நான் முதலாவது பேசுவது என் தேவனோடு, ஒவ்வொரு நாளும் நான் முதலாவது படிப்பது சத்திய வேதம் தான். அதே போல் ஒவ்வொரு நாளை முடிக்கும் பொழுதும் நான் கடைசியாகப் பேசுவது என் தேவனிடம்தான். இதுதான் எங்கள் வெற்றி வாழ்க்கையின் இரகசியம்.

ஒவ்வொரு நாளும் குடும்ப ஜெபத்திற்குப் பிறகுதான் மற்ற வேலைகளை ஆரம்பிப்போம். ஒவ்வொரு மாதமும் எங்கள் மாத ஊதியத்தை வாங்கி வந்து தேவனுக்கு நன்றி செலுத்தி ஜெபித்து, தசம பாகத்தை தேவனுக்குக் காணிக்கையாக எடுத்து வைத்துவிட்டுத்தான் மற்ற செலவுகளைச் செய்வோம். நாங்கள் எந்த விதத்திலும் குறைவு பட்டதில்லை. ஒவ்வொரு மாதக் கடைசியிலும் மிச்சம் இருக்கும். ஒருநாளும் எங்களுக்கு பணக்குறைவு ஏற்பட்டதில்லை. உபா. *28:12* -ன்படி ''நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன் கொடுப்பாய், நீயோ கடன் வாங்காதிருப்பாய்'' என்ற வாக்குத்தத்தத்தை என் தேவன் எங்கள் வாழ்க்கையில் இன்று வரை நிறைவேற்றி வருகிறார். என்தேவனுக்கே துதியும் ஸ்தோத்திரமும் உண்டாவதாக.

எங்கள் பெரிய மகளின் குடும்பம் :

எங்கள் தேவன் எங்களுக்கு 1960-ஆம் ஆண்டு ஜுலைத்திங்கள் 14-நாள் ஓர் அழகான பெண் குழந்தையைக் கொடுத்தார். அதற்கு என் அம்மாவின் ஞாபகார்த்தமாக முத்துமணி புனிதவதி என்று பெயர் சூட்டி மகிழ்ந்தோம். அந்த ஆண்டு ஆலயத்தில் நடந்த குழந்தைகள் போட்டியில் எங்கள்

மகள் புனிதவதிக்கு முதல் பரிசு கிடைத்தது. எங்கள் மகளைக் கான்வென்டு எதிலும் படிக்க வைக்கவில்லை. சாதாரண பள்ளிகளில்தான் தமிழ் மீடியத்தில் உயர்படிப்பு படிக்க வைத்தோம். நன்குப்படித்து தேர்வு பெற தேவன் உதவி செய்தார். கல்லூரியில் சேர்ந்த பொழுது இங்கிலீஷ் மீடியத்தில், ஆங்கில இலக்கியம் படிக்க எங்கள் தேவன் உதவி செய்தார். அதன்பிறகு எம்.ஏ., ஆங்கில இலக்கியமும், பி.எட். மற்றும் எம்.எட் படிக்க உதவி செய்தார். எங்கள் மகளுக்குத் தேவன் நன்றாகப் பாடும் வரத்தையும் நன்றாக ஜெபிக்கும் வரத்தையும் கொடுத்திருக்கிறார். எங்கள் மகளுக்குப் படித்து முடித்தவுடன் தஞ்சையிலேயே *13.6.1983* -இல் திரு.D. மனோகர் பெஞ்சமின் என்பவருக்கு திருமணம் செய்து வைத்தோம். எங்கள் மருமகனும் ஆங்கில இலக்கியம் எம்.ஏ., எம்.எட்., படித்தவர். நல்ல பழக்க வழக்கங்களும், கடவுள் பக்தியும் நிறைந்தவர். அவர் மேன்டிலின் மற்றும் கித்தார் நன்றாக வாசிப்பார். நாங்கள் குடும்பமாகக் கூடும் சமயங்களிலும், விழாக்காலங்களிலும் அவர்கள் வாத்தியக்கருவியினை வாசித்து மகள் புனிதா இனிமையாகப் பக்திப் பாடல்களைப் பாடுவதைக் கேட்டு அனைவரும் மகிழ்வோம். நாங்கள் அனைவரும் துதிப் பாடல்களைப் பாடியும் எங்கள் வீட்டில் ரேடியோ மற்றும் டி.வி. சினிமாவோ, சினிமாப் பாடல்களோ, பார்க்கவோ, கேட்கவோ முடியாது. ஏன் என்றால் நாங்கள் அதைப் பார்ப்பதில்லை, கேட்பதில்லை. தேவ வசனம் இப்படியாகச் சொல்லுகிறது. சங் *118:15* ''நீதிமானுடைய கூடாரத்தில் இரட்சிப்பின் கெம்பீர சத்தம் உண்டு'' என்றும், ஒரு கடவுளுடைய மனிதனுடைய இல்லத்தில் அலறலும், புலம்பலுமான சாத்தானுடைய சத்தம் கேட்கக்கூடாது. துதி, ஸ்தோத்திரச் சப்தங்களே கேட்கப்பட வேண்டும். இதுவரையில் நான் என் பிள்ளைகளிடத்தில் நீங்கள் இதைப் பார்க்கக் கூடாது, இதைக் கேட்கக்கூடாது, இதைப் படிக்கக் கூடாது என்று சொன்னது கிடையாது. நாங்கள் அவைகளைச் செய்வதில்லை. எங்கள் இருவரின் வாழ்க்கையே எங்கள் பிள்ளைகளுக்குப் பாடமாக அமைந்து விட்டது. எங்கள் இருவரின் வாழ்க்கையே அவர்களுக்கு ஆசானாய் அமைந்து விட்டது. அவ்விதமாகவே எங்கள் மூத்த மகளின் குடும்பமும் இனிமையாக அமைந்திருந்தது. எங்கள் மூத்த மருமகன்

எங்களிடத்தில் மிகவும் அன்பாக இருப்பார். பாசம் மிகவும் நிறைந்தவர். அன்புக்கு ஏங்குபவர். அன்புக்கு அடிபணிவார். எங்களுக்கு ஒரு மகனைப்போல இருந்துவருகிறார்.

அவர்களுக்கு சாம்சன், ஜட்சன், ஹட்சன் என்ற 3 அழகான ஆண்மகன்கள் பிறந்தார்கள். எங்கள் மருமகன் 10 ஆண்டுகள் தென்னக இரயில்வேயில் பணியாற்றினார்கள். அவர்கள் எம்.ஏ., எம்.எட்., படித்து இருந்ததால் அவர்களுக்கு அரசு மேல்நிலைப்பள்ளியில் முதுகலை ஆங்கில ஆசிரியர் பணி கிடைத்தது. எங்கள் மூத்த மகளுக்கு உசிலம்பட்டி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ஆங்கில ஆசிரியர் பணி கிடைத்தது. அவர்கள் குடும்பம் மகிழ்ச்சியாக இருந்த நேரத்தில் அவர்கள் குடும்பத்தில் கடும் புயல் வீச ஆரம்பித்தது. அப்பொழுது சாம்சனுக்கு 14 வயது, ஜட்சனுக்கு 9 வயது, ஹட்சனுக்கு 5 வயது. அவர்கள் மூவரும் தனது அம்மாவைவிட அப்பாவிடம் அதிகம் அன்பு காட்டுவார்கள். அவர்கள் மூவரும் எங்கள் வீட்டிற்கு வந்து தங்கியிருக்கும்பொழுது கூடச் சாயங்காலம் 5.00 மணி ஆகிவிட்டால் எங்கள் டாடி வருகிற நேரம் ஆகிவிட்டது என்று மூவரும் திண்ணையில் போய் உட்கார்ந்து கொண்டு அவர்கள் டாடி வரும் வழியையே பார்த்துக்கொண்டிருப்பார்கள். அவர்கள் அம்மா கொஞ்சம் அவர்களிடம் கண்டிப்புடன் இருப்பதால் அவர்களுக்கு டாடியைத்தான் அதிகம் பிடிக்கும். எனது மகள் புனிதா உசிலம்பட்டியில் வேலைபார்த்துக் கொண்டிருந்த பொழுது தஞ்சைக்கு மாற்றலாகிவிடும் என்ற நம்பிக்கையில் அவர்கள் மூவரையும் தஞ்சையில் உள்ள பள்ளியில் சேர்த்து விட்டார்கள். ஆனால் மகளுக்குத் தஞ்சைக்கு மாற்றல் கிடைக்கவில்லை. அந்த நாட்களில் அவர்கள் மூவரையும் வைத்துக்கொண்டு, பாபநாசத்திற்கு வேலைக்குப் போய்க்கொண்டு அவர்கள் மூவரையும் வளர்ப்பதற்கு மாப்பிள்ளைபட்ட பாடுகளுக்கு அளவே இல்லை. அவ்வளவு வேலைகளையும் தம் பிள்ளைகள் மீது வைத்த அன்பினாலே தாங்கிக்கொண்டு செய்தார். அவர்களை எங்கள் வீட்டில் வைத்துப் பார்த்துக் கொள்ளலாம் என்றால் தங்கள் டாடியை விட்டு அம்மூவரும் பிரிந்து இருக்க மாட்டார்கள். அந்த நாட்களில் எனது மனைவியும் அதிக சுகவீனமடைந்து படுத்த படுக்கையாக இருந்தார்கள்.

இந்த நிலையில் 1998-ம் ஆண்டு மே மாதம் 27-ம் நாள் அவர்கள் குடும்பமாகத் திருச்சி மாவட்டத்திலுள்ள சுற்றுலா மையமான முக்கொம்பு என்ற இடத்திற்குச் சென்ற பொழுது கண் இமைக்கும் நேரத்தில் மூன்று பேரன்களும் ஒருவர்பின் ஒருவராக புதை மணலில் மூழ்கி இறந்து விட்டார்கள். இந்தப் பேரிழப்பு, அதிர்ச்சி எப்படி இருந்திருக்கும் பாருங்கள்! எங்களால் இன்றும் தாங்க முடியவில்லை. எனது மகளும் மருமகனும் இந்த ஈடுகட்ட முடியாத பேரதிர்ச்சியிலிருந்து, பேரிழப்பிலிருந்து இன்னும் விடுபடவே இல்லை. அதை யாராலும் ஈடுகட்டவும் முடியாது. எனினும் அம்மூவரையும் மறுமையில் சந்திக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எத்தனையோ மீளாத்துயரத்தில், துக்கத்தில், இழப்பில் இருந்த குடும்பங்களுக்கு ஆறுதல் கூறி ஆலோசனை கொடுத்து வந்த எங்களுக்கு எங்கள் பேரப் பிள்ளைகள் மூவரின் மரணம் ஒரு சவாலாக அமைந்தது. எங்களுக்காகவும் அருமையான மூன்று மகன்களையும் ஒரே நாளில் இழந்து தவிக்கும் மகளுக்காகவும், மருமகனுக்காகவும் சகல ஆறுதலின் தேவன் ஆறுதலைக் கொடுக்க ஜெபியுங்கள்.

இந்நிலையிலும் எனது மகளும் மருமகனும் எங்களை அடிக்கடி வந்து பார்த்து எங்களுக்கு அவ்வப்போது வேண்டிய உதவிகளைச் செய்து வருகிறார்கள். இந்திய அருட்பணி இயக்க ஊழியங்களுக்கும் மற்ற ஊழியங்களுக்கும் பெரும் தொகையினை மாதாமாதம் தியாகத்தோடு செலுத்தி ஊழியங்களைத் தாங்கி வருகிறார்கள்.

எங்கள் இரண்டாவது மகளின் குடும்பம் :

எங்களுக்கு 1962-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 24-ஆம் நாள் இரண்டாவது மகள் பிறந்தார். அவருக்கு மேரிகுணவதி என்று பெயர் வைத்தோம். தேவபக்தியிலும் படிப்பிலும், விளையாட்டுகளிலும் சிறந்து விளங்கியது. சிறு பிராயத்திலிருந்தே வீட்டுக் காரியங்களைக் கவனிப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பார். பொதுவாக எங்கள்

பிள்ளைகளை அடிக்கடி டாக்டர்களிடம் கொண்டு செல்ல மாட்டோம். கைவைத்தியமாகப் பார்த்துக் கொள்வோம். அவர்களுக்கு 7 வயது இருக்கும் பொழுது அதிக ஜுரமும் வாந்தியும் இருந்தது. எந்த வைத்தியத்திற்கும் பலன் இல்லை. அன்று இரவு 12.00 மணிக்கு மேல் உடனே மகளை மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லும்படி ஆவியானவரால் உணர்த்தப்பட்டேன். இலகுவில் மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லாதநான் ஆவியானவரின் உந்துதலால் நடு இரவில் தஞ்சைப் பெரிய ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றேன். டாக்டர்கள் மகளைப் பரிசோதனை செய்து பார்த்துவிட்டுக் கடுமையான (டிப்த்தீரியா) தொண்டைஅடைப்பான் நோய் ஏற்பட்டுள்ளது. இன்னும் சிறிது தாமதித்து வந்திருந்தால் மகளை இழக்க நேரிட்டு இருக்கும் என்று டாக்டர்கள் சொன்னார்கள். உடனே மருத்துவ மனையில் சேர்த்து டிப்த்தீரியாவுக்கு உரிய சீரம் ஊசி போட்டு வந்தார்கள். ஒருவாரம் மருத்துவ மனையில் வைத்துப் பார்த்தோம். எங்கள் தேவன் மகளுக்கு அற்புதச் சுகத்தைக் கொடுத்தார். ஏற்ற சமயத்தில் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல ஆலோசனை கொடுத்த தேவனுக்கு நன்றி செலுத்தினோம். மேலும் மகள் உயர்நிலைக்கல்வியைத் தமிழ் மீடியத்தில் படித்து, கல்லூரியில் பி.எஸ்சி. ஆங்கில மீடியத்தில் சிரமப்பட்டுப் படித்துச் சிறந்த முறையில் வெற்றி பெற என் தேவன் உதவி செய்தார். எங்கள் வீட்டில் மாவு அரைப்பது, நெல் அவிப்பது போன்ற கடுமையான வேலைகளையும் தானே முன்வந்து சிறப்பாகச் செய்வார். தேவன் எங்களுக்குக் கொடுத்த (Gem) முத்தான வைர மகள் என்று கருதி வந்தோம்.

1984-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ஆம் நாள் எங்களது மகள் மேரிகுணவதிக்கும் MR. சுகுமார் தேவதாஸிற்கும் திருச்சியில் உள்ள சகல பரிசுத்தவான்கள் ஆலயத்தில் வைத்துத் திருமணம் நடைபெற்றது. எங்களது இரண்டாவது மருமகன் எம்.ஏ., எம்.எட்., ஆங்கில முதுகலைப்பட்டத்தோடு ஆசிரியராகப் பணியாற்றிவந்தார். 5 ஆண்டுகளுக்கு மேலாக அரசினர் மேல் நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்கள். எங்களது இரண்டாவது மகள்

திருமணத்திற்குபிறகு BLIS (Bachelor of Library and Information Science) படித்து பட்டம் பெற்றார். அவர் வேலைக்கு செல்லாமல் குடும்பத்தையும் பிள்ளைகளையும் பராமரித்துக் கொண்டு வருகிறார். இரண்டாவது மருமகன் யாருக்கும் சிரமம் கொடுக்கமாட்டார். தனது தலைமை ஆசிரியர் வேலையில் கண்ணும் கருத்துமாக இருப்பார். மற்ற எந்தக் குடும்ப காரியங்களிலும் தலையிட்டுக் கொள்ளமாட்டார். தான் உண்டு தனது குடும்பம் உண்டு என்று இருப்பார். எங்கள் வீட்டில் Gem -ஆக இருந்த மகள் அந்தக்குடும்பத்திலும் பண்பாக குடும்பத்தை கிறிஸ்துவுக்குள் கட்டி வருகிறார். அவர்கள் அன்பினால் மேலும் கட்டப்பட்ட குடும்பமாக ஒருவர் பலவீனத்தில் ஒருவரை ஒருவர் தாங்க, அன்பின் குடும்பமாக எழும்பி பிரகாசிக்க ஜெபிக்கிறோம். அவர்களுக்குப் பிரிஸில்லா என்ற மகளும், எபிநேசர் டானியேல் என்ற மகனும் உள்ளனர்.

எங்களது இரண்டாவது மகள் 15 ஆண்டுகளுக்கு மேலாக இந்திய அருட்பணி இயக்கத்தின் வட்டார செயலாளராகத் திருச்சிப் பகுதியில் பணியாற்றி வருகிறார். சில ஆண்டுகளாக மூட்டுக்களில் வலி ஏற்பட்டு பல வித மருத்துவச் சிகிச்சை பெற்றும் பலன் கிடைக்கவில்லை. சரியான சிகிச்சையும் கொடுக்கப்படவில்லை. இந்நோய் அதிகரித்து நடக்க முடியாமல், கைகால்களை அசைக்க முடியாமல் சாப்பிட முடியாமல் ஆகிவிட்டார். இதனால் இரத்தம் உடம்பில் குறைந்து கை, கால், வயிறு எல்லாம் வீங்கி மரணத்தை நெருங்கிக் கொண்டிருந்தார். இந்நிலையை நான் கேள்விப் பட்டுத் தஞ்சையிலிருந்து டாக்ஸி எடுத்துக் கொண்டுபோய் அழைத்து வந்து மருத்துவரின் ஆலோசனைப்படி மருத்துவ மனையில் சேர்த்துத் தகுந்த சிகிச்சை கொடுக்கப் பட்டது. உடம்பில் இரத்தம் இல்லாததால் உடனே இரத்தம் செலுத்தப் பட்டது. இந்த வியாதி தொடர்பாக சம்பந்தப்பட்ட சிறப்பு மருத்துவரிடம் காட்டினால் இதற்கு அதிகம் மருந்து செலவு ஆகும் என்றார்கள். எனினும் அவருடைய ஆலோசனையின் படி வெளிநாட்டிலிருந்து விலை உயர்ந்த மருந்து தருவிக்கப்பட்டு ஆறு மாதங்கள் அதனைக் கொடுத்து அவர் உயிர் காப்பாற்றப்பட்டது. ஏற்ற சமயத்தில் தகுந்த சிகிச்சை கொடுத்து

அவரைக் காப்பாற்ற தேவன் எங்களுக்கு உதவி செய்தார். இதற்காகத் தேவனுக்கு நன்றி செலுத்துவோம். அவர்கள் குடும்பமும் பல ஊழியங்களைத் தாங்கி வருகிறார்கள். தற்பொழுது திருச்சியில் இருந்துகொண்டு தனது குடும்பத்தையும் அருட்பணி ஊழியத்தையும் செய்து வருகிறார். தொடர்ந்து மகள் நல்ல சுகம் பெலன் பெற்று அவருடைய பணியைச் செய்யத் தேவன் உதவி செய்யும்படி ஜெபிப்போம். அவர் குடும்பத்திலும் கர்த்தரின் மகிமைக்கான ஆசீர்வாதங்கள் பெருக வேண்டுகிறேன்.

எங்களது 3 வது மகளின் குடும்பம் :

எங்களது மூன்றாவது மகள் கிரேஸ் சுகுணவதி இரண்டாவது மகள் பிறந்து 7 ஆண்டுகளுக்குப்பிறகு 1969-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23-ம் நாள் பிறந்தார். பிரசவத்திற்குக் குறித்த நாளுக்கு ஒரு மாதம் முன்னதாகவே பிறந்துவிட்ட படியால் நாங்கள் இருவரும் அவரை கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொண்டோம். என் மனைவிக்குப் பிரசவ விடுப்பு முடிந்து பள்ளிக்குச் சென்ற சமயத்தில் நான் இரண்டு மாதம் லீவு எடுத்து அவரைப் பார்த்துக் கொண்டேன். அவர் ஏழு வயதாயிருக்கும்போதே நன்றாகப்பாடுவார். மாணவ நற்செய்திக் கூட்டங்களில் தைரியமாக முன்வந்து மைக்கில் பாடும் பழக்கமும் இருந்தது. அவரும் உயர்நிலைப்பள்ளியில் தமிழ் மீடியத்தில் படித்து **B.Sc., Maths** ஆங்கில மீடியத்தில் படித்தார். படித்துக் கொண்டிருக்கும் பொழுது திருச்சபையில் நடக்கும் பாட்டுப்போட்டி, வேதவினாவிடைப்போட்டி, வரைபடப் போட்டி ஆகியவைகளில் முதலாவதாக வந்து ஒவ்வொரு ஆண்டும் பரிசுகளைத் தட்டிச் செல்லுவார். தஞ்சைக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த பொழுது ஓவியம் நன்றாக வரைந்ததினால் கல்லூரியில் இரண்டு பேரைத் தேர்ந்தெடுத்து தஞ்சாவூர் கலைக் கூடத்தில் ஓராண்டு இலவசப் பயிற்சி கொடுத்தார்கள். அதன் பிறகு **M.Sc., Maths** மற்றும் பி,எட், அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் வீட்டில் இருந்து கொண்டே தொலைதூரக் கல்வியில் சேர்ந்து படித்தார். நான் அதிகம் சுகவீனப்பட்ட சமயத்தில் என்னைக் கவனமாகப் பார்த்துக் கொண்டார். மிஷனரி ஜெபக்குழுக்களை நடத்துவார்.

வீட்டு வேலைகளை எல்லாம் பொறுப்பாகக் கவனித்துக் கொள்வார். அதிக தெய்வ பக்தியும், அதிகம் ஜெபிப்பது, அதிகநேரம் வேதம் வாசிப்பது ஆகியவைகளில் வாஞ்சையோடு தினமும் ஈடுபட்டிருப்பார். நானும் எனது மனைவியும் 1987-ம் ஆண்டு பெங்களூரில் நடந்த IEM தேசிய கன்வென்ஷனில் கலந்து கொண்டோம். அப்பொழுது அர்ப்பணத்திற்கு அறை கூவல் கொடுக்கப்பட்டது. தங்களையும் தங்கள் பிள்ளைகளையும் தேவனுக்கு அர்ப்பணம் செய்ய அழைத்தனர். அப்பொழுது நான் முன்னாகச் சென்று நின்றேன். சிறிது நேரத்தில் எனது மனைவியும் என் பக்கத்தில் வந்து நின்றார்கள். அந்த நேரத்தில் மீண்டுமாக அவரது பணிக்கு முற்றிலுமாக இருவரும் ஒப்புக்கொடுத்தோம். அப்பொழுது எங்களுடையப் பிள்ளைகளில் ஒருவராவது முழுநேர மிஷனரிப் பணிக்குச் செல்ல வேண்டும் என்று அர்ப்பணித்து ஜெபித்தோம்.

எங்களது மூன்றாவது மகள் M.Sc., Maths படித்துக் கொண்டிருந்த பொழுது ஒரு பொறியாளருக்குப் பெண் கேட்டு வந்தார்கள். நாங்களும் போய்ப் பார்த்து வந்தோம். அந்தக் குடும்பம் இந்து மதத்திலிருந்து இயேசுவை ஏற்றுக்கொண்ட குடும்பம். எங்களுக்கும் பிடித்து விட்டது. ஆனால் எங்கள் மகளுக்கோ முழுநேர ஊழியத்திற்குச் செல்ல வேண்டும் என்ற ஆசை, ஒரு வேளை ஒரு இஞ்சினியரைக் கட்டிக்கொண்டு உலகப் பிரகாரமான செல்வம் ஆஸ்திகளோடு வாழலாம். அதனால் என்ன இலாபம் எனக்கு என்ற கேள்விக்குறி மகளுடைய உள்ளத்தில் எழும்பிக்கொண்டே இருந்திருக்கிறது. இந்த சமயத்தில் போதகர் அறிவர் தியோடர் வில்லியம் அவர்களும், IEM ஊழியர் Rev. K. செல்வராஜ் அவர்களும் ஒரே சமயத்தில் இந்திய அருட்பணி இயக்கத்தில் உள்ள மிஷனரி திரு. எட்வின் ரவிக்குமாருக்கு எங்களது மகளைத் திருமணம் செய்து கொடுக்க ஆவன செய்யும்படி கேட்டுக் கொண்டார்கள். அவர் ஒரு இரட்சிக்கப்பட்ட மகன். உண்மையும் உத்தமுமான ஊழியங்களைச் செய்து வருகிறவர். உங்கள் மகளுக்கு இருக்கிற பக்தி வைராக்கியத் திற்கும் ஊழிய வாஞ்சைக்கும் இருவருக்கும் பொருத்தமாக இருக்கும் என்று எழுதியிருந்தார்கள். நாங்கள் மூவரும் கலந்து யோசித்தோம். எங்களது பெரிய மகள்

மருமகனுடனும் இது தொடர்பாகக் கலந்து பேசி மிஷனரி ஊழியருக்குப் பெண் கொடுக்கச் சம்மதித்தோம். எங்கள் மகள் முழுநேர ஊழியத்திற்கு மிஷனரியாகச் செல்ல விரும்புவதால் உங்கள் இஞ்சினியர் மகனுக்கு வேறு இடத்தில் பெண் பார்த்துக் கொள்ளும்படி அவர்களுக்கு எழுதினோம். அவரும் சிதம்பரத்தில் IEM வட்டாரச் செயலாளராக இருந்தவர். எங்கள் கருத்தை அவர்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு அதன்பிறகு நடந்த மகளின் திருமணத்திற்கும் அவர்கள் தஞ்சை வந்து மணமக்களை ஆசீர்வதித்து வாழ்த்திச் சென்றார்கள்.

நாங்கள் எங்கள் தேவனுக்கு முன்பாகக் எங்கள் பிள்ளைகளை அர்ப்பணம் செய்ததின்படியும் தேவனுடைய சித்தத்தின்படியும் IEM-க்கு எனது மகளை மிஷனரியாகச் சேர்த்துக் கொள்ளும்படி விண்ணப்பித்தோம். விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டு நேர்காணலுக்கு வரும்படி அழைத்தார்கள். அப்பொழுதுநான் அதிக சுகவீனமாக இருந்தேன். அதன் மத்தியில் எனது மகளை அழைத்துக் கொண்டு நேர்காணலுக்குப் பெங்களூர் சென்றோம். அவரை நேர்காணலில் தேர்வு செய்தார்கள். அதன்பிறகு ஆறுமாத அருட்பணிப்பயிற்சிக்காக, அருட்பணிப் பயிற்சி நிலையத்திற்கு அனுப்பி வைத்தோம்.

அருட்பணி பயிற்சி முடிந்த பிறகு 1992-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19-ம் நாள் எனது மகளுக்கும் நாகர்கோவில் அருட்பணியாளராக இருந்த திரு. எட்வின் ரவிக்குமாருக்கும் தஞ்சாவூரில் திருமணம் நடைபெற்றது. அதன் பிறகு அவர்கள் இருவரும் இந்திய அருட்பணி இயக்கத்தில் தொடர்ந்து கன்னியாகுமரி மாவட்டத்திற்குப் பொறுப்பாளர்களாயிருந்து 10 ஆண்டுகளுக்கு மேலாக அருட்பணி ஆற்றினார்கள். மகளுக்கு நடைபெற்ற ஐந்து அறுவை சிகிச்சையில் கர்த்தரின் பாதுகாப்பு, பெலன், கிருபை கூட இருந்து இம்மட்டும் அவரின் ஊழியத்தை உண்மையோடு, உற்சாகத்தோடு, ஓய்வில்லாமல் செய்யப் பெலப்படுத்திவருகிறார். தற்பொழுது அவர்கள் இருவரையும் இந்திய அருட்பணி இயக்கத்தினர் கேரள மாநிலத்தில் உள்ள திருவல்லாவில் அமைந்துள்ள வேதாகமக் கல்லூரிக்கு வேதாகம மேல்படிப்புக்கு அனுப்பி உள்ளார்கள். எங்களது மகள் M.Div.

வும் மருமகன் பி.டி. இரண்டாவது ஆண்டு தெய்வீகத்தில் பட்டப்படிப்பு படித்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு நிசி காருண்யா, கெத்சி ஆராதனா என்ற இரண்டு மகள்கள் இருக்கிறார்கள். அவர்கள் இருவரும் தங்கள் பெற்றோரோடு இருந்து திருவல்லாவில் உள்ள பள்ளியில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இருவரும் தங்கள் வேதாகமப் பட்டப்படிப்பை வெற்றியுடன் படித்து முடிக்க அவர்களுக்குத் தேவன் நல்லசுகத்தையும் பலத்தையும் ஞானத்தையும் கொடுக்க ஜெபிப்போம்.

எங்களுடைய ஒரே மகன் டேவிஸ் செல்வகுமார் குடும்பம் :

எங்களுக்குத் தொடர்ந்து 3 பெண் பிள்ளைகள் பிறந்தார்கள். எங்களைப் பார்க்கிறவர்கள், உற்றார், உறவினர்கள் உங்களுக்கு ஆண் பிள்ளை இல்லையா என்று கேட்கும் பொழுது எனது மனைவிக்கு அதிக மன வருத்தம் ஏற்படும். நாங்கள் கடவுளுடை வழிநடத்துதலுக்காகச் சித்தத்திற்காக காத்திருந்து ஜெபித்தோம். எங்களுக்கு நான்காவதாக 1972-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 11 -ஆம் நாள் ஒரு ஆண் குழந்தையைக் கொடுத்தார். அவரையும் சிறு பிராயத்திலிருந்தே கடவுளுக்கு ஏற்ற பயத்திலே வளர்க்க உதவி செய்தார். அவர் சிறு பிராயத்திலிருந்தே எல்லா விளையாட்டுகளிலும் சிறந்து விளங்கினார். சிறப்பாகக் கூடைப்பந்து மற்றும் கிரிக்கெட் விளையாட்டுகளில் சிறந்து விளங்கினார். தமிழ்நாட்டின் இளைஞர் கூடைப்பந்து அணியில் சேர்க்கப்பட்டு 1991-ம் ஆண்டு பாம்பேயில் நடந்த ஒன்பதாவது தேசிய சாம்பியன்ஷிப் 1992-ல் லூதியானாவில் நடந்த இளையோர் (Junior) கூடைப்பந்து அணியில் சேர்க்கப்பட்டு தேசியச் சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்து கொண்டு தமிழ்நாட்டிற்காக விளையாடி உள்ளார். அடுத்து, திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் சார்பாகக் கேப்டன் பொறுப்பு ஏற்று பல்கலைக்கழகங்களுக்கான சாம்பியன்ஷிப் 1993-ல் ஐதராபாத்தில் நடந்ததிலும், 1994-ல் ஆந்திர மாநிலம் வாரங்கல்லில் நடந்ததிலும், 1995-ல் குவாலியரில் நடந்ததிலும் 1996-ல் காந்திநகரில் நடந்த கூடைப்பந்துப் போட்டிகளிலும் கலந்து கொண்டு விளையாடி உள்ளார். அதன் பிறகு சிதம்பரம்

அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் சார்பாக கேப்டன் பொறுப்பு ஏற்று 1996-ம் ஆண்டு அண்ணாமலை நகரில் நடந்த பல்கலைக்கழகங்களுக்கிடையேயான கூடைப்பந்துப் போட்டிகளில் கலந்து கொண்டு சிறப்பாக விளையாடி உள்ளார். மேலும் தமிழ்நாடு அளவில் கூடைப்பந்துப்போட்டிக்கு நடுவராக இருக்கவும், தடகளப்போட்டிக்கு நடுவராக இருக்கவும் அதற்கான தேர்வுகளை எழுதித் தகுதி பெற்றுள்ளார்.

திருச்சி தூய வளனார் கல்லூரியில் பி.ஏ., பட்டமும், அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் M.P.E.S. முதுகலை பட்டப்படிப்பினை முதல் வகுப்பிலும், பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் எம்.பில்., தேர்வில் முதல் வகுப்பிலும் தேர்வு பெற்றுள்ளார். இவரது கூடைப்பந்து விளையாட்டுத் திறமையின் காரணமாக தென்னக இரயில்வேயில் Sports Quota-வில் வேலை நியமன ஆணை வந்தது. தென்னக இரயில்வேயில் IV Class பணி கொடுக்கப்பட்டதால் இரயில்வேயில் வழங்கப்பட்ட வேலையில் சேரவில்லை. பட்டப் படிப்புகளை முடித்த பிறகு கரந்தைக் கலைக்கல்லூரியில் 3 ஆண்டுகள் உடற்கல்வி உதவி இயக்குனராகப் பணியாற்றினார், 2002-ம் ஆண்டிலிருந்து பட்டுக்கோட்டை அருகில் உள்ள ஏனாதி இராஜப்பா கலைக் கல்லூரியில் உடற்கல்வி இயக்குனராகப் பொறுப்பேற்றுச் சிறப்புடன் பணியாற்றி வருகிறார்.

இவருக்குத் தஞ்சாவூரிலேயே பெண் பார்த்து 1999-ல் திருமணம் செய்து வைத்தோம். தேவன் எங்களுக்கு ஷோபா லீலாகுமாரி என்ற நல்ல மருமகளைக் கொடுத்துள்ளார். இதற்காக எங்கள் தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். எங்களது வீட்டின் பொறுப்புகளையும் உடல் நலம் இல்லாத தனது மாமியாரையும் நன்கு கவனித்துக்கொள்கிறார். எங்களுக்கு மருமகளாக அல்ல ஒரு மகளாக இருந்து எல்லா உதவிகளையும் செய்து வருகிறார். எங்களுக்கு இந்திய அருட்பணி ஊழியத்திலும் உதவி செய்து வருகிறார்கள். எனது மகனும் மருமகளும் நாஞ்சிக்கோட்டை ரோடு பகுதியில் உள்ள குடும்பங்களைச் சந்தித்து மிஷனரி ஊழியங்களுக்கான காணிக்கைகளை மாதாமாதம் வாங்கிவந்து தருகிறார்கள். எங்களுக்குக் கிப்ட்ஸன்

டானியேல் என்று இரண்டு வயதில் ஒரு பேரன் இருக்கிறான். அவன் என்னை IEM தாத்தா என்று தான் அழைப்பான். எங்களது மருமகள் கைவேலைகளையெல்லாம் நன்றாகச் செய்யக்கூடியவர். அவருக்கு தொழில் நுட்பமான காரியத்தைப் பார்த்ததும் உடனே செய்யும் ஆற்றல் உண்டு. எங்களுடைய 3 மகள்களும், பிள்ளைகளுடன் எங்கள் வீட்டில் வந்து தங்கும் பொழுது அவர்கள் அனைவரையும் அன்புடன் உபசரிக்கிறார்கள். இது எங்களுக்கு மிகுந்த சந்தோஷமாகவும் ஆறுதலாகவும் இருக்கிறது. எங்களுக்கு நான்கு பிள்ளைகள் மூலம் கிடைத்த சம்பந்திகளும் நல்ல பண்பாளர்கள். நன்கு படித்தவர்கள். கடவுள் பக்தி நிறைந்தவர்கள். பாசத்தோடு பழகுபவர்கள்.

எங்களுக்குக் கடந்த 4 ஆண்டுகளாக உதவியாக ஓர் ஆதரவற்ற மகளை எங்கள் தேவன் எங்களுக்குக் கொடுத்து இருக்கிறார். அவள் பெயர் கமலவேணி என்பதாகும். அவளை வருங்காலத்தில் கிறிஸ்துவின் மந்தையில் சேர்த்து பெயர் இடுவதற்காக இப்பொழுதிலிருந்தே ரெபேக்கா என்று அன்புடன் அழைத்து வருகிறோம். அவள் எங்களோடு அன்புடனும் பாசத்துடனும் பழகுகிறாள். உரிமையோடு எல்லா வேலைகளையும் பொறுப்பாகச் செய்து வருகிறாள். அப்படியே மகேஸ்வரி என்ற ஆதரவற்ற மகள் எங்களோடு இருந்து வருகிறாள். இவர்கள் இருவருடைய சரீரமும் பலவீனப்பட்டது. அதன் மத்தியிலே எங்களுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்து வருகிறார்கள். அவர்கள் விரைவில் இயேசுவை ஏற்றுக் கொண்டு இயேசுவின் பிள்ளைகளாக மாற தொடர்ந்து ஜெபிப்போம்.

17. அற்புதத்தின் தேவன்! பாதுகாக்கும் தேவன்

நான் ஓய்வு பெறும் இறுதி ஆண்டில் தஞ்சாவூர் பொது ஊழியர்கள் கூட்டுறவு வங்கியில் ஆட்சியர் (Administrator) ஆகப் பணியாற்றினேன். நடக்க இருந்த பெரிய வங்கிக் கொள்ளையிலிருந்து என் தேவன் அற்புதமாகக் காப்பாற்றினார். 15.8.1993 அன்று இரவு வங்கியைக் கொள்ளையடிக்க திட்டம் தீட்டியுள்ளனர். வங்கியின் வெளிக்கதவுகளில் இருந்த

பூட்டுகளை உடைத்துக் கொண்டு உள்ளே புகுந்து ஒவ்வொரு அறையின் பூட்டுகளையும் உடைத்து நகை பணம் கிடைக்குமா என்று தேடியுள்ளனர். ஒன்றிலும் ஒன்றும் கிடைக்கவில்லை. கடைசியாக அடமான நகைகள், ரொக்கம் இருக்கின்ற பெட்டக அறையின் பூட்டுகளை உடைத்துக்கொண்டு நகைகளையும் ரொக்கத் தொகைகளையும் கொள்ளையடிக்க முயன்று கொண்டிருந்தபொழுது அவர்களுக்கு யாரோ வருவதுபோல் ஒரு பயங்கர சத்தம் கேட்கவே அப்படியே எல்லாவற்றையும் போட்டுவிட்டு உடைத்த 10க்கும் மேற்பட்ட பூட்டுகளை எடுத்துக்கொண்டு போய் வடவாற்றில் எறிந்துவிட்டு ஓடிவிட்டனர். அவர்கள் பெட்டகத்தை உடைத்து கொள்ளையிட்டிருந்தால் பலகோடி மதிப்புள்ள அடமான நகைகளும் பல இலட்சம் ரொக்கமும் கொள்ளைபோய் இருந்திருக்கும். காலையில் வங்கியின் செயலாளர் வங்கியைத் திறக்கச் சென்ற பொழுது வங்கியின் எல்லாப்பூட்டுகளும் உடைக்கப்பட்டு எல்லாக் கதவுகளும் திறந்து கிடந்திருக்கிறது. வங்கியின் செயலாளர் அலறி அடித்துக்கொண்டு என் வீட்டிற்கு ஓடி வந்தார். நான் உடனே புறப்பட்டு அவருடன் சென்று வங்கியைப் பார்வையிட்டேன். உடனே காவல்துறையினருக்கும், கைரேகை நிபுணர்களுக்கும் புகார் கொடுத்து அழைக்கப்பட்டனர். அங்குக்கிடைத்த தடயங்களை வைத்துக் கைரேகைகளைப் பதிவு செய்தனர். வங்கி ஊழியர் அனைவரின் கைரேகைகளும் பதிவு செய்யப்பட்டன. கைரேகைகளைப் பதிவு செய்யும் பொழுதே இது ஒரு பிரபலக்கொள்ளைக்காரனின் கைரேகை என்று கண்டு பிடித்து விட்டனர். நாளைக்குள் அந்தக் கொள்ளைக்காரனைப் பிடித்து விடுவோம் என்று காவல் துறையினர் சொல்லிச் சென்றனர். அடுத்தநாள் அந்தக் கொள்ளையன் வீட்டிற்குக் காவல்துறையினர் சென்ற பொழுது அவன் கருப்பு உடையணிந்து கழுத்து முழுவதும் உத்திராட்ச மாலைகளை அணிந்து, உடம்பு முழுவதும் பட்டை தீட்டிக்கொண்டு வெளியே வந்திருக்கிறான். காவல் துறையினரைக் கண்டதும் சபரிமலைக்குச் செல்லப்போகிறேன் அண்ணாச்சிகளா என்று சொல்லி இருக்கிறான். ஒரு சேதி இருக்கிறது எங்களுடன் கொஞ்சம் வா என்று அவனை நேராகக் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று அங்கு அவனை அடைத்து விட்டார்கள்.

அவனிடம் விசாரணை செய்தபொது அன்று இரவு வங்கியில் நுழைந்து என்னென்ன செய்தான். திடீர் சத்தம் கேட்டு எப்படி ஓடிவிட்டான் என்ற விபரங்களைத் தெரிவித்து இருக்கிறான். நாங்கள் மறுநாள் காவல் நிலையம் சென்றபொழுது கொள்ளையன் பிடிபட்டதையும் அவன் நடத்திய கொள்ளை விபரங்களையும் எங்களிடம் தெரிவித்தனர். உடனடி நடவடிக்கை மேற்கொண்டு கொள்ளைமுயற்சியினை மேற்கொண்ட கொள்ளையனைப் பிடித்ததற்காகக் காவல் துறையினருக்கு நன்றி கூறி அங்கிருந்து புறப்பட்டு வந்தோம்.

என் தேவன் இப்பெரிய இழப்பிலிருந்து அற்புதமாக என்னைக்காத்துக் கொண்டார். நான் 30.6.1994-இல் பணியிலிருந்து ஓய்வு பெறவேண்டும். மேற்கண்ட கொள்ளை முயற்சி ஒருவேளை நடந்திருந்தால் நான் பணிஓய்வு பெறும் நாளில் பல சிக்கல்கள் ஏற்பட்டிருக்கும். எங்கள் துறை விசாரணைக்கு நான் உட்பட்டிருக்க வேண்டியிருந்திருக்கும். என் தேவன் இந்தப் பெரிய இழப்பிலிருந்து காத்துக் கொண்டதற்காக என் தேவனுக்கு நன்றி சொல்லுகிறேன்.

கைவிடப்பட்டவர்களுக்கு உதவிகரம் நீட்டியது :

நான் அரசுப்பணியிலிருந்து ஓய்வு பெறுவதற்கு ஓர் ஆண்டு இருக்கும் பொழுது, அப்பொழுது ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தால் அனைத்துக் கூட்டுறவு நிறுவனங்களின் நிர்வாகக் குழு கலைக்கப்பட்டு ஸ்பெஷல் ஆபீஸர்களின் நிர்வாகத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. என்னைத் தஞ்சாவூர் பொது ஊழியர்கள் கூட்டுறவு வங்கியின் ''ஆட்சியராக'' அரசு நியமித்தது. நான் இப்பொறுப்பை 1.7.1993 -இல் ஏற்றுக் கொண்டேன். நான் எந்தப் பதவியை எற்றுக் கொண்டாலும் அந்தப்பதவியோடு என்னை இணைத்துக்கொள்வேன். இன்னும் ஓராண்டுதானே என்று காலத்தைக் கடத்தலாம் என்று இருந்துவிடவில்லை. வங்கியின் ஆட்சியர் பொறுப்பு ஏற்ற அன்றே வங்கியின் வரவு செலவு இலாப நட்டக் கணக்குகள் மற்றும் பேலன்ஸ்ஷீட் ஆகியவைகளையும் மற்ற ஆவணங்களையும் பரிசீலனை செய்தேன். இந்த வங்கியின் கட்டடிடம் கோ-ஆப்டெக்ஸ்க்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தது. மூன்று

ஆண்டுகளுக்கு ஒரு முறை வாடகைப் பத்திரம் புதுப்பிக்கப் பட்டு மாத வாடகை உயர்த்தி நிர்ணயம் செய்யப்படவேண்டும். 7 ஆண்டுகள் ஆகியும் வாடகைப்பத்திரம் புதுப்பிக்கப்பட வில்லை. வாடகையும் உயர்த்தி வாங்கப்பட வில்லை. வாடகைக்கு இருக்கும் கோ-ஆப்டெக்ஸ் மேனேஜரைக் கூப்பிட்டு கேட்டதற்கு அவருக்கு ஒன்றும் தெரியவில்லை, பொறுப்புடன் பதில் கூறவில்லை. இதுபற்றிச் சென்னையில் உள்ள தலைமைச் செயலரைத்தான் கேட்கவேண்டும் என்று சொன்னார். அடுத்த நாள் இந்திய அரசுப் பணி (IAS) அதிகாரியான தலைமைச் செயல் அலுவலர் அவர்கள் பெயருக்குப்பதிவுத் தபாலில் ஒரு கடிதம் எழுதினேன். அதில் கடந்த 7 ஆண்டுகளாகத் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனத்தில் வாடகைப்பத்திரம் புதுப்பிக்கப்படவில்லை, வாடகையும் நிர்ணயம் செய்யப்படாமலும் உள்ளது. இக்கடிதம் கிடைத்த ஒரு மாத காலத்திற்குள் வாடகைப்பத்திரம் எழுதிக் கொடுத்து வாடகை நிர்ணயம் செய்யப்படவேண்டும் இல்லா விட்டால் நாங்கள் நீதிமன்றம் சென்று இதற்குத் தீர்வு காண வேண்டியிருக்கும் என்று எழுதியிருந்தேன். சில தினங்களில் தாங்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் இது தொடர்பாகத் தக்க நடவடிக்கை எடுக்கிறோம் என்று பதில் வந்தது. இதற்கிடையில் அவர்களது ரீஜினல் மேனேஜர் மற்றும் சிலரை என்னிடம் அனுப்பி இதுதொடர்பாக பேச்சுவார்த்தை நடந்தது. 7 ஆண்டுகளாகத் தேங்கிக்கிடந்த வாடகைப்பத்திரம் புதுப்பிக்கப் பட்டு ரூ.2,500/- வாடகை கொடுத்தது ரூ.5,000/- ஆக நிர்ணயம் செய்து வாடகை பாக்கியாக ரூபாய் மூன்று இலட்சம் வங்கிக்குச் சேரும்படி செய்தேன். 7 ஆண்டுகளாகத் தேங்கிக் கிடந்ததை இரண்டே மாதத்தில் முடிக்க என் தேவன் உதவிசெய்தார்.

அதே போன்று தணிக்கையில் மறுக்கப்பட்ட (Audit Objection) தொகையாக ஒவ்வொரு ஊழியரிடம் வசூலிக்க வேண்டிய இனமாக ரூ.35,000/- வரை வசூல் செய்யப்பட வேண்டிய இனத்தில் தணிக்கை அறிக்கையில் பல வருடங்களாகக் காட்டப்பட்டுவந்தது. வங்கி நல்ல இலாபத்தில் இயங்கி வந்தது. வருமான வரி கட்டக் கூடிய அளவுக்கு வங்கியின் வளர்ச்சி இருந்தது. இதனை (write off) ரத்து செய்வதனால்

வங்கிக்கு எந்த நஷ்டமும் ஏற்படப்போவதில்லை என்று கூட்டுறவு துறையினருக்கு அறிக்கை தயாரித்து அனுப்பி வங்கி ஊழியர்களுக்குத் தணிக்கைத் தடைகளை ரத்து செய்துகொள்ள அனுமதி வாங்கிக் கொடுத்தேன். பல ஆண்டுகளாக முடிக்கப் படாமல் இருந்த இந்தப் பணியையும் ஒரு சில மாதங்களில் செய்து முடிக்க என் தேவன் உதவி செய்தார். வங்கி ஊழியர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டு மிகுந்த உற்சாகத்துடன் வேலை செய்தனர். நான் இந்த வங்கிக்கு ஆட்சியராக வருவதற்குப்பல ஆண்டுகளுக்கு முன் இந்த வங்கியின் ஆடிட்டராகவும் பணியாற்றி உள்ளேன். இந்த வங்கியை 4 ஆண்டுகள் தணிக்கை செய்திருக்கிறேன். இந்த வங்கி ஊழியர்கள் 7 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட தகராறில் வங்கியின் ஊழியர் ஒருவர் தற்காலிகப்பணி நீக்கம் செய்யப்பட்டார். பின்பு அவர் மீது இலாக்கா பூர்வமான அனைத்து விசாரணைகளும் மேற்கொண்டு அந்த ஊழியரை நிரந்தர பணி நீக்கம் செய்து விட்டார்கள். நான் அந்த வங்கியின் ஆட்சியராகப் பொறுப்பு ஏற்ற அன்று 7 ஆண்டுகளாக நிரந்தரமாகப்பணிநீக்கம் செய்யப்பட்ட அந்த ஊழியர் தன் தாயாரிடமும் தன் மனைவியிடமும் இயேசு எங்கள் வங்கிக்கு ஆட்சியராக வந்திருக்கிறார். எனக்கு விரைவில் திரும்ப அந்த வேலை கிடைத்து விடும் என்று நம்பிக்கையோடு சொல்லியிருக்கிறார். இதை என் மனைவியிடம் அவருடைய அம்மா, மனைவி, பிள்ளைகள் அனைவரோடும் நான் வீட்டில் இல்லாத நேரத்தில் வந்து அழுதிருக்கிறார்கள். அவர்களது குடும்பமே பசி பட்டினியால் 7 ஆண்டுகளாக வாடிக்கிடக்கிறது என்று அழுது இருக்கிறார்கள். இதற்கு இடையில் வேலை இழந்த அந்த வங்கி ஊழியர் தனக்கு மீண்டும் வேலை தரும்படியும் வேலை நீக்கம் செய்யப்பட்ட காலத்திற்கு ஊதியம் வழங்க வேண்டும் என்று லேபர் கோர்ட்டில் வழக்குத்தொடர்ந்து, வழக்கும் நடைபெற்றுக் கொண்டிருந்தது. நான் ஆட்சியராகப் பொறுப்பேற்ற மறுநாளே தனக்கு, மீண்டும் வேலை கொடுக்கும்படி என்னிடம் மனு கொடுத்தார். இது தொடர்பாக வங்கியின் செயலாளர், அப்பொழுது ஏற்பட்ட தகறாரில் பாதிக்கப்பட்டவர் மற்றும் ஊழியர்களிடம் கலந்து பேசினேன். பாதிக்கப்பட்டவரை எங்கள் வீட்டில் வழக்கமாகப் புதன்

தோறும் நடக்கும் ஜெபக்கூட்டத்திற்கு அழைத்தேன். அவர் ஒரு இந்து சகோதரர் என் அழைப்பை ஏற்று அவரும் அன்று ஜெபக்கூட்டத்திற்கு வந்தார். அன்று நான் மன்னிப்பு என்ற தலைப்பில் தேவ செய்தியினை கொடுத்தேன். அவரும் தொடப்பட்டவராக மன்னிக்கும் சிந்தனையோடு சென்றார். மறுநாள் அந்த வேலை இழந்த ஊழியரைத் தன்னுடைய அடாத செயலினால் பாதிக்கப்பட்ட ஊழியரிடம் சென்று தன்னை மன்னித்துவிடும்படி அவரது காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டிருக்கிறார். பாதிக்கப்பட்டவரும் அவரை மன்னித்து விட்டதாகக் கூறி அனுப்பி இருக்கிறார். இதற்கு இடையில் எங்கள் வங்கி சார்பாக வழக்காடும் வக்கீலைப்பார்த்து இந்த வழக்குத் தொடர்பாகக் கலந்து ஆலோசித்தோம். நிரந்தர வேலை நீக்கம் செய்யப்பட்ட ஊழியர் தான் பணி நீக்கத்தில் இருந்த 7 ஆண்டுகளுக்கும் எக்காரணத்தை முன்னிட்டும் நிதிப்பயன் (Back Wages) கோரமாட்டேன் என்று எழுத்துமூலமாக நீதிமன்றத்தில் எழுதிக் கொடுக்க வேண்டும் அதை வங்கியும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படிச்செய்தால் திரும்ப அவருக்கு வேலை கொடுப்பது தடையாக இருக்காது என்று ஆலோசனை கூறினார். இதற்கு இடையில் இவருக்கு மீண்டும் வேலை கொடுத்தால் வங்கியில் எந்தக் குழப்பமும் எற்படாத ஒரு சூழ்நிலையை வங்கியில் உருவாக்கினேன். நீதி மன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வந்தது. வழக்கு விசாரணைக்கு நானும் செயலாளரும் சென்றிருந்தோம். பணிநீக்கம் செய்யப்பட்ட காலத்திற்கு எக்காரணத்தை முன்னிட்டும் **Back Wages** கோரமாட்டேன் என்பதையும் திரும்ப வேலை தர வேண்டும் என்ற கோரிக்கையினை ஏற்றுக்கொண்டு அவருக்கு மீண்டும் வேலை வழங்கும்படி வழக்கில் தீர்ப்பு ஆனது. இந்தத் தீர்ப்பின் நகலை வாங்கி கூட்டுறவு இலாக்காவின் அனுமதி பெற்று மீண்டும் இவர் பணியில் சேருவதற்கு உத்தரவு வழங்கினேன். ஆதரவற்று வறுமையில் வாடிய குடும்பம் தனது தவற்றை மனப் பூர்வமாக உணர்ந்ததால் அவர்களுக்கு உதவி செய்யும் ஒரு வாய்ப்பை என் தேவன் எனக்கு வழங்கினார். எனக்கு முன் பல ஆட்சியர்கள் இந்த வங்கியில் பணி புரிந்துள்ளனர். அவர்கள் எவரும் இவரைக் குறித்து அக்கரை எடுத்துக்கொள்ளவில்லை. நான் இவ்வங்கியின் பொறுப்பேற்ற ஒரு சில மாதங்களில் இப்பேருதவியை அந்தக் குடும்பத்திற்கு செய்ய என் தேவன் எனக்கு உதவி செய்தார்.

என்னுடைய பணிக்காலத்தில் எனக்குக் கீழ் பணியாற்றிய பல ஊழியர்களை சிறு தவறுகளுக்குகூட பணி நீக்கம் செய்துவிட்டுத் தகவல் தெரிவிக்கும்படி மேல் அதிகாரிகள் வலியுறுத்தியிருக்கிறார்கள். ஆனால் நான் யாரையும பணிநீக்கம் செய்து உத்தரவிடவில்லை. ஊழியர்களின் பணி நியமன உத்தரவுகளைத்தான் எனது பணிக்காலத்தில் பிறப்பித்திருக்கிறேன். கடவுளுடைய நாமம் மகிமைப்படுவதாக.

18. அருமை மனைவியின் சுகவீனம்

எனக்கு வலது கரம்போல் இருந்து உதவிய அருமை மனைவியின் சுகவீனம் :

நாங்கள் குடும்பமாக மிஷனரி ஊழியத்தில் வைராக்கியமாக ஈடுபட்டிருப்பது சாத்தானுக்குப் பிடிக்க வில்லை போலும். நல்ல திடகாத்திரமாக இருந்த நாங்கள் இருவரும் எங்கள் அலுவலகப் பணிகளை முடித்து பிள்ளைகளுக்கு வேண்டியவைகளைச் செய்து வைத்துவிட்டு மிஷனரி ஊழியத்திற்காக வீடுகளைச் சந்திக்கச் செல்லுவோம். புதிதாக ஊழியங்களைத் தாங்கும் குடும்பங்களைக் கண்டுபிடித்து ஊழியத் தேவைகளுக்காக நிதி ஆதாரங்களைச் சேகரித்து வருவோம். எங்கு சென்றாலும் நாங்கள் இருவருமாகச் செல்லுவோம். குடும்பமாக பிள்ளைகளோடு செல்லவேண்டிய இடங்களுக்குப் பிள்ளைகளோடு செல்லுவோம். நாங்கள் இருவரும் அவ்வளவு சுறுசுறுப்பாக ஊழியங்களைச் செய்து வந்தோம்.

1996-ஆம் ஆண்டு ஜுன் மாதத்திலிருந்து எனது மனைவி அதிகப் பலகீனம் அடைய தொடங்கி விட்டார்கள். நாளுக்குநாள் அதிக பலகீனமாகிப்படுக்கையில் விழுந்து விட்டார்கள். பல டாக்டர்களிடம் காட்டியும் சுகம் கிடைக்க வில்லை. சுகவீனத்திற்கான காரணத்தையும் டாக்டர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. எனது மனைவியின் தங்கை சென்னை ஆவடியில் இருந்து வருகிறார்கள். அங்குச் சென்று ஒரு மாதத்திற்குமேல் தங்கிப் பல டாக்டர்களிடம் காண்பித்து மருத்துவ சிகிச்சை பார்த்தும் சுகம் கிடைக்கவில்லை. நாங்கள்

சென்னையில் எனது மனைவியின் தங்கைவீட்டில் தங்கி இருந்த நாட்களில் எங்களை அன்புடனும், பரிவுடனும் பராமரித்தார்கள். எனது மனைவி படுத்தப்படுக்கையாகி விட்டார்கள். ஒரு சிறு குழந்தையைப் போல் பராமரிக்க வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது. புட்டியில் இன்ஜக்ஷன் போட்ட இடத்தில் கட்டி போன்று பெரிதாக வீங்கி இருந்தது. அது நாளடைவில் பழுத்துச் சீழ் கொட்ட ஆரம்பித்தது. சகிக்க முடியாத நாற்றம் எடுக்க ஆரம்பித்தது. அதை டிரஸ்ஸிங் செய்வதற்கு மருத்துவ மனைக்கு கொண்டு செல்ல முடியாத நிலை. மூன்று விரல்கள் உள்ளே விட்டு துடைக்கும் அளவுக்கு புண் அகலமாகவும் ஆழமாகவும் இருக்கும். அதைப் பார்ப்பதற்குப் பயங்கரமாக இருந்தது. டாக்டர் ஜோசப் விக்டர் அவர்களிடம் விபரத்தைச் சொன்னேன். அவர்கள் அந்தப் புண்ணைச் சுத்தம் செய்வதற்குச் சில லோஷன்களையும் தடவுவதற்கு மருந்துகளையும் எழுதிக் கொடுத்தார்கள். ஒரு நாளைக்கு மூன்றுதரம் சுத்தம் செய்து மருந்து போட்டு வந்தேன். இரு மாதங்கள் வரை அந்தப்புண் ஆறவில்லை. கடைசியில் லோஷன் வைத்து சுத்தம் செய்து விட்டு ஜெபித்து ஒருநாளைக்கு மூன்று முறை நாகர்கோவிலிருந்து வாங்கி வந்த காயத்திருமேனி எண்ணையைப் பஞ்சில் நனைத்து நனைத்து எவ்வளவு உள்ளே செலுத்த முடியுமோ அவ்வளவு வைத்து பிளாஸ்டர் போட்டு வைப்பேன். பிறகு பஞ்சுகளை எல்லாம் எடுத்துச் சுத்தம் செய்துவிட்டு மீண்டும் காயத்திருமேனி எண்ணை போடுவேன். இவ்வாறாக ஜெபித்து ஜெபித்து இந்த எண்ணையைப்போட்டு வந்தேன். என்ன ஆச்சரியம் கொஞ்சம் கொஞ்சமாக அந்தப்புண் ஆற ஆரம்பித்தது. நான் வெளியில் ஊழியத்திற்காகச் செல்லும் சமயங்களில் விடுமுறை நாட்களில் சகோதரி லோவிஸ்மேரி அவர்கள் இந்த நாற்றத்தை எல்லாம் சகித்துப் புண்ணைத்துடைத்து மருந்து போடுவார்கள். இந்தப்புண் ஆறிய கொஞ்ச நாட்களில் ஒருநாள் இரவு 12 மணியிருக்கும் என் மனைவி கட்டிலின்மேல் எழுந்து நின்ற நிலையில் தலைகீழாக விழுந்து கதவில் அடிபட்டு உதடுகள் பல கோணங்களில் கிழிந்துவிட்டது. கீழ்ப்பற்கள் 3 அடிபட்டு விழுந்துவிட்டது. தலையில் பலமான அடி நெற்றி கிழிந்துவிட்டது. உடம்பு இரத்த வெள்ளமாகி விட்டது. அந்த சமயத்தில் உதவிக்கு ஒரு புதிய ஆள் இருந்தது. அந்த இரவில்

இரத்தத்தை எல்லாம் கழுவித்துடைத்துவிட்டு ஐஸ் தண்ணீரை அடிபட்ட இடத்தில் வைத்துக்கொண்டு வந்தேன். அந்த இரவில் போய் டாக்டர் ஜோசப் விக்டர் அவர்கள் வீட்டிற்கு போன் செய்து நடந்த விபரத்தைச் சொன்னேன். அதிகாலை 5.00 மணிக்கு ராயல் மருத்துவமனைக்குக் கொண்டுவரும்படி சொன்னார்கள். இரவு 12 மணியிலிருந்து காலை 5 மணிவரை அடிபட்ட இடங்களில் ஐஸ் ஒத்தடம் கொடுத்துக் கொண்டும் வழியும் இரத்தத்தைத் துடைத்துக்கொண்டும் என் மனைவியின் அருகில் உட்கார்ந்து ஜெபித்து, ''கலங்காதே, கலங்காதே கர்த்தர் உன்னைக் கைவிடமாட்டார்'' என்ற பாடலைப்பாடிக் கொண்டே இருந்தேன். எனது மனைவியின் அழகிய முகம் சின்னா பின்னமாக சிதைந்து விட்டதே என்ற ஏக்கம் ஒரு பக்கம். சரியாகக் காலை 5 மணிக்கு டாக்டர் ஜோசப் விக்டர் அவர்கள் வந்தார்கள். அவர் எனது மனைவியிடம் ஒன்றுக்கும் பயப்படாதீர்கள் உங்கள் முகத்தை உங்கள் பழைய முகம்போல் ஆக்கிவிடுகிறேன் என்று சொல்லித் தைரியப்படுத்திப் பொறுமையாக உதடுகள் கிழிந்ததைச் சரி செய்து பொறுமையாகத் தையல் போட்டு விட்டார்கள். நெற்றியிலும் தையல் போட்டுவிட்டார்கள். என்ன ஆச்சரியம் முகத்தில் அழகு கெடாமல் சரிசெய்து விட்டார்கள். இந்தப்பெருமை டாக்டர் ஜோசப் விக்டர் அவர்களையே சாரும்.

அதன் பிறகு தஞ்சை மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில் ஸ்பெஷல் வார்டு எடுத்து உள் நோயாளியாகச் சேர்த்து எக்ஸ்ரே, ஸ்கேன் எல்லாம் எடுத்துப் பார்த்தோம். என் மனைவிக்கு உடம்பு ஒன்றும் சரியாகவில்லை. எங்களுடைய ஊழியத்தின் நிமித்தமாகச் சகோ. முத்துசாமி அவர்களுடைய குடும்பத்தைத் தேவன் எங்களுக்குக் கொடுத்தார். அவர்கள் நாகர்கோவிலில் காவல்துறை ஆய்வாளராக இருந்தார்கள். எங்களுடைய மூன்றாவது மிஷனரி மகள் கிரேஸ் சுகுணவதியும் நாகர்கோவிலில் இருந்தார்கள். அவர்கள் இருவரும் அங்கு நல்ல டாக்டர்கள் இருக்கிறார்கள். எனது மனைவியை அங்கு கொண்டுவந்து மருத்துவ சிகிச்சை கொடுக்கலாம் என்று அழைத்தார்கள். அங்கு இரட்சண்ய சேனை கேத்தரின் பூத் மருத்துவமனை, அங்குள்ள C.S.I. மருத்துவ மனை

ஆகியவைகளில் **Treatment** எடுத்துப் பார்த்தோம். ஒன்றும் சரியாகவில்லை. என்ன வியாதி என்றும் கண்டு பிடிக்க முடியவில்லை. **M.R.I.** ஸ்கேன் எடுத்துப் பார்த்தால் என்ன வியாதி என்று தெரியும் என்றுசொன்னார்கள். சகோதரன் டாக்டர். இராபர்ட் சாம்ராஜ் அவர்கள் தனது காரில் திருவனந்தபுரம் கூட்டிச் சென்று **M.R.I.** ஸ்கேன் எடுத்துப் பார்த்தோம். அதிலும் தெளிவாக என்ன கெடுதல் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. வயது மூப்பின் காரணமாக மூளையில் செல்கள் **Degenerate** ஆகியிருக்கலாம் என்று அறிக்கை கொடுத்தார்கள். அதற்காகப் பல விலை உயர்ந்த மருந்துகளை வாங்கிக்கொடுத்துப் பார்த்தோம் ஒன்றும் சரியாகவில்லை.

நாகர்கோயிலுக்கு அருகாமையில் 12 கி.மீ தூரத்தில் தரிசனங்கோப்பு என்ற ஊர் உள்ளது. அங்கு ஆயுர்வேத மருத்துவத்தின் மூலம் இந்த விதமான வியாதிகளுக்கு நல்ல சுகம் கிடைப்பதாக கேள்விப்பட்டு அங்கு ஓர் அறை வாடகைக்கு எடுத்து ஒரு மாதத்திற்கு மேலாகத் தங்கி ஆயுர்வேதச் சிகிச்சை கொடுத்து வந்தோம். அதிலும் சுகம் கிடைக்கவில்லை. நாகர்கோவிலில் சுமார் 5 மாதங்களுக்கு மேலாக எங்கள் மூன்றாவது மிஷனரி மகள் வீட்டிலும், சகோதரர் முத்துசாமி அவர்கள் வீட்டிலும் தங்கி எனது மனைவிக்கு சிகிச்சை கொடுத்து வந்தோம். சகோதரர் முத்துசாமி அவர்களும் சகோதரி தனம் முத்துசாமி அவர்களும் அவர்களுடைய பிள்ளைகளும் எங்களை அவர்கள் வீட்டிலேயே தங்க வைத்து, ஆதரவு காட்டி மருத்துவம் பார்க்க உதவிசெய்தார்கள். சொந்த அண்ணன் தம்பி போல அவ்வளவு நாட்கள் அவர்கள் வீட்டில் எங்களை அரவணைத்தார்கள். எங்களது மிஷனரி மகளும் மருமகனும் பேரப்பிள்ளைகளும் அவ்வாறே எங்கள் மீது அன்புகாட்டி ஆதரித்தார்கள். இந்த நாட்களில் மாதத்திற்கு இரண்டு முறை தஞ்சை வந்து அருட்பணி ஊழியங்களைப் பார்த்துவிட்டுச் சேகரித்த காணிக்கைகளை நிதி அலுவலகத்திற்கு அனுப்பி வந்தேன். ஐந்து மாதங்களுக்குப் பிறகும் எனது மனைவிக்குக் சுகம் கிடைக்காததால் மீண்டும் தஞ்சைக்கு அழைத்து வந்துவிட்டேன்.

மீண்டும் எனது மனைவி படுத்தபடுக்கையாகி விட்டார்கள். ஒரு சிறு குழந்தையைப் பாதுகாப்பது போல பராமரித்து வந்தேன். நான் இரவில் சரியாகத் தூங்கி பல வருடங்கள் ஆகின்றன. எப்பொழும் எங்கள் வீட்டில் வீட்டு வேலைகள், சமையல் செய்வதற்கு உதவி ஆள் இருக்கும். ஆனால் எனது மனைவி சுகவீனப்பட்ட நாட்களிலிருந்து வேலைக்கு சரியான ஆள் இல்லை. சமையல் வேலை என்பது எனக்குத் தெரியாத ஒன்று. அதுவரையில் நான் சமையல் கட்டுப்பக்கமே சென்றதில்லை. Gas அடுப்பை எப்படித் திறப்பது மூடுவது என்று கூட எனக்கு தெரியாது. நான் சமையல் வேலையும் செய்துப் பழக வேண்டும் என்பது என் தேவனுடைய சித்தம் போலும். சமையல் வேலைகளையும் நானே கற்றுக் கொண்டு செய்து வந்தேன். அவ்வப்போது சகோதரி லோவின்மேரி அவர்கள் வந்து குழம்பு வைத்துக் கொடுத்துச் செல்வார்கள். அதை இரண்டு நாட்களுக்கு வைத்துக் கொள்வோம். டாக்டர் ஜோசப் விக்டர் அவர்களும் அவர்களது மனைவியும் கூட அவ்வப்போது மீன்குழம்பு, ஊறுகாய் இவைகளை எங்கள் வீட்டிற்கு வந்து கொடுத்துவிட்டுச் செல்வார்கள். அந்த நாட்களில் நெருங்கிய உறவினர்களின் உதவி எங்களுக்குக் கிடைக்கவில்லை. நண்பர்கள், விசுவாசிகள், ஊழியத்தின் நிமித்தம் கிடைத்த குடும்பங்களின் உதவிதான் எங்களுக்கு அதிகம் கிடைத்தது.

ஆனால் இந்த நாட்களில் அருட்பணி ஊழியத்தில் எந்த விதத் தொய்வும் ஏற்படவில்லை. ஜெபித்து வீட்டைப் பூட்டிவிட்டு, ஆண்டவரே, சுகவீனமான எனது மனைவியை உமது கரத்தில் விட்டுச் செல்கிறேன். நீர் பாதுகாத்துக் கொள்ளும் என்று ஜெபித்து செல்வேன். சென்ற வேலைகளை அவசர அவசரமாக முடித்துப் பறந்து ஓடி வீட்டிற்கு வந்து எனது மனைவிக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்வேன். ஜெபக்கூட்டங்கள் நடத்துவது வீடுகளைச் சந்திப்பது, ஊழியத்திற்குக் காணிக்கைகளைச் சேகரிப்பது, ஆலயங்களில் ஆராதனை வேளைகளில் செய்தி கொடுப்பது போன்ற பணிகளைச் செய்ய என் தேவன் எனக்கு உதவி செய்தார். அந்த நேரங்களில் என் தேவன் என் மனைவியைப் பாதுகாத்துக்

கொண்டார். இந்தக் காலங்களில் ஊழியத்திற்காக நிதி அனுப்புவதில் ஒரு மாதங்கூட தடைபடவில்லை. இந்திய அருட்பணி இயக்கத்தில் 1974-ஆம் ஆண்டு பொறுப்பு ஏற்றுக் கொண்டதிலிருந்து ஒரு மாதங்கூட காலம் தாழ்த்தி நிதி அனுப்பியதில்லை இன்னும் சாட்சியாக சொல்லவேண்டு மானால் எனது மனைவி சுகவீனப்பட்டு படுக்கையில் இருந்த நாட்களில் எத்தனையோ வேலைகள் இருந்தாலும் இயலாவிட்டாலும் இந்திய அருட்பணி இயக்கத்தின் நிதிசேகரிப்பதில் இந்திய அளவில் முதல் இடத்தில் தஞ்சாவூர் இருந்து வந்தது. இன்றும் கூட இந்திய அளவில் இரண்டாம் இடம் அல்லது மூன்றாம் இடத்தில் இருந்து வருகிறது. என் தேவனுக்கே மகிமை உண்டாவதாக. எல்லாத் துதியும் கனமும் மகிமையும் அவருக்கே செலுத்துகிறேன்.

எனது மனைவி தொடர்ந்து சுகவீனமாக இருந்து வந்ததால் வெல்லூர் அல்லது பெங்களூர் கொண்டு சென்று மருத்துவச் சிகிச்சை கொடுக்கலாம் என்று அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தேன். எனது மனைவி அதிக சுகவீனமாக இருந்ததால் 1.7.1997 முதல் விருப்ப ஓய்வு பெற கோரிக்கை மனு கொடுக்கப்பட்டு விருப்ப ஓய்வும் கொடுத்து விட்டார்கள். இதற்கிடையில் எனது மைத்துனர் திரு. D.D.ஜெயச்சந்திரன் என்பவர் தஞ்சாவூரில் தாசில்தாராக இருந்து வந்தார். அவரும் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி டீனும், நெருங்கிய நண்பர்கள். அவரிடம் என் மைத்துனர் தன் அக்காளுக்கு 3 வருடங்களாகச் சரியாக நடக்க முடியாதபடி நிற்க முடியாதபடி பலவீனம் இருந்து வருகிறது. பல டாக்டர்களிடம் காண்பித்தும் என்ன வியாதி என்று கண்டு பிடிக்க முடியவில்லை என்று சொல்லியிருக்கிறார். அப்பொழுது டீன் அவர்கள் அவரிடம் தற்பொழுது தஞ்சை மருத்துவக் கல்லூரியில் சிகிச்சைக்கான எல்லா நவீன வசதிகளும் இருக்கிறது. எல்லா நோய்களையும் கண்டறியும் நவீனக் கருவிகளும் உள்ளன. எனவே மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில் சேர்க்குமபடி சொல்லியிருக்கிறார். அவ்வாறே மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில் ஸ்பெஷல் வார்டில் சேர்த்தோம். உதவிக்கு ஆள் இல்லை என்பதை அறிந்து மிஷனரி மருமகன் எனது மகளை ஒரு

மாதம் லீவு எடுத்துக்கொண்டு உன் அம்மாவுக்கு உதவி செய்துவிட்டு வரும்படி அனுப்பி வைத்தார்கள். அந்தச்சமயத்தில் எல்லாம் எங்கள் மகள் சுகுணாவிற்கும் உடல்நிலை சரியில்லை. இரண்டு சிசேரியன் ஆப்பரேஷன் அதற்குச் செய்ததாலும் ஓய்வு இல்லாமல் ஊழியம் மற்றும் குடும்ப வேலைகளைக் கவனித்ததாலும் வயிற்றில் போட்டிருந்த தையல்களுக்கு பக்கங்களில் பிரீச் ஆக ஆரம்பித்துவிட்டது. அவைகளை சரிசெய்ய மூன்றாவது ஆப்பரேஷன் செய்து சரி செய்யப்படவேண்டும் என்று நாகர்கோவிலில் டாக்டர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தப்பாடுகள் வேதனைகளின் மத்தியிலும் இரண்டு பிள்ளை களையும் விட்டுவிட்டு மகள் அம்மாவைக் கவனிப்பதற்காகத் தஞ்சாவூர் வந்து பார்த்துக் கொண்டார். நாங்கள் மூவரும் மருத்துவ மனையிலேயே தங்கி ஹோட்டலில் சாப்பாடு எடுத்துச் சாப்பிட்டு வந்தோம். மே மாதம் விடுமுறை காலமாதலால் சில நாட்களில் எங்கள் பெரியமகள் வீட்டிலிருந்து சாப்பாடுவரும். எங்களது பெரிய பேரன் சாம்சன் மருத்துவமனைக்கு மத்தியானத்தில் சாப்பாடு கொண்டு வந்து கொடுத்துவிட்டுச் செல்லுவான். அதே மேமாதம் 27-ம் தேதிதான் தேவன் அவனையும் அவன் இரண்டு தம்பிகளையும் பரம இளைப்பாறுதலுக்கு அழைத்துக் கொண்டார்.

மருத்துவக்கல்லூரி டீன் அவர்கள் மருத்துவக் கல்லூரியில் உள்ள மூளை நரம்பியல் தலைவர், எலும்பு முடநீக்கியல் தலைவர், சிறுநீரகம், இருதயத்துறை ஆகிய தலைவர்களை அழைத்து என் மனைவிக்குப் பரிசோதனை நடத்திக்கண்டறியும்படி அறிவுரை வழங்கினார். இரண்டு வாரகாலம் என் மனைவிக்குப் பரிசோதனை நடந்தது. CT ஸ்கேன் முழு சரீரமும் எடுத்துப் பார்க்கப்பட்டது. முதுகு எலும்பில் 3 எலும்புகள் உளுத்துப் போய் உள்ளது கண்டு பிடிக்கப்பட்டது. இதனால்தான் என் மனைவிக்கு உட்கார, நிற்க முடியவில்லை என்று கண்டு பிடிக்கப்பட்டது. அதற்கு ஏற்ற மருந்துகள் கொடுக்கப்பட்டன.

19. 1998 மிகவும் சோதனைகள் நிறைந்த ஆண்டு

இந்த 1998 -ஆம் ஆண்டு எங்களுக்கு மிகவும் ஒரு துக்கம் நிறைந்த சோதனை நிறைந்த அருமையானவர்களை இழக்கக் கொடுத்த ஆண்டாக இருந்தது. கண்ணீர் கவலை நிறைந்த ஆண்டாக இருந்தது. எனது மனைவியை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் வைத்து சிகிச்சை கொடுத்துக்கொண்டிருந்த சமயம் 1998-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10-நாள் இரவு மருத்துவ மனைக்குப் ஒரு தொலைபேசிச் செய்தி வந்தது. நல்ல சுகத்தோடு சென்னையில் எனது மனைவியின் தங்கை வீட்டில் இருந்துவந்த எனது மாமனார் இறந்து விட்டார்கள் என்று செய்தி வந்தது. எனக்குச் சிறிது நேரம் என்ன செய்வதென்றே புலப்படவில்லை. மருத்துவமனையில் இருக்கும் எனது மனைவியைப் பார்க்க சரியான ஆள் இல்லை. உடன் இருந்துவரும் மகள் சுகுணாவிற்குத்தன் அம்மாவைத் தூக்கி எடுக்க முடியாத நிலை, என் மனைவிக்குத் தன்தகப்பனாரை இறுதியாகக்கூடப் பார்க்கமுடியாத நிலை. இந்த இக்கட்டான சூழ்நிலையில் அம்மன்பேட்டை மறைந்த சகோதர் திரு.சாமுவேல் அவர்கள் குடும்பத்தினருடன் அந்த இரவில் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விபரங்களைச் சொல்லி, சகோதரி கனி அவர்களின் தங்கை சகோதரி லோவிஸ்மேரி அவர்களைக் காலையில் மருத்துவ மனைக்கு வந்து எனது மனைவியை மருத்துவ மனையில் ஒரு நாள் மட்டும் பார்த்துக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டேன். அவர்களும் மனமுவந்து தன் தங்கையை காலையில் மருத்துவமனைக்கு அனுப்பி இருக்கிறார்கள். நான் மட்டும் அன்று அதிகாலையில் சென்னைக்குச் சென்றேன். எனது மனைவியிடம் தனது தகப்பனார் இறந்துவிட்டதாகக்கூறவில்லை. அன்று இரவு முழுவதும் எனது மாமனாரின் அருகில் அமர்ந்து வேத வசனங்களை வாசித்து, ஜெபித்து, பாடல்களைப்பாடிக் கொண்டே இருந்தோம், மறுநாள் அதாவது 12.5.98 மத்தியானம் அடக்கம் செய்து விட்டுச் சாயங்காலம் புறப்பட்டு நடு இரவில் தஞ்சை மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தேன். எனது மனைவிக்குத் தொடர்ந்து அங்குச் சிகிச்சை கொடுக்கப்பட்டு வந்தது. எனது மிஷனரி மகளுக்கு ஒரு மாத விடுமுறை முடிந்து விட்டதால்

நாகர்கோயிலுக்கு அனுப்பி வைத்தேன். நான் மட்டும் மருத்துவ மனையில் இருந்து எனது மனைவியைப் பார்த்து வந்தேன். 21.4.98 -ல் எனது அக்காளின் கணவர் இறந்துவிட்டார். இறந்த செய்தி காலம் தாழ்த்திக் கிடைத்ததாலும், எனது மனைவியைப் பார்க்க ஆள் இல்லாததாலும் அவரை அடக்கம் செய்வதற்கு நான் செல்ல இயலவில்லை. அவரது துக்க நிவர்த்திக்கு எனது மகனை அனுப்பி வைத்தேன். எனது மனைவிக்கு இவ்வியாதிக்கு நீண்டகாலம் மருந்து சாப்பிட வேண்டும் என்பதால் வீட்டிற்கு அழைத்துச் சென்று மருந்து சாப்பிட்டுக் கொண்டு 3 மாதத்திற்கு ஒரு முறை மருத்துவமனைக்கு அழைத்து வந்து காட்டினால் போதும் என்று சொன்னார்கள். அதன்படி எனது மனைவியை வீட்டிற்கு அழைத்து வந்து டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்துகளைக் கொடுத்துக் கொண்டு வந்தோம். எங்களுக்காகவும் என் மனைவிக்காகவும் IEM மிஷனரி மற்ற விசுவாசிகளும் ஜெபித்துவந்தார்கள். மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையின் ஸ்பெஷல் வார்டில் எனது மனைவி இருந்தபொழுது IEM சகோதரர்கள் மறைதிரு. எஸ். மோகன்தாஸ், திரு. ராஜன், திரு. ஜார்ஜ் ஆகியவர்களும் திருப்பூரிலிருந்து திரு. பாபு ஆகிய நால்வரும் மருத்துவமனைக்கு வந்து இரண்டு நாட்கள் தங்கி எனது மனைவியின் சுகத்திற்காக உபவாசித்து ஜெபித்தார்கள். தாங்கள் தங்கியிருந்த ஸ்பெஷல் வார்டிலேயே பாட்டுப்பாடி துதி ஸ்தோத்திரத்துடனே ஆவியில் நிறைந்து பாரத்தோடு ஜெபித்தார்கள். அவர்கள் அதிக சிரமம் மேற்கொண்டு அவ்வளவு தூரத்திலிருந்து எங்கள் குடும்பத்திற்காகவும் குறிப்பாக எனது மனைவியின் சுகத்திற்காகவும் ஜெபித்ததற்காக அவர்களுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

எனது பெரிய மகள் புனிதவதியின் 3 மகன்களும் 1998-ம் ஆண்டு மே மாதம் 27-ஆம் நாள் முக்கொம்பில் புதை மணலில் மூழ்கி ஒரே நேரத்தில் மூவரும் மரித்துவிட்டார்கள். நாங்கள் அனைவரும் ஆறாத் துயரில் மூழ்கினோம். மேலும் எங்களது வீட்டில் 15 வருடங்களாக ஒரு பிள்ளையைப்போல் இருந்து எங்களுக்கு உதவி செய்து வந்த திரு. சம்பந்தம் என்பவர் 9.6.1998-ல் இறந்து விட்டார். அடுத்து 14.6.1998 -ல் எனது சின்ன மாமியார் இறந்து விட்டார்கள். இந்த 1998 -ம் ஆண்டு ஏப்ரல், மே மற்றும் ஜூன் மாதத்திற்குள் அடுத்தடுத்து மேற்கண்ட

எங்களது நெருங்கிய உறவினர்கள் இறந்து விட்டனர். எனது மனைவியின் அதிக சுகவீனமும் எங்களுக்குத் துக்கத்தின்மேல் துக்கத்தினுள் ஆழ்த்தின. இந்தக் காலங்களில் தேவனுடைய வசனம் எங்களை ஆறுதல் படுத்தியிராவிட்டால் எங்கள் துக்கத்திலே மூழ்கி அழிந்து போயிருப்போம். நாங்கள் ஆராதிக்கிற, ஊழியம் செய்கிற தேவன் எங்களைக் காத்துக் கொண்டார். எங்கள் தேவனில் எங்களைத் திடப்படுத்திக் கொண்டோம்.

இந்தக் கடுமையான காலக்கட்டங்களில் சத்துரு எப்படியாவது விழத்தள்ள வேண்டுமென்று வெள்ளியைப் புடமிடுகிறது போலப்புடமிட ஆரம்பித்துவிட்டான். நாங்கள் குடியிருந்து வருகிற வீட்டைச் சுற்றிலும் பிரச்சனை. நாங்கள் எந்த இடத்திற்கு செல்லக் கூடாது என்று தீர்மானம் செய்தோமோ, அந்த இடங்களுக்கெல்லாம் செல்ல சத்துரு என் தேவனிடத்தில் அனுமதி வாங்கிக் கொண்டான். எங்கள் வீட்டிற்குக் கீழ்ப்புறத்தில் காலியிடம் உள்ளது. அதற்குப் பத்திரம் உள்ளது. வரிகட்டி வருகிறோம், பக்கத்தில் உள்ள மில் வைத்திருக்கும் சாயபு தன்னுடைய இடம் என்று நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். 12 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த வழக்கு இப்பொழுதுதான் விசாரணைக்கு வந்திருக்கிறது. நீதி மன்றத்தால் நியமிக்கப்பட்ட வக்கீல் கமிஷனர் மற்றும் சர்வேயர் எல்லாம் அளந்து அது எங்களுடைய இடம்தான் என்று அறிக்கை கொடுத்துள்ளார்கள். இவ்வழக்கு எங்களுக்குச் சாதகமாக முடியும் நிலையில் உள்ளது. எங்கள் வீட்டிற்கு மேற்குப் பகுதியில் உள்ள சாயபு, எங்கள் இடத்தில் 120 சதுர அடியை ஆக்கிரமிப்பு செய்து உள்ளார். அதோடு அல்லாமல் நீதி மன்றத்தில் வழக்கும் தொடுத்துள்ளார். எங்களுடைய எதிர்வழக்கு என்னவென்றால் கோர்ட்மூலம் சர்வேயரை வைத்து யார் இடம் என்று அளந்து முடிவு செய்து அவரவர்களிடம் விட்டு விடலாம் என்று கூறி இருக்கிறோம். இதற்கு இடையில் பலவீனமாக, சுகவீனமாக எழுந்து நடக்கக் கூட முடியாத நிலையில் இருக்கும் எனது மனைவி, எனது மகன், நான் ஆகிய மூவரும் கடப்பாறையை எடுத்துக் கொண்டுப் பக்கத்து வீட்டுக்காரரை அடிப்பதாகச் சொன்னோம் என்று பொய்யாக

ஒரு கிரிமினல் வழக்கு 1996 -இல் எங்கள் மூவர் மீதும் போடப்பட்டு மாதத்திற்கு இரண்டு அல்லது மூன்று நாட்கள் 1996-லிருந்து கோர்ட்டுக்குச் செல்ல வேண்டி இருந்தது. அது 8.6.2002 -இல் தான் பொய்யாக வழக்கு எங்கள் பேரில் தொடுக்கப்பட்டது என்று கிரிமினல் வழக்கைத் தள்ளுபடி செய்தனர். எனினும் எங்களுக்கு வீணாக ஏற்பட்ட மன உளைச்சல், அலைச்சல், பணச் செலவு எல்லாம் ஏற்பட்டன. ஆண்டவருக்காகச் செலவழிக்க வேண்டிய நேரம், காலம், பணம் ஆகியவற்றைச் சாத்தான் கொள்ளையடித்து விட்டான். செய்யாதக் குற்றத்திற்காக நீதிமன்றத்தில் போய் நிற்கும் பொழுது நான் இயேசுவையே நினைத்துக் கொண்டு நிற்பேன். அன்று இயேசு தான் செய்யாத குற்றத்திற்காகப் பிலாத்து முன்னும், அன்னா முன்னும், காய்பா முன்னும் நிறுத்தப்பட்டது போல் நாங்கள் நின்றோம். எனது மகன் திடகாத்திரமான வாலிபன். அவனுடைய எண்ணம் எல்லாம் ஒரு தவறும் செய்யாமல் பொய் வழக்குப்போட்டு இங்கு நின்று கொண்டிருக்கிறோம் என்று மனம் புழுங்குவான். அவனைச்சமாதானப்படுத்துவதே எனக்குப் பெரும்பாடாக இருக்கும். முடிவில் நம் தேவன் நம்மை வெற்றி சிறக்கச்செய்து சத்துருக்களுக்கு முன்பாக தலைநிமிர்ந்து நடக்கச் செய்வார் என்று அவனை ஆறுதல்படுத்துவேன். இந்தப்பாடுகளையும் பொய்யான குற்றச்சாட்டுகளையும் கிறிஸ்துவுக்காக சகித்து எங்களுக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தைப் பொறுமையோடு ஓட என் தேவன் உதவி செய்தார்.

எனது மனைவிக்கு கிரிமினல்கேஸ், போலீஸ் விசாரனை நீதி மன்றம் செல்லுதல் போன்ற அனுபவம் இல்லாததால் கொஞ்சம் தேறி வந்த உடம்பு மீண்டும் பலகீனம் அடையத்தொடங்கி விட்டது. நாங்கள் உபவாசித்து போராடி ஜெபித்து வந்தோம். தேவன் அற்புதமாக எழுந்து நிமிர்ந்து நிற்க, நடக்க உதவி செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். எலும்பியல் டாக்டரிடம் காண்பிக்க அழைத்துச் சென்றபொழுது அவர் எனது மனைவி நிமிர்ந்து நின்று நடப்பதைப் பார்த்ததும் அவருக்கே ஆச்சரியமாய்ப்போய்விட்டது. முதுகு எலும்பு பாதிக்கப்பட்டு உளுத்துப்போன நிலையில் இரண்டு கால்களும் செயலற்றுப் போய் இருக்க வேண்டியது, ஆனால் நீங்கள் வணங்கும் கடவுள்

உங்கள் மனைவிக்கு அற்புதச் சுகத்தைக் கொடுத்திருக்கிறார். இந்த அற்புதச் சுகம் மருத்துவத்திற்கும் அப்பாற்பட்டது என்று ஒரு இந்து டாக்டர் கூறினார். இன்றும் நடக்கும் பொழுது தள்ளாட்டம், அடிக்கடி சிறுநீர் படுக்கையிலேயே போவது, டயபெட்டிக் ஆகிய பலவீனங்கள் எனது மனைவியின் சரீரத்தில் உள்ளது. நாங்கள் மகமதியர்கள், இந்துக்கள் மத்தியில் குடியிருந்து வருகிறோம். அவர்கள் எங்களிடம் வந்து ஜெபித்து சுகத்தையும் அநேக ஆசிர்வாதங்களையும் பெற்றிருக்கிறார்கள். அவர்களுடைய உள்ளத்திலே ஒரு பெரிய கேள்விக்குறி இவர்களுக்கு ஏன் இந்தப்பாடுகள், இந்த இழப்புகள், இந்த வேதனைகள்? நாங்கள் அவர்களிடம் சொல்வது "தெய்வபக்தியாய் நடக்க மனதாயிருப்பவர்கள்துன்பப்படுவார்கள். எங்களுடைய வாழ்க்கையில் இயேசுவின் சாயல் உருவாகும் வரை புடமிடுவார். இது தான் இன்று எங்கள் வாழ்க்கையில் நடந்துகொண்டிருக்கிறது" என்று அவர்களுக்குக் கூறுவோம்.

1998-ம் ஆண்டு எனது மனைவி அதிக சுகவீனமாக இருந்தார்கள். எனது மிஷனரி மகளுக்கு வயிற்றில் பிரீச் ஏற்பட்டதால் மூன்றாவது முறையாக ஒரு மேஜர் ஆப்பரேஷன் செய்ய வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. மனைவி அதிக சுகவீனமாக இருந்ததால் மகளைத் தஞ்சாவூருக்கு அழைத்து வந்து ஆப்பரேஷன் செய்ய முடியாத நிலை நாங்களும் நாகர்கோயில் சென்று அவர்களுக்கு ஆப்பரேஷன் சமயத்தில் உதவி செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. எங்களது ஊழியத்தின் நிமித்தம் முத்தாக எங்களுக்குத் தேவன் கொடுத்த சகோதரர் முத்துசாமி அவர்களும் அவருடைய மனைவி சகோதரி தனம் முத்துசாமி அவர்களும் எங்களுக்குக் கடிதம் எழுதினார்கள். நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் சகோதரியைத் தஞ்சையில் வைத்து மருத்துவம் பார்த்து வாருங்கள். நாங்கள் இங்கு சுகுணாவையும் பிள்ளைகளையும் பார்த்துக் கொள்ளுகிறோம் என்று எங்களுக்கு ஆறுதலான கடிதம் எழுதி இருந்தார்கள். அப்படியே அவர்கள் சுகுணாவிற்கு ஆப்ரேஷன் நடந்த சமயத்தில் மருத்துவ மனையில் உடன் இருந்து எல்லாவற்றையும் தியாகத்தோடு கவனித்துக் கொண்டார்கள். ஆப்பரேஷன் ஆன பிறகும் அவர்கள் தங்கள் வீட்டில் இரண்டு மாதங்களுக்கு மேல்

வைத்து ஒரு தாய்க்கு மேலாகப் பராமரித்து பாதுகாத்து அனுப்பினார்கள். அவர்கள் எங்கள் குடும்பத்திற்குச் செய்த இந்த மகத்தான தியாகமான உதவியை நாங்களும் எங்கள் பிள்ளைகளும் ஒரு நாளும் மறக்க மாட்டோம். அந்தக் குடும்பத்தைத் தேவன் அபரிமிதமாக ஆசீர்வதிக்க ஜெபிக்கிறோம். வாழ்த்துகிறோம்.

20. அரசுப்பணிக்கு ஓய்வு ஆனால் அருட்பணிக்கு ஓய்வு இல்லை

நான் 1994-ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30-ஆம் நாள் பிற்பகலிலிருந்து தஞ்சாவூர் பொது ஊழியர்கள் கூட்டுறவு வங்கியின் ஆட்சியர் பொறுப்பிலிருந்து தேர்வு நிலைக் கூட்டுறவு சார்பதிவாளராக அரசுப்பணியிலிருந்து ஓய்வு பெற என் தேவன் உதவி செய்தார். எனக்குக் கிடைத்த ஓய்வு ஊதிய நிதிப் பயனிலிருந்து தசமபாகத்தை எடுத்து வைத்து ஆலயத்திற்கும், ஊழியங்களுக்கும் நான் சிறுவனாக ஆதரவு அற்ற நிலையில் எனக்கு உதவி செய்த நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் அவர்கள் வீடுகளுக்குச் சென்று நிதி உதவிகளைச் செய்து வந்தேன். நான் பணியில் இருக்கும் பொழுது 30 ஊழியங்களுக்கு மேலாகத் தாங்கி வந்தேன். பணியிலிருந்து ஓய்வு பெற்றபிறகும் ஊழியங்களுக்கு கொடுத்து வந்த நிதி உதவிகளை எதற்கும் நிறுத்தவில்லை. எனக்கு மாத ஓய்வு ஊதியம் ரூ.5500/- எனது மனைவிக்கு ஓய்வு ஊதியம் ரூ. 3500/- கிடைக்கிறது. இவைகளை வைத்துக்கொண்டு போதும் என்கிற மனதுடனே நிறைவாக வாழ என் தேவன் உதவி செய்து வருகிறார். ஓய்வு பெற்ற பிறகும் அதிகாலையில் இருட்டோடே எழுந்து என்தேவனோடு அதிக நேரம் செலவழிக்க என் தேவன் எனக்கு உதவி செய்து வருகிறார். காலை மாலை தவறாமல் குடும்ப ஜெபம் எங்கள் வீட்டில் நடந்து வருகிறது. ஒவ்வொரு புதன் கிழமையும் மாலையில் எங்கள் வீட்டில் மிஷனரிகளுக்காக ஜெபிக்கும் ஜெபக்குழுக் கூட்டம் நடைபெற்று வருகிறது. இவைகளை அல்லாமல் மாதம் தோறும் 5 ஜெபக்குழுக்களை நடத்தி வருகிறோம். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் எங்கள் குடும்பத்தில் உள்ளவர்களும், சகோதர சகோதரிகளுடைய குடும்பங்களும் உற்றார்

உறவினர்களுடைய குடும்பங்களும் இரட்சிக்கப்படவேண்டும். அவர்கள் இயேசுவின் போர்வீரர்களாக மாற வேண்டும் என்று உபவாசித்து ஜெபித்து வருகிறோம். மாதந்தோறும் சுமார் 300 வீடுகளுக்குமேல் சென்று அவர்களுக்காக ஜெபிக்கிறோம். ஊழியங்களுக்கு நிதி சேகரிக்கிறோம். அவர்கள் வீடுகளில் நடக்கும் சுக, துக்க காரியங்களில் பங்கு பெறுகிறோம். திருச்சி, தஞ்சாவூர் திருமண்டல C.S.I. பேராயர் அவர்கள் லே பிரீச்சர் உரிமம் கொடுத்து இருப்பதனால் பல திருச்சபைகளில் ஞாயிறு ஆராதனைகளில் தேவ செய்தியினைக் கொடுக்கவும் என் தேவன் உதவி செய்து வருகிறார். தினமும் காலை தியானம் முடிந்தவுடன் 3 கிலோ மீட்டர் வரை வாக்கிங் சென்று வருகிறேன். லூக் 1:71 -இல் சொல்லி உள்ளபடி ''நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல், பரிசுத்தத்தோடும், நீதியோடும் எனக்கு ஊழியம் செய்'' என்று எனக்குத் தேவ கட்டளை கொடுக்கப் பட்டிருக்கிறது. என்னுடைய சரீரத்தில் இருதயத்தின் துடிப்பு இருக்கும் மட்டும் அவருடைய பணியைச் செய்து அவரது பாதம் சேரவேண்டும் என்பதே என் ஆவலும் வாஞ்சையும் ஆகும்.

நாங்கள் கடைசிவரையில் அவருக்கு ஊழியத்தில் உண்மையாக இருப்போம் என்று எங்களை நம்பி எங்கள் தேவன் பல இழப்புகளையும், தோல்விகளையும், பலவீனங்களையும் சுக வீனங்களையும் சந்திக்கும்படி யோபு வைப்போல் எங்களை சோதிக்க சாத்தானுக்கு அனுமதி கொடுத்திருக்கிறார். ஆனால் நாங்கள் சங்44:17 -இல் கூறி உள்ளபடி ''இவைகள் எல்லாம் எங்கள் மேல் வந்திருந்தும் உம்மை நாங்கள் மறக்கவும் இல்லை, உம்முடைய உடன் படிக்கைக்குத் துரோகம் பண்ணவும் இல்லை. நீர் எங்களை வலுசர்ப்பங்களுள்ள இடத்திலே நொறுக்கி மரண இருளினாலே எங்களை மூடியிருந்தும் எங்கள் இருதயம் பின் வாங்கவும் இல்லை, எங்கள் காலடி உம்முடைய பாதையை விட்டு விலகவும் இல்லை'' எல்லா சூழ்நிலைகளிலும் எங்கள் தேவனை உறுதியாகப் பற்றிக் கொண்டோம். I சாமு 2 :30-இல் ''என்னைக் கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்'' என்ற அவரது வாக்குத்தத்தத்தின்படி எங்கள் தேவன் எங்களை எல்லா வகையிலும் சிறப்பாக அவரது ஊழியத்தின் பாதையிலும் கனப்படுத்தி வருகிறார்.

அது மட்டுமல்ல நாங்கள் கடந்து வந்த வேதனையின் நாட்கள் வீணான நாட்களாக போய்விடக்கூடாது. எங்களைப் போன்று வேதனைப்படுகிற, காயப்பட்ட மக்களுக்கு எங்கள் வாழ்வும், வாயின் வார்த்தைகளும் ஆறுதலைக் கொடுப்பதற்காக இந்தப்பாடுகளை எல்லாம் என் தேவன் அனுமதித்திருக்கிறார். இதை நாங்கள் நன்கு அறிந்திருக்கிறோம்.

21. ஆண்டவர் அளித்த அங்கிகாரம் (தெய்வீகத்தில் டாக்டர் பட்டம்)

தாவீதைப்போல் கறவல் ஆடுகளின் பின்னாகத் திரிந்தவனுக்கு டாக்டர் பட்டம் :

ஆதரவற்று அனாதையாகத் திரிந்த என்னை என் தேவன் கரம் பிடித்து உயர்த்தினார். 48 ஆண்டுகள் அரசுப் பணியோடு ஆண்டவருடைய பணியையும் செய்ய என் தேவன் என்னைக் கரம் பிடித்து வழி நடத்தினார். பெற்றோர்கள் இருப்பவர்களுக்குக் கூடக் காலத்தே நடைபெற வேண்டிய பல காரியங்கள் நடைபெறுவதில்லை. அவைகள் தடைபட்டு தடம்புரண்டு போகின்றன. ஆனால் என் ஆண்டவர் என் வாழ்க்கையில் அதனதன் காலத்தில் நேர்த்தியாகச் செய்தார். என் வாழ்க்கையில் ஒன்று கூடக் காலம் தாழ்த்தப்படவில்லை. என் தேவனுக்கு மகிமை உண்டாவதாக. என் வாழ்க்கையில் உயர்நிலைப்பள்ளி படிப்பை முடித்தது ஒரு பெரிய காரியம். பட்டப்படிப்புக்குக் கல்லூரி சென்றதில்லை. வேதப்படிப்புக்கு வேதாகமக் கல்லூரி செல்லவில்லை. ஆனால் என் தேவன் I பேதுரு 2:9-இல் சொல்லப்பட்ட வண்ணமாக நீங்களோ உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொண்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும் அவருக்குச் சொந்தமான ஜனமாயும்'' அவருடைய புண்ணியங்களை ஜாதிகளுக்கு அறிவிக்க என்னை அழைத்திருக்கிறார். தமது பணிக்கு படிப்பறிவு இல்லாத மீன் பிடித்துக் கொண்டிருந்த

பேதுருவைத் தெரிந்துகொண்ட இயேசு, ஆயத்துறையில் உட்கார்ந்திருந்த மத்தேயுவைத் தெரிந்து கொண்ட இயேசு என்னையும் அவரது பணிக்குத் தெரிந்து கொண்டார். ஞானிகளை வெட்கப்படுத்த பேதமையான என்னைத் தெரிந்து கொண்டார்.

சாதாரணமாகத் தெய்வீகத்தில் டாக்டர் பட்டம், B.D. M.Th. ஆகிய வேதத்தில் பட்டம் பெற்றவர்களுக்குத்தான் டாக்டர் பட்டம் கொடுப்பார்கள். ஆனால் நான் மேற்கண்ட எந்தப்பட்டமும் பெறவில்லை. ஆனால் நான் என் தேவனிடத்தில் B.A., பட்டம் பெற்றிருக்கிறேன். அதாவது (Born Again) பட்டம் பெற்றிருக்கிறேன். அவரது பள்ளியில் 48 ஆண்டுகள் குற்றம் சாட்டப்படாமல் படித்து என்தேவன் அங்கீகரிக்கும் பட்டத்தைப் பெற்று இருக்கிறேன். தகுதியற்ற எனக்கு என் தேவனுடைய ஒப்புதலின்படி The Indian Theological Research Institute, State of Tamil Nadu, Approved by the Asian Rural Church Institute Seoul, Korea வினால் Doctor of Divinity பட்டம் 29.06.2002 -ல் வழங்கப்பட்டுள்ளது. எனக்கு Doctor of Divinity Degree with all rights, Privileges and Honours உடன் இந்த மேன்மை வழங்கப்பட்டுள்ளது. இந்த மதிப்புமிக்க Doctor of Divinity பட்டத்தை என் தேவனுடைய பாதத்தில் சமர்ப்பிக்கிறேன். நான் எனது மரணப் பரியந்தம் என் தேவனுக்கு உண்மையாக ஊழியம் செய்ய எனக்காகவும், எனது குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

22. அருமை மனைவியின் மரணம்

எனது வாழ்க்கை வரலாறு புத்தகமாக எழுதப்பட வேண்டுமென்று அநேக நண்பர்கள் விரும்பின பொழுதும் என்னை அதிகமாக உற்சாகப்படுத்தியவர்களில் எனது துணைவியாரும் ஒருவர். அநேக ஆலோசனைகளையும் கூறினார்கள். இந்நூல் ஆண்டவருடைய நாமத்திற்கு மகிமையாகவும் அநேகருக்கு ஆசீர்வாதமாகவும் அமைய வேண்டுமென்பது அவர்களது தீராத வாஞ்சையாக இருந்தது. இதற்கிடையில் எனக்குக் கிடைத்த டாக்டர் பட்டத்திற்காக ஒரு

ஸ்தோத்திரக் கூட்டத்தையும் நடத்தி இப்புத்தகத்தையும் வெளியிடவேண்டுமென விரும்பினார்கள். அதற்காக அவர்கள் குறிப்பிட்ட நாள் 2002-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15-ஆம் நாள். ஆனால் பல காரணங்களினால் அந்த குறிப்பிட்ட நாளில் ஸ்தோத்திர கூட்டத்தை நடத்துவதற்கு வாய்ப்பில்லாமல் போனது. புத்தகம் வெளியிடும் ஆரம்ப கட்ட நிலையில் இருந்தது. ஆனால் ஆகஸ்ட் 15-ஆம் நாள் எனது வாழ்வில் மறக்க முடியாத நாளாகிவிட்டது. ஆம், அன்றைய தினம் எனது அருமை மனைவி நித்தியத்திற்குள் அழைக்கப்பட்ட நாள். அவர்கள் விரும்பியவாறே இப்புத்தகம் ஆண்டவருடைய நாமத்திற்கு மகிமையாகவும், அநேகருக்கு ஆசீர்வாதமாகவும் இருக்க வேண்டுமென்பது எனது வாஞ்சையும், விருப்பமும். இப்புத்தகம் எழுதி முடிக்கும் தருவாயில் எனது அருமை மனைவி ஒவ்வொரு பாகத்தையும் நன்கு படித்து திருத்தம் செய்து தனது கடைசிமூச்சு இருக்கும்வரை எனக்கு உறுதுணையாக இருந்து வந்தார்கள். இந்த எனது சுய வாழ்க்கை வரலாறு முழுவதையும் படித்து அகமகிழ்ந்து இருந்தார்கள். இந்த புத்தகத்தை விரைவில் வெளியிட மிகுந்த ஆவலோடு இருந்தார்கள். அவர்களுடைய கடைசி விருப்பத்தை நிறைவேற்ற முடியவில்லையே என்ற ஆழ்ந்த வருத்தத்தின் மத்தியிலும் தேவனுடைய சித்தத்திற்கு என்னைத் தாழ்த்தி ஒப்புவிக்கிறேன். அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். ரோமர் 8:28. கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவை எல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூறுகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களா யிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவமானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ் காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்க மாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன். ரோமர் 8:38-39. இம்மட்டும் நடத்தியவர் இனியும் நடத்துவார் என்கிற அசைக்க முடியாத விசுவாசத்தோடு எல்லா சூழ்நிலைகளிலும் என் தேவனுக்கென்று வாழவேண்டுமென்கின்ற அர்ப்பணத்தோடு அவருடைய கரங்களில் முற்றிலும் என்னை தத்தம் செய்கிறேன். எல்லா துதிகனம் மகிமையும் என் தேவனுக்கே செலுத்துகிறேன். ஆமென்.

தேவகரத்தால் உயர்ந்த திக்கற்ற மகன்.

★ முற்றிற்று ★

பிழை - திருத்தம்

தயைசெய்து அடியிற்கண்ட இனங்களில்
பிழை திருத்திப் படியுங்கள் :

பக்கம் - பாரா

அணிந்துரை எழுதியதில் :

1. Mr. D. Devaraj மத்தயலும் - மத்தியிலும் 2 - 3
2. Mr. D. Sundar David சித்ததின்படி - சித்தத்தின்படி 5 - 2
3. புனிதா மனோகர் பெஞ்சமின்
முதுகரைப் பட்டதாரிகளாக - முதுகலைப் பட்டதாரிகளாக 1 - 1
காலத்லை வீணாக்குதல் - காலத்தை வீணாக்குதல் 2 - 1

4. படம் 20 மூத்த மகன் - மூத்த மகள்
5. படம் 26 சுகவினமான - சுகவீனமான
மகளுன் - மகளுடன்
6. படம் 33 மத்திய - மதிய
7. படம் 40 மருமைக்கு - மறுமைக்கு
8. படம் 41 மருமைக்கு - மறுமைக்கு

		பக்கம் - பாரா
9.	பணியிருந்து - பணியிலிருந்து	9 - 1
10.	அதிராம்பட்டினம் - அதிராம்பட்டிணம்	10 - 3
11.	சிற்றனை - சிற்றன்னை	10 - 3
12.	உயர்நிலைப்பள்ளியல் - உயர்நிலைப்பள்ளியில்	12 - 1
13.	இயலாமையைக்குக் - இயலாமைக்குக்	25 - 1
14.	செவ- விடுதி - செவவிடுதி	55 - 2
	உஞ்சி - விடுதி - உஞ்சி விடுதி	
	கிட்டங்குகளும் - கிட்டங்கிகளும்	
15.	வஙகியில் - வங்கியில்	97 - 1



ஆசிரியர் டாக்டர். டி.அருள்தாஸ், டி.டி.
29.06.2002-இல் டாக்டர் பட்டம் பெற்றது.

PARIMALA BATH